# திசை மாறாத பறவை...

## 1

கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போல் என்பார்களே அதை நேரிடையாக உணர்ந்து கொண்டிருந்தாள் மீரா. இந்த இடம் நிச்சயம் காடாகத்தான் இருக்கவேண்டும். பூக்களின் மணமும் குளிர்ந்த காற்றும் தன் மீது உராய்ந்த செடிகொடிகளும் கரடுமுரடான பாதைகளும் அவளுக்கு அதை உணர்த்தியது.

காதைக் கூர்மையாக்கினாள். எங்கோ சலசலத்து ஓடிய ஆற்றின் சங்கீதமும் அதற்குப் போட்டியாக ஒலித்த பறவைகளின் இன்னிசைக் குரல்களும் தெளிவாய்க் கேட்டது. குபீரென குளிர்ந்த காற்று வீசியதும் உடல் நடுங்க சற்று தயங்கி நின்றுவிட்டாள்.

அவள் நின்றதும் அவளுக்கு வலப்புறம் இருந்து சற்று அதட்டலான குரல் கேட்டது. ஆணின் குரல். சற்று இளமையான இனிமையான குரல்தான். ஆனால் வேண்டுமென்றே தன் குரலை மிரட்டலாக்கிக் காட்டியது போல தோன்றியது.

“என்ன நின்னுட்ட? சீக்கிரம் நட” - குரல் வந்த திசையில் திரும்பினாள் மீரா. காய்ந்து போன உதட்டை ஈரமாக்கிக்கொண்டு துணிவைத் திரட்டிக் கேட்டாள்.

“என்னை ஏன் காட்டுக்குள்ள கூட்டிட்டுப் போறீங்க? எனக்கு காடுன்னா ரொம்ப பயம்”

அவளை அழைத்து வந்த நால்வரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். அவர்களின் பார்வையில் எச்சரிக்கை தொனித்தது.

“இது காடென்று உனக்கு யார் சொன்னது?” - இடப்பக்கமிருந்து வேறொரு குரல் கேட்டது.

“எனக்குத் தெரிகிறது. நிச்சயம் இது காடுதான்” - அவள் உறுதியாகச் சொல்ல, ஒருவன் அவசரமாக அவளது கண்ணில் போடப்பட்டிருந்த கட்டைப் பரிசோதித்தான். அது இறுக்கமாகத்தான் கட்டப்பட்டிருந்தது. உச் கொட்டினாள் மீரா.

“கட்டு இறுக்கமாகத்தான் இருக்கு. எல்லாமே இருட்டாகத்தான் தெரியுது.”

“பிறகெப்படி இது காடென்று சொன்னாய்?” - இது புதியகுரல்.

“இது ஒன்றும் பெரிய ரகசியம் இல்லை. காற்றும் பறவைகளின் ஒலியும் இந்தக் குளுமையும் சொல்கிறதே. இது பசுமையான காடென்று”



“ம். கொஞ்சம் புத்திசாலிதான்” - இது முதலில் கேட்டகுரல்.

“இப்ப எதுக்கு அவளைப் பாராட்டுற? இவ புத்திசாலியா இருக்கிறது நமக்குத்தான் ஆபத்து. உன் வாயைக் கொஞ்சம் மூடிட்டு வா” - இது அடுத்த குரல்.

“நடக்காத காரியத்தைப் பேசாதே அஜய்” - என்றதும் “ஷ்” - என மொத்தமாய் எச்சரிக்கை செய்தனர் மற்றவர்கள்.

மீராவிற்கு புரிந்தது. அவர்களின் பெயர் தனக்கு தெரிந்துவிடக்கூடாதாம். பயமோ எச்சரிக்கையோ இருக்கத்தானே செய்யும். சும்மா பேருந்து நிலையத்தில் நின்றவளை பேச்சுக் கொடுப்பது போல் அருகே நின்று திடீரென ஏதோ ஸ்பிரே அடித்து மயக்கப்படுத்தி.. இதோ கண்களைக் கட்டிவிட்டு எங்கோ அழைத்து.. இல்லை கடத்திச் செல்கிறார்களே! எச்சரிக்கையோடு தானே இருப்பார்கள்.

ஆனால் இப்போது அது முக்கியமல்ல. இவர்கள் ஏன் தன்னைக் கடத்த வேண்டும்? நிச்சயமாக இவர்கள் காமவெறியர்கள் அல்ல. மொத்தமாய் நடந்து வந்த போதும் தன்மீது நால்வரில் ஒருவனின் கைகூடப் படவில்லை. தெரியாமல் படுவதுபோல் உரசியதும் இல்லை.

தன்னோடு பேசிய நால்வருமே இளைஞர்கள். பார்ப்பதற்கு கம்பீரமாகவும் படித்த களையோடும் தெரிந்தார்கள். பேச்சில் கண்ணியமும் இருந்தது. பிறகேன் தன்னை இப்படிக் கடத்திவந்தார்கள்? பணத்திற்காகவா?

பணத்திற்காக என்றால் அது அவர்களின் பகல் கனவாகத் தான் இருக்கும். தன் தந்தையிடம் இருந்து பத்து பைசாகூட வராது. அது தெரியாமல் தன் தோற்றத்தைப்

பார்த்து கடத்தத் திட்டமிட்டுவிட்டார்களா? இப்போது எங்கே அழைத்துப்போகிறார்கள்? எப்போது வீட்டிற்கு விடுவார்கள். நான் எவ்வளவு நேரமாய் மயங்கிக் கிடந்தேன். இப்போது மணி என்ன? ஆறுமணிக்குள் வீடு போய்ச் சேரவில்லையென்றால் அம்மா பயந்துவிடுவார்களே. இவர்களின் நோக்கம் என்ன? எதற்காக என்னைக் கடத்தினார்கள்? ஆயிரம் கேள்விகள் வரிசையாய் தோன்றி பயமுறுத்த அசையாமல் நின்றுகொண்டிருந்தாள் மீரா.

"இப்படியே நின்னுட்டு இருந்தா என்ன அர்த்தம்? நட" -மிரட்டலாய் ஒலித்தது ஒரு குரல்.

"எதற்காக என்னைக் கடத்துறீங்க. நான் வீட்டுக்குப் போகணும். அம்மா தேடிட்டு இருப்பாங்க"

"தேடட்டும். நீ நட."

"மாட்டேன். எனக்கு வீட்டுக்குப் போகணும்"

"உன்னை நோகாம வீட்டுக்கு அனுப்பவா வாடகைக் கார் எடுத்து உன்னை ஃபாலோ பண்ணி மயக்கப்படுத்தி இவ்வளவு தூரம் அழைச்சிட்டு வந்தோம். பேசாம வா. பொழுது இருட்டிப்போச்சு. இனிமே இங்கே நின்னா ஆபத்து"

"என்னை எங்கே கூட்டிட்டுப் போறீங்க?"

"சேரவேண்டிய இடத்திற்குப் போனதும் சொல்றோம் வா."

"இன்னும் எவ்வளவு தூரம் போகணும். என்னால நடக்கமுடியல்ல"



"ஏன் என் அப்பன் உனக்கு சாப்பாடே போடமாட்டானா? அதுக்கும் கணக்குப் பார்ப்பானா?" -அலட்சியமாய்க் கேட்டது அஜயின் குரல்.

"இதோ பாருங்க. எங்க அப்பாவை மரியாதைக் குறைவாப் பேசாதீங்க"

"மரியாதையா? உன் அப்பனுக்கா? அவனுக்கு இனிமேத்தான் இருக்கு பூசை. நீ சும்மா பேசி நேரத்தை வீணாக்காதே. நேரம் தாண்டிப்போனா புதர்ல உள்ள பாம்பு தேளெல்லாம் நடமாட ஆரம்பிச்சிடும். நட" - என்றவனின் மிரட்டலில் உடல் நடுங்கினாள் மீரா.

"ஐயோ! எனக்கு ரொம்ப பயமா இருக்கு. என் கட்டையாவது அவிழ்த்து விடுங்களேன். ரொம்ப இருட்டா இருக்கு"

"ஏன் எங்களை அடையாளம் காட்டவா?"

"இல்லை. அப்படியெல்லாம் இல்லை. நிஜமாவே எனக்கு பயமா இருக்கு. ப்ளீஸ் கட்டை அவிழ்த்து விடுங்க"

"என்ன கண்ணா? அவிழ்க்கவா?"

"வேண்டாம். இவளுக்கு இந்தப் பாதை தெரியக் கூடாது. அங்கே போய் அவிழ்த்தா போதும். வாங்க போலாம்" - மெதுவாய் அதே சமயம் கடினமாய் ஒலித்த அந்தக் குரல் தனக்கு வெகு அருகே கேட்டது. குரல் வந்த திசையை நோக்கித் திரும்பினாள்.

"கண்ணன் ஸார். சத்தியமா நான் எதையும் காட்டிக் கொடுக்கமாட்டேன். எனக்கு இருட்டுன்னா ரொம்பபயம்.

ப்ளீஸ். அவிழ்த்து விடுங்க ஸார்"-அவளது கெஞ்சல் அனைவரையுமே அசைத்தது.

ஒருகணம் அமைதியாக நின்றனர். மறுகணமே முகம் இறுகிப்போய்விட " இதோ பார். அநாவசியமா உன்னைத் தொடவேண்டாம்னு பார்க்கிறோம். இந்தமாதிரி ஏதாவது பேசிட்டு இருந்தா கையைப் பிடிச்சு தரதரன்னு இழுத்துட்டுப் போக வேண்டியிருக்கும். உனக்கு எப்படி வசதி?" என்றதும் மிரண்டு போனாள்.

"வே.. வேண்டாம். நா..நானே வருகிறேன். ரொம்ப தாகமா இருக்கு. கொஞ்சம் தண்ணீராவது கொடுங்களேன்"

"வா. தர்றோம்" - என்றவாறு அவர்கள் நடக்க, மௌனமாய் சற்று பதட்டமாய் தானும் நடந்தாள் மீரா. மனம் வேகமாய் கணக்கிட்டது.

மொத்தம் நான்கு குரல்கள் கேட்கிறது. நான்கு பேருமே நண்பர்களாக இருக்க வேண்டும். என்னை என்ன செய்யப்போகிறார்கள்? ஒருவேளை வேறு யாரேனும் சொல்லி என்னைக் கடத்தியிருக்கிறார்களா? இவர்கள் வெறும் அடியாட்களா? இந்தக் கும்பலின் தலைவர்களிடம் அழைத்துப் போகிறார்களோ?

அதனால்தான் வழி தெரிந்தால் போலீஸிடம் காட்டிக் கொடுத்துவிடுவேன் என்று பயப்படுகிறார்களோ. இருட்டிவிட்டது என்றானே. அப்படியென்றால் அம்மா தேடத் துவங்கி இருப்பார்களே - மனம் பதற மெல்ல குரல் கொடுத்தாள்.

"ஸார்! இப்போ மணி என்ன?"



"எதுக்கு?"

"ப்ளீஸ் ஸார். சொல்லுங்களேன்"

"மணி ஆறே கால் - என்ன இப்போ"

"ஐயோ! என் அம்மா தேடுவாங்களே. என்னைக் காணலன்னா உடனே அழ ஆரம்பிச்சிடுவாங்களே. நான் என்ன பண்ணுவேன்" -மீரா சத்தமாய் அழ ஆரம்பித்தாள்.

"ஏய்! வாயை மூடு. சத்தம் வெளியே கேட்கக் கூடாது"

"ஏன் ஏன்?"

"என்ன ஏன்? உன் சத்தத்தில ஒய்வெடுக்கிற சிங்கம் புலியெல்லாம் நம்மளத் தேடி வந்திடும்"

"ஐயோ" - கப்பென வாயை மூடிக்கொண்டாள்.

"ம். இதே பொஸிஷன்ல வா. இன்னும் பத்து நிமிஷம் தான். ஊருக்குள்ள போயிடலாம்"

"நாம எந்த ஊருக்கு போறோம்"

"ஏய். வாயில கை வை"

"கண்ணன் ஸார். நீங்க ஸ்கூல் வாத்தியாரா?"

"இல்லையே. ஏன்?"

"வாயில கைவைக்கச் சொல்றீங்களே. அதான் கேட்டேன்"

"கொழுப்பு. உடம்பு முழுக்கக் கொழுப்பு"

"இருக்காதா கண்ணா? ஒரு வீட்டு துட்டா இரண்டு வீட்டு துட்டா? ஊர்ல உள்ளவன் எல்லா துட்டும் இவன் அப்பன்கிட்டதானே முடங்கிக்கிடக்கு. அந்த பணக்

கொழுப்பு மகளுக்கு இல்லாமலா இருக்கும்?" -கசப்பாய் கூறினான் விஷ்வா.

"கவலைப்படாதே விஷ்வா. இவளுக்குப் போடுற போடுல இவ அப்பன் அலறியடிச்சிட்டு வரப்போறான். அப்போ இவங்க கொழுப்பை இறக்கிடலாம்"

"எக்ஸ்கியூஸ்மி ஸார். ஒருத்தரைப் பத்தி அவர் இல்லாத நேரம் விமர்சிக்கக் கூடாது. அது பெரிய பாவம்" - என்றாள் மீரா.

"பார்ரா. பாவத்தைப் பத்தி இவ பேசுறா. ஏம்மா இதெல்லாம் உன் அப்பன்கிட்ட சொல்ல மாட்டியா?

"சொல்வேனே. ஒவ்வொரு நாளும் இதுக்காகவே எங்க வீட்ல சண்டை வரும். ஆனா அப்பா எதுக்குமே அசையமாட்டார்"

"அவரை அசைக்கத்தான் உன்னைத் தூக்கியிருக் கோம்"-என்றான் கோபி.

"என்னைக் கடத்தி எங்கப்பாகிட்ட பணம் கேட்கப் போறீங்களா ஸார்?"

"கேட்டா கொடுத்திடுவானா?"

"என் உயிரே போனாலும் பத்துபைசா தரமாட்டார். எங்கப்பாவுக்கு என்னை விட பணம் தான் பெரிசு" - என்றாள் சற்று அவமானத்தோடு.

அனைவரும் அமைதியாயினர். அந்த அமைதி இன்னும் பயமுறுத்த, "ஏதாவது பேசிட்டே வாங்க ஸார். காட்டுப்பூச்சியோட சத்தம் கேட்டா பயமாஇருக்கு" என்றாள் மீரா.



"நீ எதுக்குத்தான் பயப்பட மாட்டே?"

"மனுஷங்களைப் பார்த்தா பயப்படமாட்டேன்"

"இது பெரிய விஷயம்தான். தண்ணி கேட்டியே. இதோ நீரோடை போகுது பார். குடிச்சுக்க. ரொம்ப சில்லுன்னு இருக்கும்" - என்றவாறு மற்றவர்கள் நிற்க, காலைக் குளிர்ச்சியாய் நனைத்துவிட்டுச் சென்ற நீரோடையில் நீரை அள்ளிக் குடித்தாள்.

குளிர்ச்சியாய் சுவையாய் இருந்த நீரை வயிறு முட்டக்குடித்துவிட்டு புடவைத் தலைப்பால் வாயைத் துடைத்துக்கொண்டாள்.

"ரொம்ப தேங்க்ஸ் ஸார். வயிறு நிறைஞ்சிடுச்சு! சரியான பசி எனக்கு"

கண்ணன் சற்றே பதறினான். "நீ.. நீ மத்யானம் சாப்பி டலையா?"

"ம்ப்ச்! இல்ல ஸார். இன்னிக்கு காலையிலேயே வீட்ல பெரிய சண்டை அதனால ஆபீசுக்கு சாப்பாடே எடுத்திட்டுப் போகல்ல"

"அப்படியென்ன பெரியசண்டை?" - விஷ்வா கேட்டான்.

"யாரோ சில பசங்க அப்பாகிட்ட பணம்வாங்கி அது மூலமா படிச்சிருக்காங்க. இப்போ வேலை தேடிட்டு இருக்காங்களாம். இந்தநேரம் பார்த்து இந்த அப்பா தன்னோட கடனுக்காக அவங்களோட சர்டிபிகேட்ஸ் எல்லாம் அபகரிச்சு வெச்சகிட்டார். அந்தப் பசங்க பாவ மில்லையா?"

"பாவம் தான்" - என்றனர் கோரஸாய்.

"சர்டிபிகேட் இருந்தாத்தானே வேலைகிடைக்கும்? வேலை கிடைத்தால்தானே அவங்களால கடனை அடைக்கமுடியும். இது இந்த அப்பாவிற்கு புரியவே இல்லை. எடுத்துச் சொன்னால் கேட்பதும் இல்லை"

"யார் எடுத்துச் சொன்னது?"

"நானும் அம்மாவும் தான். நாங்கள் தான் அப்பாவுடன் வாதாடுவோம் கடைசியில் தோற்றுப் போயிடுவோம்" -என்றாள் வருத்தமாய்.

"உன் மீது உன் அப்பாவிற்கு அன்பு கிடையாதா?"

"ம்ஹூம். கௌரி தான் அவர் செல்லம். அப்பா செய்யும் எல்லாத் தப்பிற்கும் நன்றாய் தாளம் போடுவாள்"

"அது யார் கௌரி?" - யோசனையாய்க் கேட்டான் கண்ணன்.

"என் தங்கை. எம்.பி.ஏ. படிக்கிறா"

"தப்பு பண்ணிட்டோம்பா. " - என்றான் மற்றவர்களைப் பார்த்து.

"ஏன்டா?"

" இவ ஒரு யூஸ்லெஸ் பெல்லோ. பேசாம அந்த கௌரியையே கடத்தியிருக்கலாம்" என்றான் விஷ்வா கோபமாய்.

மீராவின் முகம் வாடியது. கண்களில் ஈரம் சுரந்து கட்டியிருந்த துணியை நனைத்தது. அஜய்யும் கோபியும் விஷ்வாவைக் கடிந்துகொண்டனர்.



"விஷ்வா! உனக்கு ஆயிரம் கோபம் இருக்கலாம். அதுக்காக மத்தவங்க மனசு புண்படுறமாதிரி பேசலாமா.? தப்பு விஷ்வா."

"நான் இப்போ என்ன தப்பா பேசிட்டேன், உள்ளதைத்தானே சொன்னேன். இவளே சொல்லிட்டா இவ உயிர் போனாக்கூட பத்துபைசா தேறாதுன்னு. பிறகேன் இவளை இவ்வளவு கஷ்டப்பட்டு கூட்டிட்டுப் போகணும்?"

"ஸார்! அப்போ.. பணத்துக்காகத்தான் என்னைக் கடத்துனீங்களா?"

"அப்படின்னு சொல்லமுடியாது"

"பின்னே?"

"அதைவிடப் பெரிய விஷயம்."

"என்ன? தங்கம்.. வைரம்னு ஏதாவது கேட்கப் போறீங்களா?"

"அதெல்லாம் எங்களுக்கு எதுக்கு? கையில காதுல மாட்டிக்கவா?"

"வேற.. வேற எதுவும் அப்பாகிட்ட இல்லையே ஸார்"

"இருக்கு. நிறைய இருக்கு"

"என்ன ஸார் சொல்றீங்க?"

"ஊர்ல உள்ள கஷ்டப்பட்டவன் வீட்டுப்பத்திரம். நிலப்பத்திரம் ஏன் ரேஷன்கார்டைக் கூட விடாம வாங்கி வெச்சிருக்கானே"

நடந்து கொண்டிருந்த மீரா சட்டென நின்றாள்.

“உங்க வீட்டுப் பத்திரம் மேல கடன்வாங்கினீங்களா? இப்போ கடனை அடைக்கமுடியாம பத்திரத்தை வாங்கத் தான் என்னைக் கடத்திட்டு வந்தீங்களா?”

“வீட்டுப் பத்திரம் இல்ல. எங்க எதிர்காலத்தையே உங்கப்பன் பறிமுதல் பண்ணிக்கிட்டான் . நாலுபேரோட வாழ்க்கையும் திக்குதிசையில்லாம காத்துல பறந்திட்டு இருக்கு” - கோபக் குமுறலாய் விஷ்வா கூறினான்.

“விஷ்வா ஸார். கொஞ்சம் புரியுறமாதிரி சொல்லுங்க ளேன்” - மீரா பரிதாபமாய்க் கேட்க, கண்ணன் தொண்டையைச் செருமிக்கொண்டான்.

“மீரா! உனக்கு உன் அப்பாவைப்பற்றி எல்லாமே தெரிந்திருப்பதால் உன்னிடம் சொன்னால் தப்பில்லை. இப்பக் கொஞ்சம் முன்னால சொன்னியே ஏதோ பசங்க கிட்ட இருந்து சர்டிபிகேட்ஸ் எல்லாம் வாங்கி வெச்சிருக் கான்னு”

“ஆமா”

“அந்தப் பசங்க வேறுயாரும் இல்ல. நாங்கதான்.”

“என்ன?” - அதிர்ந்து போனாள் மீரா.

“ஆமா! அந்த சர்டிபிகேட்ஸ் எல்லாம் எங்க கைக்கு வந்தாகணும். அதுக்காகத்தான் வேறு வழியில்லாம இந்த கடத்தல் வேலையைச் செய்யவேண்டியதாகிப் போச்சு” - கண்ணனின் குரலில் சற்றே வருத்தம் தொனித்தது.

“இது எங்களுக்கே பிடிக்கல்லதான். டிகிரி முடிச்சிட்டு வேலையில ஜாயின் பண்ற உற்சாகத்துல இருந்த எங்களை என்ன காரியம் பண்ணவைத்து விட்டான் உன் அப்பன்” - கோபி.



“கல்விக்கடன்தானே. தாராளமாத் தரேன்னு வலிய வந்து பணம் தந்தப்போ பெரிய கடவுள்னு நினைச்சோம். இப்பத்தானே அவன் புத்தி தெரியுது”-விஷ்வா.

“இல்ல தெரியாமத்தான் கேட்கிறேன். எங்க சர்டி பிகேட்ஸ்ஸ வெச்சு அவன் என்ன பண்ணப்போறான்! வேலையா தேடப்போறான். ஸ்டுப்பிட் ”-அஜய்.

“ஸார்! உங்க கோபமெல்லாம் புரியுது. ஆனா.. இதை யெல்லாம் என்அப்பாகிட்ட நயமா பேசியிருக்கலாமே”

“அதெல்லாம் மூணுமாசமா பேசிப்பார்த்தாச்சு. உன் அப்பன் மசியலை. அதான் இந்தத் திட்டமே எங்களுக்கு தோணிச்சு.”

“அது சரி ஸார். ஆனா என்னால எதுவும் பண்ண முடியாதே”

“நீ ஒண்ணும் பண்ண வேண்டாம். நாங்க சொல்றதை உன் அப்பன்கிட்டபேசு. மத்தது தானா நடக்கும்”

“என்ன பேசணும்?”

“இப்போ நாம ஒரு இடத்துக்கு போறோம். அங்கே போய் சேர்ந்ததும் சொல்வோம். பேசாமல் வா” - அனைவரும் நடக்கத் தொடங்கினர்.

அதுவரை இயல்பாக பேசிக்கொண்டு வந்தவர்கள் அதன்பிறகு பேசவில்லை. காட்டைவிட்டு விலகி ஏதோ ஊருக்குள் நுழைந்துவிட்டது புரிந்தது. தன்னைக் கடந்து ஒரிருவர் சென்று கொண்டிருக்க, அவர்கள் ஏதோ பேச, அந்த பாஷை புரியவில்லை. வெகுதூரம் வந்து விட்டி ருப்பது புரிந்துவிட மீராவின் வயிற்றுக்குள் பயப்பந்து உருண்டது. என்ன இடம் இது? என்னை என்ன செய்யப் போகிறார்கள்?

## 2

வாசலுக்கும் தெருவிற்குமாய் பதட்டமாய் நடை போட்டுக் கொண்டிருந்தாள் பார்வதி. நேரம் தான் கடந்து கொண்டே போனதே தவிர மீரா வரும் சுவடே தெரிய வில்லை. தெருமுனைவரை பார்வையை வீசிவிட்டு தயக்க மாய் வீட்டினுள் நுழைந்தாள்.

ஹாலின் டி.வி.யில் ஒன்பது மணிக்கான சீரியல் ஆரம்பமாகிக் கொண்டிருக்க, ஒரு ஓரமாய் போடப் பட்டிருந்த மேஜைமீது தனது சுரிதாரை அயர்ன் பண்ணிக் கொண்டிருந்தாள் கௌரி. ஏதோ பாடலை சத்தமாக முணுமுணுத்துக் கொண்டிருந்தாள். தாயைக் கண்டதும் நிறுத்தினாள்.

"அம்மா! இன்னும் எவ்வளவு நேரம்தான் இப்படியே உலாத்திட்டு இருப்ப. பசிக்குதும்மா. தோசை ஊத்து." - சிணுங்கினாள் கௌரி.

"ஏன்டி! நானே மீராவைக் காணோம்னு பதறிப் போய் இருக்கேன். உனக்கு அப்படியென்ன பசி?"

"ஆமா! அவ எங்கேயாவது ஊரைச் சுத்திட்டு வருவா. அதுவரைக்கும் நாங்க எங்க வயித்தைக் காயப் போடணுமா?"

"வாயை மூடுடி. எம்பொண்ணு என்னிக்குடி ஊரைச் சுத்திட்டு லேட்டா வந்தா? அஞ்சரைக்கெல்லாம் வந்துடு வாளே. இன்னிக்கு என்ன ஆச்சோ தெரியலையே." - பரிதவித்த அன்னையைப் பார்த்து உதட்டைச்சுளித்தாள்.



"அவ என்ன குழந்தையா தொலைஞ்சு போறதுக்கு?"

"நீ சொன்னாலும் சொல்லாட்டியும் அவ குழந்தை தான்டி"

"பிறகேன் குழந்தையை வேலைக்கு அனுப்புறே. வீட்டிலயே ஒருதொட்டில் கட்டிப்போட்டு தாலாட்டுப் பாட வேண்டியது தானே"

"பேசுவடி. உன் அப்பன் புத்தி தானே உனக்கும். அவ சம்பாதிச்சி கொண்டு வர்ற காசு வேணும் உங்க ளுக்கு. ஆனா அவ முக்கியமில்லை. அப்பனுக்கு தப்பாம பொறந்திருக்கியே"

"அம்மா! ரொம்பப் பேசாதே. சம்பாதிக்கிற பணத்தை வெச்சு அவ என்ன பண்ணப்போறா? ஒரு ட்ரஸ் எடுக்கவோ ஒரு முழம் பூ வாங்கக் கூட அவளுக்கு நம்ம துணை வேணும். தனியா போய் எதையாவது வாங்கிட்டு வந்தி ருக்காளா? காசை செலவு பண்ணக்கூட தெரியாதவளுக்கு நாலாயிரம் ரூபா சம்பளம்."

"அந்தப் பணத்துக்காகத் தானே எம்புள்ளைய சக்கையா பிழிஞ்சு எடுக்கிறீங்க? ஒழுங்கா சாப்பிடக் கூட நேரமில்லாம அவ துரும்பாப் போயிட்டாளே. இன்னிக்கு காலையிலயும் சண்டைபோட்டு அவளை சாப்பிட விடாம பண்ணிட்டார் உங்கப்பா"

"அவ திமிரெடுத்து சாப்பிடாமப் போனா நாங் கென்ன பண்ண முடியும்? எல்லாம் கேன்டீன்ல சாப்பிட்டு இருப்பா"

"அப்படியெல்லாம் சாப்பிடமாட்டாளே. மதியத் துக்கும் சாப்பாடு எடுத்திட்டுப் போகல்ல. பசியில மயக்கம்

போட்டு எங்கும் விழுந்திட்டாளோ என்னவோ தெரியலையே"

"உன்னால பெரிய தொல்லையாப் போச்சும்மா. அப்படியெல்லாம் எதுவும் ஆகியிருக்காது. இப்ப வந்திருவா. என்க்கு தோசை ஊத்திக் கொடும்மா"

"பசிச்சா நீ பாடு ஊத்தி சாப்பிடு. நான் தெருமுனை வரை போய் பார்த்திட்டு வந்திடுறேன்" - என பார்வதி நகர்ந்துபோது உள்பக்க அறைக்கதவு திறக்கப்பட்டது. பார்வதியின் நடை தடைபட்டது.

தனது கனத்த சரீரத்தை அசைத்தவாறே வந்து அமர்ந்தார் திருப்பதி. தொப்பை வரை ஊஞ்சலாடிய தடிமனான தங்கச்சங்கிலியில் கற்கள் பதித்த லஷ்மிடாலர் விரல்களில் பெரிய மோதிரத்தோடு மீசையை முறுக்கிய வாறே மனைவியை ஏறிட்டார்.

"புள்ளை பசிக்குதுன்னு சொன்னா சாப்பாடு போடுறதை விட்டுவிட்டு தெருவுக்கு ஏன்டி போற? - கரகரப்பான குரலில் சற்றே மிரண்டாலும் தன்னை திடப் படுத்திக் கொண்டாள் பார்வதி.

"இன்னொரு புள்ளை வீட்டுக்கே இன்னும் வரல்ல. அது உங்க கண்ணுக்குத் தெரியலையா? மணி ஒன்பது தாண்டிப்போச்சே"

"காலையில எங்கிட்ட அப்படி எகிறிட்டு போனாளே. அந்தக் கோபத்தை இப்படிக் காட்டுறாளோ என்னவோ"

"என்னங்க இப்படிச் சொல்றீங்க? மீரா அப்படிப் பட்ட வீம்புக்காரியா? உங்களுக்குத் தெரியாதா?" - விசும்பினாள் பார்வதி.



"சரி. நீ ஆரம்பிச்சுடாதே. இன்னும் கொஞ்சநேரம் பார்ப்போம். முதல்ல சாப்பாடு போடு"

"முதல்ல அவ ஆபீஸ்வரை போய் பார்த்திட்டு வந்துடுங்களேன் . எனக்கு பயம்மா இருக்கு. வயசுப் பொண்ணாச்சே"

"ஏன்டி கத்தி ஊரைக் கூட்டுற? சத்தம் போடாம இரு. கௌரி அவ சிநேகிதி எவ நம்பராவது உனக்கு தெரியுமாம்மா"

"தெரியலப்பா. இவ யாருக்கும் போன் பண்ணி பேசினதே இல்லையே! பேசாம இவளுக்கு ஒரு செல் போன் வாங்கிக் கொடுத்திருக்கலாம். இப்ப எப்படி கான் டாக்ட் பண்றது."

"கையில செல்போன் இல்லன்னா என்ன? தெருவுக்கு தெரு வரிசையா போன் வெச்சிருக்கானே. ஒரு ரூபா செலவுபண்ணி நம்மகிட்ட பேசலாமில்ல. எல்லாம் திமிரு. அவ சொன்னதை நான் கேட்கல இல்ல அதான் பூச்சாண்டி காட்டுறா"

"யாருப்பா அந்தப் பசங்க? நமக்குத் தெரிஞ்சவங்களா?"

"அதெல்லாம் இல்லம்மா. நம்ம கான்டீபனோட சொந்தக்கார பசங்களாம் அவன் சொன்னான்னுதான் பணத்தைக் கொடுத்தேன். முதல்ல ஒழுங்கா வட்டி கட்டிட்டு வந்தானுங்க இப்ப படிப்பு முடிஞ்சதும் அப்படியே கம்பிய நீட்டிடலாம்னு பார்க்கிறானுங்க"

"அப்படின்னு அவனுங்க சொன்னாங்களா? நீங்களா எதையாவது கற்பனை பண்ணிட்டு உளறாதீங்க" - பார்வதி சிடுசிடுத்தாள்.

கௌரி. வெகு நேரம் மணியடித்துக் கொண்டேயிருந்தது. மீண்டும் இருமுறை முயற்சித்து விட்டு ஏமாற்றமாய் உதட்டைப் பிதுக்கினாள் கௌரி.

"யாரும் எடுக்கலப்பா"

"ஐயோ! எம் பொண்ணு என்ன ஆனாளோ தெரியலையே" - பார்வதி பெருங்குரலெடுத்து அழ ஆரம்பித்த போது தொலை பேசி அழைத்தது.

"அழாதே. உம் மகளாத்தான் இருக்கும். எடுத்துப் பேசு" - என்றார் திருப்பதி. முந்தானையால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு ஆவலாய் ரிஸீவரை எடுத்து காதில் வைத்தாள் .

"ஹலோ! மீராவாம்மா பேசுறது?"

"நீங்க யாரு?" - மறு முனையில் சற்று விரைப்பான ஆண் குரல் கேட்க மிரண்டு விழித்தாள் .

"யா. . யாருங்க பேசுறது?"

"நாங்க கேட்டதுக்கு பதில் சொல்லுங்க." -மறுமுனை மிரட்ட பதட்டமாய் கணவனை ஏறிட்டாள் பார்வதி.

மனைவியின் முகத்தைப் பார்த்த திருப்பதி, "என்னடி? பேயைக் கண்டவ மாதிரி முழிக்கிற? போன்ல யாரு. இப்படிக் கொடு" - என்றவாறே ரீஸிவரை வாங்கினார்.

"ஹலோ! யார் பேசுறது?"

"என்னய்யா! கந்து வட்டிக் கடன்காரா? என்ன இன்னும் தூங்கலையா? " -நக்கலாகக் கேட்டான் விஷ்வா.

"ஏய் யாருடா நீ?"



"இரு. இரு ஏன் பதறுற? ஆமா சாப்பிட்டியா? சோறு உள்ளே இறங்கியிருக்காதே. சோறே கிடைச்சிருக்காதே. நான் சொல்றது சரிதானே"

"ஏய். முதல்ல நீ யாருன்னு சொல்லுடா."

"சொல்றோம். உன் மனைவி பொண்ணைக் காணோம்னு அழுதிட்டு இருக்காங்களா? முதல்ல உன் மனைவிகிட்ட கொடு போனை"

"அவகிட்ட ஏன் கொடுக்கணும்?"

"இங்கே உம் பொண்ணு சின்னக் குழந்தை மாதிரி அடம் பிடிக்கிறா. அம்மா குரலைக் கேட்டாத்தான் சாப்பிடுவாளாம். போனைக் கொடு"

"என்ன சொல்கிறாய் நீ? எம் பொண்ணு உங்களிடம் இருக்கிறாளா? நீங்கள் யார்? அவ எங்கே இருக்கா?"

"எங்கிட்ட தான் பத்திரமா இருக்கா. அது பத்திரமா திரும்பி வர்றது இப்ப உன் கையில தான் இருக்கு"

"நான்.. நான் என்ன செய்யணும்? நீ யார் முதல்ல அதைச் சொல்லு"

"உன்னால பாதிக்கப்பட்டவர்களில் நானும் ஒருவன். இப்போதைக்கு இது போதும் மிச்சத்தை உன் பொண்ணு வீட்டுக்கு வந்தப்புறம் கேட்டு தெரிஞ்சுக்க"

"அவளை கடத்தி வெச்சிருக்கீங்களா? உங்களை சும்மா விட மாட்டேன்" திருப்பதி குரலை உயர்த்த பார்வதி திடுக்கிட்டாள்.

"ஐயோ! எம்பொண்ணைக் கடத்திட்டீங்களா? ஐயோ! எதுக்கு? எம் பொண்ணு ஒரு பாவமும் அறியாதவளாச்சே." - தலையில் அடித்துக் கொண்டு அழுதாள்.

"அவன்கிட்ட போய் என்னடி கெஞ்சிட்டு இருக்க. ஏய், யாருடா நீ? நான் யாருன்னு தெரியாம விளையாடிட்டு இருக்கியா? ஒழுங்கா எம் பொண்ணை வீட்டுக்கு அனுப் பிவை. இல்ல நடக்கிறதே வேறு" - திருப்பதியின் மிரட்டலில் எதிர்முனை சிரித்தது.

"நாங்க யாருன்னு ராத்திரி முழுதும் யோசிச்சு வை. காலையில போன் பண்றோம். அப்புறம் ஒரு விஷயம்! உம் மக வீட்டுக்கு வரலன்னு வெளியே சொல்லிடாதே. அது உனக்கும் உன் குடும்பத்திற்கும் தான் அசிங்கம். வெச்சிடவா பேட் நைட்" - என்றவாறு போன் கட் செய் யப்பட்டு விட திருப்பதி "ஹலோ ஹலோ - என கத்திக் கொண்டே இருந்தார்.

## 3

"என்னடி சொன்னான் உங்கிட்ட?"

"எதுவோ சொல்ல வந்தாங்க. அதுக்குள்ள போனைப் பிடுங்கிட்டீங்களே. எங்கே பேச விட்டீங்க?"

"இந்த சனியன் எப்படி அவனுங்ககிட்ட மாட்டிக் கிட்டா. ச்சே. இன்னும் ரெண்டு நாள்ல மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வர்றதா சொல்லி அனுப்பினாங்களே. அதுக்குள்ள வீடு வந்து சேர்ந்திடுவாளா?"

"ஏதாவது செய்யுங்க. நாளைக்கு விடியும் போது எம்புள்ளை நம்ம வீட்ல இருக்கணும். யாருக்காவது தெரிஞ்சா ஊர் முழுக்க விஷயம் பரவிடுமே"



"அவன் யாருன்னே தெரியாம நான் என்னடி பண்ணுவேன் ?"

"அப்பா! ஒருவேளை உங்ககிட்ட கடன் வாங்கின யாரும் உங்களைப் பழிவாங்க இப்படிப் பண்ணிருப் பாங்களோ"

"இந்த அளவுக்கு துணிஞ்சவன் யாரும் இல்லையே"

"யோசிச்சுப் பாருங்கப்பா. ஏதாவது வாக்கு வாதம் இல்ல சச்சரவுன்னு யாரு கூடயாவது சண்டைபோட் டீங்களா?"

"இவர் என்ன போடுறது? அதான் வர்றவன் எல்லாம் வயிறு எரிஞ்சு சாபம் கொடுத்திட்டுப் போறானே. அது தான் நம்மளை ஆட்டிப்படைக்குது"

"வாயைமூடுடி. தொழில்னா எல்லாம் தான் இருக்கும்"

"எத்தனையோ தொழில் இருக்கே. இப்படி வட்டிக்கு விட்டு சம்பாதிக்கிறதெல்லாம் ஒரு தொழிலா?"

"உனக்கு என்னடி தெரியும். உட்கார்ந்த இடத்தில இருந்தே சம்பாதிக்கிற தொழில்டி. இந்த உடம்பை வெச்சிகிட்டு என்னால ஓடியாடி சம்பாதிக்க முடியுமா?"

"அதுக்காக மத்தவங்க வயத்தில அடிக்கலாமா?"

"நான் யார் வயத்தில அடிச்சேன் . பணம்னு கேட்டு வர்றவனுக்கு தயங்காம கொடுக்கிறேன். ஆஸ்பத்திரிக்கு போறவனும் வாங்குறான். ஆடுமாடு மேய்க்கிறவனும் வாங்குறான். அவசரத்துக்கு பணம் கொடுத்து உதவறது எவ்வளவு பெரிய புண்ணியம் தெரியுமா?"

"தெரியும். ஆனா அவங்க அவசரத்தை உங்களுக்கு சாதகமா பயன்படுத்திக்கிட்டு அவங்க சொத்துபத்தை

அடமானமா எழுதி வாங்குறதும் வட்டிக்கு மேல வட்டி போடுறதும் பாவமில்லையா?"

"ஏய், நான் என்ன சும்மாவா வாங்கி வெக்கிறேன்? இப்படி எதையாவது அடமானமா வாங்கினாத்தான்டி அதை திருப்பணும்னு சீக்கிரம் கடனை அடைப்பான். நம்ம பணத்தோட ஓடவும் முடியாது."

"இப்ப நம்ம பொண்ணையே தூக்கிட்டுப் போயிட்டானே. இப்ப என்ன பண்ணப் போறீங்க? குடும்ப மானமே போகப் போகுதே"

"முதல்ல நீ உன் வாயை மூடு. கத்தியே ஊரைக் கூட்டிடுவா."

"என் வாயை அடைச்சா சரியாப்போகுமா? எம் புள்ளையை எப்படிக் காப்பாத்தப் போறீங்க?"

"எப்படியும் அவன் திரும்ப போன் பண்ணுவான்ல. அப்பப் பார்த்துக்கலாம். நீ போய்ப் படு"

"அவனுங்க போன் பண்ணி காசு பணம் எதுவும் கேட்பானுங்களோ"

"பத்து பைசா தர மாட்டேன். எம்பொண்ணை எப்படி மீட்கணும்னு எனக்குத் தெரியும்."

"எப்படி... எப்படி மீட்பீங்க?"

"அறிவு கெட்டவளே! இப்ப அவன் பணம் கேட்டான்னு வை. உடனே தூக்கிக் கொடுக்க நான் என்ன முட்டாளா?

"அப்போ.. நம்ம புள்ளையோட கதி?"

"பணம் கிடைக்காதுன்னு தெரிஞ்ச பிறகு உம்புள்ளைய வெச்சு எவன் சாப்பாடு போடுவான்? அவனே அனுப்பி



வெச்சிடுவான்" - திருப்பதி அலட்சியமாகச் சொல்ல பார்வதியின் வயிறு கலங்கிப்போனது.

"நம்ம பொண்ணை அப்படியே அனுப்பிடுவானா?"

"ஏய் வாயைக் கழுவு. கண்ட கண்ட சினிமாவெல்லாம் பார்த்து கெட்டுப் போயிருக்கே."

"நீங்கதான் யதார்த்தம் புரியாம பேசறீங்க. கேட்ட பணம் கிடைக்கலன்னா அவனுக்கு ஆத்திரம் வராதா. கோபத்தில நம்ம பொண்ணை கொன்னே போட்டான்னா?"

"அப்படியெல்லாம் ஒண்ணும் ஆகாதுடி."

"நடந்துட்டா..." - பிடிவாதமாய்க் கேட்டாள் பார்வதி.

திருப்பதிக்கு சர்ரென கோபம் ஏறியது. "நடந்துட்டா.. நம்ம நேரம் சரியில்லன்னு விட வேண்டியது தான். வேறென்ன செய்ய?"

"அப்பா!" - கௌரி அதட்டினாள்

"பின்ன என்னம்மா? கழுதை மாதிரி வளர்ந்திருக்கா. தன்னை ஒருத்தன் கடத்திக் கொண்டு போற வரைக்கும் என்ன செய்திட்டு இருந்தாள். கத்தி கலாட்டா பண்ணி தப்பிச்சிருக்க வேண்டாமா! அசமந்தம். அது இருந்து என்னத்த சாதிக்கப் போகுது" - என்ற கணவனை வெறுப்பாய் நோக்கினாள் பார்வதி.

"ச்சீ! நீயெல்லாம் ஒரு மனுஷன். பெத்த புள்ள அங்க எப்படித் தவிக்குதோ. நீ இங்க காசுக்கு கணக்கு பார்த்துட்டு இருக்கே. ச்சே."

"ஏய். அவன் காசு தான் கேட்பான்னு என்னடி நிச்சயம்?"

"காசு மட்டுமில்ல இந்த சொத்து பத்து எது கேட்டாலும் கொடுத்து மீட்கவேண்டாமா?"

"ம். எல்லாத்தையும் அவளுக்குக் கொடுத்திட்டு இதோ நிற்கிறாளே இவளையும் பெங்களூர்ல இருக்கிற எம்மகளையும் தெருவில நிற்க வைக்கணுமா?"

"நான் அப்படிச் சொல்லலங்க. பணமோ இல்லே உங்ககிட்ட அடமானம் வெச்ச பத்திரமோ எதையாவது கேட்டு மிரட்டினா?"

"அப்படி மிரட்டுறவனுக்கு என்னைப் பத்தித் தெரிஞ்சிருக்கும். அதனால அப்படி எதுக்கும் ஆசைப்பட மாட்டான். நான் நினைக்கிறேன் இது உம்மகளே நடத்துற நாடகம்னு"

"என்ன உளர்றீங்க?"

"பேசினவன் ஏதோ ஒரு ஆம்பிளைதானே"

"ஆமா"

"இன்னும் ரெண்டு நாள்ல பாண்டிச்சேரியில இருந்து மாப்பிள்ளை வீட்டுக்காரங்க பொண்ணு பார்க்க வர்றாங்கன்னு அவளுக்குத் தெரியுமில்ல"

"ஆமா"

"அப்போ நான் நினைப்பது தான் சரி"

"என்ன நினைச்சீங்க?"

"உம் பொண்ணை யாரும் கடத்தியிருக்க மாட்டாங்கடி இவளே எவன் கூடவோ ஓடியிருக்கா"

"வாயை மூடுங்க என்ன வார்த்தை இது. நம்ம புள்ளயப் பத்தி நமக்குத் தெரியாது."



"வேணும்னா பாரு. நாளைக்கு காலையில போன் பண்ணும் போது அவளே பேசுவா. அம்மா, எனக்குக் கல்யாணம் முடிஞ்சிடுத்துன்னு"

"கடவுளே! பெத்த தகப்பன் மாதிரியா பேசுறீங்க. புள்ளைங்க மேல நமக்கே நம்பிக்கை இல்லேன்னா எப்படி?"

"அப்போச் சொல்லுடி. உங்கிட்ட பேசினவன் என்ன சொன்னான்? எதுக்காக மீராவைக் கடத்தியிருக்கானாம். சொல்லுடி" - அதுவரை நிதானமாய் பேசிக் கொண்டிருந்த திருப்பதி திடீரென ஆவேசமாய்க் கேட்க, வெலவெலத்துப் போனாள் பார்வதி.

"என்ன கேட்கிறீங்க? அதான் சொன்னேனே..."

"பொய் பேசாதே. எதிராளி முகத்தை வெச்சே அவன் மனசில என்ன திட்டம் இருக்குன்னு நான் கண்டு பிடிச்சிடுவேன். சொல்லு. உங்கூட பேசினது யாரு?"

"அது... வந்து... யாரோ ஒருத்தன்..."

"அதுதான் யாருன்னு கேட்டேன்?" - திருப்பதி அதட்டியதும் நெஞ்சம் அதிர. பேசியது மீரா தான் என்று சொல்லி விட, வாயைத் திறக்கையில் மீண்டும் தொலை பேசி அழைத்தது.

"அவனாத்தான் இருக்கும். அவனை என்ன செய்யிறேன் பாரு"- என ஆவேசமாக போனை எடுத்து காதில் வைத்தார் திருப்பதி.

"ஹலோ! யாரு?"

"அப்பா! நான் தான் ராகவன் பேசுறேன்"- மகனின் உற்சாகமான குரல் கேட்டதும் சட்டென இயல்பானார்.

"ராகவா! எப்படிப்பா இருக்கே?"

ராகவன் என்றதும் ஆர்வமாய் நெருங்கிய மனைவியை பார்வையால் அடக்கி அமைதியாய் இருக்கும்படி சைகை செய்தார்.

"நல்லா இருக்கேம்ப்பா. வீட்ல எல்லாரும் நல்லா இருக்கீங்களா?

"நல்லா இருக்கோம்யா. ஆமா என்ன இப்ப போன் பண்ணியிருக்கே?"

"நேத்து அம்மா போன் பேசும் போது மீராவைப் பெண் பார்க்க வர்றதாச் சொன்னாங்க. முடிஞ்சா என்னையும் வரச் சொன்னாங்க"

"சொல்லிட்டாளா? அவசரக்குடுக்கை"

"ஏம்ப்பா! என்னாச்சு?"

"இல்லப்பா. தரகர் தான் சொல்லியிருக்கார். இன்னும் மாப்பிள்ளை வீட்ல இருந்து உறுதியாச் சொல்லல."

"அடடா! நான் ஆபீஸ்ல லீவு கேட்டேன். லீவும் கிடைச்சிடுச்சு. நாளை புறப்படுறதா இருக்கேன். அதைச் சொல்லத்தான் போன் பண்ணினேன்" - என்ற மகனிடம் பதட்டமாய் மறுத்தார்.

"அவசரப் பட வேண்டாம் ராகவா! நீ இப்பவே வர வேண்டாம் அவங்க வர்றது உறுதியானபிறகு நானே போன் பண்றேன். அப்ப வந்தாப் போதும்"

"சரிப்பா. அம்மா இருந்தாக் கொடுங்களேன்"

"அம்மா வீட்ல இல்லப்பா" - கணவனின் குரலில் கொதித்துப்போனாள் பார்வதி.

"வீட்ல இல்லயா? இந்த நேரத்தில எங்கே போனாங்க?"



"அது நம்ம வேம்புலி அம்மன் கோவில்ல இன்னிக்கு ஏதோ மாவிளக்கு பூஜையாம். அதான் உன் தங்கைகளையும் அழைச்சுண்டு போயிருக்கா"

அப்பாவின் வாயில் அடுக்கடுக்காய் வந்த பொய்யில் கௌரியே சற்று கோபமானாள். அவளைப் பாராமலே பேசினார் திருப்பதி.

"மணி பத்து தாண்டிப் போச்சேப்பா. தனியாப் போயிருக்காங்களே.

நீங்க துணைக்குப் போயிருக்கலாமே" - ராகவன் அக்கறையாய்க் கேட்டான்.

"இதோ. கிளம்பிட்டுத்தான் இருந்தேன். உன் போன் வந்திடுச்சு."

"சரிப்பா. நான் வெச்சுடுறேன். நீங்க அவங்களைக் கூட்டிட்டு வாங்க"

"சரிப்பா"

"அம்மாகிட்ட நான் பேசினேன்னு சொல்லிடுங்கப்பா. நாளைக்கு போன் பண்றேன்னு சொல்லுங்க"

"இருக்கட்டும். நீ எப்பவும் போன் பண்ணவேண்டாம். சம்பாதிக்கிற காசை போனுக்கே செலவழிக்காதே. நான் பிறகு போன் பண்றேன்"

"சரிப்பா. வெச்சிடுறேன்" - என ராகவன் போனை வைத்ததும் போனை வைத்தார் திருப்பதி.

"இப்ப ஏன் பொய்க்கு மேல பொய்யாப் பேசறீங்க. எம்புள்ளைக்கு போன் போடுங்க. நான் பேசணும்" - கோபமாய்க் கத்தினாள் பார்வதி.

"என்னடி பேசப்போற?"

"மீரா காணாமப் போனதைப் பத்தி பேசணும்"

"அதுக்காகத்தான் போனை உங்கிட்ட தரல்ல. பேசாம அவன் அங்கேயே இருக்கட்டும் அவனுக்கு எதுவும் தெரியவேண்டாம்."

"ஏன் தெரியவேண்டாம்?"

"தெரியவேண்டாம். உம் பொண்ணு தானா வருவா. அதுவரைக்கும் இந்த விஷயம் வெளிய தெரியக்கூடாது. எதாவது மூச்சுவிட்ட அப்புறம் நிரந்தரமா மூச்சே விடமாட்டே. ஜாக்கிரதை" - உறுமிவிட்டு தன் அறைக்குள் நுழைந்து கதவை அறைந்து சாத்தினார்.

விக்கித்துப் போய் அமர்ந்துவிட்டாள் பார்வதி. மூச்சைக்கூட இயல்பாய் விடமுடியவில்லை. கௌரி சற்றுநேரம் தாயின் அருகே அமர்ந்து பார்த்துவிட்டு அப்படியே தரையில் படுத்துத் தூங்கியும் விட்டாள். வெகுநேரத்திற்குப் பிறகே பார்வதி அசைந்தாள். நேரம் நள்ளிரவைத் தாண்டிவிட்டிருக்க, எழுந்து செம்புநிறைய தண்ணீர் எடுத்து மூச்சுவிடாமல் குடித்தாள். குடித்துவிட்டு சோபாவில் அமர்ந்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு இனி என்ன செய்யலாம் என சிந்திக்கத் துவங்கி னாள்.

கணவனின் குறட்டை ஒலி ஹால்வரை எதிரொலித்தது. நிதானமாய் யோசித்தாள். கணவனின் அனுமதியின்றி அந்த அறைக்குள் நுழையமுடியாது. அவராக அழைத் தால் மட்டும் போகமுடியும். மற்றபடி அந்த அறையின் கதவுகள் மூடியேதான் இருக்கும்.



திருமணமாகி வந்த முப்பது வருடத்தில் இதுவரை ஒரு முறை கூட தானாக நுழைந்ததில்லை பார்வதி. அந்த அறைதான் அவரது பாதுகாப்புப் பெட்டகம். கடன் சம்பந்தபட்ட அனைத்துப் பத்திரங்களும் ரசீதுகளும் பணமும் கூட அங்குதான் இருக்கும். திருப்பதியை மீறி ஒரு தூசிகூட அந்த அறைக்குள் நுழைய முடியாது.

அந்த அறையின் சாவி எப்போதும் அவர் மடியில் தான் இருக்கும். மீரா சொல்வதுபோல் அந்த சான்றிதழ் களை எப்படி எடுத்துக் கொடுக்கமுடியும். நிச்சயமாய் மகளுக்காக அதைத் தூக்கிக் கொடுத்துவிடமாட்டார். அதைத் தன் பேச்சிலேயே தெளிவாகச் சொல்லிவிட்டார்.

அவரை அறியாமல் எடுக்கவும் முடியாது. பிறகெப் படி மீராவைக் காப்பாற்றுவது? விடை தெரியாமல் பல மணிநேரம் மூளையைக் கசக்கிய போது அந்த எண்ணம் தோன்றியது.

இப்படிச் செய்தால் என்ன? எப்படியும் காலையில் ஏழுமணிக்கு பாத்ருமிற்குள் நுழைந்தால் எட்டுமணிக்கு முன் வெளியேறமாட்டார். காலைக் கடன்களை முடித்து செய்சர் போட்டு வெந்நீர் குளியல் முடியும்வரை குளியல் உடையிலேயே இடுப்பில் கட்டிய துண்டுடன் இருப்பதால் வெளியில் வரமாட்டார். அதுதான் சரியான சமயம்.

நிச்சயமாய் சாவியை பாத்ருமிற்குள் கொண்டு செல்லமாட்டார். குளியலறையும் கழிப்பறையும் ஒரே அறையாய் இருப்பதால் சாவியை பூஜையறையில் மறை வாய் வைத்துவிட்டுச் செல்வது வழக்கம்.

பார்வதியும் சமையலறையே கதி என்று கிடப்பதால் மகள்கள் கல்லூரிக்கும் வேலைக்கும் செல்லும் பரபரப்பில்

இருப்பதால் அதைக் கண்டு கொள்வதும் இல்லை. ஆனால் இன்று அந்த நேரம் தான் நமக்கு உகந்தது. எப்படியும் அறையைத் திறந்து தேடி... அந்த சான்றிதழ்களை எடுத்து மறைத்து வைத்துக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம் தோன்றியபோதே இன்னொன்றும் தோன்றி பயமுறுத்தியது.

இத்தனை கலவரத்திற்கு பிறகு சாவியை வைத்து விட்டுப் போவாரா? அப்படியே போனாலும் கௌிக்குத் தெரியாமல் அறையைத்திறந்து, அந்த சான்றிதழ்கள் எங்கே என்று தேடிக் கண்டுபிடித்து...

ஐயோ! எப்படிக் கண்டுபிடிப்பேன். அந்தப் பையன் களின் பெயர் கூடத் தெரியாதே. இங்கு எத்தனை பேப்பர் இருக்குமோ. அதில் எப்படி அவர்களின் சான்றிதழ்களைத் தேடிக் கண்டுபிடிப்பது? அவர்கள் இன்னொரு முறை போன் செய்துவிட மாட்டார்களா? தவிப்பாய் தொலை பேசியை வெறித்தாள் பார்வதி.

## 4

அந்த ஓட்டு வீட்டின் உள்ளே சோகையாய் எரிந்து கொண்டிருந்த ஒற்றை பல்பின் ஒளியில் சுவரோரமாய் அமர்ந்திருந்தாள் மீரா. இரவுப் பூச்சிகளின் சத்தத்தைத் தவிர வெகு அமைதி. அருகே ஓலைப்பாயில் படுத்திருந்த கங்கம்மா பாட்டி ஆழ்ந்த நித்திரையில் இருந்தாள்.

பகலில் உழைத்த உழைப்பின் களைப்பாக இருக்க லாம். இல்லையென்றால் வெகுநாட்களுக்குப் பிறகு



தன்னைக் காண்பதற்காக வந்த பேரன் கோபியின் வருகையால் ஏற்பட்டிருந்த மன நிறைவாக இருக்கலாம். எதுவோ ஒன்று அவரை நிம்மதியாக உறங்க வைத்தி ருந்தது.

ஆனால் மீராவால் அப்படி உறங்க முடியவில்லை. என்ன தான் இயல்பாக பேசிக் கொண்டு வந்தாலும் அந்நிய இடத்தில் அந்நிய ஆடவர்களால் கடத்திக் கொண்டு வரப்பட்டிருக்கிறோம் என்பதை உணர்ந்து கொள்ளவே வெகு நேரமாயிற்று.

அதுவும் அன்னையின் அழும் குரல் இன்னும் வருத்தியது. நல்ல விஷயத்திற்காகவே என்றாலும் இது சரியான முடிவல்லவே. திருமணம் கூடி வந்த நேரத்தில் தன்னைக் காணவில்லையென்றால் ஊர் உறவுகள் என்ன சொல்லும்? தன் மீது தவறேதும் இல்லையென்றாலும் அதை மற்றவர்கள் ஏற்றுக் கொள்வார்களா?

நாளையே இந்த விஷயம் மாப்பிள்ளை வீட்டாருக்குத் தெரிந்தால்... தாயின் கவலை தோய்ந்த குரல் மீண்டும் காதில் ஒலித்தது. இவர்களுக்காக நான் பரிதாபப்படுகி றேனே... இவர்கள் என் நிலையை ஏன் யோசிக்கவில்லை?

கங்கம்மா பாட்டி கூட முதலில் மிரண்டுதானே போனாள். பேரனிடம் சந்தேகமாய்த் தானே கேட்டாள். வயசுப் பொண்ணை நான்கு ஆண்களோடு சேர்த்துப் பார்த்தால் யாராக இருந்தாலும் சந்தேகிக்கத்தானே தோன்றும்.

கோபி திணறியதும் விஷ்வா சமாளித்து விட்டான். அதுவும் எப்படி? தன் நண்பனை மணந்து கொள்வதற்காக வந்த பெண். இன்னும் இரண்டு நாளில் புறப்பட்டு

விடுவோம் என்று கங்கம்மாவின் வாயை அடைத்து விட்டான். அதோடு கங்கம்மா தோண்டித் துருவவும் இல்லை.

ஆனால் விஷ்வா சொன்னதை நான் ஏன் அனுமதித்தேன். மறுத்துப் பேசியிருக்க வேண்டாமா? இந்தப் பாட்டியின் மனதில் என்னைப்பற்றி எந்த எண்ணம் ஓடியிருக்கும். பெற்றவர்களை விட்டு இப்படிக் கண்டவனோடு ஓடி வந்திருக்கிறாளே என்றுதானே எண்ணியிருப்பார்.

ஐயோ! அப்படியென்றால் ஊரிலும் அப்படித்தானே எல்லோரும் நினைப்பார்கள். போச்சு! இத்தனை வருடங்களாய் காத்து வந்த மரியாதை மானம் எல்லாம் போச்சு. இத்தனை நேரம் இதை யோசிக்கவில்லையே. இது எந்த இடம்? நான் எப்படி வீட்டுக்குப் போவது?

பேசாமல் கடத்தி வந்தவர்களிடமே இதைப்பற்றி பேசிப் பார்க்கலாம். இப்படி ஒரு அவப்பெயர் தனக்கு வரும் என்று நானே யூகிக்கவில்லையே. அவர்களும் அதைப்பற்றி சிந்தித்திருக்க மாட்டார்கள் தானே. எடுத்துச் சொன்னால் கேட்டுக் கொள்ள மாட்டார்களா? என்ன? அவர்களுக்கும் எனக்கும் எந்தப் பகையும் இல்லையே.

அதோடு ஒரு முறை கூட தன்னிடம் கடிந்து பேசவில்லை ஒருவரும். இதமாகத்தான் பேசினார்கள். பதமாகத்தான் நடந்து கொண்டார்கள். சொன்னால் புரிந்து கொள்வார்கள் என்ற முடிவுடன் பார்வையைச் சுழற்றினாள்.

அது கொஞ்சம் பழங்கால வீடு. மூங்கில் குச்சியால் தடுப்பு அமைக்கப்பட்டிருந்த ஒற்றை அறை. முன்புற வராந்தாவில் தான் தன்னை அழைத்துக் கொண்டு வந்திருந்தவர்களைப் படுக்க வைத்திருந்தாள் கங்கம்மா பாட்டி.

"என்னதான் கல்யாணம் பண்ணிக்கப் போற பொண்ணுன்னாலும் இப்படி ஒரே அறையில தங்கக்கூடாது. நீங்கள்லாம் முற்றத்தில படுங்க. நாங்க உள்ளே படுத்துக்கிறோம்" - என கண்டிப்பாய் கூறினாள்.

நண்பர்களும் மறுபேச்சின்றி கிடைத்த பாயை சுருட்டிக்கொண்டு வெளியே போய்விட்டனர். பாட்டி பலகையால் ஆன கதவை உட்புறமாய் தாளிட்டிருந்தாள். படுத்திருந்த பாட்டியை ஒரு முறை பார்த்து விட்டு ஓசையின்றி எழுந்தாள் மீரா. சுவரோரமாய் நகர்ந்து மூங்கில் தடுப்பின் வழியாக வெளியே எட்டிப்பார்த்தாள்.

நிலவொளியில் நால்வரின் உருவமும் தெளிவின்றித் தெரிந்தது. அவ்வப்போது 'டப்டப்' - என கொசுவை அடிப்பது கேட்டது. கூர்ந்து பார்த்தாள் மீரா. 'யாரேனும் விழித்திருக்கிறார்களா?'

சுவரோரமாய் படுத்திருந்த அஜய் புரண்டுபடுத்தான் "ச்சே! இந்த கோபியை நம்பி வந்ததுக்கு பேசாம கூவத்துக்குப் பக்கத்துலயே ஸ்டே பண்ணியிருக்கலாம்" - என்றான் சலிப்பாய்.

"ஏன்டா?"- கண்ணனின் குரல் தெளிவாய்க் கேட்டது.

"அங்கே கூட இவ்வளவு கொசு கடிக்காது"

"சொல்லுவடா உங்களை இங்கே கூட்டிட்டு வந்து எம்பாட்டிகிட்ட எவ்வளவு தாஜா பண்ணி தங்க வெச்சிருக்கேன். நீ இதுவும் சொல்லுவ இன்னமும் சொல்லுவே" - என்றவாறு எழுந்து அமர்ந்தான் கோபி.

"அட! நீங்களும் தூங்கலியா? நான் எனக்குத்தான் தூக்கம் வரல்லன்னு நினைச்சேன்" - என விஷ்வாவும் எழுந்து உட்கார, மீராவிற்கு நிம்மதி வந்தது.

"நல்லவேளையாக யாரும் தூங்கவில்லை. இப்போதே பேசிவிடலாம்" என்ற முடிவுடன் மெதுவாய் தாழ்ப்பாளை விலக்கிவிட்டு கதவைத் திறந்து வெளியே வந்தாள்.

"எங்கேடா தூங்க? இதுவரை ஒரு ரெண்டு பாட்டில் ரத்தமாவது தானம் பண்ணியிருப்பேன்."

"யாருக்கு?"

"கொசுவுக்குத்தான். அப்பப்பா... எவ்வளவு ஊசி போடுது. கண்ணா! நான் ஹாஸ்பிடலுக்குப் போனாக் கூட ஊசி போட மாட்டேன். ஆனா இந்தக் கொசு என் உடம்பு முழுக்க ஒட்டை போட்டுடும் போல"

"அஜய்! எங்களையெல்லாம் விட்டாவெக்குது. எல்லாருக்கும் தான் ஊசி போடுது. இது இலவச மருந்து வர்னு நினைக்கிறேன்"

"கோபி! இந்தக் கொசுக்கடியில உங்க பாட்டி எப்படிடா தூங்குறாங்க?"

"பாட்டியை விடுடா. அவங்களுக்கு பழகிப் போயி ருக்கும். ஆனா அந்தப் பொண்ணு எப்படித் தூங்குதோ பாவம். மெத்தையில படுத்துப் பழகின உடம்பு. எப்படிக் கட்டாந்தரையில படுத்ததோ" - கண்ணனின் குரலில் உண்மையான வருத்தம் தொனித்தது.

"கண்ணா! உன் தாயள குணம் இப்ப வர வேண்டாம். அவங்க அப்பன் சம்பாதிச்ச பாவப் பணத்தில வளர்ந்த உடம்பு தானே அது. கஷ்டப்பட்டா தப்பில்ல." -கோப மானான் அஜய்.



"இல்ல அஜய் அது அவரோட தொழில். நமக்கு அவர் பண்ணின காரியத்தால பாவம் ஒண்ணுமே அறியாத இந்தப்பொண்ணு கஷ்டப்படுதேன்னு நினைச்சேன். மத்தபடி ஒன்றுமில்ல"

"சரி. நடந்ததைப் பற்றி பேச வேண்டாம். இனிமே நடக்கிறதப் பத்தி பேசுவோம். கண்ணா! பாட்டி இப்பவே ஆயிரம் கேள்வி கேட்கிறாங்க. சீக்கிரமா இந்தப் பொண்ணை நாம அனுப்பணும் அதுக்கு என்ன பண்ணலாம்?"

"நான் ஒன்று சொன்னாக் கேட்பீங்களா?" - என்ற மீராவின் குரலில் நால்வரும் திரும்பினர்.

"ஏய்! நீ என்ன... இந்த நேரத்துல... தூங்கலியா?"

"கடத்தி வந்த உங்களுக்கே தூக்கம் வரல்ல. எனக்கு எப்படி வரும்?"

"அதுவும் சரி தான் ஆனா.. ஏன் வெளியே வந்தே. உள்ளே போ"

"எனக்கு உங்களோட கொஞ்சம் பேசணும்"

நால்வரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண டனர். "எங்ககிட்டயா? என்ன பேசணும்?"

"நான் வீட்டுக்குப் போகணும்"

"என்ன?"

"நான் வீட்டுக்குப் போகணும். இப்பவே..."

"என்ன விளையாடுறியா?"

"சீரியஸாத்தான் சொல்றேன்"

"ஏய். எங்களைப் பார்த்தா உனக்குக் காமடி பீஸ் மாதிரி தெரியுதா? பாவம்! சின்னப்பொண்ணுன்னு கொஞ்சம் இதமாப் பேசினது தப்பாப் போச்சே"

"விஷ்வா! நான் சொல்ல வந்ததை முழுசாக் கேளுங்க"

"இதோ பார். ஏற்கனவே உங்கிட்ட தெளிவா சொல் லிட்டோம். எங்க சர்டிபிகேட்ஸ் கைக்கு வந்ததும் நீ போக லாம்னு"

"நானும் சொன்னேனே. எங்கப்பாகிட்ட இருந்து நீங்க எதையும் வாங்கிட முடியாதுன்னு"

"அப்போ! நாங்க இவ்வளவு கஷ்டப்பட்டு உன்னைக் கடத்திட்டு வந்தது–"

"கண்டிப்பா வீணாப் போகாது. என்னை நம்புங்க. நான்.. நானே உங்க சர்டிபிகேட்ஸ் எடுத்துத் தர்றேன்"

"என்ன?" - நால்வருமே கோரஸாய்க் கேட்டனர்.

"ஆமா ஸார். எங்க அப்பா எப்போ எங்கே சாவியை வைப்பார்னு எனக்குத் தெரியும். என்னை வீட்டுக்கு அனுப்புங்க. இன்னும் ரெண்டேநாள்ல நான் எடுத்துத் தந்திடுறேன்"

"எவனாவது காதுல பூ வெச்சிட்டு இருப்பான். அவன்கிட்ட போய்ச் சொல்லு" - அஜய் வெடித்தான்.

"நான் சொல்றது உண்மை. நம்புங்க. நீங்க எங்கிட்ட விஷயத்தைச் சொல்லியிருந்தா நானே இதைச் செய்தி ருப்பேன். இந்தக் கடத்தல் தேவையே இல்லை. நீங்க என் அம்மாகிட்ட பேசினதை அம்மா சொன்னப்பவே எனக்கு இந்த ஐடியா தோணிச்சு. நீங்க திரும்பவும் வந்து பேசி



யிருந்தா நானே எடுத்துத் தந்திருப்பேன்" - உறுதியாகச் சொன்னவளை நம்ப முடியாமல் பார்த்தனர்.

"ஏன் இதே வேலையை உன் அம்மா செய்யமாட் டார்களா?"

"செய்யலாம். ஆனா அம்மா படிக்காதவங்க. உங்க பேரு சர்டிபிகேட்ஸ்ஸ தேடி எடுக்க முடியாது. அதோட அம்மாவுக்கு பயமும் பதட்டமும் அதிகம். கொஞ்சம் பிசகிப்போனாலும் தப்பாகிடுமே"

"அதுவும் சரி தான் அஜய்." - என்றான் கண்ணன்

"ஆனா அதுக்காக இவளை எப்படி விட முடியும் கண்ணன்?"

"ஆமா... நம்மகிட்ட இருந்து போயிட்டு நம்மளையே காட்டிக் கொடுத்துட்டா?"

விஷ்வா நம்பிக்கையின்றி கேட்டான்.

"அப்படியெல்லாம் பண்ண மாட்டேன் ஸார். எனக்கு ஏமாற்றத் தெரியாது."

"இதை நாங்க நம்பணும்"

"சில விஷயங்களை நம்பித்தான் ஆகணும். எம் மேல நம்பிக்கை இருந்தா அனுப்புங்க. என்னால எடுத்துத் தர முடியலன்னா... என்னை வேணா.. கொன்னுடுங்க" மீரா சொல்ல திகைத்தனர்.

"ஏய். எங்களை என்ன கொலைகாரப் பசங்கன்னு நெனைச்சியா?" கோபி காட்டமாய்க் கேட்டான்.

"இல்ல ஸார். உங்களுக்கு நம்பிக்கை வரணும்னு சொன்னேன் "

"என்ன பண்ணலாம்?" - என்பதாய் கண்ணன் மற்றவர்களைப் பார்க்க, அஜய் மறுப்பாய் தலையசைத்தான்.

"வேண்டாம் கண்ணா! இவ ஏதோ திட்டத்தோடதான் பேசுறா. இவளை நம்ப வேண்டாம். இவ திருப்பதியோட பொண்ணு. அவனும் இப்படி நைஸா பேசித்தான் நம்ம சர்டிபிகேட்ட வாங்கினான்"

"அஜய்! உங்க இஷ்டத்திற்கு பேசாதீங்க. எங்கப்பா ஏமாத்திட்டதா வார்த்தைக்கு வார்த்தை பேசுறீங்களே. நீங்க செய்தது மட்டும் சரியா?"-மீரா குரலை உயர்த்தினாள்.

"ஏய்! நாங்க என்ன பண்ணினோம்?"

"படிக்கத்தானே காசு வாங்குனீங்க?"

"ஆமா"

"படிச்சு முடிச்சதும் வேலை பார்த்து கடனை அடைக்கணுமா? இல்லையா?

"அதுக்குத்தானே இவ்வளவு பாடுபடுறோம்"

"நீங்க எங்கே போய் வேலை பார்க்கப் போறீங்க?"

"அமெரிக்காவில... ஸாப்ட் வேர் கம்பெனியில..."

"ஏன்? அதே வேலை இங்கே கிடைக்காதா? எதுக்காக அமெரிக்கா போகணும்?"

"எங்க திறமைக்கு எங்க வேலை கிடைக்குதோ அங்கே தானே போக முடியும்?"

"இது பொய். திறமையுள்ளவங்க எங்கவேணா பொழைச்சுக்கலாம். நீங்க இங்க முயற்சி பண்ணவேயில்லை"



"என்ன?"

"ஆமா! அமெரிக்கா போயிட்டா எங்க அப்பாவோட கடனை அடைக்காம தப்பிச்சுடலாம்னு தானே ஓடுறீங்க?" - என்றவளை அடிக்கப் பாய்ந்தான் அஜய்

"அறைந்து பல்லைப் பேத்துடுவேன். நாங்கள் ஒன்றும் போர் ட்வென்டி இல்லை. உன் அப்பனைப் போல"

கண்ணன் நண்பனைப் பிடித்து அடக்கி வைத்தான். "அஜய்! டோண்ட் பீ எமோஷனல்"

"அவ என்ன பேசுறா பார்த்தியா கண்ணா! இவளுக்காக பரிதாபப்பட்டாயே. பார்! இவளா நமக்கு ஹெல்ப் பண்ணுவா?"

"நான் உண்மையைத் தான் சொல்கிறேன்" - மீரா மீண்டும் உறுதியாய் கூற கண்ணன் கோபமாய் அவளை ஏறிட்டான்.

"ஹேய்! லுக். மரியாதையாய் பேசு. எங்களை என்னவென்று நினைத்தாய்?"

"நீங்கள் மட்டும் என் அப்பாவை அப்படிப் பேசலாமா?"

"உன் அப்பா எங்களுக்கு வேலை கிடைக்க விடாமல் செய்தவர். நாங்கள் கிட்டத்தட்ட ஆறு மாத காலமாய் எவ்வளவு கஷ்டப்படுகிறோம் தெரியுமா?"

"தப்பு உங்கள் மீதும் இருக்கிறது கண்ணன். நீங்கள் படித்து முடித்ததும் இங்கேயே ஏதேனும் வேலையைத் தேடிச் சேர்ந்து என் அப்பாவின் கடனை அடைத்திருக்கலாமே. அதை விட்டு விட்டு வெளி நாட்டிற்கு போகிறேன் என்றால் உங்கள் மீது எப்படி நம்பிக்கை வரும்?"

திடுக்கிட்டு நிமிர்ந்தான் கண்ணன். "என்ன?"

"ஆமாம் கண்ணா! நான் உங்களிடம் எதற்கும் கடன் படவில்லை. என்னை வீட்டிற்கு அனுப்புவதற்கே உங்களுக்கு நம்பிக்கை இல்லையே. உங்களிடம் என் அப்பா தன் பணத்தைக் கொடுத்திருக்கிறார். அவர் எப்படி நம்புவார்?" - மீராவின் கேள்வியில் அனைவருமே திடுக்கிட்டனர்.

"என் அப்பா செய்தது சரியா தப்பா என்ற பேச்சு தேவையில்லை. ஆனால் நீங்கள் செய்தது சரியில்லை தானே. வாங்கிய கடனை நம்பிக்கையோடு திருப்பி அடைக்க வேண்டும் தானே" - மற்றவர்களிடம் அசைவில்லை.

"அப்படியென்ன ஸார் உங்களுக்கு வெளிநாட்டு மோகம்? இப்படிப் படிச்ச பட்டதாரிங்க எல்லாம் உங்களோட உழைப்பையும் மூளையையும் எதுக்காக வெளி நாட்டுக்காரங்ககிட்ட அடகு வைக்கிறீங்க? பணத்துக்காகவும் ஆடம்பர வாழ்க்கைக்காகவும் மயங்கித்தானே போறீங்க?

உங்களுக்கு படிப்பு சாப்பாடு வசதி வாய்ப்புகள் எல்லாமே நம்ம நாடு தருது. ஆனா உங்க உழைப்ப மட்டும் வேற நாட்டுக்குக் கொடுப்பீங்களா? இது எந்த விதத்தில ஸார் நியாயம்?

அப்படிப் பார்த்தா எங்கப்பாவை விட நீங்க தான் மோசமானவங்க. எங்கப்பா தன்னோட பணத்தை தன் நாட்டுல உள்ளவங்களுக்குத்தான் அதுவும் அவசரம்னு வந்து நிக்கிறவங்களுக்குத்தான் கொடுக்கிறார். சும்மா போகிறவங்களைக் கூப்பிட்டு ஏமாத்தல.



இப்போ சொல்றேன் கேளுங்க. நான் திருட்டுத்தனமா உங்க சர்டிபிகேட்ட எடுத்து தர வேண்டிய அவசியமே இல்லை. நீங்க என்னைக் கடத்தினது வெளியே தெரியாம நான் பார்த்துக்கிறேன். நீங்க நாளைக்கு போய் என் அப்பாவைப் பார்த்துப் பேசுங்க"

"எ..என்ன பேசணும்?"- அஜய் தயக்கமாய்க் கேட்க, உற்சாகமாய் அவன் புறம் திரும்பினாள்.

"நாங்க வெளி நாடு எங்கேயும் போகல்ல. இங்கேயே ஏதாவது வேலை பார்த்து உங்க கடனை அடைச்சிடுறோம்னு சொல்லுங்க"

"சொன்னா?"

"சொல்லிப் பாருங்க ஸார். நீங்க கேட்காமலே அவரே உங்க சர்டிபிகேட்ட தந்திடுவாரு. கடனை அடைக்கிறது உங்க பொறுப்பு. என்ன சொல்றீங்க?"

"அப்படி எதுவும் நடக்கலன்னா..?"

"நீங்க சொன்ன குறுக்கு வழியில இறங்கிட வேண்டியது தான். நானே எடுத்துத் தந்திடுறேன். முதல்ல நேர் வழியில போய்ப் பார்ப்போமே"

"என்னடா சொல்றீங்க?" - கண்ணன் மற்றவர்களைக் கேட்க அவர்கள் மறு பேச்சின்றி ஒப்புக் கொண்டனர். கண்ணன் மீராவிடம் திரும்பினான்.

"சரி. உன் பேச்சில் நியாயம் இருப்பதாய் ஒப்புக் கொள்கிறோம். நீயும் பேச்சு மாறக் கூடாது."

"கண்டிப்பாய் மாறமாட்டேன்"

"ஓ.கே. ஆமாம். இன்று வீடு திரும்பாததற்கு என்ன காரணம் சொல்லுவாய்?" - கண்ணன் இயல்பாய்க் கேட்க. மீரா யோசனையில் ஆழ்ந்தாள். 'அப்பாவிடம் என்ன சொல்வது?'

## 5

மகள் சொன்ன கதையை நம்பவும் முடியாமல் மறுக்கவும் வழியின்றி கேட்டுக் கொண்டிருந்தார் திருப்பதி. அவரது முக பாவனையை வைத்து தான் சொன்னதை நம்பினாரா இல்லையா எனப் புரியாமல் விழித்தாள் மீரா. இடையில் குறுக்கிட்ட அன்னையிடம் பார்வையில் மன்றாடி அமைதியாய் இருக்கச் சொன்னாள்.

முழுவதையும் கேட்டு விட்டு நிமிர்ந்தார் திருப்பதி. மகளின் சோர்ந்த கோலம் உண்மை போலத்தான் தோன்றியது.

"எத்தனை மணிக்கு உன்னை ஹாஸ்பிடல்ல சேர்த்தாங்க? - என்றார் சந்தேகத் தொனியில்.

"அதான் சொன்னேனேப்பா. வேலை முடிஞ்சு திரும்பும்போது..."

"அதான் எத்தனை மணிக்கு?"

"ஆறுமணி இருக்கும்ப்பா. இருட்டும் போது தான். வழக்கமா வர்ற பஸ்ல ஏற முடியல்ல. ரொம்ப கூட்டம்.



அடுத்த பஸ்ல ஏறலாம்னு நின்னேன். அதுக்குள்ள கண்ணு இருட்டிப் போச்சு. மயங்கி விழுந்திட்டேன்"

"டாக்டர் என்ன சொன்னார்?"

"சரியா சாப்பிடாததால உடம்பு வீக்கா இருக்குதாம். ரெண்டு பாட்டில் ட்ரிப்ஸ் ஏத்தினாங்க. நேரம் கடந்து போனதால பெட்லயே இருக்கச் சொல்லிட்டாங்க"

"பெரிய இவளாட்டம் உண்ணாவிரதம் இருந்தியே. இப்ப தெருவில அநாதையா விழுந்து கிடந்து இருக்கியே. யாரும் பார்க்கலன்னா உன் கதி என்ன ஆகியிருக்கும்?"

"மன்னிச்சிடுங்கப்பா. இனிமே உங்களை எதிர்த்து எதுவும் பேச மாட்டேன். நீங்க சொல்றபடியே நடந்துக்கிறேன்"

"மீரா! உன்னை ஹாஸ்பிடல்ல சேர்த்தாங்களா? இல்ல எதுவும் ஆசிரமத்தில சேர்த்தாங்களா? ஒரே நாள்ல இப்படி மாறிட்ட?"- கிண்டலாய்க் கேட்டாள் கௌரி.

"ஆமா கௌரி. மாறிட்டேன்தான். ஒரு நாள் ராத்திரி முழுக்க ஹாஸ்பிடல்ல துணைக்கு யாருமில்லாம தனியா தவிச்சேனே. அப்பத்தான் அம்மா அப்பாவோட அருமை தெரிஞ்சது. அப்பாகிட்ட சண்டைபோட்டதாலதானே நான் சாப்பிடாம போனேன். அதனாலதானே மயங்கிவிழுந்தேன். பேசாம அப்பா பேச்சுக்கு எதிர்வாதம் பண்ணாம இருந்திருந்தா இத்தனை கஷ்டத்தை நான் அனுபவிச்சிருக்க மாட்டேனே"

"சரி போதும். உன்னால இன்னிக்கு நான் காலேஜிக்கும் போக முடியல்ல. இந்த அம்மாவோட புலம்பலயும் தாங்கமுடியல்ல. போனதுதான் போனியே ஒரு போன்

பண்ணினால் என்ன? விடிய விடிய ஒரே கச்சேரிதான் இந்த அம்மாவால?"

"எனக்கு மயக்கம் தெளிஞ்சதே நடுராத்திரியிலதான். அப்போ நான் எங்கே போய் போன் பண்ணுவேன்?"

"அப்பா முதல்ல எங்க ரெண்டுபேருக்கும் செல்போன் வாங்கித்தாங்கப்பா. நானும் எத்தனையோ வாட்டி கேட்டுட்டேன்" - என்றவாறு எழுந்து குளியலறைக்குள் நுழைந்தாள் கௌரி.

திருப்பதி மகளை உற்றுப்பார்த்தார். " உன்னை யார் ஆஸ்பத்திரியில சேர்த்தாங்கன்னு தெரியுமா மீரா?"

"தெரியலேப்பா. நான் கண் விழிச்சப்போ யாருமே எம்பக்கத்தில இல்லையே"

"வேற யாருக்காவது போன் நம்பர் கொடுத்தியா?"

சட்டென முகம் மாறினாள். போன் விஷயத்தை எப்படி மறந்து போனேன்?

உடனே சுதாரித்துக் கொண்டாள் மீரா.

"இல்லையேப்பா. நான் யாருக்கும் நம்பர் கொடுக்கலையே"

"அப்போ நேற்று ராத்திரி போன் வந்ததே"

"போனா? யார்-யாருப்பா பண்ணினது?"

"தெரியலையே. உன்னைக் கடத்திவெச்சதா சொன்னானே ஒருத்தன்"

"என்னையா? சேச்சே. என்னை யாரு கடத்துவா? சும்மா எவனோ உங்களை பயமுறுத்தியிருக்காம்ப்பா"



"இல்லையே. அவன் ரொம்ப கடுமையாப் பேசினானே. உன் அம்மாகிட்ட கூடப் பேசினானே. நீ ஏன்டி இப்படி வாயடைச்சுப் போய் நிக்கிற?

அதான் உம்பொண்ணு முழுசா வந்து நிற்கிறாளே. பின்ன என்ன?"

பார்வதி சுயஉணர்விற்கு வந்தாள். "எம்புள்ள பசியோடும் பட்டினியோடும் நைந்து போய் வந்திருக்கா. அவளை நிக்கவெச்சு எவ்வளவுநேரம் தான் விசாரிப்பீங்க? நீ வாம்மா. முதல்ல சாப்பிடு" - மகளின் கைபற்றி அடுக்களைக்குள் அழைத்துச் சென்றாள் பார்வதி.

"ஏய் இருடி எவனோ ஒருத்தன் போன் பண்ணினானே. அவன்_"

"ஏங்க! உங்ககிட்ட கடன்வாங்கின எவனோ ஒருத்தன் உங்களை மிரட்டியிருப்பான். அதைப்போய் இவகிட்ட கேட்டா இவளுக்கு என்ன தெரியும்?"

"இவ வீட்டுக்கு வராதது அவனுக்கு எப்படித் தெரியும்?"

குளியலறைக்குள் இருந்து டவலால் முகத்தை ஒற்றிக்கொண்டே வெளியே வந்த கௌரி கடுப்பானாள்.

"அப்பா! இது ஒரு பெரிய விஷயமா? இவளை ஹாஸ்பிடலுக்கு தூக்கிட்டுப் போனதை எவனாவது ஒரு கடன்காரன் பார்த்திருப்பான். அதான் போன் பண்ணி நம்மை வெறுப்பேத்தியிருப்பான்."

"அப்படியும் இருக்குமோ" - திருப்பதி யோசித்தார்.

"ஆமாம்ப்பா. இந்த விஷயத்தை இப்படியே விட்டுடுங்க. அம்மா! காலையில இருந்து ஒரு காபி கூட தரல்ல. சீக்கிரம் சாப்பாடு போடும்மா. பசிக்குது."

"ஆமா! சீக்கிரம் சாப்பாடு போடு. நானும் கலெக்ஷனுக்குப் போகணும்" -திருப்பதி சொன்னதும் நிம்மதியானாள் மீரா.

மீண்டும் சாப்பிடும் போது கேட்டார் திருப்பதி. "மீரா. அது எந்த ஆஸ்பத்திரிம்மா?"

மீராவிற்கு புரையேறியது. சட்டென தண்ணீரை எடுத்துக் குடித்தவாறே அவசரமாய் யோசித்தாள்.

"அது.. பேரை கவனிக்கலப்பா. ஆனா கே.கே.நகர்ல மெயின்ல தான் இருந்தது. ஏம்ப்பா?"

"பீஸ் கேட்டிருப்பானே. என்ன பண்ணினே?"

"எங்கிட்ட கொஞ்சம் பணம் இருந்ததுப்பா. அது போதும்னு சொல்லிட்டாங்க."

"எவ்வளவு வெச்சிருந்த?"

"அப்பா! இது என்ன கோர்ட்டா? எவ்வளவு நேரம் தான் விசாரிப்பீங்க? அவளே ரொம்ப டயர்டா இருக்கா. சாப்பிட்டு கொஞ்சம் தூங்கட்டும். பதினோரு மணியாகுது நீங்க கலெக்ஷனுக்கு போக வேண்டாமா?" - என மிரட்டிய தங்கையை நன்றியாய் பார்த்தாள் மீரா.

"ஆமாம்மா. எனக்கு சாப்பாடு போதும். நான் படுத்துக்கட்டுமா?"

"போம்மா. படுத்துக்க."- என்றாள் பார்வதி அவசரமாய்

"நல்லா ஓய்வெடு. நாளைக்கு மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வர்றாங்க. ரெண்டு நாள் லீவு சொல்லிடு. போன்ல சொல்லிடுறியா? நான் சொல்லணுமா?" என்றவாறே தட்டில் கைகழுவினார் திருப்பதி.

"நானே சொல்லிடுறேம்ப்பா"

"சரி. லீவு சொல்லிட்டுப் படுத்துக்க. அப்புறம் இந்த ஆஸ்பத்திரி விஷயம் வேற யாருக்கும் தெரியவேண்டாம். கல்யாண நேரம் தேவையில்லாத வதந்தி கிளம்பும்"

"சரிப்பா"

"பார்வதி. பொண்ணு பார்க்க வர்றதை வேற யாருக்கும் சொல்ல வேண்டாம்.

கல்யாணம் முடிவான பிறகு சொல்லிக்கலாம்"

"சரிங்க"

"சரி. வீட்டைப் பூட்டிக்க. நான் வர்றதுக்கு மூணு நாலு மணியாகும். யாரும் தேடி வந்தா ஜன்னல் வழியா பதில் சொல்லி அனுப்பு"

"சரிங்க"

"அப்பா! நான் லைப்ரரிக்கு போகணும். என்னைக் கூட்டிட்டுப் போறீங்களா" - என ஓடி வந்தாள் கௌரி.

"சரி வா." - என மகளையும் அழைத்துக் கொண்டு தனது அம்பாசிடர் காரில் ஏறி புறப்பட்டுச் சென்றதும் கதவைப் பூட்டிவிட்டு மகளிடம் வந்தாள் பார்வதி.

"என்ன நடந்தது மீரா! உன்னை யார் கடத்திட்டுப் போனாங்க? எங்கே கொண்டு போனாங்க? நீ எப்படி வந்தே?"

"எல்லாம் சொல்றேம்மா. ஆனா எதுவும் அப்பாவுக்கோ கௌரிக்கோ தெரிய வேண்டாம்"

"அவனுங்க எப்போ வருவாங்களாம்?"

"வீட்டுக்கு வர மாட்டாங்க. அப்பாவை வெளியே பார்த்துப் பேசிக்குவாங்க."

"அப்பாகிட்ட எதையாவது உளறிடப்போறாங்க"

"அதெல்லாம் மாட்டாங்க. நீங்க உளறாம இருந்தாப் போதும்"

"சரி. அப்பா ஒரு வேளை கொடுக்கலன்னா?"

"அவங்க நமக்கு போன் பண்ணுவாங்க. நான் தான் எடுத்துத்தரணும்"

"அ- அப்பாவுக்குத் தெரியாம... எப்படி மீரா?"

"அம்மா! ஏன் எல்லாப் பிரச்சனையையும் பெரிசாவே கற்பனை பண்றீங்க. முதல்ல அவங்க அப்பாகிட்ட பேசட்டும். அப்பா மறுத்திட்டா பிறகு பார்த்துக்கலாம்"

"எல்லாத்தையுமே அலட்சியமா எடுத்துக்கக்கூடாது மீரா" - என்ற அன்னையின் பேச்சைக் கேட்டு பயந்து விடவில்லை மீரா. அவட்சியமாக சிரித்துவிட்டு தன் அறைக்குள் நுழைந்து கட்டிலில் சாய்ந்தாள்.

அவளைப் பொறுத்தவரை நேற்றைய பிரச்சனை ஒரு பிரச்னையே இல்லை என்றுதான் நினைத்தாள். அந்த நினைப்பில்தான் வேறு எந்த நினைவோ பயமோ இன்றி தந்தையின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நல்ல பிள்ளையாய் திருமணத்திற்கு சம்மதித்தாள்.

மாப்பிள்ளை வீட்டாருக்கும் மீராவைப் பார்த்து உடனே பிடித்துப் போய்விட திருமணத் தேதியும் குறித்துவிட.. தனது வேலையை ராஜினாமா செய்து விட்டு திருமணத் திற்கு தயாரானாள். அதன்பிறகு அந்த நால்வரின்



பிரச்னையோ அவர்களின் நினைவையோ அவள் எண்ணிப் பார்க்கவும் இல்லை.

ஆனால் அவள் மறந்து விட்ட நிகழ்வுகள் அவளது திருமண வாழ்க்கையையே தடம் புரளச் செய்தது. தலைகீழாய் புரட்டி போட்டது.

## 6

"சரணாலயம் முதியோர் இல்லம்" - காலை நேர சுறுசுறுப்பில் இயங்கிக் கொண்டிருந்தது. சற்று தெம்பான முதியவர்கள் தங்களுடைய துணிமணிகளைத் துவைத்துக் கொண்டிருக்க, கிணற்றிலிருந்து வாளிமூலம் தண்ணீரை இறைத்து தொட்டியில் ஊற்றிக் கொண்டிருந்தாள் மீரா.

இரண்டே வருடங்களில் மீரா நிறைய மாறிப்போயி ருந்தாள். கலகலப்பும் குறும்பும் மறைந்து விட்டிருக்க அவளது நிலவுமுகத்தில் நிரந்தரமாய் வருத்தம் குடி கொண்டிருந்தது. சிரிப்பைத் தொலைத்திருந்த இதழ்கள் வறட்சியோடு தெரிய, கனிவும் மின்னலும் தெறித்த கண்கள் வெறுமையாய் இருந்தது.

நிறம் சற்று மங்கியிருக்க, கழுத்தெலும்புகள் துருத்திக் கொண்டிருந்தன. தூக்கத்தை தொலைத்த கண்களில் கருவளையம் இடம் பிடித்து விட மீராவைப் பார்க்கும் யாவருமே சட்டென அடையாளம் காண இயலாத அளவிற்கு நிறைய மாறியிருந்தாள்.

"மீராக்கண்ணு! இந்தக் கண்ணாடி ரொம்ப மங்கிப் போச்சும்மா. சீக்கிரமே மாத்தணும்"- என்ற அழகுரதி பாட்டியைப் பார்த்தாள் மீரா.

புடவைத் தலைப்பால் தனது மூக்குக் கண்ணாடியை அழுந்தத் துடைத்துக் கொண்டிருந்த அழகுரதி பாட்டிக்கு மூன்று மகன்கள். மூவருமே நல்ல நிலையில் தான் இருக்கிறார்கள். ஆனால் தாயைத் தன்னுடன் வைத்துக் கொள்ளும் அளவிற்கு அவர்களின் மனதில் இடம் இல்லாமல் போயிற்று.

பாட்டி இரவெல்லாம் கண் விழித்து மணிகோர்த்து சம்பாதித்திருக்கிறார். இப்போது கண்ணாடி இல்லாமல் அருகில் நிற்பவரைக் கூட அடையாளம் காண முடிவதில்லை. கண்ணாடியும் மங்கிப் போய் விட்டது தான்.

"பாட்டி! இன்னிக்குத்தான் மெடிக்கல் கேம்ப்க்கு டாக்டர்ஸ் வர்றாங்களே. கண்ணை செக் பண்ணிட்டு புதுசு மாத்திடுவோம்"- என்றாள்.

"எத்தனை மணிக்கு வர்றாங்களாம்?"

"பத்துமணிக்கெல்லாம் வந்திடுவாங்க. அதுக்குள்ள குளிச்சுமுடித்து சாப்பிட்டு ரெடியா இருங்க"

"தண்ணி போதும் கண்ணு. அப்பால கரண்ட் வந்தப்புறம் மீதி துணியை துவைச்சுடலாம்"- என்றாள் பரிமளம்.

மீராவிற்கும் கை வலித்தது. மூச்சுவாங்க வாளியிலிருந்து நீரை ஊற்றிவிட்டு கிணற்றின் தடுப்புச்சுவர் மீது ஏறி அமர்ந்தாள். கைகள் நெருப்பில் பட்டது போல் எரிந்தது. உள்ளங்கையை விரித்துப்பார்த்தாள்.



தாமரை இதழ்கள் போல் இருந்த கரங்கள் சிவந்து போயிருந்தது. எரிச்சல் தாளாமல் வாயருகே கையை வைத்து ஊதினாள்.

"மீரா! நீ இங்கேயா இருக்க? உன்னை எங்கெல்லாம் தேடுறது?"- என்றவாறு வந்த இல்லத்தின் தலைவி சரோஜினியைக் கண்டதும் சட்டென எழுந்து நின்றாள் மீரா.

"என்ன மேடம்? எதுவும் அவசர வேலையா?"

"வேலைதான். ஆனா அவசரமான வேலையில்லை. ஆமா என்ன பண்ணிட்டு இருக்கே?"

"இன்னிக்கு எட்டு ட்டு பத்து வரை பவர்கட் மேடம். அதான் கிணத்துல இருந்து தண்ணி எடுத்து ஊத்தினேன்"

"ஏன்? டாங்க்ல தண்ணி இல்லையா?"

"தீர்ந்து போச்சு மேடம். மோட்டார் போடுறதுக்குள்ள கரெண்ட் போயிடுச்சு"

"எப்பத்தான் கரண்ட் ஒழுங்கா இருந்தது. சரி வா. உன் வேலை விஷயமாப் பேசணும்" - என்றவாறு சரோஜினி தன் அறையை நோக்கி நடக்க, மீரா நின்று கிணற்றடியில் இருந்த முதிய பெண்மணிகளைப் பார்த்து.

"மணி ஒன்பதாகப் போகுது. சீக்கிரம் குளிச்சிட்டு டைனிங்ஹாலுக்கு வந்திடுங்க. சரியா?" - என்றாள். அவர்கள் தலையாட்ட, சின்னசிரிப்போடு அலுவலக அறைக்குள் நுழைந்தாள்.

"மேடம்"

"வாம்மா! உட்கார். இந்தா இதைப்பார்" - என்றவாறு ஒரு சிறிய அட்டையை மீராவிடம் நீட்டினாள் சரோஜினி.

வாங்கிப் பார்த்தாள். த்ரீஸ்டார் கம்ப்யூட்டர்ஸ் கம்பெனியின் விசிட்டிங் கார்டு அது. பளபளப்போடு அழகாய்த் தெரிந்தது. நிமிர்ந்தாள்.

"மேடம்! இது யாரோட விஸிட்டிங் கார்டு மேடம்"

"மீரா! நான் சொன்னேனே ஒரு கம்ப்யூட்டர் கம்பெனி. அதோட விசிட்டிங் கார்டுதான் இது. இதை எடுத்திட்டுப் போய் பார். நான் அனுப்பினேன்னு சொல்லு. நிச்சயமா வேலை கிடைக்கும்"

"மேடம்! எனக்கு கம்ப்யூட்டரைப் பத்தி அவ்வளவாத் தெரியாதே"

"கம்ப்யூட்டரை மெயின்டெயின் பண்ணத்தானே தெரியாது. மத்தபடி ஒரு ஆபீஸ்ல எவ்வளவோ வேலை இருக்கும். மூனுவருஷமா ஒரு கம்பெனியில வேலை பார்த்த அனுபவமும் இருக்கே உனக்கு"

"அது... அக்கவுண்டட் வேலை மேடம்"

"இருக்கட்டுமே. இங்கயும் அதே வேலை கிடைக்கு தான்னு பார்ப்போம். நான் நேற்றே இந்தக் கம்பெனியோட எம்.டி.கிட்ட பேசிட்டேன். கண்டிப்பா வேலை தர்றேன்னு சொன்னார். இன்னிக்கு காலை பத்து மணிக்கெல்லாம் உன்னை அனுப்பிவைக்கிறதா சொன்னேன். சாப்பிட்டு புறப்படு. அப்பத்தான் கரெக்ட்டா இருக்கும்"

"மேடம்! இன்னிக்கேவா?"

"ஆமா! ஏன்?"

"இன்னிக்கு மெடிக்கல் கேம்ப் இருக்கே"



"அதான் நாங்கள்லாம் இருக்கோமே நீ போயிட்டு வா. இந்தா பஸ்சுக்கு வெச்சுக்க"- என்றவாறு ஐம்பது ரூபாய் தாளை நீட்டினாள் சரோஜினி.

"தேங்க்யூ மேடம்"

"மீரா, சம்பளம் எவ்வளவா இருந்தாலும் பரவாயில்லை. வேலைய ஒத்துக்கோ. இப்படியே கிணத்தடியிலயும் அடுப்படியிலயும் உன்னைப் பார்க்க கஷ்டமா இருக்கு"

"நான் சந்தோஷமாத்தான் செய்றேன் மேடம்"

"அது தெரியுதும்மா. இருந்தாலும் எம்மனசு கேட்கலயே. நீ எப்படி வாழ்ந்தவ. இப்படி கஷ்டப்படுத்திக் கிறியே."

"விடுங்க மேடம். நானே அதையெல்லாம் மறந்துட் டேன்"

"இல்ல. நீ மறக்கல்ல. அதான் எவ்வளவு வேலையை இழுத்துப்போட்டுட்டு செய்தாலும் ராத்திரியானா மரத் தடியில உட்கார்ந்து அழறியேம்மா."

"அது... வந்து... மேடம்"

"சரி. நான் பழசையெல்லாம் நினைவுபடுத்தல்ல. இப்ப இந்த வேலைக்கு உன்னை அனுப்புறதே நீ கல கலப்பா சுறுசுறுப்பா சுத்திவரணும்னு தான். இது புதுசா தொடங்கியிருக்கிற கம்பெனி. எல்லா ஸ்டாப்புமே உன் வயசுலதான் இருப்பாங்க. அவங்க கூட பேசி பழகி இயல்பு நிலைக்கு நீ வரணும் மீரா"

"பார்க்கலாம் மேடம்"

"சரி சரி. பேசிட்டே நிற்காதே. சீக்கிரம் புறப்படு விசிட்டிங் கார்டை எடுத்துக்க. அட்ரஸ் பார்த்துப் போயிடு வேல்ல"

"போயிடுவேன் மேடம்"

"வெரிகுட். பெஸ்ட் ஆப் லக். போயிட்டு வா"

"சரி மேடம்"

"சாப்பிட்டுட்டுப் போ"

"சரி மேடம்"- என்றவாறு விசிட்டிங் கார்டையும் பணத்தையும் எடுத்துக் கொண்டு தன் அறையை நோக்கிச் சென்றாள் மீரா.

அப்பாவைப் போல அந்தப் பார்த்தசாரதியைப் போல சுயநலவாதிகளும் சந்தேகப் பிசாசுகளும் இருக்கும் இடத்தில் சரோஜினியைப் போல் நடமாடும் தெய்வங்களும் இருக் கத்தான் செய்கிறார்கள்.

சரோஜினி மட்டும் இல்லையென்றால் இன்று மீர இல்லை. யாரும் அற்ற அநாதையாய் தெருவில் நின்றிருக்க வேண்டும். இல்லையெனில் ஊரார் வாயில் விழுந் அரைபட மனமின்றி உயிரை மாய்த்திருக்கக் கூடும். பெ றவளை இழந்து மற்றவர்களால் ஒதுக்கப்பட்டு சருகா உலர்ந்தவளை அணைத்துத் தேற்றியவள் இந்த சரோஜி தான்.

தன் இல்லத்திலேயே இடம் தந்து உணவும் உடையு தந்து கோழி தன் குஞ்சைப் பாதுகாப்பது போல் இர் இரண்டு வருடங்களாய் பாதுகாத்து வரும் இவரும் ஒரு தா தான். அம்மா! நீ இன்னும் இறக்கவில்லை. மேடத்தி உருவில் என்னுடன் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறாய்



பலவித எண்ணங்களோடு குளித்து முடித்து புடவையை மாற்றும் போது மீண்டும் கண்களில் நீர் கரந்தது. நான்கே புடவைகள். இதில் எதைக்கட்டுவது? இல்லத்தில் இருந்தவரை இது பெரியதாகத் தோன்ற வில்லை. ஆனால் வெளியில் வேலைக்கு என்று செல்லும் போது நல்லதாய் உடுத்திக் கொண்டு போக வேண்டாமா?

ஒரு நிமிடம் தான் அந்தக் கலக்கம். இருப்பதில் திருப்தி காண்பதுதான் நல்லது. கிழிசல் இல்லாத உடை கிடைத்ததே பெரிதல்லவா? துவைத்து மடித்து வைத்திருந்த அரக்கு நிற காட்டன் புடவையை எடுத்துக் கட்டிக் கொண்டாள்.

ப்ளவுஸ் போடும்போதே ஒரு உதறல். நைந்து போயிருந்த துணி லேசாய் விரிசல் விட்டிருந்தது. எந்த நேரத்திலும் கிழிந்து விடுவேன் என மிரட்டியது. மெது வாய் அணிந்து கொண்டாள்.

வேலை கிடைத்ததும் முதலில் நல்லதாய் நான்கு துணிமணிகள் வாங்கிக் கொள்ள வேண்டும். பிறகு சம்பாதிக்கும் பணத்தை சரோஜினி அம்மாவிடமே கொடுத்து விட வேண்டும். இந்த இல்லத்திற்கு தன்னால் முடிந்த உதவியாக இருக்கட்டுமே.

புடவையைப் பின் செய்து கொண்டு தனது கைப் பையை எடுத்துக் கொண்டு சமையலறையை நோக்கிச் சென்றாள். சாம்பாரை தாளித்துக் கொண்டிருந்த கருத்தம்மா சிநேகமாய் புன்னகைத்தாள்.

"மீரா! இப்பவே டீச்சர் மாதிரி தெரியுற. படிச்சவங் களுக்கு எப்படியும் ஒரு கம்பீரம் இருக்கத்தான் செய்யுது இல்ல"

"என்ன கருத்தம்மா? அப்படியா தெரியுது?"

"ஆமா! பழைய புடவையிலயே நீ இத்தனை அழகா இருக்கியே. புதுசுபுதுசா கட்டினா எப்படி இருப்ப?"

"ம்? கருத்தம்மா மாதிரி இருப்பேன். சாப்பாடு ரெடியா கருத்தம்மா. நான் சீக்கிரமா போகணும்"

"எல்லாம் ரெடி. இப்படி உட்காரு. சாப்பாடு போடுறேன்"

"நீ வேலையைப் பாரு. நானே போட்டுக்கிறேன்" - என்றவாறு பெரிய பாத்திரத்தில் மொத்தமாய் அவித்து வைத்திருந்த இட்லியில் இரண்டை எடுத்து தட்டில் வைத்து சாம்பாரை ஊற்றி இரண்டே நிமிடத்தில் சாப்பிட்டு முடித்தாள்.

"காபி தரட்டுமா மீரா" - என்ற கருத்தம்மாவிடம் மறுத்தாள் மீரா.

"வேண்டாம் கருத்தம்மா. சரி, நான் கிளம்பட்டுமா?"

"ம். பத்திரமா போயிட்டு வா. மதியம் சாப்பிட வந்திடுவ இல்ல"

"தெரியல்ல. முதல்ல போய் பார்க்கணும். அவங்க வேலையில எப்ப சேரச்சொல்றாங்கன்னு தெரியல்ல"

"எப்படியும் வேலை கிடைச்சிடும். எதுக்கும் சாப்பாடு கொண்டு போயிடுறியா?

"ஏய். வேண்டாம்ப்பா. முதல்ல வேலை கிடைக்கட்டும். சரி. டயமாச்சு. நான் போயிட்டு வரட்டுமா? எல்லாரையும் சீக்கிரமா சாப்பிடச் சொல்லிடு"

"அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன். நீ கிளம்பு"



"சரி. வர்றேன்" - என்றவாறு அலுவலகத்தை அடைந்து சரோஜினியிடமும் விடைபெற்று பேருந்து நிறுத்தத்திற்கு வந்தாள்.

கூட்டமாய் வந்த பஸ்ஸில் தொற்றி ஏறி இடித்துப் பிடித்து உள்ளே சென்றபோது அருகே நின்ற பெண் மீராவின் காதிற்குள் கிசுகிசுத்தாள்.

"ஏங்க! உங்க ப்ளவுஸ் கிழிஞ்சிருக்கு"

"ஐயோ"- பதறிப்போய் பார்த்தவள் பரபரவென தனது முந்தானையால் போர்த்திக் கொண்டாள். அவமானம் பிடுங்கித் தின்றது. கையை மேலே தூக்குமுடியாமல் மெல்ல நகர்ந்து வீட்டின் அருகே சென்று சாய்ந்து பிடித்துக் கொண்டாள்.

முழுதாய் அரைமணிநேரம் பயணித்து இறங்கி, முகவரியைத் தேடி அந்த அலுவலகத்தை அடைந்தபோது இன்னும் குன்றிப்போனாள் மீரா. வரவேற்பறையில் நின்ற பெண் மீராவை மேலும் கீழுமாய் பார்த்து விட்டு, " என்ன டொனேஷனா?" என்றதும் பேச்சற்றுப் போனாள்.

"எம்.டி. வர்றநேரம் இப்படி வந்து நிற்கக்கூடாது. போம்மா வெளியே" என்றாள் கடுப்பாய்.

"இல்ல.. நான் டொனேஷன் கேட்டு வரல்ல" - மீரா பதட்டமாய் மறுத்தாள்.

"பின்னே?"

"நான்.. நான் உங்க எம்.டி.யை பார்க்க வந்திருக்கேன்"

"எதுக்கு?"

"வேலை விஷயமா.."

"யாரோட வேலை விஷயமா?"

"எனக்குத்தான்.. இங்கே வேலை தர்றதா சொல்லி யிருக்கார்"

அந்தப்பெண் அடக்கமாட்டாமல் சிரித்தாள். அருகே நின்றவளையும் துணைக்கு அழைத்தாள். "பிரித்தீ! இங்கே பாரேன். நம்ம ஆபீசுக்கு வேலைக்கு வந்திருக்கிறாளாம்"

ஒல்லியாய் உயரமாய் நின்ற அந்தப்பெண்ணும் அலட்சியமாய் சிரித்து, "நம்ம ஆபீஸ்ல கூட்டுற வேலை கூட காலியா இல்லையே? இவளுக்கு வேற வேலை என்ன கொடுப்பார்கள்? ஏம்மா! யாராவது ஏதாவது சொன்னா உடனே வந்துடுறதா?

"இது என்ன கம்பெனி? இங்க என்ன வேலை நடக்குதுன்னு விசாரிக்கமாட்டியா? போம்மா. போ. ஏதாவது ஸ்கூல்லயோ ஹாஸ்பிடல்லயோ பெருக்கி துடைக்கிற ஆயா வேலை கிடைக்கும். ட்ரை பண்ணு" - அவள் சத்தமாகவே சொல்ல ஒரு சிலர் திரும்பிப் பார்த்தனர்.

மீரா சடாரென நிமிர்ந்து நின்றாள். " ஹலோ! நீ யாரு? இந்தக் கம்பெனியோட எம்.டி.யா?" - என்றாள் மிடுக்காக. இரண்டு பெண்களும் துணுக்குற்றனர்.

"ஏய்! யாரைப்பார்த்து மரியாதையில்லாமல் பேசுகிறாய்?"

"உன்னைப் பார்த்துதான். எப்படியும் நீ என்னைவிட வயதில் குறைந்தவளாகத்தான் இருப்பாய். அதோடு எனக்கு மரியாதை தராத யாருக்கும் நான் மரியாதை கொடுப்பதில்லை"

"பிச்சைக்காரி போல் வேஷம்போட்டுக் கொண்டு எத்தனை திமிராய் பேசுகிறாள். உன்னை யார் உள்ளே விட்டது?" - ப்ரித்தி எகிறினாள்.



"உன்னை உள்ளே விட்ட அதே வாட்ச்மேன் தான்"

"ஏய்! சங்கர். வா இங்கே. இந்தப்பெண் அத்துமீறி உள்ளேநுழைந்து மரியாதையில்லாமல் பேசுகிறாள். இவளை வெளியே அனுப்பு" - என அவள் கத்தியதில் பியூன் ஓடிவந்தான்.

"யாரும்மா நீங்க? இங்க எதுக்கு வந்தீங்க?"

"நான் மீரா. உங்க எம்.டியைப் பார்க்கணும். எப்போ வருவார்?"

"வர்ற நேரம்தான். இப்படி வழியில நிற்காதீங்க. ஓரமா உட்காருங்க"

"ஏய் சங்கர்! நான் என்ன சொன்னேன்? நீ என்ன செய்கிறாய்" - என்ற வரவேற்பு பெண்ணின் குரல் பாதியில் நின்று போக, மீரா அவளை ஏறிட்டாள்.

"குட்மார்னிங் ஸார்" - என அவள் மிரண்டு சொல்ல, அவளதுபார்வையைத் தொடர்ந்து தன் பார்வையை வீசிய மீராவின் பார்வையும் அங்கே கம்பீரமாய் வந்து நின்றவனின் பார்வையும் மோதிக்கொள்ள இருவருமே ஆச்சர்யமாய் அதிர்ந்தனர். வந்தவனின் உதடுகள் தானாய் உச்சரித்தன "மீ.. மீரா"

## 7

கண்ணனின் முகம் பிரகாசமாய் மலர்ந்தது. "மீரா! நீங்களா? நீங்க எப்படி இங்கே?" - கண்ணனின் குரலில் இருந்த உற்சாகமும் துள்ளலும் மற்றவர்களை வாயடைக்கச் செய்தது.

"கண்ணன்! இது- இது உங்க கம்பெனியா?"

"யெஸ். சரி நீங்க எப்படி?"

"நான், சரோஜினி மேடம் என்னை அனுப்பினாங்க" - சற்றே திணறலாய் மீரா சொல்ல, ஆர்ப்பாட்டமாய் வரவேற்றான் கண்ணன்.

"ஓ! மேம் சொன்ன ஆள் நீங்கதானா? வாட் எ சர்ப்ரைஸ். கம். ப்ளீஸ் கம்." - என்றவாறே முன்னே செல்ல, சற்று தயங்கிவிட்டு அவன் பின்னே சென்று அவனது அறைக்குள் நுழைந்தாள்.

"உட்காருங்கள் மீரா. ஒன் செகண்ட்" - என்றவாறு போனை எடுத்து அவன் ஏதோ பேச, மீரா அமைதியாய் அந்த அறையை நோட்டமிட்டாள்.

கண்ணாடியால் ஆன பெரிய மேஜை. இடதுபக்க ஓரமாய் இரண்டு தொலைபேசி அழகாய் வீற்றிருக்க, அதன் அருகே பளிங்காலான மீராவின் சிலை. கையில் தம்புராவோடு மீரா வீற்றிருந்த கோலம் கண்ணைக் கவர்ந்தது. வலப்பக்கமாய் கணினி மற்றபடி மேஜை வெகு சுத்தமாய் பளபளப்பாய் இருந்தது.



போனை வைத்துவிட்டு மீராவின் சிலையைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டு நிமிர்ந்து அமர்ந்தான் கண்ணன்.

"மீரா! ஏன் நிற்கிறீங்க? ப்ளீஸ் ஸிட்டவுன்"

"பரவாயில்ல ஸார்" - புடவையை நன்றாய் இழுத்துப் போர்த்திக் கொண்டாள்.

"உட்காருங்க மீரா. நிறைய பேசணும்" - அவன் மீண்டும் சொல்ல, தயக்கமாய் அமர்ந்து கொண்டாள்.

"சொல்லுங்க மீரா. எப்படியிருக்கீங்க?"

"ம். நல்லா இருக்கேன்"

"வீட்ல அம்மா- அப்பா எல்லாரும் சௌக்கியமா?"

"ம்"

"ஆமா! இப்போ பழைய வீட்ல இல்லையா நீங்க?"

திக்கென நிமிர்ந்தாள். இது அவளுக்கே புதிதான செய்தி. சொந்த வீட்டையே காலிபண்ணிப் போய்விட்டாரா அப்பா. ஏன் எதற்காக? விரட்டி அனுப்பிய மகள் திரும்பவும் வந்து ஒட்டிக்கொள்வாள் என்று பயந்து விட்டாரோ?

"என்ன மீரா? எதுவுமே சொல்ல மாட்டேங்கிறீங்க"

"ம். ஆமா. நீங்க எப்போ பார்த்தீங்க?"

"ஒரு மூணு மாசத்துக்கு முன்னால வந்தோம். வீட்டை வித்துட்டு அடையார் பக்கம் போயிட்டதா சொன்னாங்க"

"ஆ- ஆமா. அடையார்ல தான் இருக்கோம்"

"சரி. உங்க பழைய வேலை என்ன ஆச்சு?"

"அது.. அந்த ஆபீஸ் ரொம்ப தூரமா இருந்ததால விட்டுட்டேன்."

"ஏன் மீரா. உங்களுக்கு உடம்பு எதுவும் சரியில்லையா?"

"ஏன்? ஏன் கேட்கிறீங்க?"

"இல்ல. ரொம்ப இளைச்சுப் போய்த் தெரியுறீங்களே. அடையாளமே தெரியல"

"ஆமா! டைபாய்ட் ஜுரம். ஒரு மாசமா..."

"ஐயோ! இப்ப எப்படி இருக்கு? இந்த உடம்போட ஏன் இந்த வெயில்ல வந்தீங்க. குளிருதா மீரா? பேனை நிறுத்திடவா?" - பதறினான் கண்ணன்.

"இல்ல ஸார். இருக்கட்டும்"

"ஜுரம் எப்படியிருக்கு? டாக்டர்கிட்ட போனீங்களா?"

"ம். போனேன். இப்ப பரவாயில்ல"

"உங்க அப்பா இன்னும் மாறவே இல்லையா மீரா?"

"என்ன?"

"இல்ல. இப்படி உடம்பு முடியாம இருக்கிற பொண்ணை வீட்ல வெச்சுப் பார்த்துக்காம வேலைக்கு அனுப்பியிருக்காரே. அதான் கேட்டேன்"

"வயிறுன்னு ஒண்ணு இருக்கே ஸார்"

"மீரா"

"அது... வந்து... வீட்லயே இருந்தா போரடிக்குது. அதான்.."

"சரி. சரோஜினி மேடம் உங்களுக்கு உறவா?"

"ஆமாம். எனக்கு அம்மா மாதிரி" - என்றாள் கண்ணில் நீர் மின்ன.



"எங்களுக்கும் தான். இன்னிக்கு நாங்க இந்த நிலைக்கு வந்திருக்கோம்னா அதுக்கு அவங்களும் ஒரு முக்கிய காரணம்"

"நீங்கன்னா...?"

"நான், கோபி, விஷ்வா.. நாங்க மூனுபேருமே பார்ட்னர்ஸ்"

"ஓ. அந்த மூன்று நட்சத்திரங்கள் நீங்கள் தானா?"

"ஆமா! விஷ்வாதான் கம்பெனிக்கு பேரை செலக்ட் பண்ணினான்" - கண்ணன் பெருமையாகக் கூறினான்.

"நாலாவது நட்சத்திரம் எங்கே?"

"யூ மீன் அஜய். அவன் மேரேஜ் பண்ணிட்டு மாமனார் வீட்டோட செட்டில் ஆகிட்டான். மாமாவிற்கு ஒரே பெண்தானாம். அதனால் இவனைத் தன் வாரிசாக்கிக் கொண்டார். கேரளாவில இருக்கான்"

"அப்படியா?"- இதற்கு மேல் என்ன பேசுவது என புரியாமல் மீரா அமைதியாக இருக்க, கண்ணன் புன்னகைத்தான்.

"ரொம்ப சந்தோஷமா இருக்கு மீரா"

"எதுக்கு?"

"எங்களை இன்னும் நினைவில் வைத்திருக்கிறீர்களே"

"எப்படி மறக்க முடியும் கண்ணன். இந்த இரண்டு வருடங்களில் ஒரு நாள் கூட உங்களை நான் நினைக்காமல் இல்லை. மறக்கவும் முடியாது" - மீராவின் குரலில் தோய்ந்த விரக்தியை கண்ணனால் உணர்ந்து கொள்ள

முடியவில்லை. அவனது மனம் ஆகாயத்தில்
கொண்டிருந்தது.

"தேங்க்யூ மீரா. தேங்க்யூ ஸோமச்"

"எதுக்கு ஸார்?"

"மீரா, இந்த ஸார் மோரேல்லாம் வேண்
கண்ணன்னே கூப்பிடு"

"அதெப்படி ஸார். நீங்கள் முதலாளி.
கொடுப்பவர். உங்களைப் போய் எப்படிப் பேர் சொல்

"சொல்வலாம் மீரா. உனக்கு அந்த உரிமை
உனக்கு மட்டுமே உண்டு"

"என்ன ஸார் சொல்றீங்க?"

"ஆமா மீரா. வெளிநாட்டு மோகத்தில
கிடந்த எங்களை நீ மட்டும் தட்டி எழுப்பலன்னா இ
நாங்க முதலாளி ஆகியிருக்க மாட்டோம். அ
கிட்ட கை நீட்டி சம்பளம் வாங்கிட்டு இருந்திருப்போ

"இது... உங்க திறமை ஸார்"

"இல்ல மீரா. நீதான்... நீ சொன்ன வார்த்தைகள்
காரணம். நீ சொன்ன மாதிரியே உன் அப்பாகிட்ட
னோம். முதல்ல மறுத்தார். பிறகு ஆறுமாச
சேர்த்துத் தர்றோம்னு சொன்னதும் ஒத்துகிட்டார்.
கேட்ட தந்துட்டார். முதல்ல இங்க உள்ள கம்பெ
தான் வேலைக்கு சேர்ந்தோம்.

ஆறே மாசத்தில உன் அப்பாவோட
அடைச்சுட்டோம். பிறகு தான் எங்க திறமையா
ஏன் ஒரு கம்பெனியத் தொடங்கக் கூடாதுன்னு
சோம். இப்ப மார்க்கெட்டில மெயின் எங்க



கம்யூட்டர் ஸ்பேர் பார்ட்ஸ் தயாரிக்கலாம்னு
பண்ணினோம்.

லோன் அப்ளை பண்ணினோம். எங்களுக்கு
நின்னு ஷ்யூரிட்டி கையெழுத்துப் போட்டு
வாங்கித்தந்தது சரோஜினி மேம்தான். கடினமா
இந்த ஒன்றரை வருஷத்தில ரொம்பவே
இருக்கோம். ஆனா இந்த மொத்த முயற்சிக்கும்
ஆணிவேர் நீ தான் மீரா." - உணர்ச்சி
சொன்னவனை வியப்பாய்ப் பார்த்தாள் மீரா.

இவர்களின் சந்திப்பு தன் வாழ்க்கையைத்தான்
இருக்கிறது இவர்களது வாழ்க்கைப் பயணத்தை
சீராக கொண்டு போயிருக்கிறது. எப்படியோ
முன்னேற்றம் சந்தோஷமே. மன நிறைவோடு
சொன்னாள்.

ஸார். என் வேலை என்னன்னு சொன்னீங்

மீரா. என்ன அவசரம்? விஷ்வாவும்
ஒரு டீலரைப் பார்க்கப் போயிருக்காங்க. இப்ப
உன்னைப் பார்த்தா ரொம்ப சந்தோஷப்

"இருக்கட்டும் ஸார். இனிமேல் தினமும் பார்க்கப்
எனக்கு என்ன வேலை தருவீர்கள் ஸார்"

"முதலில் இந்த ஸாரை விடு மீரா. கண்ணா என்று
" ஆவலாய் சற்றே ஏக்கமாய்க் கேட்டான்

"தான். எப்படி?"

"ஏன்? அன்று உன்னைக் கடத்தியபோது எத்தனை உரிமையாய் அழைத்தாய். அதே போல் கூப்பிடேன். எனக்கும் அதுதான் பிடித்திருக்கிறது".

"கண்ணன்..."

"ம். இதே போல கூப்பிட்டால் போதும். சரி. விஷயத்திற்கு வருவோம். இதற்கு முன் என்ன வேலை பார்த்துக் கொண்டிருந்தாய் மீரா"

"அக்கவுண்ட் செக்ஷன்ல"

"ஓ.கே. நீ இன்றே நம் அலுவலக கணக்கு வழக்குகளைப் பார்த்துக்கொள். எந்த டவுட் என்றாலும் தயங்காமல் கேள். உனக்கு காயத்ரியை அறிமுகப்படுத்துகிறேன் அவள் எல்லாம் சொல்லித் தருவாள்"

"ம்"

"காயத்ரி யாரென்று தெரியுமா? நம் விஷ்வாவின் தங்கை"

"சரி"

"மீரா. ஏன் இப்படி மாறிட்டே?"

"எ.. என்ன? என்ன மாறிட்டேன்?"

"கேட்ட கேள்விகளுக்கு ஒரே வார்த்தையில் பதில் சொல்லிவிடுகிறாய். வேறு எதுவும் பேசமாட்டாயா?"

"என்ன பேசுவது?"

"சரிதான். முதலில் உன் உடம்பு குணமாகட்டும் மீரா. பிறகு வேலையில் சேர்ந்தால் போதும்"

"இல்ல லா... இல்ல கண்ணா நான் நல்லாத்தான் இருக்கேன்."



"ஷ்யூர்?"

"ம். எனக்கு ஒன்னுமில்ல"

"ஓ.கே. முதல்ல காபி சாப்பிடு " - என்றவாறு மேஜைமீதிருந்த பெல்லை அழுத்த காபியோடு வந்தான் பியூன்.

"நீ காபி சாப்பிடு மீரா. நான் சில போன்கால்ஸ் பேசணும். இப்ப வந்திடுறேன்" - என்றவாறு அவன் சென்ற இரண்டு நிமிடத்தில் அறைக்குள் நுழைந்த காயத்ரியை உடனே பிடித்துப்போனது மீராவிற்கு.

அவளது வேலை என்னென்ன? அலுவலக நேரம்.. விதிமுறைகள் என மளமளவென எளிதாகவும் விரைவாகவும் புரியவைத்தாள்.

"தேங்க்யூ காயத்ரி. நான் ரொம்ப பயந்துபோய் இருந்தேன். உன்னைப் பார்த்ததுல ரொம்ப சந்தோஷம்"

"எல்லாருமே ரீட்டா மாதிரி இருக்கமாட்டாங்க மீரா"

"ரீட்டா யாரு?"

"ரிஸப்ஷனிஷ்ட். அவளுக்கு இந்த உலகத்திலயே அவமட்டும்தான் அழகுன்னு நினைப்பு. இனிமே நீங்க இப்படி பழையகால குடும்பத்தலைவி மாதிரி போர்த்திக்கிட்டு வராதீங்க. அதுக்காக மாடர்ன் ட்ரெஸ்தான் போடணும்னு சொல்லல. புடவையில உள்ள அழகு வேற எதிலயும் வராது. கட்டுற புடவைய அழகா கட்டிட்டு வாங்க மீரா"

"ச.. சரி. காயத்ரி"

"நான் எதுவும் தப்பா சொல்லிட்டேனா?"

"இல்ல காயத்ரி. நான் இப்படி வந்ததுக்கு காரணம் இருக்கு. பட். இனிமே இப்படி வரமாட்டேன்."

"ம். இப்படித்தான் தன்னம்பிக்கையோட இருக்கணும்"

"சரி டீச்சர்" - சிரிக்காமல் சொன்ன மீராவைப் பார்த்ததும் பளிச்சென சிரித்தாள் காயத்ரி.

"சரி. மீரா. கண்ணன்ணா வருது. நீங்க அப்ளிகேஷன் பில்-அப் பண்ணிக் கொடுங்க. அப்பாயின்மென்ட் ஆர்டர் எடுத்துட்டு வர்றேன்" - என கண்ணாடிக் கதவைத் திறந்து கொண்டு வெளியேறினாள்.

சற்று நேரத்தில் உள்ளே வந்த கண்ணன், "என்ன மீரா. காயு எல்லாம் சொல்லித் தந்தாளா?"

"ம்."

"நாளைக்கே வேலைக்கு வந்திடுறியா?"

"சரி"

"டயமாகிப் போச்சே. இங்கே கேண்டீன்ல சாப்பாடு இருக்கும். மதியம் சாப்பிட்டுட்டு போகலாமே"

"இல்ல ஸார். நான் மேடத்துகிட்ட வேலை கிடைச்சதை சொல்லணும்"

"நானே சொல்லிட்டேனே"

"ம்ப்ச்! அதுக்குள்ள சொல்லிட்டீங்களா?"

"அவங்களே போன் பண்ணிக் கேட்டாங்க"

"சரி. நான் கிளம்பறேன். நாளைக்கு வர்றேன்"

"மீரா. வெளியே ரொம்ப வெயிலா இருக்கே. கம்பெனி கார்ல போயிடேன்"



"வேண்டாம் ஸார். நான் பஸ்ல போறேன்"

"மறுபடியும் ஸாரா?"

"ஸாரி கண்ணன்"

"இட்ஸ் ஓ.கே. மீரா! உன்னை நேரில் பார்த்தா நிறையப் பேசணும்னு இருந்தேன். பட். பேசமுடியல்ல" - தவிப்பாய் விரல்களை மடித்தான்.

"இவ்வளவு நேரம் பேசினோமே!

"ஆனா பேச நினைத்ததைப் பேசல"

"என்ன பேசணும்?"

"அது... உங்கிட்ட எப்படி சொல்றதுன்னு தெரியல்ல"

"சும்மா சொல்லுங்க..."

"இல்ல. நான் உங்க அப்பாகிட்டயே பேசிக்கிறேன்"

"அப்பாகிட்டயா?" - பதறினாள் மீரா.

"ஏன்? பேசக்கூடாதா?"

"வேண்டாம். அப்பாவைப் பற்றி உங்களுக்குத் தெரியாதா? எதுவா இருந்தாலும் எங்கிட்டயே சொல்லிடுங்க"

ஒருகணம் யோசித்துவிட்டு மறுப்பாய் தலையசைத்தான் கண்ணன். "இல்ல. இப்ப வேண்டாம். பிறகு பார்த்துக் கொள்ளலாம். நீ கிளம்பு"

புரியாத பார்வையோடு, "சரி. நான் வர்றேன்" - என்றவாறே வெளியேறினாள் மீரா. சரணாலயத்தை அடைந்தபோது மணி இரண்டைத் தாண்டியிருந்தது.

ஆவலாய் வரவேற்றவர்கள் வேலைகிடைத்துவிட்டது என்றதும் சமையலறைக்குள் நுழைந்து சர்க்கரையை அள்ளி

வாயிலிட்டனர். சிலர் அணைத்து ஆறுதல் வார்த்தைகூறி வாழ்த்தினர். சரோஜினி மீராவை நெருங்கினாள்.

"வேலைக்கு போகச் சொல்லிட்டேன்னு வருத்தப் படுறியா மீரா?"

"ஐயோ! என்ன கேள்வி மேடம். நானே வேலை தேடிட்டுதானே இருந்தேன்"

"உனக்கு இந்தவேலை நல்ல வருமானத்தையும் கொடுக்கும். அதேநேரம் அருமையான வாழ்க்கையையும் அமைச்சுத் தரும். அதனாலதான் உன்னைக் கண்ணன் கிட்டே அனுப்புனேன்"

"மேடம்! நீங்க என்ன.. சொல்றீங்க?"

"கண்ணன் எம்புள்ளமாதிரிம்மா. உனக்கு எந்தக் கஷ்டமும் வராம பார்த்துக்குவான். அதைத்தான் சொன்னேன். நல்ல கம்பெனி. நல்லவேலை. உனக்குப் பிடிச்சிருக்குல்ல"

"பிடிச்சிருக்கு மேடம்."

"சரி. இனிமே உனக்கு எல்லாமே நல்லதாவே நடக்கும். நீ போய் சாப்பிடு" - என்றதும் அமைதியாய் வெளியே வந்தாள் மீரா.

"மீரா! இப்படி வாயேன்" - பரிமளம் அழைத்தாள்.

"என்ன மாமி? வெயில்ல நிக்கிறீங்க?"

"உன்னைப் பார்க்கத்தான். என்னோட வா" என்றவாறே மீராவின் கைபற்றி தன் அறைக்குள் அழைத்துச் சென்றாள் பரிமளம்.

"என்ன மாமி? எதுக்கு இவ்வளவு சஸ்பென்ஸ்?"



"இருடி குழந்தே" - என்றவாறு தனது பெட்டியைத் திறந்து துணிமணிகளை எடுத்து வெளியே வைத்தாள். எளிமையான அதே சமயம் விலையுயர்ந்த புடவைகள். பெட்டியின் உள்ளே இருந்து புத்தம்புதிதாய் ஐந்துபுடவைகளை எடுத்தாள். மடிப்பு கலையாமல் இனிய மணத்தோடு இருந்த புடவைகளை மீராவின் கையில் கொடுத்தாள் பரிமளம்.

"மீரா! உனக்குப் பிடிச்சிருக்கா பாரேன்"

"மாமி! இதெல்லாம் என்ன?"

"இதெல்லாம் என் மருமகளுக்காக நான் எடுத்த புடவை எப்படியிருக்கு?"

"சூப்பரா இருக்கு மாமி. எல்லாமே நைஸ் கலர். துணிகூட காஸ்ட்லியா இருக்கும் போலிருக்கே"

"நோக்கு பிடிச்சிருக்கா?"

"எனக்குப் பிடிச்சா என்ன பிடிக்காட்டி என்ன மாமி. உங்க மருமககிட்ட கேளுங்க"

"அவளுக்குத்தான் எடுத்தேன். ஆனா.. புடவை கட்டுறதே பிடிக்காதாம் அவளுக்கு. எப்பவும் வெள்ளக்கார உடுப்புதான். புடவை கட்டச் சொன்னதுக்காகத் தானே என்னை இங்கே அனுப்பிட்டா"

"மாமி"

"அவகிடக்கிறா விடு. கழுதைக்கு தெரியுமா கற்பூர வாசனை. மீரா! உன் அம்மா தர்றதா நினைச்சு இதை வாங்கிக்கம்மா"

"மாமி! எனக்கா? எனக்கு எதுக்கு?"

"அப்படிச் சொல்லாதே குழந்தே. இத்தினி நாளா நைந்துபோனதும் சுருங்கிப் போனதுமா உடுத்திண்டு இருந்த. இப்போ வேலை கிடைச்சிடுத்து. வெளியே போறச்சே நல்லதா உடுத்திண்டு போனாத்தானே மதிப்பா இருக்கும்."

"மாமி"

"நல்லதா உடுத்திகிட்டா நமக்கே ஒரு தன்னம்பிக்கை வரும் தெரியுமோ?

ஆள்பாதி ஆடை பாதின்னுவாளே! அது உண்மை. நீ இதெல்லாம் உடுத்திட்டுப்போனா உன்னைப் பார்க்கிறவங்களுக்கு உம்மேல மதிப்பும் மரியாதையும் தானாவரும்."

காலையில் அந்த ரீட்டா தன்னை ஏளனமாய்ப் பார்த்ததும் பேசியதும் நினைவிற்கு வர அமைதியாய் இருந்தாள் மீரா.

"மீரா! இதெல்லாம் உனக்குப் பிடிக்கலியா? பழைய மாடலா இருக்குதா?"

"இல்ல மாமி அப்பெடியெல்லாம் இல்ல"

"பின்ன ஏன் வாங்கிக்க மாட்டேன்ற. நான்தான் உன்னை என்மகளா நினைச்சுண்டு இருக்கேன். நீ என்னை வேத்து மனுஷாளாத்தான் பார்க்கிற"

"அப்படி இல்லமாமி. எனக்குன்னு வேறயாரு இருக்கா? கொடுங்க சந்தோஷமா வாங்கிக்கிறேன்" - என்றவாறு கைகளை நீட்டினாள்.

"சமர்த்துடி." - என்றவாறு புடவைகளை மீராவிடம் கொடுத்தாள் பரிமளம்



"மீரா! புடவையிலயே ப்ளவுஸ் பிட்டும் இருக்குது. நம்ம கோதைகிட்ட போய்க்கொடு.

ஒரு மணிநேரத்தில தைச்சுக் கொடுத்திடுவா"

"சரி மாமி"

"நாளைக்கு முத நாள் இல்லியா? அந்த மாம்பழக் கலர் புடவையைக் கட்டிண்டு போ. மங்களகரமா இருக்கும்"

"சரி மாமி"

"பேசிட்டே நிற்காதே. கோதை படுத்தாலும் படுத்திடுவா. மதியவேளைன்னா எப்படியும் குட்டித்தூக்கம் போட்டுடுவா. சீக்கிரம் போ"

"தூங்கட்டுமே மாமி. நைட் கூட தைச்சுக்கலாம்"

"இருட்டு வேலை குருட்டு வேலை. சரியா தைக்கலன்னா நன்னா இருக்காது. இப்ப கொடுத்தா சாயந்திரத்துக்குள்ள ரெடியாகிடும். போ"

"சரி மாமி" - என்றவாறு கோதையம்மாளை தேடிச் சென்றாள். கோதையம்மாள் சிறு அலுப்பும் காட்டாமல் உற்சாகமாய் துணியை வெட்டி அளவெடுத்து அம்சமாய் தைத்தும் கொடுத்துவிட்டாள்.

இரவு கருத்தம்மா அந்தப் புடவைகளை வருடிப் பார்த்தாள். "மீரா! எல்லாமே சூப்பரா இருக்கு. அதுவும் இந்த மாம்பழக்கலர் ரொம்ப அழகு. இதைமட்டும் நீ நாளைக்கு கட்டிட்டு போனேன்னு வை. அப்படியே கல்யாணப்பொண்ணு மாதிரி இருப்ப"

முகத்தில் அறைவாங்கியது போல் துடித்து நிமிர்ந்தாள் மீரா. மறக்க நினைத்த ஒன்று மறக்கடிக்கப்பட்ட

ஒன்று மீண்டும் மீண்டும் காதில் பதிந்து ரணத்தை உண்டு பண்ணியது.

விரல்கள் நடுங்கியவாறே அனிச்சையாய் கழுத்தை வருடிப்பார்த்தது. பார்த்தசாரதி கட்டிய மஞ்சள் கயிறு மீராவின் சுருக்குக்கயிறு அவளது கழுத்தில் இன்னும் புரண்டு கொண்டுதான் இருந்தது.

## 8

மாடியில் நிலவொளி வீசிக்கொண்டிருக்க, மொட்டை மாடியில் நண்பர்கள் மூவரும் படுத்திருந்தனர். நிலவும் கண்சிமிட்டிய நட்சத்திரங்களையும் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் கண்ணன்.

தலைமாட்டில் இருந்த கையடக்க எப்.எம் - ரேடியோவை திருகிக்கொண்டிருந்தான் விஷ்வா. லேசான இரைச்சலோடு பாடல் தெளிவாகக் கேட்கவில்லை. மீண்டும் திருக ஆரம்பித்தான். சிலுசிலுவென வீசிய இதமான தென்றல் அடுத்த வீட்டு முற்றத்தில் மலர்ந்திருந்த மல்லிகையின் மணத்தை அள்ளிக்கொண்டு வந்தது. ரசனையாய் சிரித்தான் கண்ணன்.

"விஷ்வா! மொட்டைமாடியில் படுத்துக்கொண்டு வானத்தைப் பார்ப்பது எவ்வளவு சுகம். அற்புதம்டா"

"இந்த சுகத்தைத்தான் வருஷக்கணக்கா அனுபவிக்கிறோமே. என்னவோ புதுசா படுக்கிற மாதிரி சொல்ற"



"ஆமான்டா. எனக்கு எல்லாமே புதுசாத்தான் தெரியுது. இந்த நிலா எத்தனை அழகுபாரேன். நாம பொறந்ததுல இருந்தே பார்க்கிறோம். ஆனாலும் இதோட அழகு அலுக்கவே இல்லை பார்த்தியா?"

"கண்ணன்! நான் வேணும்னா பேப்பரும் பேனாவும் எடுத்திட்டு வரவா?" சீரியஸாகவே கேட்டான் கோபி.

"எதுக்குடா?"

"கவிதை எழுதத்தான். உனக்கு இப்போ கவிதை எழுதணும் போல இருக்குமே"

"அட! ஆமான்டா"

"தெரியுமே. அப்புறம் இந்த நிலாவில உன் மீராவோட முகம் தெரியுமே. உனக்குக் கூட பாட்டு பாடணும்னு தோணுமே."

"ஹய்யோ! ஆமாம் கோபி."

"நீ பாடு. நாங்க கேட்டுகிட்டே தூங்குறோம். இந்த ரேடியோ சத்தவேஸ்ட். அதை ஆப் பண்ணிப் போடு விஷ்வா. நம்ம நண்பன் பாடுவான்."

"என்னடா கிண்டலா?"

"பின்னே? இவ்வளவு நாளா அவளைப் பார்க்க முடியலியேன்னு புலம்பியே எங்களைத் தூங்கவிடாம பண்ணினே. இன்னிக்கு பார்த்திருக்கே. மணிக்கணக்கா பேசியிருக்கே."

"நான் ஒண்ணும் மணிக்கணக்கா பேசல்ல... கொஞ்ச நேரம்தான் பேசினேன்"

"இதுக்கெல்லாம் குறைச்சலில்லை. பேசினே இல்ல இத்தனை நாளா எங்ககிட்ட புலம்பினதை அவகிட்ட சொல்லியிருக்கலாமில்ல"

"எப்படிடா? வேலை கேட்டு வந்தவகிட்ட முதநாளே ஏடாகூடமா எதையாவது பேசி.. அது பிடிக்காம அவ போயிட்டான்னா?"

"அதுவும் சரிதான் கண்ணா. இப்ப என்ன? எப்படியும் நாளைல இருந்து நம்ம கம்பெனிக்குத் தானே வரப்போறா பொறுமையா அவமனசு புரிஞ்சப்புறம் சொல்லு" என்றான் விஷ்வா.

"நானும் அதனாலதான்டா சொல்லல. அவளைப் பார்த்ததே எனக்குப் பெரிய கிப்ட். இன்னும் என்னால நம்பமுடியல்ல"

"டேய்! அப்போ ஏதோ கனவு கண்டு உளறினாயா?"

"சேச்சே! வந்தாடா. ஆனா உடம்பு சுகமில்லாம ரொம்ப மெலிந்து ஆளே மாறிப்போயிருந்தாடா. பார்க்கவே கஷ்டமா இருந்தது"

"கண்ணா! ஒருவேளை உன்னைமாதிரியே அவளும் உம்மேல பைத்தியமா இருப்பாளோ."

"கோபி! நீ சொல்வது மட்டும் உண்மையாக இருந் தால் உன் வாய்நிறைய கற்கண்டை அள்ளிப் போடுறேன்"

"அதைப் பிறகு போடு. அவ உன்கிட்ட எப்படிப் பேசினா?"

"ரொம்ப அமைதியா. கேட்டதுக்கு மட்டும்தான் பதில் சொன்னாள்"



"உன்னைப் பார்த்ததும் அடையாளம் கண்டுபிடிச் சிட்டாளா?"

"ஏய்! அவங்க என்ன இருபது வருஷங்கழிச்சா பார்க்கிறாங்க. ஜஸ்ட் ட்டு இயர்ஸ்ல என்ன பெரிய மாற்றம் வந்திடப்போகுது. அதெல்லாம் உடனே கண்டுபிடிச் சிருப்பா. என்ன மாதிரி ரியாக்ஷன் பண்ணினான்னு கேளு"

"முதல்ல ஷாக்காகி நின்னா! அப்புறம் முகத்தில எதையும் கண்டுபிடிக்க முடியல்லடா. எனக்குத்தான் கைகால் எல்லாம் உதறல் எடுத்திடுச்சு."

"அப்போ அவ மனசுல எதுவுமே இல்லையோ"

"விஷ்வா! அப்படியெல்லாம் அபசகுனமா சொல்லி டாதே. திடீர்னு என்னைப்பார்த்ததுல திணறியிருக்கலாம். அதனால கூட சரியா பேசாம இருந்திருக்கலாம்"

"என்னவோ சொல்ற. எதுவா இருந்தாலும் பேசி தெளிவுபடுத்திக்க கண்ணா. அப்புறம் காலம் பூரா அந்த சிலையை வெச்சுக் கொஞ்சிகிட்டே இருக்கவேண்டியது தான்"

"ஏய் கண்ணா! ஒரு சூப்பர் ஐடியா" - கூவினான் கோபி.

"என்னடா? சொல்லு சொல்லு"

"நாளைக்கு அவ வந்ததும் உன் டேபிள்ல உள்ள மீரா சிலையைக் காட்டி பேச்சை துவங்கிடு"

"எப்படித் துவங்க?"

"மீரா! கடந்த ரெண்டு வருஷமா இந்த மீராவோடத் தான் வாழ்ந்திட்டு இருக்கேன். இது வெறும் சிலையில்லை.

நீதான் இந்த மீரா ரூபத்துல இருக்க. அப்படி இப்படின்னு ஏதாவது சொல்லு"

"சொன்னால்?"

"அவ முகத்தை வெச்சே பதிலைக் கண்டுபிடிச்சிடலாம்."

"அப்படின்ற?"

"ஆமான்றேன். இதைவிட சூப்பர் ஐடியா வேற கிடையாது"

"ஓ.கே.டா. எனக்கும் இதுக்கு மேல சொல்லாம இருக்க பொறுமை இல்லை.

என்ன ஆனாலும் சரி. நாளைக்கு எம்மனசை அவகிட்ட சொல்லிடப்போறேன்"

"விஷ்வா! நாளைக்கே நமக்கு நல்லகாலம் பொறந்திடும்டா"

"எப்படிச் சொல்ற?"

"ஆமா! இனிமே இப்படி ராத்திரி முழுக்க புலம்பி நம்ம தூக்கத்தைக் கெடுக்கமாட்டானே."

"அதெப்படி அவ்வளவு உறுதியாச் சொல்லுற?"

"ஆமான்டா. இவன் விருப்பத்தைச் சொல்லி இவனுக்கு கீரீன் சிக்னல் கிடைச்சதுன்னு வை. அப்புறம் நம்மகிட்ட எதுவும் பேசமாட்டான்"

"பின்னே?"

"எனிடைம் மீராகிட்ட தான் பேசிட்டே இருப்பான். இல்லேன்னா மனசுக்குள்ளயே பேசிப்பான்."



"அப்படியா கண்ணா? கோபி சொல்றது உண்மையா?"

"என்னைப் பத்தி என்னவேணா பேசுங்கடா. ஐ டோண்ட் கேர். நான் நாளைக்கு மீராகிட்ட பேசுறதுக்கு ரிகர்சல் பார்க்கப்போறேன்"

"நான் சொன்னேன்ல. வா நாம தூங்கலாம்" - என்றவாறு இருவரும் போர்வையைக் கழுத்துவரை இழுத்து மூடிக்கொண்டு படுத்துக்கொண்டனர்.

கண்ணனுக்கு உறக்கம் வரவில்லை. கண்களுக்குள் மீராவின் முகம் தோன்றி இம்சித்தது. 'மீரா! என் மனம் முழுக்க நீதான் இருக்கிறாய். உன் மனதில் என்ன இருக்கிறது. நான்.. என் நினைவுகள் இருக்கிறதா? உன்னைக் காணாமல் தேடி வாடிய என் கண்களுக்கு இன்றுதான் விமோசனம் தந்து சென்றாய். என் மனதிற்கும் ஆறுதலைத் தருவாயா?

என் மனக்கோவிலுக்குள் நுழைந்து அமர்ந்துகொள்ளேன். இங்கே ஒருவன் உன் நினைவில் புலம்புவது உன்காதில் கேட்கிறதா மீரா. என் இதயத்துடிப்பு உன் செவியில் எதிரொலிக்கின்றதா? நீயும் என்னைப்போல் தூக்கம் வராமல் என் நினைவில் தவிக்கிறாயா?'

தனக்குள்ளேயே பேசி சிரித்துக் கொண்டான் கண்ணன். அவன் எண்ணியது போல் மீராவும் உறக்கம் வராமல்தான் திணறிக்கொண்டிருந்தாள். ஆனால் காரணம் வேறாக இருந்தது. இரண்டு வருடங்களாய் புதைந்து போயிருந்த துயரம் மீண்டும் விஸ்வரூபம் எடுக்கத் தொடங்கியிருந்தது.

இல்லத்தில் உள்ளவர்கள் அவளது திருமணவாழ்க்கையையும் அது தந்த காயத்தையும் நன்கு உணர்ந்த

வர்கள். அதனால் அதைப்பற்றி எதையும் கேட்டு மனதை துன்புறுத்தியதில்லை. அந்தப் பேச்சை எடுப்பதும் இல்லை.

ஆனால் இனி அப்படி இருக்கமுடியாதே. நாளையே வேலையில் சேர வேண்டும். கழுத்தில் தாலியைப் பார்ப்பவர்கள் இயல்பாகவே கேட்பார்களே. "நீங்க மேரீடா? ஹஸ்பெண்ட் என்ன பண்றார்னு - கேட்பவர்களுக்கு என்ன பதிலைச் சொல்வது?

என் கணவர் வெளிநாட்டில் இருக்கிறார் என்று பொய்சொல்ல தன்னால் முடியுமா? இல்லையென்றால் என் கணவருக்கு என்னைப் பிடிக்காமல் போனதால் என்னை விரட்டிவிட்டார் என்று உண்மையைச் சொல்ல வேண்டுமா?

சொன்னால் அதோடு விடுவார்களா? ஏன் எதற்கு என்று அடுத்தடுத்து கேள்விக்கணைகளைத் தொடுக்கமாட்டார்களா? அலசி ஆராயமாட்டார்களா? அடுத்தவர் பிரச்சனை என்றால் நம்மவர்களுக்கு பேசுவதற்கு கசக்குமா என்ன?

உண்மை தெரிந்தபிறகு தன்னை எந்த அளவில் மதிப்பார்கள்? சந்தேகம்தான். காது கேட்கும்படியாகவும் காதில்விழாதவாறும் அவரவர் விருப்பத்திற்கு ஆயிரம் பேசுவார்களே. தன்னால் அவற்றை சகிக்க முடியுமா?

இத்தகைய பேச்சுக்கு பயந்துதானே இந்த இல்லத்திற்குள்ளே பதுங்கிக்கிடந்தாள்? ஆனால் எத்தனை காலம் பதுங்கிவாழமுடியும்? இல்லத்தின் நிதிநிலையும் சரியில்லை. நிச்சயமாய் வேலையில் சேர்ந்தே ஆக வேண்டும். தன்னால் இயன்ற பண உதவியை ஈட்டித்தரவேண்டும்.



அதற்காக எந்தப் பேச்சுக்களையும் தாங்கித்தான் ஆகவேண்டும். மற்றவர்கள் இருக்கட்டும். நாளை முதல் வேலையாய் கண்ணன் கேட்பானே. அவனிடம் என்ன பதில் சொல்வது? உங்களால்தான் நான் இப்படி நிற்கிறேன் என்று சொல்லமுடியுமா?

வேண்டாம். பாவம். இன்று எத்தனை ஆர்வமாய் தான் முன்னேறி வருவதாகச் சொன்னான். தன் நிலையை சொல்லிவிட்டால் ரொம்பவும் வருந்துவானே. தங்களால் ஒரு பெண்ணின் வாழ்க்கை சிதறிப்போய்விட்டதே என்ற வேதனை அவன் மனதை அறுக்குமே. அது அவனது முன்னேற்றத்தைத் தடுக்குமே. என் கஷ்டம் என்னோடு போகட்டும். அவர்களது வாழ்வாவது சிறக்கட்டும்.

பெருமூச்சுடன் பாயில் படுத்தாள் மீரா. தாலி உறுத்தியது. கயிறை எடுத்துப் பார்த்தாள். கழுத்தில் ஏறி முழுதாய் ஒரு வாரத்திற்குள் உதறித் தள்ளி விட்டுப் போனவனுக்காக இன்னும் இதை சுமந்து கொண்டிருக்கிறேனே.

திரும்பி வருவானா? என்னை ஏற்றுக் கொள்வானா? இந்த எண்ணம் தோன்றிய போதே பார்த்தசாரதியின் கொடூரமான குரல் காதில் மோதியது.

"கண்டவனோடயும் போய் தங்கிட்டு வந்தவளைக் கட்டிட்டு வாழ்நாள் பூரா நான் அழணுமா? எவ்வளவு துணிச்சல் இருந்தா இதை மறைச்சி என் தலையில கட்டியிருப்பீங்க? உண்மையை எத்தனை நாள் மறைக்க முடியும்? நல்ல வேளை இப்பவே தெரிஞ்சது. நாளைக்கு புள்ளை குட்டின்னு ஆன பிறகு தெரிஞ்சா என் நிலைமை என்ன ஆகியிருக்கும்?

எனக்குப் பொறந்ததா இல்ல வேற எவனுக்கோ பொறந்ததான்னு நினைச்சி எனக்கு பைத்தியமே பிடிச்சிருக்கும். வேண்டாம்யா. உம்பொண்ணும் வேண்டாம். உம்பணமும் வேண்டாம். என்னடா சாதாரண லேண்ட் ப்ரோக்கருக்கு இவ்வளவு பெரிய இடத்து சம்பந்தம் கிடைக்குதேன்னு பார்த்தேன்.

இப்பத்தானே புரியுது. கெட்டு சீரழிஞ்சு போன ஒருத்தியை சுலபமா எங்கிட்ட தள்ளி விட்டிருக்கன்னு. இனிமே எனக்கும் இவளுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. எவனும் பஞ்சாயத்துப் பண்றோம் சேர்த்து வெக்கிறோம்னு பாண்டிச்சேரி பக்கம் வந்துடாதீங்க. அப்புறம் நான் மனுஷனா இருக்க மாட்டேன்.

இந்த ஜென்மத்துல மட்டுமில்லை இன்னும் எத்தனை ஜென்மம் எடுத்தாலும் இவ மூஞ்சில முழிக்க மாட்டேன். இவ கூட நாலு நாள் வாழ்ந்த பாவத்தை எந்த கங்கையில போய்க் கரைக்கப் போகிறேனோ." - என தலையிலடித்துக் கொண்டு நடுத்தெருவில் நின்று கத்தி விட்டுப் போனானே.

அவனா இனி வந்து தன்னை மனைவியாக ஏற்றுக் கொள்வான்? இன்னும் இதை ஏன் நான் சுமந்து கொண்டிருக்கிறேன். என்னால் ஏன் கழற்றி எறிய முடியவில்லை. கலாச்சாரம் தடுக்கிறதா? காலாச்சாரமும் கட்டுப்பாடும் விதிமுறைகளும் பெண்களுக்கு மட்டும் தானா?

ஏன் ஆண்களுக்கு எந்தக் கட்டுப்பாடும் இல்லை. கட்டிய மனைவி சொன்ன எதையும் காது கொடுத்து கேளாமல். நம்பிக்கை இல்லாமல் குப்பையை வீசியெறிவது போல் வீசிவிட்டுப் போனானே. ஐந்தரை அடியில் உயிருள்ள என்னையே தூக்கி வீசினானே.



என்னால் அவன் கட்டிய இந்த ஒரு முழக்கயிற்றைக் கூட கழற்றி எறிய முடியவில்லையே. இதற்கு புனிதமும் இல்லை. அர்த்தமும் இல்லை. இருந்தாலும் கழுத்தைச் சுற்றிய பாம்பாய் இறுக்குகிறதே.

மூச்சு விடத் திணறியவளாய் எழுந்து அமர்ந்தாள் மீரா. உடல் முழுக்க வியர்வை ஆறாய் பெருகியது. இதயம் தாறுமாறாய் துடித்தது. நெஞ்சை அடைப்பது போல் தோன்றியது.

இது வழக்கமாக நடப்பது தான். எப்போதெல்லாம் பழைய நினைவுகள் தோன்றி இம்சிக்கிறதோ. அப்போதெல்லாம் உடலும் உள்ளமும் துடிக்கிறது. மூச்சு விட முடியாமல் நெஞ்சை அடைப்பது வழக்கமாகிவிட்டது.

ஆனால் இன்று வலித்தது. இதயத்தின் மையத்தில் தோன்றியவலி கொஞ்சம் கொஞ்சமாய் அதிகரிக்க, கண்களில் நீர் சுரந்தது. கொஞ்சம் தண்ணீர் குடித்தால் நன்றாய் இருக்குமோ. தடுமாறி எழுந்து ஜன்னலில் உள்ள தண்ணீர் செம்பை எடுத்தவள் உதறிய கைகளால் கீழே தவறவிட்டாள்.

தடாலென்ற சத்தத்தில் திடுக்கிட்டு எழுந்த கருத்தம்மா பதட்டமாய் அறையின் விளக்கைப் போட, அதற்கு மேலும் நிற்க இயலாமல் கண்கள் சொருகிப் போய் மயங்கிச் சரிந்தாள் மீரா.

பதறிய கருத்தம்மா போட்ட கூக் குரலில் இல்லத்தின் அனைத்து விளக்குகளும் எரிந்தன. அனைவரும் எழுந்து மீராவின் அறையை நோக்கி ஓடிவரத் துவங்கினர்.

# 9

தன் அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்த கண்ணன் பொறுமையிழந்தான். காலையிலேயே குளித்து முடித்து அழகாய் உடுத்திக் கொண்டு ஒன்பது மணிக்கே அலுவலகத்திற்கு வந்து மீராவிற்காக காத்திருக்கிறான்.

நேரம் கடந்து கொண்டே இருக்க மீரா வரவே இல்லை. என்ன ஆயிற்று? இன்று வந்து வேலையில் சேர்வதாகத் தானே சொன்னாள். பிறகேன் வரவில்லை. ஒரு வேளை இங்கே வேலைசெய்யப் பிடிக்கவில்லையோ?

இல்லை. அப்படி இருக்காது. நேற்று சந்தோஷமாகத் தானே சம்மதித்தாள். உடம்பு எதுவும் சரியில்லையோ. ஏற்கனவே டைபாய்ட் ஜுரம் என்றாளே. நேற்று வெயிலில் அலைந்ததில் ஜுரம் திரும்பி விட்டதோ.

என்ன ஆயிற்றோ தெரியவில்லையே. மீரா! உனக்கு என்ன ஆயிற்று. நான் இங்கே நெருப்பில் நிற்பது போல் துடிக்கிறேனே. சீக்கிரம் வந்து விடேன். நேற்று இரவு முழுக்க உன்னுடன் எப்படி யெல்லாம் பேச வேண்டும் என்று என்னையே நான் தயார் படுத்திக் கொண்டு வந்திருக்கிறேன்.

அதெல்லாம் மறந்து போய் விடும் முன்பாக வந்து விடேன். தவிப்பாய் வாசலைப் பார்த்துக் கொண்டே ஓரிடத்தில் நில்லாமல் நடமாடிய நண்பனை முகம் முழுக்க கேலியோடு பார்த்துக் கொண்டிருந்தனர் கோபியும் விஷ்வாவும்.



விஷ்வாதான் முதலில் வாய் திறந்தான். "கண்ணா! போதும்டா. கிட்டத்தட்ட நாலு மணி நேரமா நடக்கிற. முதல்ல உட்கார்."

"இருடா. மீரா வந்துடட்டும்"

"வந்தா உள்ளே வர மாட்டாளா? நீ ஏன் இப்படிக் கால் கடுக்க நடக்கிறாய்?"

"எனக்கு டென்ஷனா இருக்கு விஷ்வா! மீரா ஏன் வரவில்லை?"

"இதோடு பத்து முறை கேட்டு விட்டாய். நாங்களா மீராவை ஒளித்து வைத்திருக்கிறோம்."

"கண்ணா! மணி ஒன்னாகப் போகுது. பசிக்குதுடா" - கோபி பரிதபமாய் வயிற்றைத் தடவினான்.

"ஒரு மணிக்கே என்னடா பசி உனக்கு? இரு மீரா வரட்டும்"

"கண்ணா! திஸ் இஸ் டூ மச். உனக்கு பசிக்காம இருக்கலாம். எங்களுக்கும் பசிக்கக் கூடாதா? காலையில கூட சாப்பிட விடாம கூட்டிட்டு வந்திட்ட ரொம்ப பசிக்குதுடா. வா. சாப்பிட்டுட்டு வரலாம்"

"நீங்க வேணா போய் சாப்பிடுங்க. எனக்கு சாப்பாடு வேண்டாம்"

"ஏன் கண்ணா இப்படி அடம்பிடிக்கிறாய்?"

"நான் மீராவைப் பார்த்தபிறகு சாப்பிடுகிறேன்"

"டேய்! அவளுக்கு என்ன பிரச்சனையோ. வேலைக்கு சேர்ந்த முதல்நாளே யாராவது இவ்வளவு லேட்டா வருவாங்களா?"

"அதான்டா நானும் பயப்படுறேன். அவள் உடம்புக்கு என்னவோ ஏதோன்னு பதட்டமாவே இருக்கு இந்த நிலையில என்னால எப்படி சாப்பிடமுடியும்?

நண்பர்களின் முகமும் சட்டென வாடிப்போனது அதிகாலையிலே எழுந்து எத்தனை ஆர்வமாய் புறப்பட்டு வந்தான். ஏமாற்றமாய் இருக்காதா? ச்சே! இந்தப் பெண் மீரா ஏன் வராமல் போனாள். தங்களுக்குள் அலுத்துக் கொண்டபோது தொலைபேசி அழைத்தது.

விஷ்வா எடுத்து காதில் வைத்தான். "ஹலோ! ந ஸ்டார்கம்பூட்டர்ஸ்" மறுமுனையில் பெண்குரல் கேட்டது "ஹலோ! நான் "சரணாலயம்" சரோஜினி பேசுறேன்"

விஷ்வாவின் முகம் மலர்ந்தது. "மேம். நான் விஷ்வா பேசிறேன். எப்படி இருக்கீங்க மேம்.? இல்லம் எப்படி போயிட்டு இருக்கு?"

"ம். நல்லா போயிட்டு இருக்குப்பா. கண்ணன் இல்ல?"

"இதோ இருக்கான் மேம். கொடுக்கிறேன் " என்றவாறு ரீஸிவரை கண்ணனிடம் நீட்டினான்.

"கண்ணா! சரோஜினி மேம் பேசுறாங்க"

அவசரமாய் ரீஸிவரை வாங்கிப் பேசினான் கண்ணன். "சொல்லுங்க மேம். நான் கண்ணன்"

"கண்ணா! நேற்று ஒரு பெண் வேலைக்கு வந்த ளில்லையா?" - சரோஜினி சொன்னதும் சட்டென விறைப் பானான்.

"எஸ் மேம். மீரா தானே"



"ஆமாம்ப்பா. அவளால இன்னிக்கு வந்து வேலையில ஜாய்ன்பண்ண முடியாமப் போச்சு. அதுக்குத்தான் போன் பண்ணினேன்"

"இட்ஸ் ஓ.கே. மேம். நாளைக்கு வரச் சொல்லுங்க"

"இல்லப்பா. அவளுக்கு உடம்பு முடியாமப் போச்சு. டாக்டர் கம்ப்ளீட்டா ஒன் வீக் பெட்ரெஸ்ட் எடுக்கச் சொல்லியிருக்கார்"

கண்ணனின் குரல் நடுங்கியது. "மேம்! மீ.. மீராவுக்கு என்னாச்சு?"

"கண்டதையும் நினைச்சு குழம்பியிருக்கிறா. நேற்று நைட் கடுமையான நெஞ்சுவலிவந்து மயங்கிவிழுந் திட்டா"

"மை காட்"

"ஹாஸ்பிடலுக்கு கொண்டு போயிட்டோம். உடம்பு ரொம்ப வீக்கா இருக்குதாம். அதோட ஹார்ட் பீட் கம்மியா இருக்காம். கவலைப்பட்டே இந்தப்பொண்ணு உடம்பைக் கெடுத்துக்கிட்டா"

"டாக்டர் என்ன சொன்னாராம் மேம்?"

"எதுக்கும் கவலைப்படக்கூடாது. கவலைகளை மனசுக்குள்ளேயே போட்டு புதைச்சு வெக்காம யார்கிட்ட யாவது சொல்லி அழுதிடுங்க. மனசுல உள்ளபாரம் வெளி யேற கண்ணீர்தான் சிறந்த மருந்து. கவலையெல்லாம் வெளியேறிட்டா உடம்பு நார்மலாகிடும் என்றார். இவதான் யார்கிட்டயும் மனசுவிட்டுப் பேசமாட்டேங்கிறாளே"

கண்ணன் குழம்பிப்போனான். அப்படியென்ன தீராத வேதனை என் மீராவிற்கு?

"இப்போ மீரா எந்த ஹாஸ்பிடல்ல இருக்கா மேம்"

"இல்லத்துக்கு வந்திட்டோம்ப்பா. மாத்திரை மருந்தெல்லாம் வாங்கிட்டு இப்பத்தான் வந்து இறங்கினோம். வந்த உடனே உனக்குத்தான் போன் பண்றேன்"

கண்ணன் பெரிதாய் அதிர்ந்தான். "என்ன? இல்லத்திற்கா? உங்கள் இல்லத்திலா மீரா இருக்கிறாள்?"

"ஆமாம்ப்பா! அவ வந்து ரெண்டு வருஷம் ஆகிப் போச்சே"

கண்ணனின் கையிலிருந்த ரிஸிவர் நழுவியது. இறுகப் பற்றிக்கொண்டான்.

"என்ன? ரெண்டு வருஷமா உங்ககிட்டதான் இருக்காளா?"

"ஆமாம். நேத்து உங்கிட்ட எதுவும் சொல்லலையா?"

"அவங்க பேசவே கூச்சப்பட்டாங்க. அதனால நான் எதுவும் கேட்கல்ல"

"இப்படித்தாம்ப்பா யார்கிட்டயும் பேசாம இந்த பொண்ணு மனசுக்குள்ளயே மருகிட்டு இருக்கு. அதான் வெளியில போய் வந்தா ஒரு மாற்றமா இருக்குமேன்னு உங்கிட்ட வேலைக்கு அனுப்பினேன்"

"சரி மேம். உடம்பு நன்றாய் குணமானதும் அனுப்புங்கள். அவசரம் ஒன்னுமில்ல"

"ரொம்ப நன்றிப்பா. போனை வெச்சிடவா?"

"ஒரு நிமிஷம் மேம். ஒன் ரிக்வெஸ்ட்"

"சொல்லு கண்ணா"

"நாங்க உங்க இல்லத்துக்கு வரலாமா?"



"ஷ்யூர். இதுக்கெல்லாம் என்னைக் கேட்கணுமா? எப்போ வர்றீங்க?"

"கொஞ்சம் வேலையிருக்கு மேம். முடிச்சிட்டு ஈவ்னிங் வரட்டுமா?"

"தாராளமா வாங்க."

"ஓ.கே. மேடம். வெச்சிடுறேன்" - என்றவாறு போனைவைத்துவிட்டு தன் இருக்கையில் தொய்ந்து அமர்ந்தான் கண்ணன்.

"கண்ணா! என்ன ஆச்சு? ஏதேதோ பேசினியே. மீராவுக்கு என்ன?" - விஷ்வா பதட்டமாய்க் கேட்டான்.

"விஷ்வா! மீரா.. மீரா இப்போ சரணாலயத்தில இருக்காளாம்"

"என்ன? ஏன் அங்கே இருக்கா?"

"ரெண்டு வருஷமா அங்கேதான் இருக்காளாம்" - கண்ணன் உலர்ந்து போன குரலில் சொல்ல இருவரும் திடுக்கிட்டுப் போயினர்.

"கண்ணா! நீ என்ன சொல்ற? ரெண்டு வருஷம்னா...?

"ஆமாம். நாம மீராவை திருப்பி அனுப்பின பிறகு அவளைப் பார்க்கவே இல்லையே. அவளுக்கு என்னவோ நடந்திருக்கு" - என்றான் தீவிரமாய்

"நேற்று எதுவுமே சொல்ல வில்லையா கண்ணா?" - கோபி

"நான் தான் சொன்னேனே. கேட்டதற்கு மட்டும் தான் பதில் சொன்னாள். இளைத்துப் போயிருந்தாள். புடவைத் தலைப்பால் போர்த்திக் கொண்டு பார்க்கவே

கொஞ்சம் பரிதமாக இருந்தது. ச்சே! நான் ஒரு மடையன். அப்பவே உஷராகி விசாரித்திருக்க வேண்டும்." - நெற்றியில் அறைந்து கொண்டான்.

"சரி. இப்ப ஏன் மீரா வரலையாம்?"

"விஷ்வா! எல்லாம் சொல்றேன். முதல்ல காயத்ரிக்கு போன் பண்ணி மீராவோட அப்ளிகேஷனை எடுத்திட்டு வரச் சொல்லு."

"சரி!"- என்றவாறு இண்டர்காமை எடுத்து தங்கையைத் தொடர்பு கொண்டான் விஷ்வா. கோபி கண்ணனின் தோளை ஆதரவாய்த் தொட்டான்.

"கண்ணா! இப்போ என்ன பண்ணலாம்?"

"ஈவ்னிங் போய் மீராவைப் பார்க்கிறோம்."

"பார்த்து?"

"இந்த ரெண்டு வருஷத்துல என்ன நடந்துன்னு கேட்கிறோம். நம்மால எதுவும் பிரச்சனைன்னா அதை தீர்த்து வைக்கிறோம்"

"நம்மால என்ன பிரச்சனை வந்திருக்கும் கண்ணா?"

"கோபி! மீரா வயசுப் பொண்ணு. ஒரு நாள் இரவு முழுக்க அவளை நம்ம கடத்தி வெச்சிருந்தோம். இது எப்படியோ லீக்காகி இருக்கும்னு நினைக்கிறேன்"

"அவ வீடு, குடும்பம் என்ன ஆச்சு? அவ அப்பா நம்ம கிட்ட எதையும் காட்டிக்கலையே."

"அதான் எனக்கும் புரியல்ல. மீராவைப் பார்த்து பேசினால் தான் தெரியும்" கண்ணன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே கையில் பேப்பருடன் கதவைத் தட்டி விட்டு உள்ளே நுழைந்தாள் காயத்ரி.



"அண்ணா! இது தான் மீராவோட அப்ளிகேஷன்"

"அவதானே நிரப்பினா?" -கண்ணன் அவசரமாகக் கேட்டான்.

"ஆமாண்ணா"

"சரி. நீ போம்மா" - என்று விட்டு மூவருமாய் பேப்பரில் பார்வையைப் பதித்தனர்.

மீரா என்ற பெயரும் சரணாலயத்தின் முகவரியும் குறிக்கப்பட்டிருக்க, பெற்றோர் உறவினர் பெயர் உள்ள இடத்தில் யாரும் இல்லை. அநாதை என்று குறிப்பிட்டிருந் தாள் மீரா.

மூவரும் திடுக்கிட்டு நிமிர்ந்தனர். திகிலில் உறைந்து போனான் கண்ணன்.

"விஷ்வா! என்ன இது? இப்படி எழுதியிருக்கா"

"ஒரு வேளை அவ பேமிலியில யாருமே இல்லையோ?"

"சேச்சே! ரெண்டு வாரம் முன்னாடி கூட அந்தத் திருப்பதியை கடைத் தெருவில் பார்த்தேன் கண்ணா. ஜாலியா பண்ணிட்டு இருந்தார்" - கோபி சொன்னதும் சற்றே நிம்மதியானான் கண்ணன்.

"அப்புறம் ஏன் இப்படி எழுதியிருக்கா?"

"கண்ணா! நாம இங்கே இருந்து யோசிக்கிறதை விட பேசாம இப்பவே கிளம்புவோம். மீராவை நேர்ல பார்த்துப் பேசிடுவோம். வா" - விஷ்வா எழுந்து கொண்டான்.

"ஆமா கண்ணா. வா போலாம்." - கோபியும் எழுந்துவிட,

"டேய்! மூனு மணிக்கு லோடு அனுப்பணும். மறந்து போச்சா? அதை அனுப்பிட்டுப் போவோம்" - என்றான் கண்ணா.

"மணி ரெண்டாகப் போகுதே. வேன் வெளியே தானே நிற்குது. இப்பயே அனுப்பிடுவோம். பார்ட்டிக்கு போன் பண்ணிச் சொல்லிடலாம். ம். கிளம்பு"

"சரி. நீங்க ரெண்டு பேரும் லோடு ஏத்துறதைக் கவனிங்க. நான் காயத்ரிக்கிட்ட இந்த பேப்பர்ஸை பிரிண்ட் எடுத்து அனுப்பச் சொல்லிட்டு வந்திடுறேன்"

தங்களது வேலைகளை அவசரமாய் முடித்து விட்டு காரில் ஏறும் போது மணி இரண்டைத் தாண்டியிருந்தது. கண்ணன் குரல் கொடுத்தான்.

"கோபி! போற வழியில ஏதாவது பழக்கடையில காரை நிறுத்து."

"ஏன்டா?"

"வயசானவங்க எல்லாம் இருப்பாங்க. வெறுங்கை யோட போனா நல்லா இருக்காது. ஏதாவது பழங்க வாங்கிட்டுப் போவோம்"

"சரிடா. எங்களுக்குத் தோணல்ல பாரேன்"

"கோபி. அதோ பார். அந்தக் கடையில நிறுத்து பழங்கள் பிரெஷ்ஷா இருக்கு பார்" - விஷ்வா குரல் கொடுத்ததும் காரை ஓரமாய் நிறுத்தினான் கோபி.

மூவருமாய் இறங்கிக் கடையில் நுழைய மு... படுகையில் எதிரே தன் கனத்த உடம்போடு திராட்சை... மென்று கொண்டே வந்தார் திருப்பதி.



அனைவரின் முகமும் பிரகாசமாகி விட, "ஸார்! நீங்களா? எப்படி இருக்கீங்க ஸார். உங்களைத் தான் நினைச்சிட்டு இருந்தோம்" - என்ற கோபியை வித்தியாச மாய்ப் பார்த்தார் திருப்பதி.

"யாருப்பா நீ?" - அவரது கேள்வியில் மூவருமே திடுக்கிட்டனர்.

"ஸார். எங்களை நினைவில்லையா?"

"ஸாரி. தெரியலை. வழியை விடுங்கப்பா" - நகர முயன்றவரை கை நீட்டித் தடுத்தான் கண்ணன்.

"நிஜமாவே எங்களைத் தெரியலையா? இல்லை தெரியாத மாதிரி நடிக்கிறீங்களா? - குரலில் கோபம் தொனித்தது.

"ஏய்! என்ன கலாட்டா பண்றீங்களா? அதான் தெரியாதுன்னு சொன்னேனே"

"சரி. எங்களைத் தெரியாது. மீரான்னு யாரையாவது தெரியுமா?" - கண்ணனின் குரலில் தடுமாறி பின் சமாளித்துக் கொண்டார் திருப்பதி.

"ம். தெரியும். அந்தப் பேர்ல எனக்கு ஒரு மக இருந்தா"

"இருந்தாளா?"

"இப்ப இல்லன்னு அர்த்தம்."

"ஸார்! என்ன உளர்றீங்க?" - கோபி கத்தினான்.

"எம்மக செத்துப் போய் இரண்டு வருஷமாச்சு. போனவ சும்மா போகல்ல. எம் மனைவியையும் கூட்டிட்டு போயிட்டா. இன்னும் ஒரு மாசத்துல ரெண்டாவது வருட நினைவு நாள் வரப்போகுது"

"ஸார்! என்னென்னவோ பேசுறீங்களே"

"உண்மையைத் தாம்பா பேசுறேன். இறந்து போன வளைப் பத்திப் பேசி என் வேதனையை அதிகரிக்காதீங்க வழியை விடுங்க."

"ஸார் ப்ளீஸ். கொஞ்சம் பொறுமையா பேசுங்க. மீராவுக்கு என்னாச்சு? உங்க மனைவிக்கு என்ன ஆச்சு? ப்ளீஸ் சொல்லுங்க ஸார்" - கண்ணன் கெஞ்சினான்.

"என் குடும்பக் கதையை உன் கிட்ட இப்படி நடு ரோட்ல நின்னு பேசணுமா? நீ யாருடா எனக்கு? சொல்லுடா நீ யாரு" - கேட்டவாறே அவன் சட்டையைக் கொத்தாய் பற்றினார் திருப்பதி.

சட்டென அங்கே கூட்டம் கூடி விட நான்கைந்து பேர் வந்து அவர்களை விலக்கிவிட்டனர். கண்ணன் அசராமல் நின்றான்.

"சொல்லுங்க ஸார். மீராவுக்கு என்ன ஆச்சு? ஏன் அவளை அநாதை ஆசிரமத்தில கொண்டு விட்டீங்க? சொல்லுங்க ஸார். எனக்கு உண்மை தெரியணும்" அழுத்த மாய்க் கேட்டான்.

"என்னடா தெரியணும்? சொல்லு என்ன தெரியணும்"

"நடந்த உண்மை தெரியணும்"

"எல்லாத்தையும் நடத்தினதே நீங்கதானடா நாய் களா? என் குடும்ப மானத்தையே கெடுத்து குட்டிச் சுவராக்கி முப்பது வருஷமா வாழ்ந்த இடத்தில தலை திமிர முடியாம பண்ணி ஊரை விட்டே போக வெச்சிட்டீங் களேடா! பாவிகளா"

"ஸார்! நீங்க என்ன சொல்றீங்க?"



"வாயை மூடுடா. என்னை மிரட்ட எம் பொண்ணை நீ கடத்தினது தெரிஞ்சதுமே உன்னைப் போலீஸ்ல மாட்டி விட்டிருக்கணும். தெரு வரைக்கும் வந்து அசிங்கப்பட்டது போதும். நியூஸ் பேப்பர் வரைக்கும் போக வேண்டா மேன்னு விட்டுட்டேன்"

"ஸார்! தப்பு தான். நாங்க செய்தது தப்பு தான். ஆனா மீரா என்ன தப்பு பண்ணினா? அவளை ஏன் தண்டிச் சீங்க?"

"அந்தக் கழுதை உங்களைக் காப்பாத்துறதா நினைச்சு தன் தலையில தானே நெருப்பை அள்ளிக் கொட்டிகிச்சு. எங்கிட்ட சாமாத்தியமா மறைச்சாளே. அந்த சாமர்த்தியத்தை அவ புருஷன்கிட்ட காட்ட முடிய லியே. எல்லாத்தையும் உளறிக் கொட்டி நடுத்தெருவுல வந்து நிற்க வெச்சுட்டாளே"

கண்ணனின் உடல் தள்ளாடியது. மற்றவர்கள் திடுக் கிட்டுக் கண்ணனைப் பார்க்க, கண்ணனின் குரல் உள்ளே போயிற்று.

"என்ன? மீராவுக்கு கல்யாணமாகி விட்டதா?"

"எல்லாம் ஆச்சு! கல்யாணமும் ஆச்சு. அவ அம்மாளோட கருமாதியும் ஆச்சு"

"ஸார்! என்ன சொல்றீங்க?" - விஷ்வா பதட்டமாய்க் கேட்டான்.

"எல்லாமே முடிஞ்சு போச்சு. எங்க வீட்ல ரெண்டு கருமாதியையும் சேர்த்தே செய்திட்டேன். இனிமே அவளைப் பத்தி எங்கிட்ட எதுவும் கேட்காதீங்க" - நகர்ந்தார்

"ஸார் ஸார்! ஒரு நிமிஷம் நில்லுங்க. ஏதோ தப்பு நடந்து போச்சு. அதுக்காக மீராவை அப்படியே விட்டுடுறதா? என்ன இருந்தாலும் அவ உங்க பொண்ணுதானே"

"எனக்கு அவ மட்டும் பொண்ணுல்ல. அடுத்த பொண்ணை நான் கௌரவமான இடத்துல கட்டிக் கொடுக்க வேண்டாம்? எம் பையனுக்கு சீர் செனத்தியோட பெரிய இடமாப் பார்க்க வேண்டாமா? அவங்களைப் பத்தி நினைக்காம எப்பவோ செத்துப் போனவளைப் பத்தி நான் ஏன் நினைக்கணும்?" - ஆங்காரமாய்ச் சொன்ன திருப்பதியின் சட்டையைப் பற்றினான் கண்ணன்.

"யோவ்! சும்மா அதே வார்த்தையைச் சொல்லாதேய்யா. என் மீரா உயிரோடு இருக்காய்யா?"

"என்னது? உம் மீராவா?"

"ஆமாய்யா! உன்னைப் பார்த்து அவளைப் பெண் கேட்டு வரத்தான் இத்தனை காலமாய் உங்களைத் தேடி அலைந்தோம்"

திருப்பதியின் பார்வையில் ஏளனம் தொனித்தது. "இப்பவும் ஒன்னும் கெட்டுப் போயிடலை. போ. உன் மீராவை நீயே கட்டிக்கோ. உன்னால சீரழிஞ்ச வாழ்க்கையை நீ தானே சீராக்கணும்"

"ஸார்! நான்..."

"ஆனா ஒன்னு! நான் இப்போ இருக்கிற ஊர்ல எனக்கு ஒரு பொண்ணு ஒரு பையன்னு தான் சொல்லி வைச்சிருக்கேன்"

கண்ணன் புருவங்களை சுருக்கினான். "அதுக்கு?"



"கல்யாணம் பண்ணினேன் கருமாதி பண்ணினேன்னு எவளையும் கூட்டிட்டு என் வீட்டுப்பக்கம் வந்திடாதே."

"ஸார்"

"என்னைப் பொறுத்த வரை செத்தவ செத்தவ தான். வழியை விடு" - என அவர்களை விலக்கித் தள்ளி விட்டு சாலையோரமாய் நின்ற காரில் ஏறி புறப்பட்டுப் போயே விட்டார்.

சிலையாய் நின்றுவிட்டான் கண்ணன். அடுத்தடுத்த அதிர்ச்சியில் ஆட்டம் கண்டு போயிருந்தான். தங்களது முட்டாள் தனமான காரியம் ஒரு பெண்ணை இப்படி சிக்கி சீரழித்து விட்டதே என்று எண்ணுகையில் உள்ளம் கொதித்தது.

இத்தனை நடந்தும் தன்னைப் பார்த்த மீராவிற்கு ஒரு துளியளவேனும் கோபமா வெறுப்போ வரவில்லையே. ஒரு வார்த்தை கூட சுடிந்து பேச வில்லையே. "மீரா! நீ எத்தனை உயர்வானவள்" - விம்மிய மனதில் மீரா இன்னும் அழுத்தமாய் பதிந்து கொண்டாள். மீராவின் மீதிருந்த நேசம் இன்னும் அதிகமாகியது.

## 10

சோர்வாய் படுத்திருந்த மீராவைப் பார்க்கையில் இதயம் வலித்தது. ஒரே நாளில் மிகவும் வாடியிருந்தாள். கோபியும் விஷ்வாவும் மாறி மாறி கேட்டுப் பார்த்தும்

ஒற்றைப் புன்னகையையே பதிலாக்கினாள். இருவரும் ஏமாற்றமாய் கண்ணனைப் பார்க்க, அவனிடம் துளியும் அசைவில்லை.

கண்கள் மட்டும் மீராவையே பார்த்துக் கொண்டிருக்க, அசையாமல் நின்ற நண்பனை விஷ்வா அசைத்தான்.

"கண்ணா! என்ன ஒண்ணும் பேச மாட்டேங்கிற. நீ கேளுடா."

"நான் என்ன கேட்கிறது? நாம தான் அவளை நமக்குள்ள ஒருத்தியா நினைச்சிட்டு இருக்கோம். ஆனா இவ இவங்க அப்பாவை விட கேவலமாக நினைச்சிட்டு இருக்கிறாளே"

"கண்ணா" - பதட்டமாய் குரல் கொடுத்தாள் மீரா.

"ஏன் மீரா! உன் அப்பா கூட எங்களைத் தெரியாதுன்னுதான் சொன்னார். ஆனா நீ எங்களை மனுஷங்களாக் கூட மதிக்கல. இல்லே?

"என்ன கண்ணா! ஏன் இப்படிப் பேசறீங்க?"

"பின்னே! எவ்வளவு நேரமா கேட்கிறோம். எதுக்காவது பதில் சொல்றியா?

"இல்ல கண்ணா! கடந்து போன கசப்பான சம்பவங்களைப் பேசறதால யாருக்கு என்ன பயன்? போனது போகட்டும்னு விட்டுட வேண்டியது தான்"

"அப்படியெல்லாம் விட முடியாது. விடவும் கூடாது மீரா! உன்னோட இந்த நிலைக்கு முழுக்க நாங்க தானே காரணம்? அப்போ இந்தப் பிரச்சனையை நாங்கதானே சரிபண்ணணும்"



"ம்ப்ச்! நடக்காததைப் பத்தி பேச வேண்டாம் கண்ணா"

"நடக்கும். நாங்க நடத்திக் காட்டுவோம். முதல்ல நீ என்ன நடந்ததுன்னு சொல்லு. அதுக்கப்புறம் என்ன பண்ணலாம்னு முடிவு பண்றோம்"

கேலியாய் சிரித்தாள். "என்ன முடிவு பண்ணுவீங்க?"

"உன்னை உன் கணவனோட சேர்த்து வைப்போம். நீ இழந்த வாழ்க்கையை மீட்டுத் தருவோம்" - கண்ணன் சொன்னதைக் கேட்டு வாய் விட்டுச் சிரித்தாள் மீரா சுருக்கென வலித்த இதயத்தைப் பிடித்துக் கொண்டாள்.

"என்னை சேர்த்து வைக்கப் போகிறீர்களா? என் கணவருடனா? தமாஷ் பண்ணாதீங்க கண்ணன். என்னால சிரிக்கக் கூட முடியல்ல"

"இது ஒண்ணும் ஜோக் இல்ல"

"பின்னே! வேற என்னவாம்? ஆமா! இவ்வளவு உறுதியாப் பேசறீங்களே. உங்களுக்கு என் கணவரைப் பற்றி என்ன தெரியும்?"

"உன் கணவரைப் பற்றி எதுவும் தெரியாது தான். ஆனால் உன்னைப் பற்றி தெரியும் மீரா. நீ ஒரு பாவமும் அறியாதவள். எங்களின் தவறுக்கான தண்டனையை நீ ஏன் அனுபவிக்க வேண்டும்?

தப்பு செய்தது நாங்கள். நாங்களே தண்டனையை ஏற்றுக்கொள்கிறோம். நீ உன் கணவரின் முகவரியைக் கொடு. நாங்கள் பேசிக் கொள்கிறோம்"

"என்ன பேசுவீர்கள்?"

"நடந்த உண்மையைச் சொல்வோம். நீ களங்க மற்றவள் என்பதைச் சொல்கிறோம். நீயாக எங்களுடன் ஓடிவரவில்லை. நாங்கள்தான் உன்னைக் கடத்தினோம். அதோடு நீ எங்களுடன் தனிமையில் தங்கியிருக்க வில்லை. ஒரு வயதான பெண்மணியுடன் தான் தங்கியிருந் தாய் என்றும் சொல்லிப் புரிய வைப்போம்" - கண்ணன் படபடவென பேசிக் கொண்டே போக, விரக்தியாய் சிரித்தாள் மீரா.

"இதையெல்லாம் ஏற்கனவே நான் சொல்லிவிட்டேனே. ஆனால் இதில் ஒரு வார்த்தை கூட அவர் காதில் விழவில்லையே"

"ஏன்? உன் கணவருக்கு காது கேட்பாதா?"

"காது கேட்கும். ஆனால் அடுத்தவரது விளக்கமும் அறிவுரையும் கேளாது. அவர் பேசியதை மட்டுமே உண்மை என்று ஆணித்தரமாய் சொல்லி அனைவரையும் நம்ப வைத்து விடுவார். நம்பியும் விட்டார்கள்"

"உன் மீதிருந்த கோபத்தால் நீ பேசியதை கேட்டிருக்க மாட்டார். நாங்கள் சொல்கிறோம் மீரா. அப்படியும் அவர் நம்பவில்லையேன்றால் என் பாட்டியை அழைத்து வந்து சாட்சி சொல்ல வைக்கிறேன்" - என்ற கோபியைப் பார்த்து மீண்டும் சிரித்தாள்.

"கோபி! இந்த பிரச்சினை எப்படி யார் மூலமா வெளிய வந்ததுன்னு தெரியுமா?"

மூவரும் குழம்பிப் போனார்கள். "யார் மூலமா?"

"உன் பாட்டி மூலமாத்தான்..."

"என்ன?" - பலமாக அதிர்ந்தனர்.



"கங்கம்மா பாட்டி உங்களுக்கு என்ன உறவு கோபி?"

"எங்க அம்மாவோட சித்தி. என் பாட்டியோட தங்கை"

"கங்கம்மா பாட்டியோட மகன் வயிற்றுப் பேரன்தான் என் கழுத்தில் தாலி கட்டியவர்" - மீரா சொல்ல மீண்டும் அதிர்ந்தனர்.

"ஐயோ! அப்போ கல்யாணத்தன்னிக்கே பிரச்சனை ஆகிடுச்சா?" கண்ணன் பதட்டமாகக் கேட்டான்.

"இல்ல. கங்கம்மா பாட்டிக்கு உடல் நிலை சரியில்லாம இருந்ததால அவங்க கல்யாணத்திற்கு வரல்ல"

"பிறகு? பிறகெப்படித் தெரிந்தது?"

"சொல்றேன். நீங்க என்னைக் கொண்டு வந்து விட்டுட்டு போன பிறகு நான் எங்க அப்பாகிட்ட ஆபீஸ் விட்டு வரும் போது மயங்கி விழுந்திட்டேன். யாரோ என்னை ஹாஸ்பிடல்ல சேர்த்தாங்கன்னு சொன்னேன்"

"உன் அப்பா நம்பிட்டாரா?"

"அப்படித்தான் நினைக்கிறேன். ஆனா அதுக்கப் புறம் எதுவும் விசாரிக்கல. மறுநாள் என்னைப் பெண் பார்க்க வந்தாங்க. பார்த்த உடனே சம்மதம்னு சொல்லிட் டாங்க. அதனால அடுத்த மாசமே கல்யாணமும் வெச் சாங்க.

ரொம்ப சிம்பிளா கல்யாணமும் நடந்தது. கல்யாணப் பரபரப்புல உங்க பிரச்சனைகளை நான் மறந்தும் போயிட்டேன். நீங்களும் போன் பண்ணலையே. அதனால அப்பா உங்க சர்டிபிகேட்ட கொடுத்திருப்பாருன்னு நினைச்சு விட்டுட்டேன்.

கல்யாணமாகி நாலுநாளா மறு வீடு. கோவில் பூஜை, நேர்த்திக் கடன்னு ஒரே அலைச்சல். அஞ்சாவது நாள் தான் என் கணவர் தன் பாட்டி வீட்டுக்கு விருந்துக்குப் போகணும்னு சொன்னார். நானும் போனேன். ஆனா அது தான் நீங்க என்னைக் கூட்டிட்டு போன ஊருன்னு எனக்குத் தெரியாது"

"நாங்க தான் பெரிய ரௌடிங்க மாதிரி உன் கண்ணைக் கட்டியிருந்தோமே" -கோபி அடிபட்ட குரலில் சொன்னான்.

"ஆனா! போய் நின்ற வீட்டைப் பார்த்ததும் புரிஞ்சு போச்சு. அன்னிக்கு உம் பாட்டியோட வாயை அடைக்க விஷ்வா சொன்ன பொய் எனக்கு நினைவுக்கு வந்தது. அது உண்மையில்லன்னு நான் தெளிவுபடுத்திக்கும் முன்னே பாட்டி என்னை அடையாளம் கண்டு பிடிச்சிட்டாங்க"

"பாட்டி எல்லாத்தையும் சொல்லிட்டாங்களா?" கோபி பதறினான்.

மீரா அமைதியானாள். அந்த நாள்... அந்த நிமிடம் அந்த நொடியை அவளால் எப்படி மறக்க முடியும்? வாசல் வரை வந்த பார்த்தசாரதி, " நீ உள்ளே போ. நான் ஒரு தம் அடிச்சிட்டு வந்திடுறேன்" - என்றவாறு வெளியே நின்ற மரத்தடியில் ஒதுங்கினான்.

"இது தான் சரியான சமயம். பாட்டியிடம் நிலைமையைச் சொல்லி விடலாம்" என்ற எண்ணத்துடன் ஒரு அடி எடுத்து முன்னே வைத்தாள் மீரா.



அதற்குள் வீட்டிற்குள் இருந்து வெளியே வந்த கங்கம்மா, " ஏ புள்ள! அங்கேயே நில்லு. ஆமா நீ ஏன் திரும்பவும் வந்திருக்க." - என மீராவை நெருங்கினாள்.

மீராவிற்கு உதறல் எடுத்தது. "பாட்டி! நான்..."

"தாலி கட்டிட்டானா? நான் கூட சும்மா ஊர் சுத்தற பொண்ணுன்னு நினைச்சேன். எம்பேரன் சொன்னது உண்மைதானா? ஆமா நாலுபேர் இருந்தானுங்களே. அதுல எவன் மாப்பிள்ளை?

மீரா பதறினாள். கண்கள் தானாக பார்த்தசாரதி சென்ற திசையை பயமாய் பார்த்தது. "பாட்டி! ப்ளீஸ் நான் சொல்றதைக் கேளுங்க"

"இதோ பாரும்மா! இந்தப் பேச்செல்லாம் வேண்டாம். இப்ப என் பேரன் தன் பொண்டாட்டியக் கூட்டிட்டு வந்திடுவான். புதுசா கல்யாணமானவங்க வரும் போது நீ எதையும் வில்லங்கத்தை கொண்டு வந்துடாத. கிளம்பு" - என்றாள் கறாராய்.

"ஐயோ! பாட்டி! என்னைப் பேசவிடுங்க" - மெல்லிய குரலில் மீரா கெஞ்சினாள்.

"இதோ பாரும்மா. கோபி ஒன்னும் என் சொந்தப் பேரன் கிடையாது. என் அக்கா பேரன். அன்னிக்கு ஏதோ அவசரம்னு வந்திட்டானேன்னு உன்னைத் தங்க அனுமதிச்சேன். மத்தபடி கண்டகண்ட பிரச்சனைகளையும் கொண்டு வந்திடாதே கிளம்பும்மா"

"பாட்டி! என்ன சொல்றீங்க?" - பார்த்தசாரதியின் கூட்டுக்கத்தலில் அரண்டு திரும்பினாள் மீரா. சிகரெட் நெடியோடு நின்றவன் கங்கம்மாவை நெருங்கினான்.

"சொல்லுங்க பாட்டி! யார் இவ?"

"எனக்கு சரியா தெரியலப்பா. நம்ம கோபியோட சிநேகிதன் கட்டிக்கப் போற பொண்ணாம். அன்னிக்கு ஒரு நாள் கூட்டியாந்தானுங்க. ராவைக்குத் தங்கிட்டு விடியுமுன்னே கிளம்பிப் போயிட்டாங்க. இன்னிக்கு எதுக்கு வந்திருக்கான்னு தெரியலையே. அதுவும் கழுத்தில தாலியோட தனியால்ல வந்து நிக்குது"

"தனியா வரல்ல பாட்டி. நான்தான் கூட்டியாந்தேன்" - பற்களைக் கடித்தவாறு பார்த்தசாரதி சொல்ல மீராவிற்கு சர்வமும் நடுங்கிப் போயிற்று.

"என்னங்க..நான்" - எனத் தொடங்கியவளை திரும்பியும் பாராமல் கை உயர்த்தித் தடுத்தான்.

"இனி எனக்கும் உனக்கும் எந்தப் பேச்சும் இல்ல. பேசாம வா" - திரும்பி நடந்தவனை கங்கம்மா ஓடி வந்து தடுத்தாள்.

"என்னய்யா. வீட்டுக்குள்ள கூட வராம கிளம்பிட்ட. உம்பெஞ்சாதி எங்கே?"

"பாட்டி! ஒரு சின்னத் தப்பு நடந்து போச்சு. நான் கிளம்புறேன். கூடிய சீக்கிரம் என் பொண்டாட்டியோட விருந்துக்கு வர்றேன் " - என்றவாறு விடுவிடுவென நடந்தவன் பின்னே ஓடினாள் மீரா.

"என்னங்க நான் சொல்றதைக் கேளுங்க. அன்னிக்கு.."

"உம்மூஞ்சைப் பார்த்தாலோ உன் குரலைக் கேட்டாலோ நான் கொலைகாரனா மாறிடுவேன். உன் வீட்டுக்கு உயிரோட போகப் போறியா? இல்ல பொணமா போகப் போறியா?" - நடந்து கொண்டே கேட்டான் பார்த்தசாரதி.



வாயடைத்துப் போனாள் மீரா. அதிர்ச்சியிலும் பயத்திலும் வார்த்தை வரவில்லை. தனக்கு என்ன நேர்ந்தது என்ன நடக்கப் போகிறது என்பதைக் கூட உணர முடியாமல் சிலையாக நின்றாள்.

அவளைப் பற்றி துளியும் கவலைப்படாத பார்த்தசாரதி பஸ் நிறுத்தத்தில் வந்து நின்ற பேருந்தில் ஏறிவிட, திடுக்கிட்டுப்போய் ஓட்டமும் நடையுமாய் ஓடி தானும் ஏறிக் கொண்டாள் மீரா.

கையில் ஒரு பர்சைக் கூட எடுத்துக் கொண்டு வரவில்லையே. டிக்கெட் எடுப்பானோ மாட்டானோ. உடல் முழுக்க நடுக்கத்துடன் அவன் அருகே சென்று அமர முயற்சித்த போது சட்டென எழுந்து பஸ்ஸின் கடைசி இருக்கையில் கூடியிருந்த ஆண்களின் மத்தியில் அமர்ந்து கொண்டான்.

மீராவிற்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது. கழுத்தில் புத்தம் புதிதாய் புரண்ட தாலியில் மஞ்சள் மணம் வீசியது. பயத்தோடு எடுத்து கண்களில் ஒற்றிக் கொண்டாள். தவிப்பாய் கணவனைத் திரும்பிப் பார்த்தாள். அவனோ விடாமல் ஒருவர் மாற்றி ஒருவருக்காக போன் பேசிக் கொண்டே இருந்தான்.

எண்ணெய் வடிந்த கரியமுகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. மீராவுக்கு அடி வயிறு கலங்கியது. பிரச்சனையைப் பெரியதாக்கப் போகிறானோ. என்னை ஒரு வார்த்தை கூடப் பேச விட மாட்டாரா? என் பக்க நியாயத்தைக் காது கொடுத்துக் கேட்கமாட்டாரா? பரிதவித்துப் போனாள்.

நடத்துனர் தன்னைக் கடந்து போகும் போதெல்லாம் மிரண்டாள். டிக்கெட் எடுத்தியாம்மா என்று கேட்டு விடுவாரோ என அஞ்சினாள். நல்ல வேளையாக அப்படி எதுவும் கேட்கவில்லை. பஸ்ஸைவிட்டு இறங்கியதும் எப்படியாவது உண்மையைச் சொல்லி சமாதானப் படுத்தி விட வேண்டும் என்ற முடிவுடன் அமர்ந்திருந்தவளை நடத்துனர் எழுப்பினார்.

"ஏம்மா! உம்புருஷன் இறங்கிட்டாரு. இறங்கும்மா"

பதறித் திரும்பினாள். "நாங்க.. பாண்டிச்சேரிக்கு போகணும்"

"இது தாம்பரம் போற பஸ்கம்மா. இறங்கு."

அதற்கு மேலும் நில்லாமல் விடுவிடுவென இறங்கினாள். கணவனைக் காணாமல் பதறி நாலாபுறமும் தேடி தூரமாய் போய் விட்டவனைக் கண்டு வேகமாக ஓடினாள்.

மூச்சு வாங்க ஓடிச் சென்றும் இவள் போய்ச் சேரும் முன்பாக சச்சரவைத் தொடங்கி விட்டிருந்தான் பார்த்த சாரதி. அவனது கருங்குரலில் அதற்குள் கூட்டம் கூடிவிட் டிருந்தது. திருப்பதி வாசலில் நின்று கெஞ்சிக் கொண்டி ருந்தார்.

"மாப்பிள்ளை! எதுவா இருந்தாலும் வீட்டுக்குள்ள வாங்க. பேசலாம்"

"வீட்டுக்குள்ளயா? இந்த வீட்டுக்குள்ளயா? சேச்சே குடும்பம் நடத்துற வீடாய்யா இது. நீ பிராத்தல் பண்ணிட்டு இருக்க"

"மாப்பிள்ளை! வார்த்தையை அளந்து பேசுங்க"



"மாப்பிள்ளையா? யாருக்கு யாருய்யா மாப்பிள்ளே? இதோ நிற்கிறா பாரு உம் பொண்ணு. இவளுக்கும் எனக்கும் இனி எந்த சம்பந்தமும் இல்ல. இனி இவ உங்கூடவே இருக்கட்டும்"

வீட்டுக்குள் நின்ற பார்வதி வெளியே ஓடிவந்தாள். "மாப்பிள்ளை! என்ன பேச்சு பேசிட்டீங்க. கல்யாணமாகி நாலு நாளு தானே ஆச்சு"

"நல்லவேளை இப்பவே உங்க பொண்ணு யோக்கியதை எனக்குத் தெரிஞ்சு போச்சு. நாளைக்கு புள்ளை குட்டின்னு ஆகியிருந்தா... " மேலே காது கூசும்படியாக அவன் பேசிக் கொண்டே போக மீரா காதை இறுக மூடிக் கொண்டாள்

"ஏன் இப்படி அபாண்டமா பேசுறீங்க. நான் எந்தத் தப்பும் செய்யல்ல. நானா யாரு கூடயும் ஓடிப்போகல்ல. அவனுங்கதான் என்னைக் கடத்திட்டுப் போனாங்க. அவங்க விரல் கூட எம் மேல படல்ல."

திருப்பதியும் கௌரியும் அதிர்ந்து நிற்க, பார்த்தசாரதி கைகொட்டி சிரித்தான். "பார்த்தீங்களாய்யா! கடத்தினாங் களாம். விரல் கூட படலையாம். இந்த எவனாவது நம்பு வானா? கண்ணுக்கு லட்சணமா தளதளன்னு இருக்கிறவள ஒரு நாள் முழுக்க எவனாவது தொடாம இருப்பானா?"

"வாயைக் கழுவுங்க. அவனுங்க ஒன்னும் காட்டு மிராண்டிங்க இல்ல. படிச்சவங்க. நாகரிகமும் பண்பும் உள்ளவங்க. அதை விட உத்தமமான மனுஷங்க"

"கேளுங்க. எல்லாரும் நல்லாக் கேளுங்க. கடத்திட்டு போனவங்களுக்கு எவ்வளவு பாராட்டு பத்திரம் வாசிக் கிறான்னு கேளுங்க. கடத்தல் அது இதுன்னு சொல்ற

தெல்லாம் பொய். இவ கண்டவனோட சுத்திட்டு கெட்டுப்
போய் வந்ததால தான் என் தலையில கட்டியிருக்கானுங்க

இவளைக் கட்டிட்டு காலம் பூரா நான் அழணுமா?
சொடுக்குபோட்டா ரெண்டே நாள்ல இன்னொரு
பொண்ணு எனக்குக் கிடைப்பா. இவ எனக்கு வேண்டாம்.
கண்டவன் சாப்பிட்ட எச்சிலைத் தின்ன நான் என்ன
பிச்சைக்காரனா?"

"மாப்பிள்ளை. எம்பொண்ணைப் பத்தி இப்படி
பேசாதீங்க. இது ஆண்டவனுக்கே அடுக்காது. எம்புள்ள
சுத்தத் தங்கம்"

"இதையே சொல்லி இன்னும் எவனையாவது
ஏமாத்துங்க. என்னை விட்டுடுங்க நான் போறேன்"

"ஐயோ! எம்புள்ளையோட வாழ்க்கை?" - பார்வதி
பதறித் துடித்தாள்.

"நாலு பேராம் அந்த நாலு பேர் கிட்டயும் போய்
கேளுங்க. அவனுங்க உம்மகளுக்கு வாழ்க்கை தரு
னுங்க"

"மாப்பிள்ளை இப்படியெல்லாம் பேசாதீங்க
எம்பொண்ணு அப்படிப் பட்டவ இல்ல. நம்புங்க"

"வாயைமூடும்மா. பெத்த அப்பனே பொண்ணோட
நடத்தை தெரிஞ்சதும் வாயை மூடிக்கிட்டான். நீ ஏன்
லபோ திபோன்னு குதிக்கிற. யார் என்ன சொன்னாலும்
எம்முடிவுல எந்த மாற்றமும் இல்லை. இனி இவளுக்கும்
எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை."

"மாப்பிள்ளை! அப்படிச் சொல்லாதீங்க"



"நான் கட்டுன தாலியை இப்பவே என்னால அறுத்து எடுக்க முடியும். ஆனா இவ உடம்பைத் தொட்ட கூலிக்காக அதை விட்டுட்டுப் போறேன். இனி இவ மூஞ்சியிலயே நான் முழிக்க மாட்டேன்." - ஊரே கூடி நிற்க. என்ன பேசுகிறோம் என்று கூட யோசிக்காமல் பார்த்தசாரதி உரத்த குரலில் கத்திக் கொண்டே போக, பார்வதி நெஞ்சைப் பற்றிக் கொண்டு தெருவில் விழுந்தாள்.

"அம்மா..ஆ" - என அலறிக் கொண்டு ஓடிய மீரா தாயைப் பற்றி தூக்க முயல, அது வரை பேச்சற்று நின்ற திருப்பதி மகளைத் தடுத்தார்.

"தொடாதே. என் மனைவியைத் தொடாதே!"

திடுக்கிட்டு நிமிர்ந்தாள் மீரா. "அ.. அப்ப்பா"

"அப்படிக் கூப்பிடாதே. கண்டவனிடம் போய் சீரழிந்து விட்டு வந்த நீ என் மகளே இல்லை. என்னைப் பொறுத்தவரை என் மூத்த மகள் மீரா செத்துட்டா. நீ யாரோ எவரோ, போயிடு. இங்கே நிற்காதே. போ" - வெறி பிடித்தாற் போல் அவர் கத்த கூனிக் குறுகிப் போனாள் மீரா.

"எம் புள்ளைய அப்படிச் சொல்லாதீங்க. அவ சுத்தமானவ. எந்தத் தப்பும் பண்ணாதவ." - பார்வதி கண்களில் நீர் வழிய முகத்தில் வலி தெரிய கணவனிடம் மன்றாடினாள்.

"எந்தத் தப்பும் பண்ணலன்னா எங்கிட்ட ஏன்டி மறைக்கணும்? நான் அன்னிக்கே சொன்னேனே. உம்மக தான் எவன் கூடவோ ஓடிப் போயிருக்கான்னு நீதான் நம்பல. போனவ அப்படியே போயிருந்தா அன்னிக்கே தலை முழுகியிருப்பேன். ஏன் திரும்பி வந்தே?"

"அப்பா! சத்தியமா சொல்றேம்ப்பா. நானாப் போகலப்பா" - மீரா கெஞ்ச வெறுப்பாய் முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

"உம் மகளைப் போகச் சொல்லுடி. இனிமே இந்தப் பக்கமே வரக் கூடாது. இப்படி ஒருத்தி நமக்கு பொறந்ததையே மறந்துடு."

"அப்படிச் சொல்லாதீங்க. எனக்கு எம்புள்ள வேணும்"

"அப்படின்னா அவ கூடவே நீயும் போயிடு. நான் கவலைப் பட மாட்டேன். போ. நீயும் போ" - மீண்டும் அவர் கத்த பார்வதி அதற்கு மேல் வாக்கு வாதம் பண்ணவோ கண்ணீர் சிந்தவோ இயலாமல் மூச்சுக்குத் தவித்தாள்.

மீரா துடித்துப் போனாள். "அம்மா! என்னம்மா பண்ணுது? அப்பா. எம்மேல உள்ள கோபத்தை அம்மா மேல கட்டாதீங்க. அம்மாவை ஹாஸ்பிடலுக்கு கூட்டிட்டு போங்கப்பா" - பெற்றவரின் காலைக் கட்டிக் கொண்டு கதறினாள்.

"எம் பொண்டாட்டியைப் பார்த்துக்க எனக்குத் தெரியும். நீ ஒழிஞ்சு போ. நீ போயிட்டா அவளுக்கு ஒன்னும் பண்ணாது" - என்றவாறு காலை உதறித் தள்ளினார் திருப்பதி.

"என் கண்ணே! இப்படி அநாதையாய் ஆகிவிட்டாயே. நான்.. நான் என்ன செய்யப் போகிறேன்? மீரா என் தங்கமே .. மீ.ரா" - பார்வதியின் தலை ஒரு பக்கமாய் சாய்ந்தது. "அம்மா.. ஆஆ.." - வீறிட்டாள் மீரா.



# 11

விக்கித்துப் போயிருந்தனர் அனைவரும். அனைவரின் கண்களும் கலங்கியிருக்க, மீராவின் விழிகள் உலர்ந்து போயிருந்தது. ஒரு பெருமூச்சுடன் தொடர்ந்தாள்.

"என் அம்மாவோட உயிர் என் கண் முன்னாடியே பிரிஞ்சு போச்சு. என் அம்மாவைத் தொடக் கூட என் அப்பா அனுமதிக்கல. இறுதிச் சடங்கு நடக்கும் போது நான் நிற்கக் கூடாது. நான் தான் என் அம்மாவைக் கொன்னுட்டேன்னு என்னை வெளியில பிடிச்சுத் தள்ளிட்டார்" - குரல் கம்மி விட நிறுத்தினாள்.

"போதும் மீரா. நீ கஷ்டப்பட வேண்டாம். மிச்சத்தை நான் சொல்றேன்" சரோஜினி மெல்லிய குரலில் சொல்ல, கண்ணன் அவள் புறமாய் திரும்பினான்.

"மேம்! உங்களுக்கு மீராவை எப்படித் தெரியும்?"

"மீரா குடியிருந்த தெருவில உள்ள ஒரு தொழிலதிபர் நம்ம இல்லத்துக்கு மாசா மாசம் மெடிக்கல் செலவை ஏத்துப்பார். அது விஷயமா அன்னிக்கு அவரைப் பார்க்கப் போனப்பதான் இந்த சம்பவம் நடந்தது.

நானும் முழுசையும் பார்த்தேன். மனசு தாங்கம இவ புருஷன் கிட்டயும் அப்பா கிட்டயும் பேசிப் பார்த்தேன்"

"என்ன சொன்னாங்க?" - ஆவலாய்க் கேட்டான்.

"அவங்க பேசினதை எல்லாம் உங்ககிட்ட சொல்ல முடியாது கண்ணா. உடம்பெல்லாம் கூசும். மீரா சொன்னது

பாதி தான். அவங்க பேசினதை அப்படியே சொல்ல முடியாது. ஆனா ரெண்டு பேருமே சொன்ன ஒரே முடிவு மீரா இனி தேவையில்லை என்பது தான்"

மூவருமே மீராவைப் பார்த்து கண்கள் கசிந்தனர். 'தங்களால் தானே தங்களது முட்டாள் தனமான செயலால் தானே இவள் நிலை இப்படி ஆயிற்று'-கண்ணனின் கண்கள் சிவந்து போயின. இதயம் வலித்தது. மீராவைப் பார்க்கவே வேதனையாய் இருந்தது.

"கடைசி வரை மீராவை அவ அப்பா வீட்டுக்குள் அனுமதிக்க வில்லை. தெருவோரமாய் நின்று தாயின் இறுதி ஊர்வலத்தைப் பார்த்து விட்டு திக்கற்று நின்றவளை நான் தான் இங்கு அழைத்து வந்தேன். மீரா அன்று உறைந்தது தான். அவளது பேச்சு சிரிப்பு எல்லாமே தொலைந்து போயிற்று.

எவ்வளவு தான் வேலை செய்தாலும் இரவானால் மரத்தடியிலும் கிணற்றடியிலும் அமர்ந்து கொண்டு கண்ணீர் வடிப்பதைக் காண சகியாமல் தான் உன்னிடம் வேலைக்கு அனுப்ப முடிவெடுத்தேன்"

கண்ணன் நெகிழ்ந்து போனான்."நன்றி மேடம் ரொம்ப நன்றி. நீங்கள் மட்டும் இந்த முடிவை எடுக்க வில்லை யென்றால்.. நாங்கள் மீராவைப் பார்த்திருக்க முடியாது. அவள் அனுபவித்த வேதனைகளைத் தெரிந்து கொண்டிருக்க முடியாது. இன்னும் தேடிக் கொண்டே தான் இருந்திருப்போம்"

மீரா புருவம் சுருக்கினாள்."நீங்கள் என்னைத் தேடினீர்களா?"



"ஆமாம். கிட்டத்தட்ட ஒன்றரை வருடமாய் தேடுகி றான்."- அவசரமாய் தொடங்கிய விஷ்வா பாதியில் நிறுத்திவிட, குழப்பமானாள் மீரா.

"என்னையா தேடினீர்கள்? எதற்காக?"

விஷ்வாவும் கோபியும் தயக்கமாய் கண்ணனைப் பார்க்க, கண்ணன் பார்வையால் எச்சரித்தான்.

"வேறொன்றுமில்லை மீரா. கம்பெனி ஆரம்பிக்கும் எண்ணம் தோன்றியவுடன் உனக்கு நன்றி சொல்ல வேண்டும் என்று தேடினோம். பார்க்க முடியவில்லை. பிறகும் எங்கள் முன்னேற்றத்தை நீ பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டோம். அதனால் தான் தேடினோம்" - என்றான் சமாளிப்பாய்.

"இதற்காகத்தான் பழைய வீட்டிற்கு தேடிப் போனீர் களா?"

"ஆ.. ஆமாம். அப்போது தான் நீங்கள் வீட்டை விற்று விட்டதே தெரியும்"

"எனக்கு நேற்று நீங்கள் சொன்ன பிறகு தான் தெரியும்" - என்றாள் கசப்பான புன்னகையோடு. கண்ணனின் முகம் வாடியது.

"மீரா! அதுக்கப்புறம் நீங்க உங்க அப்பாகிட்ட பேசிப் பார்கலையா?"

விரக்தியாய் சிரித்தாள். "என்னவென்று பேசிப் பார்க்க? பெற்ற தாயையே கடைசியாய் ஒரு முறை பார்க்க அனுமதிக்காதவர் என்னிடம் என்ன பேசுவார்? அதோடு நான் தேடி வந்து விடக் கூடாது என்று தான் வீட்டையே காலி செய்திருப்பார்"

"உங்க.. கணவரைப் பார்த்துப் பேசினீர்களா?" - கோபி தயக்கமாய்க் கேட்டான்.

"அவர் கூட வாழ்ந்த நாலே நாளில் அவரைப் பற்றி முழுமையாய் அறிந்து கொண்டவள் நான். அதோடு அவர் பேசிய பேச்சிற்கு பிறகு அவர் முகத்தில் எப்படி விழிப்பது?"

"இருந்தாலும்... ஒரு முறை முயற்சித்துப் பார்க்கலாமே"

"சென்னையில் கேட்ட கொடு மொழிகள் போதா தென்று பாண்டிச்சேரியிலும் போய்க் கேட்கச் சொல்கிறீர் களா? எனக்கு அத்தனை சக்தி உடம்பிலோ மனதிலோ இல்லை" - சோர்வாய் கண்களை மூடிக் கொண்டாள் மீரா.

"மீரா! நாங்கள் பேசிப் பார்க்கட்டுமா?" - கண்ணனின் கேள்வியில் திடுக்கிட்டு எழுந்து அமர்ந்தாள்.

"அவரைப் பற்றி இத்தனை சொன்னேனே! இன்னுமா பேசிப் பார்க்கப் போகிறீர்கள்?"

"மீரா! ஏதோ கோபத்தில் அன்றைக்கு பேசியிருக்க லாம். ஆனால் இப்போது வருந்திக் கொண்டிருக்கலாம் இல்லையா?"

"என்ன?"

"உன்னை இழக்க யாருக்கும் மனம் வராது மீரா. நீ ஒரு அற்புதமான வைரம். உன்னைத் தொலைத்து விட்டு அவரும் எங்களைப் போல் தேடி அலையலாம் இல்லையா?" -கண்ணனின் குரலில் உண்மையான வருத்தம் தொனித்தது. அவனது வருத்தம் மற்றவர்களுக்குப் புரியா விட்டாலும் அவன் மனதை அறிந்த விஷ்வாவும் கோபியும் கண்களில் வேதனையோடு நண்பனைப் பார்த்தனர்.



மீரா இன்னும் புரியாத பார்வையோடு பார்க்க, கண்ணன் தன் வருத்தத்தை மறைத்து லேசாய் புன்னகைத்தான்.

"உண்மையாகத் தான் சொல்கிறேன் மீரா. உன்னைப் பிரிந்து விட்டு இப்போது அவரும் உன்னைத்தான் தேடிக் கொண்டிருப்பார்"

"இது பகல் கனவு கண்ணன்"

"பார்க்கலாமே. முயற்சித்துப் பார்க்கலாம். நான் பேசிப் புரிய வைக்கிறேன்"

"கண்ணன்! உங்களுக்கு ஆயிரம் வேலை இருக்கும். அதைக் கவனிப்பதை விட்டு விட்டு இந்த வீண்வேலை எதற்கு?

"இல்லை. இது தான் என் முதல் வேலை. எங்களால் தானே இத்தனை துயரங்கள் உன் வாழ்க்கையில். அதைத் துடைத்து விட்டுத் தான் மறுவேலை"

சரோஜினி அலுத்துக் கொண்டாள். "நானும் எத்தனையோ முறை கேட்டுப் பார்த்து விட்டேன் கண்ணா. இவள் கணவனின் முகவரியைத் தரவே மாட்டேன் என்கி றாள்."

"எங்களிடம் கொடுங்கள் மீரா. நான் என் பாட்டியை யும் கூட்டிட்டு போய் அவரிடம் பேசுகிறேன்" - என்றான் கோபி.

"ஆமாம். அது தான் சரி. அன்னிக்கு நைட் பாட்டி கூடத் தானே இருந்தாய். பாட்டி சொன்னால் நம்புவார்" - விஷ்வாவும் கூற, வறண்ட புன்னகையோடு பார்த்தாள் மீரா.

"நீங்க எல்லாரும் ஒன்றை மறந்திட்டுப் பேசுறீங்க. கணவன் மனைவிக்கு ஒருத்தர் மேலே ஒருத்தர்க்கு உண்மை

யான பிரியம் அன்பு நம்பிக்கை எல்லாம் தானாகவே இருக்கணும். அடுத்தவங்க சொல்லி வரக் கூடாது. அந்த நம்பிக்கை ரொம்ப நாள் நிலைக்காது.

அவர் கூட நான் உண்மையாத்தான் வாழ்ந்தேன். கங்கம்மா பாட்டி வீட்ல அவர் எங்கிட்ட ஒரு வார்த்தை கேட்டிருந்தால் நானே எல்லாத்தையும் சொல்லியிருப் பேன். அட்லீஸ்ட் நான் சொன்னதையாவது காது கொடுத்துக் கேட்டிருக்கலாம். எல்லாவற்றையுமே அவராக முடிவு செய்து விட்டு... எத்தனை பேச்சுக்கள்... எத்தனை அவமானங்கள்...

ஒரே நாளில் என்னை அநாதையாக்கி விட்டாரே. அதுவும் எந்தப் பட்டத் தோடு தெருவில் நின்றேன். யார் முகத்திலும் விழிக்க முடியாமல் யார் என்ன பேசி விடுவார்களோ என அஞ்சி.. கிட்டதட்ட இருபத்தினாலு மாதங்களாய் இந்த சரணாலயத்தில் பதுங்கி.. ஒரு கைதி போல் வாழ்ந்து... போதும்! எனக்கு இத்தனை கஷ்டம் போதும்.

இதற்கு மேலும் அவரைப் பார்த்து பேசி... வேண்டாம் கண்ணா. என்னை இப்படியே விட்டு விடுங்கள். என்னை... என் கஷ்டத்தை நீங்க மறந்துட்டு உங்க வேலையை உற்சாகமா பாருங்க. நீங்க வந்து ரொம்ப நேரமாச்சி கிளம்புங்க வேலையைக் கவனிங்க"

"இப்படிச் சொன்னா எப்படிம்மா? உனக் கென்ன வயசாச்சு. எத்தனை காலம் இப்படியே இருப்ப?" - கேட்ட சரோஜினியைப் பார்த்து புன்னகைத்தாள் மீரா.

"மேடம்! கல்யாணமே பண்ணிக்காம நீங்க சேவை பண்றீங்களே. நானும் கடைசி வரை இப்படியே உங்க கூடவே இருந்துடுறேனே"



"அப்படியெல்லாம் பேசாதேம்மா. என் கதை வேறு. நீ அப்படி இல்லை."

"ஒன்று தான் மேடம். நாம ரெண்டு பேருமே ஒன்று தான். நான் கணவனால் கைவிடப்பட்டவள். நீங்கள் விரும்பியவரால் கை விடப்பட்டவர். இருவருமே ஆண்களால் பாதிக்கப்பட்டவர்கள் தானே."

"மீரா! அது நானாக விட்டுக் கொடுத்த வாழ்க்கை. உன் வாழ்க்கை அப்படி இல்லையம்மா. நீ வாழ வேண்டிய வயதில் பழியோடு ஒதுங்கி நிற்கிறாய். உன் மீதுள்ள பழியைத் துடைக்க வேண்டாமா?"

"துடைத்து விட்டால்... என் அம்மா திரும்பக் கிடைத்து விடுவார்களா? என் அப்பாவும் கணவரும் பேசிய வார்த்தைகள் இல்லையென்று ஆகி விடுமா?"

"அது மாறாது மீரா. ஆனால் உன் நிலை மாறும். நீ சந்தோஷமாக வாழ வேண்டும் மீரா" - உணர்ச்சி மயமாகக் கண்ணன் கூற சிரித்தாள்.

"நான் சந்தோஷமாகத் தான் இருக்கிறேன் கண்ணன்"

"பொய் பேசாதீர்கள் மீரா. இத்தனை பிரச்சனைக்கும் நான் தான்.. நான் சொன்ன ஒரே ஒரு பொய் தானே காரணம். இதை நானே சரி செய்கிறேன்" - என வேகமாக எழுந்தான் விஷ்வா.

"என்ன செய்யப் போகிறீர்கள் விஷ்வா?"

"உங்களிடம் பேசிப் பயனில்லை. நாங்களே தேடிக் கண்டு பிடிக்கிறோம். உங்கள் கணவர் என்ன ஆப்பிரிக் காவிலா இருக்கார்? இதோ இருக்கிற பாண்டிச்சேரி தானே வா கண்ணா. நாமளே விசாரிச்சு கண்டு பிடிச்சுடலாம்"

"அவன் போட்டோ கிடைத்தால் நன்றாய் இருக்கும் அதுவும்_ கங்கம்மா பாட்டியோட மகன் பிள்ளை தானே இந்தப் பார்த்தசாரதி"

"ஆமா! அப்படித்தான் மீரா சொன்னாள்"

"ச்சே! எவ்வளவு எளிதான வேலை. நான்கு நாட்களை வீணாக்கி விட்டோமே. கோபி! முதலில் உன் பாட்டி வீட்டில் போய் விசாரிக்கலாம். அவர்களுக்கு நிச்சயம் தெரிந்திருக்கும்"

"கண்ணா! நீயும் கோபியும் போய் விசாரித்து விட்டு வாருங்கள். நான் கம்பெனியைப் பார்த்துக் கொள்கிறேன் இன்று தருண் வருவதாகச் சொன்னாரே"

"அட! மறந்தே விட்டேனே. சரி நீ அவருடன் பேசி டீல் ஓகேன்னா அக்ரிமெண்ட் போடு. நாங்க கோபியோட பாட்டி வீட்டுக்கு போயிட்டு வந்திடுறோம்."

"சரி. நான் கிளம்பறேன்"

"விஷ்வா! நீ பஸ் பிடிச்சப் போயிடு. நாங்க கார்ல போயிட்டு வந்திடுறோம்"

"சரிடா. என்னை பஸ் ஸ்டாண்ட்ல இறக்கி விட்டு கிளம்புங்க"

"போலாம்" - என்றவாறு குளிர் பானத்திற்கான பணத்தைக் கொடுத்து விட்டு புறப்பட்டனர். விஷ்வா பஸ்ஸில் ஏறியதும் கண்ணனும் கோபியும் புறப்பட்டனர். ஜன்னலோர இருக்கையில் அமர்ந்து சோர்வாய் கண்களை மூடிக் கொண்டான் விஷ்வா.

மூடிய விழிகளுக்குள் மீராவின் பரிதாபமான முகம் வந்து போனது. மனதில் பாரம் ஏறிக் கொண்டது. எல்லாம்



என்னால் வந்த வினை. அன்று மட்டும் அப்படி ஒரு வார்த்தை சொல்லாமல் இருந்திருந்தால் மீராவின் வாழ்க்கை இன்று கேள்விக் குறி ஆகியிருக்காது.

என்ன செய்யப் போகிறேன்? எப்படி அந்தப் பார்த்தசாரதியைக் கண்டு பிடித்து அவனிடம் நடந்தவற்றை விளக்கி... அவன் ஏற்றுக் கொள்வானா? கட்டிய மனைவி சொன்ன வார்த்தைகளையே கேட்காதவன்.. கேட்க விரும்பாதவன். நாம் சொன்னால் கேட்பானா? ஒரு வேளை எங்களைப் பார்த்தால் அவனது கோபம் இன்னும் அதிகமாகுமோ.

கண்ணன் சொல்வதைப் போல் இந்தக் காரியம் அத்தனை எளிதல்ல என்று தோன்றியது. கோபியின் பாட்டிக்கு பேரனின் முகவரி தெரிந்திருந்தாலும் சொல்வது கஷ்டம் தான். மீராவின் மீது அவர்களுக்கும் வெறுப்பு இருக்கத்தானே செய்யும்.

மீராவின் பிரச்சனைக்கு என்ன தான் தீர்வு? பார்த்தசாரதியும் யாரென்று தெரியவில்லை. திருப்பதியோ தன் மகள் இறந்து விட்டாள். அவளைப் பற்றி பேச்சை எடுக்காதே என்கிறார். மீராவும் வாயைத் திறக்க மறுக்கிறாள். இனி என்ன செய்வது? யார் வந்து கை கொடுப்பார்கள்?"

"எக்ஸ்கியூஸ் மீ ஸார்" - என்ற இனிய பெண் குரலில் கலைந்து கண்களைத் திறந்தான் விஷ்வா. இரு பெண்கள் நின்றிருந்தனர்.

"எஸ்!"

"ஸார். இது என் பிரெண்ட். இவளுக்கு பஸ் பயணம் ஒத்துக்காது. வாமிட் பண்ணிடுவா."

"அதுக்கு நான் என்ன பண்ணனும்?"

"இந்த ஜன்னலோர சீட் கொடுத்தா கொஞ்சம் ஹெல்ப் ஃபுல்லா இருக்கும். கொஞ்சம் மாறி உட்கார் நீங்களா ஸார்" - என்றாள் அந்தப் பெண்.

"இட்ஸ் ஓ.கே" - என்றவாறு எழுந்தவனின் பார்வை தன்னிடம் பேசியவளின் முகத்தில் அழுத்தமாய் பதிந்தது. இந்தப் பெண்... இந்தப் பெண்ணை எங்கோ பார்த்திருக்கிறேனே. எங்கே? எங்கே?

மூளையைத் தட்டி எழுப்பிய வாறே அடுத்த சீட்டுக்கு மாறினான்.

"ரொம்ப தேங்க்ஸ் ஸார்" - அந்தப் பெண் புன்னகையுடன் கூற, விஷ்வாவின் மூளைக்குள் மின்னல் வெட்டியது.

"இது... இந்தப் புன்னகை.. இந்த முகம்.. இது மீராவின் முகம். ஆம். மீராவின் சாயல். அப்படியென்றால் இவள் மீராவின்.. உறவாக.. அட! தனக்கு ஒரு தங்கை இருப்பதாகச் சொன்னாளே. அவளாக இருக்குமோ" - வேகமாக இருக்கையை விட்டு எழுந்தான். அவளை நெருங்கி குரல் கொடுத்தான்.

"ஹலோ! உங்களுக்கு மீராவைத் தெரியுமா?" - இடம் கொடுத்தவனின் கேள்வியில் சட்டென முகம் மாறினாள் கௌரி.



## 12

பேருந்து நிலையம் முழுக்க திருவிழாக் கூட்டம் போல் கூட்டமாய்த் தெரிய சுவரோரம் போடப்பட்டிருந்த சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்திருந்தாள் கௌரி. சற்று தள்ளி அமர்ந்திருந்த அவளது தோழி வார இதழ் ஒன்றை புரட்டிக் கொண்டிருக்க, கௌரியின் எதிரே கையைக் கட்டிக் கொண்டு நின்றான் விஷ்வா.

"ரொம்ப நன்றி கௌரி" - விஷ்வா கூற, நிமிர்ந்தாள் கௌரி.

"எதுக்கு?"

"என் பேச்சை மதித்து என்னுடன் பேச சம்மதித்தற்கு. பஸ்ஸை விட்டு இறங்கியதற்கு"

"நான் சீக்கிரம் வீட்டுக்குப் போக வேண்டும். விஷயத்தைச் சொல்லுங்கள்"

"நீங்க தான் சொல்ல வேண்டும்?"

"நானா? நான் என்ன செல்லணும்?"

"மீரா உங்கள் கூடப் பிறந்தவர் தானே"

"ஆ.. ஆமாம்"

"அவளை இப்படி அநாதையாய் விட உங்களுக்கு எப்படி மனம் வந்தது." -விஷ்வாவின் கேள்வியில் திடுக்கிட்டுப் போனாள் கௌரி.

"அக்கா இங்கு தான் இருக்கிறாளா? எங்கே இருக்கிறாள்? நீங்கள் பார்த்தீர்களா?" - கேள்வி கேட்டவாறே எழுந்தாள்.

"அப்போ... உங்களுக்கு எதுவுமே தெரியாதா?"

"எதுவுமேன்னா?"

"உங்கள் அக்காவை விரட்டிய பிறகு நீங்கள் பார்க்கவே இல்லையா?

"ம்ப்ச்! எங்கே பார்ப்பது? அக்காவை விரட்டி விட்டு அம்மாவின் காரியத்தையும் முடித்து விட்டு அப்பா பிடிவாதமாய் அடையாருக்கு அழைத்துப் போய் விட்டார். அவள் மீதிருந்த கோபத்தில் என் படிப்பையும் நிறுத்தி விட்டார்

"படிப்பை ஏன் நிறுத்த வேண்டும்?"

"என்னைப் படிக்க வெளியே அனுப்பினால் நானும் அவளைப் போல் போய் விடுவேனாம். அந்த பயம் அவருக்கு"

"என்ன முட்டாள் தனம் இது?"

"என் அப்பா எப்போதுமே அப்படித்தான். அவர் செய்வதை சரியென்று ஒப்புக் கொண்டால்தான் அவருடன் இருக்க முடியும். நானும் அப்படியே பழகிட்டேன்

"அதனால் நீங்கள் அவருடைய செல்வமா?"

"அப்படியெல்லாம் ஒன்றும் கிடையாது. நான் எப்போதுமே அப்பாவின் செயல்களைத் தட்டிக் கேட்ப தில்லை. அக்கா அப்படி இருக்க மாட்டாள். அதனால் அவளை அப்பாவுக்குப் பிடிக்காது"

"அதற்காக இப்படியா வயசுப் பொண்ணை தெருவில் விடுவது? உங்கள் இரத்தம் கொதிக்கவில்லையா?"

"அக்கா செய்தது பெரிய தப்பு தானே."



"மீரா தப்பே செய்யவில்லை என்கிறேனே. நாங்கள் தான் உங்கள் அப்பாவை மிரட்டுவதற்காக அவளைக் கடத்தினோம். அதுவும் மீரா பேசிய பிறகு ஒரே நாளில் விட்டுவிட்டோம்"

"இந்த உண்மையை அப்போதே அப்பாவிடம் சொல் லியிருந்தால் பிரச்சனை முற்றியிருக்காதே. சொல்லாமல் விட்டது தப்புதானே"

"அதுக்காக... பெற்ற பெண்ணை இப்படி அநாதை யாய் விட்டு விடுவாரா?"

"அது தான் அப்பா. அவரை மீறி என்னால் என்ன செய்ய முடியும்? இப்போது அக்கா எங்கே இருக்கிறாள்?" ஆவலாய்க் கேட்டாள் கௌரி.

"சொன்னால் வீட்டிற்கு அழைத்துப் போய் விடுவீர் களா?"

"அது..அதெப்படி முடியும். அப்பா என்னைக் கொன்றே விடுவார்"

"சரி. நீங்கள் அவளைப் பார்க்கவே வேண்டாம். எனக்கு சில தகவல் வேணும்"

"என்ன தகவல்கள்?

"உங்கள் அக்காவின் கணவரைப் பற்றிய தகவல்கள்"

"அவரா? அவருக்கென்ன?"

"அவருக்கு ஒன்றுமில்லை. அவரையும் மீராவையும் சேர்த்து வைக்க வேண்டும். அதற்கு அவரது முகவரி வேண்டும்."

"எனக்கு அவரது முகவரி சரியாய்த் தெரியாது. ஒரே ஒரு முறை தான் போயிருக்கிறேன்"

"அவர் எங்கே வேலை பார்க்கிறார்? அவரது போன் நம்பர் ஏதாவது தெரியுமா?"

"அவர் லேண்ட் பிஸ்னெஸ் பண்ணிட்டு இருந்தார். போன் நம்பர் எதுவும் ஞாபகம் இல்ல. மாப்பிள்ளை வீட்டில் அச்சடித்த பத்திரிக்கையில் போட்டிருந்தார்கள். ஆனா அது எதுவும் எங்களிடம் இல்லை"

"அவர் எப்படி இருப்பார்? கொஞ்சம் அடையாளம் சொல்ல முடியுமா?"

"கறுப்பாய் இருப்பார். சுருட்டைமுடி. சுமாரன உயரம் தான். ம்.. அவரை எல்லாரும் சாரதின்னு தான் கூப்பிடு வாங்களாம். சாரதி வீடு எதுன்னு கேட்டா யார் வேணா கை காட்டுவாங்கன்னு சொல்லியிருக்கார்"

"ஈஸிட்?"

"ஆமாம். புரோக்கர் சாரதின்னு தான் கல்யாணத்துக்கு வந்தவங்க கூப்பிட்டாங்க."

"ஓ. தேங்க்யூ வேறு எதுவும் தகவல் தெரியுமா?"

"வேற எதுவும்?" - யோசித்தவள் சட்டென மலர்ந் தாள். "அவங்க தெரு பேர் முல்லை தெரு. அவர் வீட்டு முன்னால ரெண்டு வேப்ப மரம் நிற்கும். வீட்டுக்கு எதிர்ல ஒரு பிள்ளையார் கோவில் கூட இருந்தது. பொன்னும் மாப்பிள்ளையும் முதல்ல அங்கே போய் தான் சாமி கும்பிட்டாங்க"

"முல்லை தெருவா? அட! நேற்று கூட போய்த் தேடி னோமே. சரி நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்க கிளம்புங்க."

"ஸார். எங்க அக்கா இப்போ எங்கே இருக்கா?"

"பாதுகாப்பான இடத்தில இருக்காங்க."



"நல்லா இருக்காளா?" - கேட்கும் போதே குரல் இடறியது.

"இந்தக் கேள்வி உங்களுக்கே கொஞ்சம் அபத்தமாப் படல்ல?"

"ஸாரி ஸார். என்ன தான் மௌனியா சூழ் நிலைக் கைதியா இருந்தாலும் அவளைப் பத்தி நினைக்காம கவலைப் படாம இருப்பேனா?"

"கவலைப்பட்டா மட்டும் போதுமா?"

"வீட்டுக்குள்ள அடஞ்சி கிடக்கிற ஒரு பெண்ணால வேற என்ன செய்ய முடியும்?"

"இப்போ எப்படி வெளியே வந்தீங்க?"

"கூடப் படிச்ச பொண்ணு உடம்பு முடியாம ஹாஸ் பிடல்ல இருக்கா. பார்த்திட்டு போலாம்னு வந்தோம். அப்பாவும் வந்தாரு."

"அவர் எங்கே?"

"யாரையோ பார்த்திட்டு வர்றேன்னு எங்களை பஸ் ஏத்தி விட்டுத் தான் போனாரு"

"ஒரு வேளை... மருமகனைப் பார்க்க போயிருப் பாரோ?"

"ம்ஹீம். மகளே இல்லன்னு தலை முழுகிட்டார். மருமகனையா தேடிப் போவார். யாரோ பணத்தை வாங்கிட்டு திருப்பிக் கொடுக்காம போயிட்டாராம். அவர் இங்க எங்கேயோ இருக்கிறதா தகவல் கிடைச்சதாம்"

"ஓ. வசூல் வேட்டைக்குப் போயிருக்காரா?"

"ஆமா ஸார். அவர் வர்றதுக் குள்ள நாங்க போகணும்"

"சரி கிளம்புங்க. அதோ பஸ் ரெடியா இருக்கு"

தயக்கமாய் அவனை ஏறிட்டாள். "ஸார்! அக்கா எங்கே..?"

"ஏய் கௌரி! உங்க அப்பா வந்துட்டாருடி" - அவளது தோழி பதட்டமாய் குரல் கொடுக்க பயந்து சுற்றுமுற்றும் பார்த்தாள் கௌரி.

"எங்கேடி?"

"அதோ பார். தாம்பரம் பஸ்ல ஏறுறார்"

"போச்சு. இப்போ நாம எப்படிப் போறது?" - கைகளை உதறிக் கொண்டாள் கௌரி. விஷ்வா திருப்பதியைப் பார்த்தான். காலியாய் நின்ற பேருந்தில் ஏறி அமர்ந்து கொண்டிருந்தார் திருப்பதி.

சட்டென திரும்பினான். "ஏங்க! அந்த பஸ்சுக்கு முன்னாடி ஒரு பஸ் புறப்பட்டு ரெடியா இருக்கு பாருங்க. ஓடிப் போய் ஏறிக்கங்க. சீக்கிரம்." - விஷ்வா அவசரப் படுத்தியதும் இருவரும் ஓட்டமாய் ஓடிச் சென்று பஸ்ஸில் ஏறியதும் பேருந்து கிளம்பியது.

கௌரி தயக்கமாய் வெளியே நின்ற விஷ்வாவைப் பார்த்தாள். கடைசி வரை அக்காவின் இருப்பிடத்தைச் சொல்லவே இல்லையே என்ற ஏக்கம் அவள் கண்ணில் தெரிந்தது.

விஷ்வா ஒரு கணம் யோசித்தான். உடனே பேருந்தின் அருகே ஓடிப் போய் ஜன்னலருகே எம்பியவாறு. "உங்க அக்கா சரணாலயம் முதியோர் இல்லத்தில பத்திரமா இருக்காங்க" - என்றான் சத்தமாய்.



கௌரியின் முகம் புன்னகைக்க, பேருந்து வேக மெடுத்தது. விஷ்வா நின்று தன் கைக் கடிகாரத்தை பார்த்தான். பிற்பகல் மூன்று மணியாகியிருந்தது.

கௌரி சொன்ன முகவரியில் சென்று பார்த்து விடலாமா? வந்தது வந்து விட்டோம். பார்த்துவிடலாமே முடிவுடன் அருகே இருந்த ஆட்டோ ஸ்டாண்டை நெருங்கினான். ஒரு ஆட்டோவை அமர்த்திக் கொண்டு. "முல்லை தெரு போகணும். அங்கே ஒரு பிள்ளையார் கோவில் இருக்குமே" - என விவரிக்க.

"உட்காருங்க ஸார். எழுபது ருபா ஆகும்" - என்றார் ஓட்டுநர்.

"போலாம்" - என்றதும் ஆட்டோ உறுமி விட்டு புறப் பட்டது. பார்த்தசாரதியிடம் என்ன பேச வேண்டும் எப்படிப் பேச வேண்டும் என மனதிற்குள் ஒத்திகை செய்து கொண்டே, வெளியே பார்வையை வீசினான்.

வழியைத் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். தன் பேச்சு எடு பட வில்லையென்றால் மற்றவர்களையும் அழைத்துக் கொண்டு வந்து பேச வேண்டும். முடிந்தால் மீராவையும் அழைத்து வர வேண்டும். மீராவின் முகத்தைப் பார்த்தால் அவள் கணவனின் கோபம் குறையலாம்.

கால் நடை மருத்துவ மனையைக் கடந்து வளைவில் திரும்பி நின்றது ஆட்டோ.

"ஸார்! இது தான் முல்லை தெரு." - என்றார் ஓட்டுநர்.

தலையை நீட்டி வெளியே பார்த்தான் விஷ்வா. கௌரி சொன்ன பிள்ளையார் கோவில் ஒன்றும் அத்தனை பெரிதாய் இல்லை. அரசமரமும் வேம்பும் இணைந்து

வளர்ந்திருக்க அதனடியில் அமைதியாய் அமர்ந்திருந்தார் குட்டி பிள்ளையார்.

அருகம்புல் மாலையும் செம்பருத்தி மாலையும் அணிந்து கம்பீரமாகவே இருந்தார். மதியவேளை என்பதால் தெருவில் நட மாட்டம் இல்லாமல் வெறிச் சோடிக் கிடந்தது. கீழே இறங்கி கோவிலின் நேர் எதிரே இருந்த வீட்டைப் பார்த்தான்.

சற்று பழைய வீடு சிமெண்ட் கூரை போடப் பட்டு உதிர்ந்த பெயிண்ட்டோடு தெரிந்தது. வாசலின் முன் இரண்டு வேப்பமரம் இருக்க, இது தான் அந்த வீடு என முடிவு செய்தவன் ஓட்டுநரை ஏறிட்டான்.

"ஆட்டோவை ஓரமா நிறுத்துங்க. கொஞ்ச நேரத்தில வந்திடுறேன்"

"போயிட்டு வாங்க ஸார்"

சற்றே தயக்கமாய் அந்த வீட்டை நோக்கி நடந்தான். மனமெல்லாம் பதறியது. வியர்வை பெருகியது. பார்த்த சாரதி வீட்டில் இருப்பானா? அவனிடம் எப்படிப் பேச்சைத் தொடங்குவது? எது நடந்தாலும் பொறுமையை மட்டும் இழந்து விடக் கூடாது.

அவன் கோபப் பட்டாலும் நாம் நிதானமாய் பேசிப் புரிய வைக்க வேண்டும். இது மீராவின் வாழ்க்கைப் பிரச்சனை. கோபமோ அவசரமோ படக் கூடாது. தனக்குத் தானே சொல்லிக் கொண்டு வீட்டை அடைந்தவன் ஏமாற்றமானான்.

வீட்டின் கதவு பூட்டப்பட்டிருக்க கனமான பூட்டு தொங்கியது. ஏமாற்றமாய் அக்கம் பக்கம் வீடுகளைப்



பார்த்தான். கதவுகளை சாத்திக் கொண்டு மதிய வேளை ஓய்வில் இருந்தார்கள். யாரிடம் கேட்கலாம்? யோசனையாய் நின்று கொண்டிருக்க, தெருவில் போய்க் கொண்டு இருந்த ஒருவர் குரல் கொடுத்தார்.

"யாருப்பா அது? பூட்டுன வீட்டு முன்னால நின்னு என்ன பண்ணிட்டு இருக்கே?" - சற்றே அதட்டலாய் கேட்டவரைத் திரும்பிப் பார்த்தான்.

"ஸார்! இது சாரதியோட வீடு தானே"

"ஆமா! நீங்க யாரு"

"நான் அவரைப் பார்க்கணும். எங்கே போயிருக்காருன்னு தெரியுமா?"

"அதெல்லாம் சொல்லிட்டுப் போக மாட்டானே."

"எப்போ வந்தா பார்க்கலாம். கொஞ்சம் அவசரமாப் பார்க்கணும்"

"ரொம்ப அவசரம்னா போன் பண்ணி கேளுப்பா. அவன் ஒரு இடத்தில இருக்க மாட்டானே"

"ஸார்! அவரோட போன் நம்பர் உங்களுக்குத் தெரியுமா?"

"போன் நம்பரா? அதோ சுவத்தில அவனே எழுதி வெச்சிருக்கான் பாரு" என கை நீட்டிக் காட்டி விட்டு அவர் சென்று விட, சுவரை நெருங்கினான் விஷ்வா.

பக்கவாட்டு சுவற்றில் வெள்ளை நிற சாக்பீஸால் சற்றே கிறுக்கலாய் எழுதியதை வாசித்தான். "வீடு மனை விற்க வாங்க இங்கே அணுகவும் " - என எழுதி தன் பெயரையும் செல் நம்பரையும் குறித்து வைத்திருந்தான்.

தனது செல்லை எடுத்து அந்த நம்பரை அழுத்தி காதில் வைத்தான் விஷ்வா. முதலாவது பெல் அடித்ததுமே எடுத்தான் பார்த்தசாரதி.

"ஹலோ! யாரு?"

"ஸார். பார்த்தசாரதி தானே நீங்க?"

"ஆமா! நீங்க யாரு?"

"ஸார். எம் பேர் விஷ்வா. உங்களைப் பார்க்க வீட்டுக்கு வந்தேன்"

"நான் திண்டிவனத்தில இருக்கேனே. ஒரு இடம் பார்க்க பார்டியோட நிக்கிறேன். என்ன விஷயமா பார்க்க வந்தீங்க?"

விஷ்வா தயங்கினான். "ஸார். அது வந்து.. உங்ககிட்ட நேர்ல பேசினா நல்லா இருக்கும். நீங்க எப்போ வருவீங்க"

"ராத்திரி யாகுமே. என்ன விஷயம்னு சொல்லுங்க"

"அது.. வந்து உங்க மனைவி விஷயமா பேசணும்"

"ஏன்? அவளுக்கென்ன? நீங்கயாரு" - பார்த்த சாரதியின் குரலில் பதட்டம் தெரிந்ததும் விஷ்வா நிம்மதி யானான். இவர் இன்னும் மீராவை மறக்க வில்லை. அவளுக்கு ஒன்று என்றதும் பதறுகிறார். இது போதும். இனி தைரியமாகப் பேசலாம்.

"ஸார்! மீரா ரொம்ப நல்ல பொண்ணு ஸார். அவ மேல எந்தத் தப்பும் இல்ல. நாங்க தான்" ... "- என்றவனை பார்த்த சாரதியின் குரல் வெட்டியது.

"யாரு நீ?"

"நான்... மீராவைக் கடத்தினதுல ஒருத்தன்.."



"மத்த மூனு பேரு என்ன ஆனானுங்க?"

"ஸார்! நாங்க எல்லோருமே உங்களைப் பார்த்து மன்னிப்பு கேட்கணும்னு நாலு நாளா உங்களைத் தேடிட்டு இருந்தோம்"

"எதுக்கு?"

"தப்பு செய்தது நாங்க தான் ஸார். மீரா மேல எந்தத் தப்பும் கிடையாது"

"இதையெல்லாம் ஏன் எங்கிட்ட சொல்றே?"

"கோபப்படாதீங்க ஸார். மீராவோட நிலை இப்ப ரொம்ப மோசமா இருக்கு. உங்களை சமாதானப் படுத்தி அவளை உங்க கூட சேர்த்து வைக்கத்தான் நாங்க வந்தோம்"

"ஏன்? உங்களுக்கு அலுத்திட்டாளாக்கும்"

"ஸார்" - கோபமானான் விஷ்வா.

"என்னடா ஸார் மோரு. எப்பவோ ஓடின ஓடு காலியப் பத்தி பேசத்தான் போன் பண்ணியா? என்னை என்ன வேலை வெட்டி இல்லாதவன்னு நினைச்சியா. ஒழுங்கா ஊர் போய்ச் சேரு"

"ஸார் ப்ளீஸ். போனை வெச்சிடாதீங்க. நான் சொல்றதைக் கொஞ்சம் பொறுமையாக் கேளுங்க"

"உம் பேச்சை கேட்க வேண்டிய அவசியம் இல்லை"

"ஸார் ப்ளீஸ் ஸார். நாங்க திருப்பதி மேல உள்ள கோபத்தில தான் அவர் பொண்ணைக் கடத்தினோம். அது இவ்வளவு பெரிய பின் விளைவுகளை ஏற்படுத்தும்னு நினைக்கல்ல. மீரா ரொம்ப நல்லவ ஸார்"

"அப்போ அவளை நீயே கட்டிக்க"

"யோவ்! மனுஷனாய்யா நீ. அவ உம் பொண் டாட்டிய்யா" - வெடித்தான்

"அந்த உறவெல்லாம் எப்பவோ அத்துப் போச்சு இனிமே இந்த மாதிரி பேசிட்டு போன் பண்ணாதே வைடா போனை"

"ஸார்! அப்படிச் சொல்லாதீங்க. மீரா இன்னும் உங் களை மறக்கல்ல. நீங்க கட்டின தாலியோட உங்களுக்காக காத்திட்டு இருக்கா.

"நான் காத்திருக்கச் சொல்லலையே. அதைக் கழற்றாம ஏன் இருக்கிறாள்?

"பார்த்தசாரதி! தாலி ஒன்னும் விளையாட்டுப் பொரு ளில்லை. நினைச்ச உடனே கழற்றி எறிய"

"அடடா! உன்னோட பெரிய ரோதனையாப் போச்சே மவனே! ஒழுங்கா போனை வெச்சிடு. உன்னை மட்டும் நேர்ல பார்த்தேன் சங்கை அறுத்திடுவேன்."

"எங்களை என்ன வேண்டுமானாலும் பண்ணிக் கொள்ளுங்கள் ஸார். ஆனால் மீராவை ஏற்றுக் கொள் ளுங்கள். அவ ரொம்பப் பாவம்"

"ஏய்! என்னடா ஆச்சு உனக்கு? சொன்னதையே சொல்லிட்டு இருக்கே"

"மீராவைப் பார்க்க ரொம்ப சங்கடமா இருக்கு ஸார். அவளை ஒரு முறை நீங்க பார்த்தீங்கன்னா இப்படிப் பேச மாட்டீங்க"

"உனக்கு சொன்னாப் புரியாதா?"



"தயவு செய்து அவளை ஏத்துக்கங்க ஸார். ப்ளீஸ் ஸார். நீங்க கூட அங்கே வர வேண்டாம். நாங்களே கூட்டிட்டு வர்றோம். மறக்காதீங்க ஸார்"

"சரி. நான் என்ன சொன்னாலும் கேட்க மாட்டே. எனக்கு வேலை இருக்கு. இன்னொரு நாள் பார்க்கலாம்"

"நாளைக்கு கூட்டிட்டு வரவா ஸார்?"

"வேண்டாம். நாளைக்கு குலதெய்வம் கோவிலுக்கு போகணும்."

"அப்போ நாளை மறுநாள்?"

"அவசரப்படாதே. புதன் கிழமை கூட்டிட்டு வா"

"ஸார்" - சந்தோஷமாய் கூவினான் விஷ்வா.

"நிசமாத்தான் சொல்றேன். புதன்கிழமை காலையில ஒரு பத்து மணிக்கா கூட்டிட்டு வா."

"ரொம்ப... ரொம்ப நன்றி ஸார்"

"இருக்கட்டும். இப்ப போனை வை. இனிமே இப்படி போன் பண்ணித் தொந்தரவு பண்ணாதே"

"இல்ல ஸார். இனிமே டிஸ்டர்ப் பண்ணமாட்டேன். நீங்க சம்மதிச்சதே பெரிய விஷயம். மீரா கேட்டால் ரொம்ப சந்தோஷப் படுவாள். நான்..." -விஷ்வா பேசிக் கொண்டிருக்கும் போது லைன் கட்டானது.

போனைப் பார்த்து விட்டு ஆப் பண்ணினான். மனம் முழுக்க மகிழ்ச்சி அலையடித்தது. " எப்படி பயந்து போய் வந்தோம். போனிலேயே மசிந்து விட்டானே. மீரா! இனி உன் வாழ்க்கையில் துன்பமில்லை. உன் கணவருடன் சேரப் போகிறாய்.

கண்ணா! நம் மன பாரம் நீங்கப் போகிறது. எல்லாம் சந்தோஷமாக திருப்தியாக நடக்கப் போகிறது. இதோ இப்போதே மீராவைப் பார்த்து விஷயத்தைச் சொல்ல வேண்டும். அதற்கு முன் கண்ணனுக்கு போன் பண்ணி திரும்பி வரச் சொல்ல வேண்டும்"

வேகமாய் உற்சாகமாய் நடந்து ஆட்டோவை நெருங்கினான். மரத்தடியில் வீற்றிருந்த விநாயகனை கை கூப்பி வணங்கினான். "தேங்க்ஸ் பிள்ளையாரப்பா எல்லாம் உன் செயல்" - நன்றி உரைத்து விட்டு ஆட்டோவில் ஏறினான்.

"பஸ் ஸ்டாண்ட் போப்பா" - என்றவாறு போனை எடுத்து கண்ணனுக்கு போன் செய்தான்.

## 13

மீராவிற்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை. மீண்டும் கேட்டாள்.

"விஷ்வா! அவர் கிட்ட தான் பேசுனீங்களா?"

"ஆமாம் மீரா. இன்னுமா நம்பல்ல நீங்க? நான் தான் பேசினேன்"

"அவர்- அவர் என்னை கூட்டிட்டு வரச் சொன்னாரா? என்னால் நம்பவே முடியவில்லை."

"நம்புங்கள் மீரா. இனி நீங்கள் எதற்கும் கவலை வேண்டாம். உங்க கஷ்டமெல்லாம் உங்களை விட்டு நீங்கப் போகிறது?"



"தம்பி! அவர் கோபமே படலையா? " - சரோஜினி கேட்டாள்.

"முதல்ல கோபமாத்தான் பேசினார் மேடம். ஆனா நான் விடுவதாக இல்லை. ரொம்பப் பொறுமையா திரும்ப திரும்ப மீராவைப் பற்றியே பேசினேனா! அவரால மறுக்க முடியல்ல"

"என்ன சொன்னார்?"

"நாளைக்கு ஏதோ குல தெய்வம் கோவிலுக்கு போகணுமாம். அதனால் புதன் கிழமை காலையில கூட்டிட்டு வரச் சொன்னார்" - விஷ்வா சந்தோஷமாகச் சொல்ல, சரோஜினி மீராவிடம் திரும்பினாள்.

"மீரா! புதன் கிழமையாம். பாரேன். உன்கணவர் நல்ல நாளாய் பார்த்து தான் வரச் சொல்லியிருக்கிறார்"

"மேடம்! எனக் கென்னவோ நம்ப முடியல்ல"

"மீரா! நான் தான் இத்தனை உறுதியாய்ச் சொல்கிறேனே"

"அதற்கில்லை விஷ்வா. அவர் என் மீது ரொம்ப கோபமா இருந்தாரே."

"அது அப்போ. இந்த ரெண்டு வருஷத்தில நீங்க எவ்வளவு வேதனைப் பட்டிருப்பீங்க. அதே வேதனை அவருக்கும் இருக்காதா? கடைசியில் கண்ணன் சொன்னது தான் உண்மையாகிப் போச்சு. அவரும் உங்களை தேடிட்டு தான் இருந்திருக்கார்" - விஷ்வா அடித்துக் கூறியதும் மீரா மௌனமானாள்.

நம்பவும் முடியாமல் மறுக்கவும் முடியாமல் மனம் தடுமாறியது. கண்ணன் சொன்னது போல, விஷ்வா சொல்வது

போல் அவரும் என்னைத் தேடிக் கொண்டு தான் இருந் தாரா! என்னை நினைத்து வருந்திக் கொண்டு தான் இருந்தாரா!

அன்று இருந்த மன நிலையில் தாறு மாறாய் பேசி விட்டு அதற்காக வருந்தியிருப்பாரோ? என்னைத் தேடி நான் கிடைக்காமல் போனதால் எனக்காக காத்திருந்தாரோ? நான் இத்தனை நாளாய் பட்ட துன்பங்களுக்கு விடிவு ஏற்பட்டுவிட்டதா?

கைகள் நடுங்க தன் மாங்கல்யத்தை எடுத்து கண் களில் ஒற்றிக் கொண்டாள். ஏதோ ஒரு நம்பிக்கையில் தானே இதை இத்தனை நாள் சுமந்திருக்கிறேன். இது வெறும் கயிறல்ல. கணவனையும் மனைவியையும் இணைத்துக் கட்டியிருக்கும் பந்தம். பாசக்கயிறு.

கண்களில் நீர் சுரந்தது. விஷ்வாவைப் பார்த்து கை கூப்பினாள். "விஷ்வா! உங்களுக்கு நான் என்ன கைமாறு செய்யப் போகிறேன்?"

"என்ன மீரா. இப்படிப் பேசுறீங்க? எங்களால உங்க ளுக்கு எவ்வளவு கஷ்டம். ஏதோ இந்த அளவாவது செய்ய முடிந்ததே என்று பெருமைப் படுகிறோம். இனி மேல் நீங்கள் கண் கலங்க வேண்டாம்"

புன்னகையோடு தலையசைத்தாள்.

"நான் உங்களைப் பற்றித்தான் பயந்து போயிருந் தேன்"

"ஏன்?"

"அவர் சம்மதித்து விட்டார். நீங்கள் மறுத்து விடுவீங் களோ என்று தான்."



"இந்த நான்கு நாட்களாய் ஒரு பெண்ணுக்கு கணவன் எவ்வளவு முக்கியம் என்று மணிக்கணக்காய் பேசி அவளை மாற்றியிருக்கிறேன். நீ மீண்டும் நினைவு படுத்தாதே" - சரோஜினி கண்டிப்பாய் கூறினாள்.

"உண்மை தான் மேடம். அம்மா இல்லாத எனக்கு ஒரு தாயாய் அறிவுரை சொல்லி என் மனதைத் தேற்று கிறீர்கள். என் அம்மா இருந்தாலும் இப்படித்தான் சொல்லி யிருப்பார்கள்"

"மீரா! எந்த வீட்டில் தான் கணவன் மனைவிக் கிடையே சண்டை சச்சரவு இல்லை? எல்லோர் வீட்டிலும் வரும். வந்த வேகத்தில் மறைந்து விட வேண்டும். வளர விட்டால் ஆபத்து.

எத்தனையோ பெண்களைக் குடிகாரக் கணவன்கள் அடித்து உதைப்பதைப் பார்க்கிறோம். ஆனால் மறு நாளே பார். அவர்கள் ஒற்றுமையாய் சிரித்துப் பேசுவார். அது தான் வாழ்க்கை"

"அப்போ அடித்தாலும் உதைத்தாலும் வாங்கிக் கொண்டு கணவன் காலடியில் கிடக்க வேண்டும் என்கிறீர்களா மேடம்?"

"அசடே! அப்படிச் சொல்வேனா? கணவனைக் கைக்குள் போட்டுக் கொள்ள வேண்டும் என்கிறேன். அவன் கோபமாய் கத்தும் போது நீ அமைதியாய் இருந்து விடு. அவன் அமைதியாய் இருக்கும் போது நீ உன் பக்க நியாயத்தை எடுத்துச் சொல்லு"

"எத்தனை கணவன்கள் பொறுமையாய்க் கேட்கி றார்கள்?"

"கேட்க வைப்பது தான் சாமர்த்தியம். இல் வாழ்க்கை அழகானது மட்டு மல்ல மீரா அபாயமானதும் கூட. நாம் சாமர்த்தியமாய் கையாண்டால் வாழ்க்கை இனிக்கும் பதிலுக்கு பதில் வாதாடி சண்டையிட்டு பிரச்சனையை வளர்த்தால் வாழ்க்கையே நரகமாகி விடும்.

அதனால தான் சொல்றேன். பொறுமையா இரு பொறுமை தான் மிகப் பெரிய ஆயுதம். அந்த ஆயுதம் உங்கிட்ட இருக்கும் வரை உனக்கு எந்த கஷ்டமும் வராது உன் பொறுமையால் உன் கணவரை மாற்று. பழைய கதையைப் பேசி உன் மனதையும் புண்படுத்தி அவரையும் வதைக்காதே.

நடந்ததையெல்லாம் ஒரு கெட்டகனவாய் நினைத்து மறந்து விடு. புதிதாய் திருமணம் ஆகியிருப்பதாய் எண்ணிக் கொள். இனி உன் வாழ்க்கை இனிதாய் அமையும். கசப்பானவற்றை கனவிலும் நினையாதே.

"முயற்சிக்கிறேன் மேடம்"

"இன்னும் ரெண்டு நாள் தான் இருக்கு. எல்லாத் தையும் மறந்திட்டு உற்சாகமான மீராவா மாறிடு. உன் புருஷன் உன்னைப் பார்த்ததும் அசந்து போயிடணும்"

லேசாய் புன்னகைத்தாள் மீரா. அப்போது தான் உள்ளே நுழைந்த கண்ணன் மீராவின் புன்னகையில் தன்னை மறந்தான். எத்தனை அழகு என் மீரா! இவளை தூக்கியெறிய எப்படி மனம் வந்தது அவனுக்கு.

பொக்கிஷமல்லவா இவள். இவள் மீது வெயில் மழை படாது துன்பம் நெருங்காமல் துளி கண்ணீர் சிந்த விடாமல் காப்பவன் தானே கணவன்? அந்த பார்த்த சாரதிக்கு எப்படி இவள் அருமை தெரியாமல் போனது?



அசையாமல் நின்றவனை கோபி உசுப்பினான். "கண்ணா! என்ன நின்னுட்ட? எல்லாரும் பார்க்கிறாங்க பார்"

சட்டென உணர்வு பெற்றான் கண்ணன். "என்ன கண்ணா! அங்கேயே நிற்கிற. வாப்பா" - பரிவாய் அழைத்தார் சரோஜினி.

"வந்திட்டேன் மேடம். மீரா! கோவிலுக்குப் போயி ருந்தோம் பிரசாதம் எடுத்துக்கோ" - கையிலிருந்த அர்ச் சனைக் கூடையை அவளிடம் கொடுத்தான். பயபக்தி யோடு வாங்கி கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

"இன்னிக்கு என்ன விசேஷம் கண்ணன்?"

"சும்மா தான். உங்கள் பெயருக்கு அர்ச்சனை பண்ணினோம். புதிய வாழ்க்கை தொடங்கப் போகிறீர் களே. அதற்காகத் தான்"

"கண்ணா! நீங்கள்லாம் யாரு? எனக்கும் உங்க ளுக்கும் என்ன சம்பந்தம். உங்களுக்கு இருக்கும் அக் கறை என்னைப் பெற்றவருக்கும் உடன் பிறந்தவர் களுக்கும் இல்லையே" - கண்கள் கசிந்தன.

"மீரா! கண் கலங்காதீர்கள் ப்ளீஸ்"

"இல்லை கண்ணா! அப்பாவின் குணம் எப்போதுமே அப்படித்தான். ஆனால் என் அண்ணன் கூட எனக்காக வரவில்லையே. ஒரு வார்த்தை பேச வில்லையே"

"என்ன? உங்களுக்கு அண்ணன் இருக்கிறாரா?"

"ஆமாம். பெங்களூரில் இருக்கிறார். பெரிய வேலை."

"உங்கள் அண்ணனுக்கு நடந்தவை தெரியாதா?"

"தெரியும். அம்மாவின் மரணத்திற்கு வந்திருந்தாரே"

"அவர் கூடவா உங்கள் அப்பாவிடம் எதிர்த்துக் கேட்கவில்லை"

"அப்பா என்னைப் பற்றி அண்ணனிடம் என்ன சொன்னாரோ தெரியவில்லை. ஆனால் அண்ணன் என்னைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை"

"இப்படிக் கூடவா இருப்பார்கள்?" - கண்ணன் வெறுப்பாய் கூற கோபி இடை மறித்தான்.

"அப்பனுக்கு புள்ள தப்பாம பொறந்திருக்கான்"

"மீரா! உங்கள் அண்ணனின் போன் நம்பர் இருந்தால் கொடுங்கள். அவனை நாலு வார்த்தை கேட்கவேண்டும்"

"இல்லை விஷ்வா. இங்கு வந்த கொஞ்ச நாளில் நானே அண்ணனிடம் போன் பேசினேன்."

"என்ன சொன்னார்?"

"அவருடைய கம்பெனியின் முதலாளி பெண்ணை என் அண்ணனுக்கு மண முடிக்க கேட்டிருக்கிறாராம். இந்த சமயத்தில் என்னை ஏற்றுக் கொண்டால் அது பெரிய அவமானமாம். கேட்பவர்களிடம் பதில் சொல்ல முடியாதாம்"

"ச்சே! மனிதம் செத்து விட்டது. மனிதர்களின் மனம் பாலை வனமாகிப் போச்சு" - கடுப்பாய் கூறினான் விஷ்வா.

"இல்லை. முழுவதும் மடிந்து விடவில்லை. உங்களைப் போல் உள்ளவர்களிடம் இன்னும் மனிதம் இருக்கிறது."

"மீரா!"



"ஆமாம் கண்ணா! என்னைப் பெற்றவர்களும் உற்றவர்களும் ஒதுக்கிய போதும் இழந்த என் வாழ்க்கையை மீட்டுக் கொடுக்க எவ்வளவு கஷ்டப்பட்டீர்கள்."

"அது எங்கள் கடமை மீரா"

"இருந்தாலும்.. நீ எக்கேடோ கெட்டுப்போ என நீங்களும் ஒதுங்கிப் போயிருக்கலாமே"

"அது எங்களால் முடியாது மீரா."

"கண்ணன்"

"சரி. மற்றதை விடுவோம். இனி நடப்பதைப் பேசுவோம். மேடம்! ஒரு பொண்ணு புகுந்த வீட்டுக்கு போகும் போது என்னென்ன சீர்வரிசை கொண்டு போகணுமோ அதையெல்லாம் ஒரு லிஸ்ட் போடுங்க"

"எதுக்குப்பா?"

"எதுக்கா? மீராவை வெறும் கையோடா மாப்பிள்ளை வீட்டுக்கு அனுப்ப முடியும்? சீர் செய்ய வேண்டாம்?"

"ஐயோ! அதெல்லாம் எதுக்கு?" - மீரா அவசரமாய் மறுத்தாள்.

"நீங்கள் சும்மாயிருங்கள் மீரா. இது எங்கள் விருப்பம். நீங்கள் தலையிடக் கூடாது. நீங்கள் லிஸ்ட் போடுங்கள் மேடம்"

"கண்ணா! நாம லிஸ்ட் போட வேண்டாம். பாத்திரக் கடையில போய் சீர் வரிசை சாமான்னு கேட்டாப் போதும். கட்டு, டம்ளர்ல இருந்து கட்டில் பீரோ வரைக்கும் அவங்களே தந்திடுவாங்க"

"என்ன மேடம்! நீங்களும் அவங்களோட சேர்ந்து விட்டு..."

"மீரா! இது உங்கள் பிறந்த வீட்டு சீர். மறுக்கக் கூடாது. இது மட்டுமில்ல. இனிமே பொங்கல், தீபாவளி, சீமந்தம், காது குத்துன்னு எந்த விசேஷம் என்றாலும் மேடத்தோட தலைமையில நாங்க பண்ணுவோம்"

"என்ன சொல்றீங்க?"

"இனிமே நாங்க தான் உங்க பிறந்த வீடு. எங்களால தானே அந்தச் சொந்தம் உங்களுக்குக் கிடைக்காமப் போச்சு" - கண்ணனின் கண்கள் கலங்கின.

"நானே அதை மறந்திட்டேன். நீங்க ஏன் கண் கலங்குறீங்க?

"ம். இப்படித்தான் ஈஸியா எடுத்துக்கணும். இனிமே நடக்க வேண்டியதைப் பார்க்கலாம். நாங்கள் கிளம்புகிறோம்"

"மேடம் புதன் கிழமை காலையிலேயே மீராவை ரெடி பண்ணிடுங்க. எட்டு மணிக்கெல்லாம் நாங்க வந்திடுறோம். நாம எல்லாரும் போய் விட்டுட்டு வருவோம்"

"சரிப்பா"

"மீரா! சந்தோஷமா இருங்க. வரட்டுமா?"

"ம்" -புன்னகையோடு தலையசைத்தாள்.

"மீரா முகத்தில் எத்தனை பிரகாசம். பார்த்தாலே கண் கூசுதே"-கண்ணன் கண்களைச் சுருக்கியவாறே சொல்ல நாணத்தோடு உள்ளே சென்று மறைந்தாள் மீரா.

சின்னச் சிரிப்போடு மற்றவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு காரில் திரும்பும் போது கோபி கேட்டான்.

"கண்ணா! நீ உண்மையாவே சந்தோஷமா இருக்கியா?"



"இது என்ன கேள்வி? பார்த்தாத் தெரியலை. ரொம்ப சந்தோஷமா இருக்கேன்"

"பொய் சொல்லாதேடா. மீராவை இழந்த வேதனை உனக்கு இல்ல?"

"கோபி வாயை மூடு. மீரா இப்போது இன்னொருவனின் மனைவி."

"ஆனால்... உன் மனசில் இன்னும் அவ இருக்கா"

"இருக்கட்டுமே. யாருக்கும் தெரியாமல் இருக்கட்டும்"

"கண்ணா! மீரா மீரான்னு ராத்திரியெல்லாம் தூங்காம புலம்பிட்டே இருப்பியே. உன்னால எப்படிடா முடியும்?"

"விஷ்வா. நான் விரும்பியது என் மீரா. இப்போ பார்க்கிறது திருமதி. பார்த்தசாரதி. நாம இப்படிப் பேசுறதே தப்பு."

"இல்லடா எங்களுக்கே கஷ்டமா இருக்கே உனக்கு."

"விஷ்வா. மீரா எத்தனை கஷ்டங்களை அனுபவிச்சிட்டு இப்போ கணவனோட சேரப் போறா. இந்த நேரம் நான் கஷ்டப்படலாமா?"

"அதுக்கில்லடா..."

"நீ எதைப்பத்தியும் பேசாதே. மீரா நல்லா வாழணும். வாழுவா. அதை பார்ப்பதே போதும் எனக்கு. வேற எந்த சந்தோஷமும் வேண்டாம்"

கோபியும் விஷ்வாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"அப்போ... உனக்கு வேற ஒரு பொண்ணு பார்ப்போமா?"

"நீ எப்போ கல்யாண புரோக்கர் ஆனாய் கோபி?"

"பேச்சை மாத்தாதே. கேட்டதற்கு பதில் சொல்லு"

"எனக்கு எதுக்குடா கல்யாணம்?"

"என்ன கன்னா இப்படி சொல்லிட்ட? உன் அம்மா போன் பண்ணும் போதெல்லாம் மறக்காம பேசற ஒரே வார்த்தை உன் கல்யாணம் தானே"

"ம்ப்ச்! விடுடா"

"அதெப்படி விட முடியும்? இது வரைக்கும் மீரா கிடைப்பா, அவளைத்தான் கட்டிப்பேன்னு சொல்லி நாளைக் கடத்திட்டு வந்தே. இப்போ மீராவும் உனக்கு இல்லன்னு ஆகிப்போச்சு." - சங்கடமாய் நிறுத்தினான் கோபி.

"கண்ணா! மீராவை நினைச்ச மனசில யாருக்குமே இடமில்லன்னு சினிமா டயலாக் விடப்போறியா?" - கேட்ட விஷ்வாவை முறைத்தான்.

"அப்படியெல்லாம் சொல்ல மாட்டேன்"

"பின்னே?"

"மனசுல நினைச்சது நினைச்சது தான். அதை மாத்தவும் மாட்டேன். மறக்கவும் மாட்டேன்"

"இதுக்கு என்ன அர்த்தம்?"

"பெரிய அறிவாளிங்க தானே. நீங்களே கண்டு பிடிங்க"

"அப்போ கடைசி வரை கல்யாணமே பண்ணிக்க மாட்டியா?"



"விஷ்வா! மேரேஜ் மட்டும் வாழ்க்கை இல்லடா. அதையும் தாண்டி எத்தனையோ இருக்கு. நாம இன்னும் நிறைய சாதிக்கணும். முன்னேறணும். இனிமே மீராவிற்கு தேவையானதை நாம தான் செய்யணும். அதோட நம்ம வருமானத்தில ஒரு பங்கை சரணாலயத்திற்கு கொடுக்கணும். அதுக்காக நாம இன்னும் உழைக்கணும்"

"இதையெல்லாம் கல்யாணம் பண்ணிட்டும் செய்ய லாமே"

"வேண்டாம் விஷ்வா. மனசுல ஒருத்தியோட நினைப்பை வெச்சிகிட்டு இன்னொரு பெண்ணோட போலியா வாழ முடியாது. எதற்காக ஒரு பெண்ணின் வாழ்க்கையை வீணாக்க வேண்டும்?"

"அப்போ இப்படியே இருந்திடுவியா?"

"ம். இது தான் எனக்குப் பிடிச்சிருக்கு"

"இதெல்லாம் முடியாதுடா?"

"ஏன்டா முடியாது? நம்ம சரோஜினி மேடத்துக்கு இப்போ வயசென்ன தெரியுமா?"

"என்ன! ஒரு அம்பது இருக்கும்"

"இல்லடா. அம்பத்தியெட்டு வயசு"

"சரி. அதுக்கென்ன இப்போ?"

"அவங்களோட பதினெட்டு வயசுல சொந்த மாமா பையனையே விரும்பியிருக்காங்க. கல்யாணம் வரை வந்த பிறகு அவங்க அத்தை ஒத்துக்கலையாம்"

"ஏனாம்?"

"அவங்க அத்தையோட அண்ணன் மகளுக்கும் அந்த மாப்பிள்ளை மீது ஆசையாம். இவர் கிடைக்க வில்லை யென்றதும் தற்கொலை செய்யப் போனதாம். அதைக் காப்பாற்றி தன் மகனைக் கட்டி வைப்பதாக வாக்கு கொடுத்து விட்டார்களாம்"

"பாவம் அந்த மாப்பிள்ளை. அவர் என்ன பொம்மையா? நினைத்த உடன் தூக்கிக் கொடுக்க?"

"அந்தப் பெண்ணின் கண்ணீரைக் கண்டு மேடமே விட்டுக் கொடுத்து விட்டார்களாம்."

"அப்போ அந்த மாப்பிள்ளையோட மனசை யாரும் பார்க்கல்ல. மேடம் தியாகி ஆகிட்டாங்க. அவங்க அம்மா தன் அண்ணன் மகளுக்கு வாழ்க்கை கொடுத்திட்டாங்க. அந்தப் பொண்ணுக்கு கூட நினைச்ச படி வாழ்க்கை அமைஞ்சிடுச்சு. ஆனா.. அந்த மாப்பிள்ளையோட மனசை யாரும் புரிஞ்சுக்கல்ல"

"கோபி! நீ டாபிக்கை மாத்தாதே. நான் சொல்ல வந்த விஷயமே வேறு"

"சொல்லு. சொல்லு"

"அந்த பதினெட்டு வயசுல இருந்து தன் மனசுல நினைச்சவனை இன்னும் மறக்காம வேற ஒருத்தரை ஏற்றுக் கொள்ளவும் முடியாம மேடம் தனியாவே வாழ்ந்திட்டு இருக்காங்களே. என்னால வாழ முடியாதா?

"கண்ணா! இதற்காகவா இந்தக் கதையைச் சொன்னாய்?"

"ஒரு உதாரணம் காட்டினேன். மற்றபடி இந்த ஜென்மத்தில் கல்யாணம் செய்து கொள்ளும் எண்ணம் எனக்



கில்லை. இனி அதைப் பற்றி பேச வேண்டாம். முதலில் மீராவை கணவர் வீட்டில் விடும் வேலையைப் பார்ப்போம்" - என பேச்சை முடித்தான்.

# 14

புதன் கிழமை. சரணாலயம் முழுக்க சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. பட்டுடுத்தி தலைநிறைய பூச்சூடி நெற்றிக்கு குங்குமம் இட்டு மீராவை அழகு படுத்தினர் இரண்டு பெண் மணிகள்.

கணவர் வீட்டிற்கு செல்பவளை சும்மா அனுப்பக் கூடாது என்று அதிரசமும் முறுக்கும் செய்து அவற்றை பாத்திரங்களில் அடுக்கிக் கொண்டிருந்தாள் பரிமளம்.

புதிதாய் சூட்கேஸ் வாங்கி அதில் புதுப் புடவைகளை அடுக்கி வைத்தாள் கருத்தம்மா. "மீரா! இனிமே எங்களைப் பார்க்க வருவியா?" - ஆவலாய்க் கேட்டாள்.

"கண்டிப்பா வருவேன் கருத்தம்மா. மாசத்துல ஒரு முறை யாவது அவரைக் கூட்டிட்டு வரச் சொல்றேன்"

"மீரா! சீக்கிரமே குழந்தை பெத்துக்க அப்பத்தான் குடும்பப்பிணைப்பு இறுகும்."

"நீ எப்போ கிழவி ஆனே?"

"இதெல்லாம் பெரியவங்க சொல்ற வார்த்தை தானே. உனக்கு நான் சொல்லித் தர்றேன்"

"சரி பாட்டி. நீ சொன்னா மறுக்க முடியுமா?"

"அப்புறம் மீரா. அவர் மனசு போல நடந்துக்
சந்தோஷமா இரு"

"போதும் கருத்தம்மா. இதையே எல்லாரும் நூ
வாட்டி சொல்லிட்டீங்க."

"ஆமா! இன்னும் அவங்க வரலியே. மணி எட்
குதே"

"எட்டு மணிக்குத் தானே வர்றதாச் சொன்னாங்
இனிமே தான் வருவாங்க"

"மீரா! போனதும் போன் பண்ணு"

"சரிப்பா"

"ஏய்! ஆட்டோ சத்தம் கேட்குது. ஆட்டோவி
வர்றாங்க" - கருத்தம்மா அறையை விட்டு வெளியே
பின்னால் வந்த மீரா இன்பமாய் அதிர்ந்தாள்.

ஆட்டோவை விட்டு இறங்கிக் கொண்டிருந்
கௌரி. தயக்கமாய் இறங்கியவள் மீராவின் முகத்
பார்த்ததும் மலர்ந்தாள்.

"அக்கா"

ஓடி வந்து தங்கையை அணைத்துக் கொண்டாள் மீ
"கௌரி! எப்படிம்மா இருக்கே? நான் இங்கே இ
கேன்னு உனக்குத் தெரியுமா?"

"இல்லக்கா. இதுக்கு முன்னால தெரியாது. அன்னி
விஷ்வான்னு ஒருத்தர் தான் பாண்டிச்சேரியில என்
பார்த்து சொன்னார்"

"எங்கிட்ட அவர் சொல்லவே இல்லையே"



"நான் உன்னைப் பார்க்க வர மாட்டேன்னு நினைச்சிருப்பார். உன்னிடம் சொன்னால் நீ என்னை எதிர் பார்த்து ஏமாந்து விடக் கூடாதுன்னு நினைச்சிருப்பார்"

"நீ எப்படி வந்தே கௌரி. வா. முதல்ல உள்ளே வா"

"மீரா! இது உன் தங்கையா? உன்னாட்டமே இருக்கு"

"கருத்தம்மா. கௌரிக்கு காபி கொண்டு வாயேன்"

"இதோ. இப்பவே கொண்டு வர்றேன்" - கருத்தம்மா விலகியதும் தங்கையை அமர வைத்து ஆசையாய் வருடினாள் மீரா. கண்கள் பனித்தன.

"அக்கா! எப்படிக்கா இருக்க?"

"ம். இருக்கேன்"

"அக்கா! ஏதேனும் கல்யாணத்துக்குப் போறியா?"

"உங்க அக்கா தன்னோட புகுந்த வீட்டுக்கு போக ரெடியாயிட்டு இருக்கா" என்றவாறு காபியைக் கொண்டு வந்தாள் கருத்தம்மா.

"அக்கா! நிஜமாவாக்கா?"

"ம். மொதல்ல காபியைக் குடி"

"அதெல்லாம் பிறகு குடிக்கலாம். மாமாவே வர்றாரா?"

"இல்ல. அன்னிக்கு உங்கிட்ட பேசினாரே. அவர் தான் மாமாகிட்ட பேசினாராம். இன்னிக்கு என்னைக் கூட்டிட்டு வரச் சொன்னாராம்" - மீரா வெட்கம் கலந்த புன்னகையோடு கூற மலர்ந்தாள் கௌரி.

"போதுங்க்கா. இந்த சந்தோஷம் போதும். இனிமே நான் நிம்மதியா கல்யாணம் பண்ணிப்பேன்"

"என்னடி சொல்றே?"

"ஆமாங்க்கா. அண்ணன் வேலைபார்க்கிற கம்பெனி யோட முதலாளி அவரோட பொண்ணையே அண்ண னுக்கு பேசி முடிச்சாரில்ல?"

"கல்யாணமே முடிஞ்சிடுச்சா?"

"இல்லக்கா. பொண்ணு ஏதோ பெரிய படிப்பு படி சிட்டு இருந்ததாம். படிப்பு முடிஞ்சதும் கல்யாணம்னு நிச்சயம் பண்ணிட்டாங்க"

"பொண்ணு எப்போ படிப்பை முடிக்குதாம்?"

"போன மாசமே முடிச்சுட்டாங்களாம்- அடுத் மாசம் கல்யாணம்னு தேதி குறிச்சு பத்திரிகையும் அடி சாச்சு"

"உன் கல்யாணத்தைப் பத்தி அப்பா எதுவு பேசலையா?"

"அண்ணன் பிரெண்ட் பெங்களூர்ல இருக்காரா அவருக்கே என்னை முடிச்சிடலாம்னு அப்பாவு அண்ணனும் பேசிட்டாங்க"

"நீ மாப்பிள்ளையைப் பார்த்தியா?"

"இல்லக்கா! எல்லாம் கல்யாணத்தோட பார்த்து கலாம்னு சொல்லிட்டாங்க"

"அப்போ கல்யாணம் முடிவாகிடுச்சா?"

"அண்ணன் கல்யாணத்துக்கு ஒரு வாரம் முன்ன என் கல்யாணம்"

"ம்ஹீம். இப்பவாவது சொல்லணும்னு தோணிச்சே - விரக்தியாய் புன்னகைத்தாள்.



"அக்கா! நீ எங்கே இருக்கேன்னு எனக்குத் தெரியாது. அதோட என் படிப்பையும் அப்பா நிறுத்திட்டதாலே வெளியே எங்கும் போக முடியல்ல. இப்பக்கூட அப்பாவுக்குத் தெரியாமத்தான் வந்தேன்."

"நீ இன்னிக்கு வந்ததும் நல்லது தான். இல்லேன்னா உன்னைப் பார்த்திருக்க முடியாது."

"அக்கா! என் கல்யாணத்தை நீ பார்க்க முடியாது. என்னை ஆசிர்வாதம் பண்ணுக்கா" - காலில் விழுந்த தங்கையை மனதார ஆசிர்வதித்து நெற்றியில் முத்தமிட் டாள்.

"ஏம்மா. கல்யாணத்துக்கு கூட உங்க அக்காவை கூப்பிட மாட்டாரா உங்க அப்பா" - கருத்தம்மா கேட்டதும் சிரித்தாள் மீரா.

"எங்க அம்மாவோட சாவையே பார்க்க விடல்ல என் அப்பா. கல்யாணத்திற்கா கூப்பிடப் போகிறார்? எனக்கு அந்த ஆசையெல்லாம் இல்ல கருத்தம்மா"

"அக்கா! இன்னும் பத்து நாள்ல பெங்களூர் போகப் போறோம்"

"போயிட்டு வாங்க. சந்தோஷமா இரு"

"இனிமே அப்பாவும் அங்கேயே இருந்திருவாராம்"

"இருக்கட்டும்"

"நீ எப்போக்கா மாமா வீட்டுக்குப் போற?"

"இன்னும் கொஞ்ச நேரத்தில..."

"இன்னிக்கா?"

"ஆமா! ஏன்?"

"அக்கா! இன்னிக்கு அம்மாவோட நினைவு நாள்."

பகீரென்றது மீராவிற்கு. இன்று என் தாயின் நினைவு நாளா? இன்று தான் அந்தக் கொடிய நாளா? இது தான் விதியா? எந்த நாளில் என்னை நிராதரவாய் தெருவில் விட்டுவிட்டுப் போனாரோ அதே நாளில் தன்னுடன் சேர்ந்து கொள்ள அழைத்தாரா?

அவர் சேர்த்துக் கொண்டார். ஆனால் என் அம்மா? அம்மா திரும்பக் கிடைப்பாளா? கண்ணே மணியே என்று கொஞ்சிய அன்னை நெஞ்சைப் பற்றிக் கொண்டு தரையில் சரிந்த காட்சி கண்முன் வந்து நின்றது. என் தாயின் உயிர் யாரால் பிரிந்தது? அவனால் தானே. கணவன் என்று வந்த கயவனின் கொடுஞ் சொற்கள் தானே என் தாயின் உயிரைப் பறித்தது.

இதை எப்படி மறந்து போனேன்? அவன் பேசிய வார்த்தைகளை மறந்து விடச் சொன்னார்கள். ஆனால் என் தாயின் இழப்பை, கடைசி நேரத் துடிப்பை, உயிரற்று சரிந்த நொடியை எப்படி என்னால் மறக்க முடியும்? மறந்து அவனுடன் எப்படி வாழ முடியும்.

அவன் முகத்தைப் பார்க்கும் போதெல்லாம் அவனது பேச்சு நினைவில் வராதா? என் தாயின் இழப்பின் தாக்கம் என் மனதை அரிக்காதா? இப்படி ஒரு வாழ்க்கை வாழ்ந்து தான் ஆகவேண்டுமா?

இல்லையென்றால் இந்த சமூகம் தன்னை வாழா வெட்டி என்று பழிக்குமாமே. அன்று என்னை நடுத் தெருவில் விட்டு விட்டுப் போனானே அப்போது இந்த சமூகம் அவனை ஒன்றும் சொல்ல வில்லையே. மாறாக



வேடிக்கை தானே பார்த்தது. தட்டிக் கேட்க ஒருவர் கூட வரவில்லையே.

இந்த சமூகத்திற்கு பயந்தா அவனது தாலியை சுமந்து கொண்டிருக்கிறேன். இந்த சமூகம் சுமத்தும் பழிக்கு அஞ்சியா அவனுடன் வாழ சம்மதித்து இதோ ஆயத்த மாகி நிற்கிறேனே. ச்சே! இப்படி அனைத்தையும் மறந்து மனத்தை கல்லாக்கி உடலையும் மனதையும் மரத்துப் போகச் செய்து விட்டு ஒரு வாழ்க்கை வாழ வேண்டுமா?

"மீரா! அவங்க வந்தாச்சு. பாரேன் ஒரு வேன் நிறைய உனக்கு சீர்சாமான் வந்திருக்கு "- கருத்தம்மா வாயைப் பிளக்க, நிமிர்ந்தாள் மீரா.

மினிலாரி நிறைய புத்தம் புதிய பாத்திரங்கள், கட்டில், பீரோ, மிக்ஸி, கிரைண்டர் என் கொண்டு வந்து நிறுத்தி யிருந்தனர்.

"அக்கா! நம்ம அப்பா கூட உனக்கு இவ்வளவு சீர் தரலையே. நீ கொடுத்து வெச்சவக்கா. அம்மாவை நல்லா கும்பிட்டுட்டு கிளம்பு" – கௌரி உசுப்பினாள்.

'அம்மாவைக் கும்பிட்டு விட்டுக் கிளம்புவதா? எப்படி? அம்மா நீ உயிரை விடக் காரணமான ஒரு கொலைகாரனுடன் குடும்பம் நடத்தப் போகிறேன். என்னை ஆசிர்வதித்து அனுப்பு என்றா கேட்பது?'

"அக்கா! நல்ல நேரம் முடியறதுக்குள்ள போகணு மாம். போ"

"ம்?" - திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

"மீரா! வாங்க. பத்து மணிக்குள்ள நாம அங்கே இருக்கணும்" - காரில் இருந்தே கண்ணன் குரல் கொடுத் தான்.

"அக்கா! சந்தோஷமா போயிட்டு வா. நானும் கிளம்பறேன். அப்பா வர்றதுக்குள்ள போயிடணும்"

"அப்பா! எங்கே போயிருக்கார்?"

"அம்மாவுக்கு திதி கொடுக்கப் போயிருக்கார்" - வேதனையோடு சொன்னவளைப் பார்த்துத் திகைத்தாள் மீரா.

"சரி. நீ கிளம்பு"

"நீ முதல்ல போக்கா. உன்னை அனுப்பிட்டு நான் போறேன்"

"இல்ல நீ கிளம்பு. நான் கிளம்ப கொஞ்ச நேரமாகும்"

"அக்கா. மணி எட்டு"

"நீ கிளம்பு கௌரி" - குரலை உயர்த்தினாள் மீரா.

"சரி. நான் வர்றேன்க்கா" - என்றவாறு ஆட்டோவில் ஏறி கையசைத்து விட்டு கௌரி கிளம்பிச் சென்றது காரை நோக்கிச் சென்றாள்.

"ஏறுங்க மீரா! டயமாகுது. மேடம். நீங்களும் ஏறுங்க"

"கண்ணா! நான் கொஞ்சம் பேசணும்"

"எதுவா இருந்தாலும் கார்ல போகும் போது பேசலாம். டயமாகுது"

"இல்ல. இப்பவே பேசணும்" - பிடிவாதமாகக் கூறி மீராவின் முகம் கல்லாய் இறுகியிருந்தது.

"என்னாச்சு மீரா? உடம்பு எதுவும் சரியில்லையா?" சரோஜினி பரிவாய்க் கேட்க "அதெல்லாம் ஒன்று மில்ல



மேடம். எனக்கு. இதெல்லாம் பிடிக்கல்ல" - என்றாள் இறுகிய குரலில்.

"எதெல்லாம்?" - என்றவாறு காரை விட்டு இறங்கினான் கண்ணன்.

"இந்தப் பட்டுப் புடவை... அலங்காரம் எதுவுமே பிடிக்கவில்லை."

"ஏன் மீரா?"

"இன்று... இன்று என் அம்மா இறந்த நாள்"

"என்ன?" - அனைவரின் முகத்திலும் இருந்த உற்சாகம் சட்டென மாறி விட சரோஜினி தான் தேற்றினாள்.

"அதனால என்னம்மா? உன் அம்மா கடவுளா இருந்து வாழ்த்தட்டும். மனைசத் தேத்திகிட்டுக் கிளம்பும்மா"

"அதெப்படி மேடம்? எனக்கு உயிரும் உணர்வும் இருக்கு மேடம். நான் என்ன ஜடமா?"

"மீரா! என்னம்மா சொல்றே?"

"கண்ணா! முதல்ல இந்தப் பொருளையெல்லாம் திருப்பி அனுப்பிடுங்க"

"மீரா! அவசரப் பட வேண்டாம். நாம வேணா நாளைக்கு போலாமே"

"இல்ல கண்ணா! இன்னிக்கே போறோம்."

"என்ன?"

"நான் அவரைப் பார்க்கணும். பேசணும் ஆனா இதெல்லாம் வேண்டாம்"

"குழப்புறீங்க மீரா"

"அவர் என்னைத் தனியாத்தானே விட்டுட்டுப் போனார், நானும் தனியாவே போறேன். இதெல்லாம் வேண்டாம். திருப்பி அனுப்பிடுங்க" - உறுதியாக மறுத்தாள்.

"சரி. உங்களுக்கு வேண்டாம். இதை இல்லத்துக்கு கொடுத்திடுவோம். வாங்கிய பொருளை ஏன் திருப்பிக் கொடுக்க வேண்டும்? மேம். இங்கேயே இறக்கிடலாமா?"

"இவ்வளவு பொருட்களா?"

"இருக்கட்டும் மேடம். மீராவின் பெயரைச் சொல்லிக் கொண்டு உங்களுக்கு உதவட்டுமே."

"சரிப்பா" - அரை மனதாய் தலையாட்டினாள் சரோஜினி.

வேனில் அமர்ந்திருந்த கோபியைப் பார்த்து குரல் கொடுத்தான் கண்ணன்.

"கோபி! பொருளை எல்லாம் இங்கேயே இறக்கி வெச்சிட்டு அவங்களை அனுப்பிடு. நாங்க கிளம்பு றோம்"

"என்னாச்சு கண்ணா?"

"எல்லாம் பிறகு பேசலாம். மணி எட்டரையாகி விட்டது. இப்போது புறப்பட்டால் தான் சீக்கிரம் போக முடியும்?"

"நான் வர வேண்டாமா?"

"நீ இதையெல்லாம் இறக்கி இல்லத்தில் எடுத்து வை... டயமாகிவிட்டது. நாங்கள் கிளம்புகிறோம்"

"சரி. எதுவும் தேவையென்றால் போன் பண்ணு"

"சரிடா. கிளம்புறோம். மீரா! இப்போ போலாமா?"



"ம்." - அதே முகபாவனையுடன் காரில் ஏறினாள். சரோஜினியும் ஏறிக் கொள்ள கார் புறப்பட்டது. அனை வரும் ஆவலாய் கையசைத்து வழியனுப்ப காருக்குள் இருந்தவாறு இயந்திரத் தனமாய் கையசைத்தாள் மீரா.

"மீரா! எதுவும் பிரச்சனையா? எதுவா இருந்தாலும் சொல்லுங்கள்" - காரை ஓட்டியவாறே விஷ்வா கேட்க மறுப்பாய் தலையசைத்தாள்.

"ஒண்ணுமில்ல."

"பின்னே ஏன் உங்க முகம் இப்படி இருக்கு. ரெண்டு வருஷம் கழிச்சு உங்க கணவரைப் பார்க்கப் போறீங்க? உங்க முகத்தில ஒரு துளி சந்தோஷம் இல்லையே"

"விஷ்வா. அவங்க அம்மாவை நினைச்சு வருத்தப் படுறாங்கன்னு நினைக்கிறேன். பேசாமல் வா" - கண்ணன் அதட்டினான்.

"ஆமா தம்பி. காலையில சந்தோஷமாய்த்தான் இருந்தா. தாயோட நினைப்பு வந்ததும் தான் அமைதியா கிட்டா"

"சரி. நான் எதுவும் பேசல்ல. அதோட அவங்களுக்கும் டென்ஷன் இருக்கத்தானே செய்யும்" - என்று விட்டு அமைதியாய் காரை ஓட்டினான் விஷ்வா.

யாரும் எதுவுமே பேசாததே ஒரு வித அமைதியைத் தர வெறித்த பார்வையோடு வெளியே திரும்பினாள் மீரா. சாலையின் ஓரங்களில் நின்றிருந்த மைல் கற்கள் விஸ்க் விஸ்க் கென நகர கார் வேகமெடுத்து சீறியது.

"கொஞ்சம் மெல்லமாப் போப்பா"

"இல்ல மேடம். பத்தரைக்கு ராகுகாலம் ஆரம்பிக்குது. நாம அதுக்குள்ள அங்க போயிடணும்." -என்ற கண்ணனைப் பார்க்கையில் ஆற்றாமையாக இருந்தது.

அமைதியாக இருந்தாள். விஷ்வா காரை பறத்திய வேகத்தில் பத்து மணிக்கு கார் பாண்டிச்சேரியில் நுழைந்தது. விஷ்வா பாதையை உன்னிப்பாய் கவனித்துக் கொண்டே வந்து சரியாய் முல்லை தெருவில் பார்த்த சாரதியின் வீட்டின் முன்பாக காரை நிறுத்தினான்.

அனைவருமே ஆவலாய் வீட்டைப் பார்க்க, கதவு சாத்தப் பட்டிருந்தது. வாசலில் நின்று வரவேற்க பார்த்த சாரதி காத்திருப்பான் என்ற எண்ணத்தில் வந்தவர்கள் ஏமாற்றமாய் மீராவைத் திரும்பிப் பார்த்தனர். முகத்தில் எந்த உணர்வையும் காட்டாமல் காரை விட்டு இறங்கினாள் மீரா.

## 15

வேப்ப மரத்தில் அமர்ந்து கூவிக் கொண்டிருந்த ஒற்றைக் குயிலின் ஓசையைத் தவிர வெகு அமைதி. அக்கம் பக்கம் உள்ள வீடுகளில் நடமாட்டம் தெரிய... பார்த்தசாரதியின் வீடு இறுக பூட்டியிருந்தது.

"விஷ்வா! நல்லாத் தெரியுமா? இந்த வீடுதானா?"

"ஆமான்டா. அதோ பார். சுவர்ல கூட அவர் பேரு செல் நம்பர் எல்லாம் எழுதிப் போட்டிருக்கு"



"இன்னிக்குத் தானே வரச் சொன்னான்?"

"ஆமான்டா! காலையில பத்து மணிக்கெல்லாம் வந்திடச் சொன்னாரே"

"அப்போ வீடு பூட்டியிருக்கே?"

"வீட்ல பூட்டு தொங்கல்ல. உள் பக்கமாத்தான் பூட்டியிருக்கு. உள்ளே தான் இருப்பாங்க. வா. போய் கதவைத் தட்டலாம்"

"கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டுக் கூட அவர் வெளியில வரலையே"- கண்ணன் குறை பட்டுக் கொண்டே இறங்கி கதவை அறைந்து சாத்தினான்.

"உள்ளே டி.வி.ஓடுதோ என்னவோ" - என்றவாறே சரோஜினியும் இறங்கி வீட்டை நெருங்க. மீரா அசையாமல் நின்று வீட்டையே வெறித்தாள்.

திருமணமாகி வந்த அன்று வாழை மரத் தோரணங்களோடு பூப் பந்தலோடு காட்சியளித்த வீடு இன்று வெறுமையாய் நின்றது. ஆண்டுக் கணக்காய் வெள்ளை அடிக்காமல் விட்டது போல் சுவர்கள் அழுக்கேறி கிடந்தது. முற்றத்தில் சின்னதாய் கோலம் போடப்பட்டிருக்க, அதன் மீது காய்ந்த வேப்ப மர சருகுகள் உதிர்ந்து கிடந்தது.

"மீரா! என்ன நின்னுட்டீங்க? வாங்க" - கண்ணன் அழைத்ததும் கலைந்தாள். "என்ன மீரா? மலரும் நினைவுகளா?" - விஷ்வா கேலியாய்க் கேட்க லேசாய் புன்னகைத்தாள்.

"சரி வாங்க" - என்றவாறு முன்னே சென்ற சரோஜினி காலிங் பெல்லைத் தேடிப் பார்த்து இல்லை என்றதும் கதவை லேசாய் தட்டினாள்.

பதிலில்லை. மறு முறை சற்று வேகமாய்த் தட்டினாள். இப்போது உள்ளேயிருந்து குழந்தையின் அழுகை ஒலி கேட்க, அதைத் தொடர்ந்து, "யாரு?" - என்று பெண் குரல் கேட்டது.

சரோஜினி பின்னால் திரும்பினாள். "என்ன ஏதோ பெண் குரல் கேட்குது?"

"யாராவது கெஸ்ட் வந்திருப்பாங்க. நீங்க கதவைத் தட்டுங்க மேடம்" - கண்ணன் கிசுகிசுத்தான்.

"யாருன்னு கேட்கிறாங்களே. மீரா நீ பேசும்மா"

"நீங்க பேசுங்க மேடம். நான் இங்கேயே நிற்கிறேன்" - வேப்ப மரத்தின் அடியில் நின்று கொண்டாள் மீரா.

சரோஜினி மீண்டும் கதவைத் தட்ட, "யாருன்னு கேட்கிறேனில்ல?"- என்றவாறு கோபமாய் கதவு திறக்கப்பட்டது. ஒரு இளம் பெண் கையில் குழந்தையோடு நின்று கொண்டிருந்தாள்.

குழந்தையின் தலை மொட்டையடிக்கப்பட்டு சந்தனம் பூச்சோடு தெரிந்தது அழுத குழந்தையைத் தோளில் போட்டுத் தட்டிக் கொண்டே அந்தப் பெண் கேட்டாள்.

"யார் நீங்க?"

"நாங்க... மிஸ்டர் பார்த்தசாரதியைப் பார்க்கணும்"

"அவரு வீட்ல இல்லையே. வெளியே போயிருக்கார்"

"எங்களை வரச் சொல்லியிருந்தார்?"

"அப்படியா? இப்பக் கொஞ்ச நேரம் முன்னே தான் போனார். எதுவும் சொல்லிட்டுப் போகலியே"



"நீங்க யாருங்க?" - தயக்கமாய்க் கேட்டான் கண்ணன்.

"நான் அவர் சம்சாரம்" - அந்தப் பெண்ணின் பதிலில் பூமி இரண்டாய் பிளந்ததைப் போல் உணர்ந்தாள் மீரா. அதிர்ந்து சிலையாய் நின்றவளைப் பார்த்து விட்டு தயக்கமாய் அந்தப் பெண்ணை ஏறிட்டான்.

"ஏங்க... இது புரோக்கர் சாரதி வீடு தானே"

"ஆமா!"

"நீங்களா அவர் சம்சாரம்?"

"ஆமா! ஏன் கேட்கிறீங்க?"

"இல்ல. அவருக்கு ஏற்கனவே மெட்ராஸ்ல ஒரு..."

"ஓ! முதக் கல்யாணத்தைப் பத்திக் கேட்கிறீங்களா?"

துல்லியமாய் அதிர்ந்து போனான் கண்ணன். மற்றவர்கள் வாயடைத்துப் போய் பேச்சற்று நிற்க, தவிப்பாய் மீராவைப் பார்த்தான். துளியும் அசைவின்றி நின்றவளைப் பார்க்கையில் மனம் தகித்தது.

"ஏம்மா! அவருக்கு ஏற்கனவே கல்யாணமானது தெரியுமா?"

"தெரியும். எல்லாம் சொல்லியிருக்கார்"

"ஏம்மா! ஒரு பொண்ணா இருந்திட்டு எப்படியம்மா இன்னொருத்தி புருஷனை கட்டிக்க சம்மதிச்ச? உனக்கு வேறு மாப்பிள்ளையா கிடைக்கல்ல.?"

"யாரு நீங்க? முத சம்சாரத்தோட உறவுக்காரங்களா?"

"உன்னை மாதிரி பொண்ணுங்க கிடைக்கிறதால தான் அவனவன் ஊருக்கு ஒன்றாய் கட்டிக் கொள்கிறான்.

இரண்டாம் தாரமாய் போகிறோமே என்று உங்களுக்குத் தோணாதா?"

"ஸார். கொஞ்சம் மரியாதையாப் பேசுங்க. எந்தப் பொண்ணும் ரெண்டாந்தாரமா போறதுக்கு சந்தோஷப்பட மாட்டா."

"பிறகெப்படி இவரைக் கட்டிக் கொள்ள சம்மதித் தாய்?"

"இவர் எனக்கு தூரத்து உறவு. பாவம்! கல்யாணமான நாலு நாள்லயே முத சம்சாரம் செத்துப் போச்சாம்... " - அவள் சொல்ல இன்னும் அதிர்ந்தனர்.

"என்ன? இறந்துட்டாங்களா? யார் சொன்னது?"

"அவர் தான் சொல்லி அழுதார். அதான் மனசு கேட்காம ஒத்துகிட்டேன். ஆமா நீங்க யாருன்னு சொல்லவே இல்லையே"

மற்றவர்கள் பேச்சின்றி தவிக்க, மீரா முன்னே வந்தாள்.

"இந்தக் குழந்தை?"

"எங்களது தான்."

"குழந்தைக்கு எத்தனை வயசாகுது?"

"இன்னும் ஒரு வயசு முடியல்ல."

"ஓஹோ. சரி கிளம்பலாம் மேடம்"

"ஏங்க நீங்க யாருன்னு சொல்லவே இல்லையே?"

"நாங்க தப்பான இடத்துக்கு வந்திட்டோம்னு நினைக் கிறேன். இடம் கொஞ்சம் மாறிப் போச்சு"

"எம் புருஷன் பேரைக் கேட்டீங்களே"



"ஆமா! உம் புருஷன். இனிமே அவர் உம்புருஷன் தான். இனி இது எதற்கு?" - என்றவாறு தன் கழுத்தில் கிடந்த தாலியைக் கழற்றினாள்.

"ஐயோ! என்ன பண்றீங்க?" - அந்தப் பெண் பதறி னாள்.

"இனிமே இது அவசியமும் இல்ல. இதுக்கு அர்த்தமும் இல்ல - என்றவாறு குனிந்து அந்தப் பெண்ணின் காலடியில் வைத்தாள் மீரா.

"இதை ஏன் இங்கே வெக்கிறீங்க?" - ஓரடி பின் வாங்கி நின்றாள்.

"இது உன் கணவனின் சொத்து. வந்ததும் கொடுத்து விடு."

"அவர் சொத்தா? என்ன சொல்றீங்க?"

"உன் கணவர் வந்தால் இறந்து போன உங்கள் மனைவி வந்து இதைக் கொடுத்து விட்டுப் போனார்கள் என்று சொல் " - என்று விட்டு விடு விடுவென காரில் ஏறி அமர்ந்தாள்.

அந்தப் பெண் திகைத்துப் போய் நிற்க, அதே திகைப் போடு ஒன்றும் பேசத் தோன்றாமல் மூவரும் காரில் ஏறி அமர்ந்தனர். மீராவிடம் என்ன பேசுவது? யார் பேசுவது? என மூவரும் குழம்பித் தவிக்க, "விஷ்வா! காரை எடுங்கள்" - என்றாள் மீரா.

"ம். இதோ" - என்றவாறு காரை எடுத்துத் திரும்பி வந்த திசையில் பயணிக்க, தெரு முனையில் நின்று கொண்டிருந்தான் அவன். பார்த்த உடன் அடையாளம் கண்டு கொண்டாள் சரோஜினி.

"தம்பி! காரை நிறுத்து. அதோ நிற்கிறான் பாரு அந்தக் கருவாயன் தான் மீரா புருஷன்"

கிரீச் சென பிரேக் போட்டு காரை நிறுத்தினான் விஷ்வா. கோபமாய் காரை விட்டு இறங்க. அதற்குள் பார்த்தசாரதியே அவர்களை நெருங்கி வந்தான்.

"என்ன வீட்டுக்கு போனீங்களா? எம் பொண்டாட்டி பிள்ளையை பார்த்தாச்சா. இனி புறப்பட வேண்டியதுதானே இனி எங்கிட்ட பேச என்ன இருக்கு? ம். கிளம்புங்க" - எள்ளலாக பேசியவனின் சட்டையைக் கொத்தாகப் பற்றினான் கண்ணன்.

"மனுஷனாய்யா நீ! கட்டுன பொண்டாட்டிய நடுத் தெருவில விட்டுட்டு இங்க வந்து இன்னொரு பெண்ணை வாய் கூசாம பொய் சொல்லி மணந்திருக்க"

"ஏய். சட்டையை விடுடா. நான் ஒன்னும் பொய் சொல்லலையே. உண்மையைத் தான் சொன்னேன். என் முத பொண்டாட்டி செத்துட்டாப்பா"

"டேய்!" - என்றவாறு ஆத்திரமாய்க் கதவைத் திறந்து மீராவை வெளியே இழுத்தான்.

"அப்போ இது யாருடா?"

"அதை அவகிட்டதான் கேட்கணும். எனக்குத் தெரியாது"

"கருவாய்பயலே! உனக்குப் போய் பொண்ணைக் கொடுத்தானே அவனைச் சொல்லணும்"

"நான் கருவாயன் தான். நீ சும்மா சினிமா ஹீரோ மாதிரி இருக்கியே. அதான் உங்கூட கத்தினாளா?"



"டேய்! முட்டாள். நான் தான் அன்னிக்கே அத்தனை தெளிவாய்ச் சொன்னேனே." - விஷ்வா சீறினான்.

"ஏம்ப்பா! நீ என்ன அரிச்சந்திரனா? உண்மையைத் தான் பேசறேன்னு எனக்குத் தெரியுமா?"

"யோவ்! நம்பிக்கை இருக்கணும்யா. உம் பொண்டாட்டி மேல உனக்கே நம்பிக்கை இல்லேன்னா எப்படி?"

"இவ்வளவு பேசுற நீங்க இவளை ஏன்டா திருப்பி அனுப்புனீங்க. கல்யாணம் பண்ணிக்கத்தானே கூட்டிட்டு போனீங்க. தேவையைத் தீர்த்துட்டு அனுப்பிட்டீங்களா? - பார்த்தசாரதி கூசாமல் கேட்க, கண்ணன் அவனது கழுத்தைப் பற்றினான்.

"யாரைப் பார்த்து என்ன வார்த்தை சொன்னாய்? உன்னைக் கொன்று விடுகிறேன். மீராவோட தாலியே போச்சு. இனிமே நீ எதுக்கு உயிரோட இருக்கணும்" - வெறி வந்தாற் போல் இறுக்கினான்.

அதற்குள் கூட்டம் கூடி விட விஷ்வா கண்ணனைத் தன் பக்கமாய் இழுத்தான். "கண்ணா! இவனை நீ ஒன்றும் செய்ய வேண்டாம். நான் போலீசுக்கு போன் செய்கிறேன். முதல் மனைவி உயிரோடு இருக்கும் போதே மறுமணம் செய்திருக்கிறானே. இவனை உள்ளே தள்ள இது போதும்"

"பண்ணுங்கடா. போலீஸ் வரட்டும். வந்தா எனக் கொன்றும் பிரச்சனை இல்லை உங்களுக்குத்தான் அவமானம்"

"என்ன உளர்ற?"

"ஆமா! இத்தனை நாளா இவ செத்துட்டான்னு தான் சொல்லிட்டு இருந்தேன். போலீஸ் வரட்டும். என்னைக்

கேட்கட்டும். தயங்காமல் உண்மையைச் சொல்லி விடுகி றேன்" மற்றவர்கள் புரியாமல் விழிக்க அவனே தொடர்ந் தான்.

"எம் பொண்டாட்டி நாலு ஆம்பிளைங்களோட ஓடிப் போயிட்டா. அதனால தான் நான் வேற கல்யாணம் பண்ணினேன்னு சொல்வேன். யாருக்கு அவமானம்?"

கண்ணன் பலமாகக் கையை உதறினான். "விடு விஷ்வா. என்ன பேசுகிறான் பார்த்தியா? இவனைச் சும்மா விடலாமா. இவனைக் கொன்றால் தான் என் ஆத்திரம் தீரும்." - பாய்ந்து சென்று பார்த்தசாரதியைக் கீழே தள்ளி கண்மூடித் தனமாய் உதைக்க ஆரம்பித்தான்.

மற்றவர்கள் எவ்வளவோ தடுத்துப் பார்த்தும் கண்ணனை அடக்க முடியவில்லை. பார்த்தசாரதியின் வாயிலிருந்து இரத்தம் சொட்ட, சரோஜினி பதறினாள்.

"கண்ணா! விட்டுடுப்பா. இவனைக் கொன்று நீ ஏன் பழி ஏற்கிறாய். வந்துடுப்பா"

"விடக்கூடாது மேடம். எத்தனை திமிராய் பேசுகி றான். நம்மை வரவைத்து கரியைப் பூசிவிட்டானே எத்தனை நெஞ்சழுத்தம்..." - ஆத்திரத்தோடு முகத்தில் குத்தினான். மூக்கு உடைந்து இரத்தம் கொட்டியது.

இறுகிப் போய் நின்ற மீரா கண்ணனை நெருங்கி அவனது கைபற்றி தடுத்தாள்.

"வேண்டாம் கண்ணா. செத்த பாம்பை ஏன் அடிக்கிறீர்கள்? வாருங்கள்"

"இல்லை மீரா. இவன் என்ன சொன்னான் கேட்டீர் களா?"



"தெரு நாய் குரைத்தால் நாமும் திரும்பக் குரைப் போமா? நாமும் நாயும் ஒன்றா. வாருங்கள் போகலாம்"

"இவனை..."

"கண்ணா ப்ளீஸ். இவன் யார்? இவனுக்கும் எனக்கும் இனி எந்த சம்பந்தம் இருக்கு? என் அம்மா இறந்த அன்றே என் கணவனும் இறந்து போயிருக்கிறார். நான் தான் அதை உணராமல் இருந்திருக்கிறேன்"

"மீரா! ஏன் இப்படிப் பேசுறீங்க?"

"என்னைப் பொறுத்த வரை இவன் பொணம். பொணத்தோட நாம ஏன் நிக்கணும். வாங்க போகலாம். முதல்ல தலை முழுகணும்."

கண்ணன் அப்படியும் கோபம் தீராமல் ஒரு உதை விட்டான். "விஷ்வா! கண்ணனை காரில் ஏற்றுங்கள். ப்ளீஸ்" - மீரா சொன்னதும் கூட்டத்தை விலக்கி விட்டு கண்ணனைக் காரில் ஏற்றினான் விஷ்வா.

அனைவரும் காரில் ஏறியதும் கார் புறப்பட்டது. மீராவின் முகத்தில் துளியும் வருத்தமோ கலக்கமோ இல்லை. மாறாக மிகவும் தெளிவாய் இருந்தது. கம்பீர மாய் இருந்தது. சரோஜினி தான் புலம்பிக் கொண்டே வந்தாள்.

"குழந்தைக்கு ஒரு வயசாகுதாமே. சண்டாளப்பாவி! மீராவை விட்டதுமே இவளைக் கல்யாணம் பண்ணியிருக் கான். ச்சே! மனுஷனா இவன்?"

"எங்கிட்ட பேசும் போது இதைப் பத்தி ஒரு வார்த்தை சொல்லல மேடம். நாமே வந்து இதைப் பார்க்கணும்னு

முடிவு பண்ணி நம்மை வரச் சொல்லியிருக்கான். என்ன ஒரு கொடூரமான குணம்"

"அவனை அப்படியே விட்டுட்டு வந்திருக்கக் கூடாதுடா. கொண்ணே போட்டிருக்கணும். அட்லீஸ்ட் அவன் கையையும் காலையுமாவது உடைச்சிருக்கணும்" கண்ணன் பொறுமினான்.

"கண்ணா! இவ்வளவு கோபம் வரக் கூடாதுப்பா அமைதியா இரு"

"எப்படி மேடம் அமைதியா இருக்கிறது? இந்த நாயோட பேச்சைக் கேட்டு சும்மா இருந்த மீராவோட மனசுல ஆசையை விதைச்சிட்டோமே. அவ மனசு என்ன பாடுபடும்னு நினைச்சானா அவன். பரதேசி நாய்"

"அவன் புத்தி வெறும் சாக்கடைப் புத்தி. அவன் கூட வாழாம இருக்கிறது தான் நம்ம மீராவுக்கு நல்லது."

"ஆமா! நாம எவ்வளவு தான் பேசி சேர்த்து வைச்சிருந்தாலும் இவன் பேசிப் பேசியே இவளைக் கொன்னுடுவான்."

"ச்சே! இவன் இவ்வளவு நயவஞ்சகனா இருப்பான்னு தெரியாம மீராவுக்கு எவ்வளவு அறிவுரை சொன்னேன். ஆனா நம்மை எல்லோரையும் விட மீரா தான் அவனைச் சரியாப் புரிஞ்சு வெச்சிருக்கா. இவன் இப்படி எதையாவது பண்ணியிருப்பான்னு தெரிஞ்சு தான் சீர்வரிசையைக் கூட வேண்டாம்னு சொன்னியா மீரா?" சரோஜினி கேட்க, தொண்டையைச் செருமினாள் மீரா.

"மேடம்! நீங்கள்லாம் நினைக்கிற மாதிரி நான் அவன் ஆள் கூட சேரப்போகிறோம்ற சந்தோஷத்திலயோ ஆசையிலயோ வரல்ல."



"என்னம்மா சொல்ற?"

"ஆமா மேடம். இந்த ரெண்டு வருஷத்தில ஒரு நாள் கூட நான் எம்புருஷனை நினைச்சு அழல. இவன் எனக்கு உண்டாக்கின களங்கத்தை நினைச்சுத்தான் அழுதிருக்கேன். இவனால இறந்து போன என் அம்மாவை நினைச்சு அழுதிருக்கேன். நான் அநாதையா நிக்கிறதை எண்ணி அழுதிருக்கேன். ஆனா இவனை இழந்திட்டோமே பிரிஞ்சிட்டோமேன்னு ஒரு நாள் கூட வருந்தி அழவில்லை."

கண்ணன் ஆச்சர்யமாய்த் திரும்பினான். "பிறகேன் மீரா இன்னிக்கே போவோம்னு கிளம்புனீங்க?"

"மேடம் சொன்ன அறிவுரைக் கேட்டு நானும் என் மனசைத் தேத்தினது உண்மை தான். ஆனா என் அம்மாவோட மரணத்தை என்னால மறக்க முடியல்ல. அதுக்குக் காரணமானவன் கூட என்னால வாழ முடியாதுன்னு முடிவு பண்ணிட்டேன்.

ஆனா எனக்கு அவனைப் பார்த்து நாலு வார்த்தையாவது கேட்கணும்னு ஒரு வெறி. உங்கூட வாழுற அளவுக்கு நான் ஒன்னும் தரங்கெட்டுப் போயிடலன்னு சொல்லி அவன் தாலிய அவன் முஞ்சியில வீசி எறியணும்னு தான் இங்க வரவே சம்மதிச்சேன். ஆனா நிலமையே மாறிப் போச்சு.

இருந்தாலும்... இந்த நிமிஷம் நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன் மேடம். இத்தனை நாளா என் மனசை அழுத்தின அத்தனை பாரமும் விலகிப் போச்சு. என் கழுத்தைச் சுத்தி நெருக்கிய பாம்பைக் கழற்றி வீசின மாதிரி ஒரு ஃபீலிங். என்னால இப்போ நல்லா மூச்சு விட முடியுது. எனக்கு நெஞ்சு வலி சுத்தமாப் போயிடுச்சு"

"மீரா! உண்மையாகத்தான் சொல்றீங்களா? உங்களுக்கு அவரைப் பிரிந்ததில் வருத்தமே இல்லையா?"

"நிச்சயமாய் இல்லை. எந்தத் தப்பும் செய்யாத என்னை இழந்ததற்கு அவன் தான் வருத்தப்படணும். நான் ஏன் வருத்தப்படணும்?"

"இது போதும் மீரா. இதே மாதிரி தைரியமா இருங்க. தெளிவா இருங்க. உங்க மேல எந்தத் தப்பும் இல்லாதப்போ நீங்க ஏன் உங்களையே வருத்திக்கணும்."

"ஆமா கண்ணா. எனக்கு என்னவோ இன்னிக்குத் தான் புதுசா பிறந்த மாதிரி இருக்கு. மனசு ரொம்ப லேசான மாதிரி இருக்கு. கண்ணா! நாம எல்லாருமா சேர்ந்து பீச்சுக்குப் போவாமா?"

"பீச்சுக்கா?"

"ஆமா! எனக்கு ரொம்பப் பிடித்த இடம். கடலையும் கடல் அலைகளையும் தொடுவானத்தையும் பார்க்கும் போது நம்மை அறியாமலே நம்ம மனசு உற்சாகமாகிடும். போலாமா?"

"ஷ்யூர்! மீரா பேச்சிற்கு மறுபேச்சு ஏது?" - கண்ணன் உற்சாகமாகச் சொல்ல, விஷ்வா காரை கடற்கரை சாலைக்குத் திருப்பினான்.

கடற்கரைக் காற்று ஜில்லிப்போடு உடலை வருட, தூரமாய்த் தெரிந்த கடலை ஒரு குழந்தையின் குதூகலத்தோடு ரசிக்கத் துவங்கினாள் மீரா.



# 16

ஆவேசமாய் சீறிப் பாய்ந்து வரும் அலைகள் கரையைத் தொட்டவுடன் தன் ஆவேசத்தை விட்டு விட்டு அமைதியாய் வந்த வழியே திரும்பிக் கொண்டிருந்தது. தான் வந்து சென்றதை அறிவிக்க வெள்ளை நுரைகளை விட்டு விட்டுச் சென்ற அலைகளை உற்சாகமாகப் பார்த்தாள் மீரா.

இந்த அலைகள் எதைத் தேடுகின்றன? காணாமல் போன காதலியையா? தேடிக் கண்டு பிடித்தே தீருவேன் என்ற சபதத்துடன் தான் யுகம் யுகமாய் ஓயாமல் அலை வீசிக் கொண்டேயிருக்கிறதோ?

தன் பாதங்களைக் கழுவி சுத்தம் செய்து விட்டுப் போன அலைகளைப் பார்த்தாள். மீண்டும் மீண்டும் அலை அவளது பாதத்தைத் தொட்டுச் செல்ல பளிங்காய் தோன்றிய பாதத்தைப் பார்த்தவள் துணுக்குற்றாள். கால் விரலில் மெட்டி பளிச்சிட்டது.

தாலியே போன பின் இது எதுக்கு? குனிந்து கழற்றி அலையோடு விட்டாள். அலை மணலோடு அவளது மெட்டியையும் இழுத்துச் செல்ல, அருகே கண்ணனின் குரல் கேட்டது.

"மீரா! வெயில் சுள்ளுன்னு ஏறுதே. உங்களுக்கு உரைக்கலையா? வாங்க அப்படி நிழல்ல உட்காரலாம்"

"கண்ணா! நான் பாட்டுக்கு பீச்சுக்கு கூட்டிட்டு போங்கன்னு சொல்லிட்டேன். உங்களுக்கு நிறைய வேலை இருக்குமே. போலாமா?"

"போலாம். ஏதாவது சாப்பிட்டுப் போலாம். முதல்ல உட்காருங்க. உட்கார்ந்து இருந்து பார்த்தாலும் கடல் அழகாய்த்தான் இருக்கிறது"

சிரித்தவாறே கரையை அடைந்தாள். வரிசையாய் நின்றிருந்த படகின் நிழலில் சரோஜினி அமர்ந்திருக்க, சற்று தள்ளி நின்று விஷ்வா யாருடனோ போனில் உரையாடிக் கொண்டிருந்தான்.

புடவை ஈரத்தில் சரசரக்க வந்த மீராவைப் பார்த்து, "என்னம்மா இப்படி நனைஞ்சிருக்கியே. துணியைப் பிழிந்து விடு" - என்றாள் சரோஜினி.

"அது காத்துல உலர்ந்திடும் மேடம். நீங்களும் கால் நனைக்க வந்திருக்கலாம் மேடம். தண்ணி ஐஸ் கட்டி மாதிரி சில்லுன்னு இருக்கு"

"எனக்கு அந்த ஆர்வமெல்லாம் போச்சும்மா. அதெல்லாம் ஒரு வயசு வரைக்கும்."

"இயற்கையை ரசிக்க வயசு முக்கியமல்ல மேடம்"

"வயசு முக்கியமில்ல தான். ஆனா ரசிக்கிற மனோ பாவம் வேணுமே"

"மேடம்!"

"ரசிக்கிற மன நிலை இருந்தா வெறும் கட்டாந்தரை, புல் பூ எல்லாமே ரசிக்கத் தோணும். ஆனா வெறுமையா இருக்கும் போது தாஜ்மஹால் கூட வெறும் கட்டிடமாத் தான் தோணும்"- சரோஜினியின் குரலில் வருத்தம் தெரிய அவளை ஒட்டியவாறே அமர்ந்து கொண்டாள் மீரா.



"நீங்க பேசிட்டு இருங்க. நான் சாப்பிட ஏதாவது வாங்கிட்டு வர்றேன்" - என கண்ணன் விலகி நடக்க, மீரா சரோஜினியைப் பார்த்தாள்.

கனிவு ததும்பும் விழிகள் லேசாய் கலங்கியிருந்தன. "மேடம்! உங்களுக்கு– இந்த இடம் பிடிக்கலையா?"

"சேச்சே! கண்ணு தெரியாதவங்க கூட இந்தக் கடலலை களோட ஓசையைக் கேட்கவும், கடல் காற்றை உணரவும் கடற்கரைக்கு வருவாங்களே. இந்த இடத்தைப் பிடிக்காமல் இருக்குமா?"

"அப்போ ஏன் மேடம் உங்க முகம் வாடி இருக்கு. இத்தனை நாளில் உங்களை நான் இப்படி ஒரு முறை கூடப் பார்த்ததில்லை."

"இல்லம். முதியோர்கள். அவர்களின் தேவைகள். பணிகள் என்று அதிலேயே உழன்று கொண்டிருந்தால் மனம் வேறு எதையும் சிந்திப்பதில்லை. ஆனால் இப்படி வெளியே வந்தால்... மறந்து விட்ட சில இடங்களைப் பார்க்கும் போது சில வேண்டாத நினைவுகள் வந்து சங்கடப் படுத்துகிறது" - பெருமூச்சுடன் சொன்ன சரோஜினியை வியப்பாய் சற்றே இரக்கமாய் பார்த்தாள் மீரா.

கண்ணனும் விஷ்வாவும் கூட வாங்கி வந்திருந்த ஐஸ்கிரீம் கப்போடு அப்படியே அமர்ந்து விட்டனர்.

"மேடம்! நீங்களும் அவர்.. நீங்கள் விட்டுக் கொடுத்தீர்களே? அவரும் இங்கு வந்திருக்கிறீர்களா?" - தயக்கமாய்க் கேட்டாள் மீரா.

"இல்லை. எங்கள் ஊர் முத்துநகர். முத்துக்குளிக்கும் இடம் என்று கூடச் சொல்வர். அருமையான கடல். சிறு

வயது முதலே நானும் தியாகுவும் கடற்கரையோரம் தான் விளையாடுவோம். வளர்ந்த பிறகும் தான்"

"மேடம்! உங்க ஆள் பேர் தியாகுவா?"

"ம். தியாகராஜன். ஆனால் தியாகு என்று அழைப்பது தான் அவருக்குப் பிடிக்கும்."

"ஆள் எப்படி இருப்பார்?" - கண்ணன் ஆவலாய்க் கேட்க, சங்கோஜமாய்ச் சிரித்தாள் சரோஜினி.

"பழைய நடிகர் தியாகராஜன் இருக்காரில்லை"

"யாரு? தியாகராஜ பாகவதரா?"

"ம்ஹூம். நீங்கள் கேட்டவை படத்தில வருவாரே அவர மாதிரிதான் இருப்பார்"

"பாருடா! பெயர் கூட அவர் பேரையே வெச்சிருக்காங்க"

"ஆமா! எல்லாருமே ஆச்சர்யப்படுவாங்க. லேசான தாடியோட கம்பீரமா குரல் கூட ரொம்ப கணீர்னு அதே நேரம் மென்மையா இருக்கும்"

"மேடம்! நீங்க... இன்னும் அவரை மறக்கலையா?"

"மறப்பதா? எப்படி முடியும்? சின்ன வயசுல இருந்தே இவன்தான் உன்னைக்கட்டிக்கப் போறவன்னு சொல்லி மனசுல பதிய வெச்சுட்டாங்க. இப்போ அது விருட்சமா வேரூன்றி பெருகி நிற்குது. அதை எப்படி வேரோடு பிடுங்கி எறியமுடியும்?"

"ஏன் மேடம். மனசுக்குள்ள இவ்வளவு அன்பை வெச்சுகிட்டு ஏன் விட்டுக் கொடுத்தீங்க?" - கண்ணன் வேதனையாய்க் கேட்டான்.



"கண்ணா! அவரை நான் மணந்திருந்தா உறவுகள் எல்லாம் சிதறிப் போயிருக்கும். அதோட என் அத்தைக்கு என்னைவிட வசதியான தன் அண்ணன் மகளைத்தான் ரொம்பப்பிடிக்கும்"

"ஆனா அவருக்கு உங்களைத் தானே பிடிக்கும்?"

"நான் அவருடன் மட்டுமா வாழப்போகிறேன். மாமியார் மாமனார் என ஒரே குடும்பமாகத் தானே வாழணும். பிடிக்காத என்னை என் மாமியார் மனம் நிறைந்து வாழ்த்துவாரா? வாழவிடுவார்களா?"

"அவனுக்காக நீங்கள் தியாகுவைத் தண்டிக்கலாமா?"

"தியாகுவை இழந்தது கஷ்டம்தான். ஆனால் இன்னொரு பெண்ணின் உயிரைக்குடித்து அந்தக் குடும்பத்தின் சாபத்தை வாங்கிக் கட்டிக்கொண்டு என் அத்தையின் வயித்தெரிச்சலோடு எப்படி வாழ முடியும் கண்ணா?"

"அது சரிதான். ஆனால் தியாகு எதுவும் சொல்லவில்லையா?"

"என்முடிவைக் கேட்டவுடன் அதிர்ச்சியாய் என்னை ஒரு பார்வை பார்த்தார். அதோடு சரி. அதற்குபிறகு அவர் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

என்னிடம் மட்டுமல்ல. வேறு யாருடனும் பேசவில்லை"

"மை காட். அவர் மனம் எவ்வளவு புண்பட்டுப் போனதோ?"

"நான் ஊர்ல இருந்தா தன்னோட மகள் இப்படித் தான் இருப்பான்னு என் அத்தை ஒரே புலம்பல். என்னைத்

திருமணம் செய்து அனுப்பிவிட எவ்வளவோ முயற்சி செய்தாங்க. ஆனா நான் ஒத்துக்கல்ல.

இன்னொரு பெண்ணுக்காக விட்டுக்கொடுத்தேனே தவிர அவரை என் மனசை விட்டுத் தூக்கியெறியல. இன்னும் கூட மனசால அவர்கூட வாழ்ந்திட்டு தான் இருக்கேன். நான் ஊர்ல இருந்தா தியாகு சந்தோஷமா வாழமாட்டாருன்னு தான் ஊர்ல இருந்த வீட்டைவித்துட்டு சென்னைக்கு வந்தோம்"

"உங்க பேரண்ட்ஸ் எல்லாருமா?"

"ஆமா! என்னைப் பெத்தவங்களுக்கு நான் ஒரே பொண்ணு. என்னைத் தனியா விட மனமில்லாம அவங்களும் என் கூடவே வந்திட்டாங்க. இப்ப நாம இருக்கிற இல்லம் அப்போ ஒரே ஒரு ஒட்டு வீடு தான். சுத்திலும் புதராக் கிடந்தது. வெறும் மூவாயிரம் ரூபாய்க்குத் தான் வாங்கினேன்.

ஊர்ல பனிரெண்டாவது வகுப்போட படிப்பை நிறுத்தி விட்டேன். இங்க வந்த பிறகு படிப்பைத் தொடர்ந்தேன். ஈ.பி.யில வேலை கிடைச்சது. எங்க குடும்பத்துக்கு அந்த வருமானம் போதுமானதா இருந்தது.

அப்புறம் என்னைப் பத்தின வருத்தத்திலயே பெத்த வங்க சீக்கிரமே போய்ச் சேர்ந்திட்டாங்க. தனியா நின்ன எனக்கு துணையா வந்தது புருஷனை இழந்து கையில ஒரு பெண் குழந்தையோட நின்ன தேனம்மா தான். நம்ம கருத்தம்மாவோட அம்மா"

"அவங்க இப்போ இல்லையா மேடம்?"



"அவங்க இறந்து அஞ்சு வருஷமாச்சு. எனக்கும் வயசான பிறகு தான் இந்த இல்லம் துவங்குற எண்ணமே வந்தது. திக்கற்று திசையற்றுப் போன பறவைகளுக் கெல்லாம் இந்த சரணாலயம் தான் நிரந்தரமான கூடா இருக்கணும்னு தான் இதைத் துவங்கினேன்.

இப்பவும் எத்தனையோ பறவைகளுக்கு நாம அடைக்கலம் தந்துட்டு தான் இருக்கோம். ஒரு வேளை என்னால இப்படி ஒரு நல்ல காரியம் நடக்கணும்னு இருந்ததால தான் நானும் தியாகுவும் பிரிஞ்சோமோ என்னவோ. எது எப்படியோ? கடவுளோட ஒவ்வொரு செயலுக்கும் ஒரு காரணம் இருக்கு"- கசிந்திருந்த கண்களைத் துடைத்துக் கொண்டாள் சரோஜினி.

"எனக்கு இதிலெல்லாம் நம்பிக்கையில்ல" - மீரா விட்டேற்றியாய் கூறினாள்.

"எதிலம்மா?"

"கடவுளோட செயலுக்கு காரணம் இருக்கும்னு சொல்றீங்களே அதுல"

"ஏம்மா!"

"நான் என்ன மேடம் பாவம் பண்ணினேன்? படிக்கும் போதும் சரி. வேலை பார்க்கும் போதும் சரி. அந்நிய ஆடவர்களிடம் ஒரு வார்த்தை பேசியதில்லை. கண்டபடி ஊரைச் சுற்றியதில்லை. கண்ட கண்ட எண்ணங்களை மனதில் வளர்த்துக் கொண்டதில்லை. எனக்கேன் இத்தனை துயரமான வாழ்க்கையைக் கொடுத்தார்?" கண்ணனும் விஷ்வாவும் குற்ற உணர்வோடு அமர்ந்திருக்க மீராவின் தலையைப் பரிவாய் வருடினாள் சரோஜினி.

"மீரா! நீ ஏன் அப்படி நினைக்கிறாய்? ஒரு வேளை இதை விட நல்ல வாழ்க்கை அமைச்சுக் கொடுக்கலாம்னு கூட இதைப் பறிச்சிருக்கலாமே"

"மேடம்"

"ஆமா மீரா! அந்தப் பார்த்தசாரதி உனக்கு சற்றும் பொருத்த மில்லாதவன். உன் அப்பா அவனை உனக்கு மணம் முடித்து வைத்தது தவறு என்று அந்தக் கடவுள் நினைத்திருக்கலாம். உனக் கேற்ற துணையை அமைத்துத் தர—"

"வேண்டாம் மேடம். போதும். ஒரு துணையால் நான் பட்ட வேதனையும் அவமானமும் போதும். இனி இந்த மாதிரிப் பேசாதீர்கள்"

"ஏன் மீரா. ஒருவன் அப்படியிருந்தால் எல்லா ஆண்களுமே அப்படித் தான் இருப்பார்களா?" - விஷ்வா கேட்டான்.

"நான் அப்படிச் சொல்லவில்லை"

"பிறகு? அவன் மட்டும் இன்னொருத்தியை மணந்து பிள்ளைகளையும் பெற்றுக் கொண்டு வாழ்கிறான். நீங்கள் மட்டும் வாழக் கூடாதா?"

"அப்படியில்லை விஷ்வா. என்ன இருந்தாலும் அவன் ஆம்பிளை"

"இதில் ஆண் என்ன? பெண் என்ன?"

"நீங்கள் சுலபமாய் சொல்லி விட்டீர்கள். ஆனால் இதெல்லாம் சரி வராது"

"ஏன் வராது?" - அமைதியாய் இருந்த கண்ணன் வாய் திறந்தான்.



"என்ன கண்ணா? நீங்களும் இப்படிக் கேட்கிறீர்கள்"

"மீரா! இந்த சூழ் நிலையில் இப்படிக் கேட்கக் கூடாது தான். ஆனால் தொடங்கிய பேச்சை இடையில் விட வேண்டாம். ஏன் சரி வராது?"

"கண்ணா! அவன் ஆம்பிள்ளை. அவனுக்கு பெண் கொடுக்க பெண்வீட்டார் யோசிப்பதில்லை. ஆனால் வாழ்க்கையை இழந்த பெண்ணிற்கு வாழ்க்கை கொடுக்க எந்த ஆண் முன் வருவான்?"

"நான் கொடுப்பேன்" - கண்ணன் அழுத்தமாய்ச் சொல்ல திடுக்கிட்டுப் போனாள் மீரா.

"என்ன? என்ன சொன்னீங்க?"

"உண்மை தான் மீரா. நீ இன்னொருவனின் மனைவி ஆவதற்கு முன்பிருந்தே உன்னை விரும்பியவன் நான். உன்னை மணக்க இரண்டு வருடங்களாய் தவம் இருந்தேன்."

"இது– இது என்ன பிதற்றுகிறீர்கள்?"

"இல்லை மீரா. அன்று உன்னைத் திருப்பி அனுப்பினோமே. அப்போதிருந்தே கண்ணன் உன்னை விரும்ப ஆரம்பித்து விட்டான். உன் நினைப்பு தான் அவனை முன்னேற வைத்தது. கடனை அடைத்து விட்டு கம்பெனியைத் தொடங்கி அதில் முன்னேற்றம் அடைந்த பிறகு உன்னை முறைப்படி பெண் கேட்பதாக இருந்தோம். அதற்காகத் தான் உங்கள் வீடு தேடி வந்தோம். ஆனால் நீங்கள் அங்கு இல்லை"

நெஞ்சம் பட படக்க எழுந்தே விட்டாள் மீரா. "இல்லை. வேண்டாம். தயவு செய்து இப்படிப் பேசாதீர்கள்"

"இந்த வேளையில் இப்படிப் பேசுவது தப்புதா மீரா. அதனால் தான் என் மனதோடு நீ இருந்ததை மறைத் உன்னை உன் கணவரோடு வாழ வைக்க முயன்றோ ஆனால் உன் அருமை தெரியாத முட்டாள் உன் உதறிவிட்டானே?"

"அதற்காக.. அவன் செய்த அதே தப்பை நா செய்ய வேண்டுமா?"

"எதைத் தப்பு என்கிறாய்? உன்னை விட் இன்னொருத்தியை மணந்தவனை கணவனாக நினை உன் வாழ்க்கையை இழந்தாயே. அது தான் தப்பு"

"என்னைக் குழப்பாதீர்கள்"

"குழப்பினால் தான் தீர்வு கிடைக்கும் மீரா"

"என்னால் முடியாது."

"ஏன் முடியாது?"

"நான்.. நான் ஏற்கனவே திருமணமானவள்"

"அதைத்தான் மறந்து விடு என்கிறேன். கன விட்டு நிஜ உலகிற்கு வா"

"மேடம். வாருங்கள் போகலாம்."

"நில்லு மீரா. இதைப் பத்தி பேசி உன்னைத் து புறுத்தணும்னு நான் நினைக்கல்ல. என் மனசை உன சொல்ல வாய்ப்பு கிடைச்சது. சொல்லிட்டேன். அதுக் நீ என்னைத்தான் கட்டிக்கணும்னு சொல்ல மாட்டேன்"

பற்களைக் கடித்துக் கொண்டு அமைதியாய் நின்ற

"நீயும் சரோஜினியம்மா மாதிரி தனி மரமா நின்னு கூடாதேன்னு ஆதங்கத்துல சொல்றேன். உம் மனசு



உனக்கு என்னை எப்போ பிடிக்குதோ அப்போ ஏத்துக் கிட்டா போதும்."

"நான்..."

"வெயிட்! நான் சொல்லி முடிச்சுடுறேன். ஆனா இன்னொரு பொண்ணைக் கட்டிக்குவேன்னு மட்டும் நினைச்சுடாதே. நீ என்னை ஏற்றுக் கொண்டாலும் சரி மறுத்தாலும் சரி எனக்கு நீ மட்டும்தான். அதுல எந்த மாற்றமும் இல்லை."

"கண்ணா! ஏன் இப்படிப் பண்றீங்க?"

"யோசி. இப்பன்னு இல்ல இன்னும் எத்தனை வருஷம் ஆனாலும் உனக்காக உன் நினைப்போட காத்திட்டு இருப்பேன். இப்போ போலாமா?" - உருகிப் போய் இருந்த ஐஸ்கீரிம் கப்புகளை தூக்கிப் போட்டு விட்டு எழுந்தான் கண்ணன்.

மீராவின் மனம் அலைகடலாய் கொந்தளிக்கத் துவங்கியது.

## 17

தன் அறையில் அமர்ந்து கணினியை ஒன்றாய் பொருத்திக் கொண்டிருந்தான் கண்ணன். சிறுசிறு பொருள் களாய் கணினியின் உதிரிபாகங்கள் அவன் முன்னே குவிந்திருக்க. அதில் சிறு பட்டனை எடுத்து பொதிந்து வைத்து மாட்டிக் கொண்டிருக்கும் போது உள்ளே நுழைந் தான் கோபி.

"கண்ணா! முடிஞ்சதா. தூத்துக்குடி பார்ட்டி மூனு வாட்டி போன் பண்ணிட்டார்"

"இதோ ஆச்சுடா. பத்தே நிமிஷம். ஆமா போன காரியம் என்னாச்சு?"

"செக் பாஸாகிடுச்சு. விஷ்வாகிட்ட இந்த மாசத்துக்கு தேவையான மளிகைச் சாமான் வாங்கி இல்லத்துக்கு அனுப்பியிருக்கேன்."

"சரி. தூத்துக்குடிக்கு நீ போயிட்டு வந்திடுறியா?"

"என்னடா மறந்துட்டியா? இன்னிக்கு அப்பாவை டாக்டர் கிட்ட கூட்டிட்டுப் போகனும்."

"அடடா! மறந்தே போச்சு. அப்பாயின்மென்ட் வாங்கிட்டியா?"

நேற்றே வாங்கிட்டேன்"

"சரி. நீ அப்பாவைக் கூட்டிட்டுப் போ. விஷ்வா வந்து கம்பெனிய பார்த்துக்கட்டும். நான் தூத்துக்குடி போறேன்"

"சரிடா. இப்பக் கிளம்பினா போய்ச் சேர நைட் ஆகிடுமே"

"ம். போய் டெலிவரி பண்ணிட்டு முடிஞ்சா நைட்டே திரும்பிடுறேன்"

"வேண்டான்டா. ஏதாவது ஹோட்டல்ல ரூம் போட்டுத் தங்கிட்டுவா. ராத்திரி ட்ராவல் பண்ண வேண்டாம். டிரைவரும் ரெஸ்ட் எடுக்க வேண்டாமா?"

"சரி. நான் பார்த்துக்கிறேன். நீ ரவியைக் கூப்பிட்டு இதையெல்லாம் பேக் பண்ணு." - வேலையை செய்து



கொண்டே கண்ணன் சொல்ல, ஒரு கணம் தயங்கி நின்றான் கோபி.

"என்னடா? நின்னுட்டு இருக்கே"

"கண்ணா! நீ சரணாலயத்துக்கு போய் இன்னியோட பதினஞ்சு நாளாச்சு."

"ஆமா! அதுக் கென்ன இப்போ?"

"வந்து... மீராவைப் பார்க்கப் போகலையா?" - கேட்டவனை நிமிர்ந்து பார்த்தான் கண்ணன்.

"சொந்த விஷயம் பேசுற நேரமா இது. வேலையைப் பார்."

"எப்பக் கேட்டாலும் இப்படித்தான் சொல்ற. உம் மனசை சொல்லிட்டு பதில் என்னன்னு தெரியாம உன்னால எப்படிடா வேலை செய்ய முடியுது?"

"கோபி. அது வேற. இது வேற"

"எனக்கு ரெண்டும் ஒன்றுதான். தினமும் இந்த சிலை கூட பேசிட்டு இருந்தா போதுமா? மீராவைப் பார்த்து பேசினாத்தானே அவமனசுல என்ன இருக்குன்னு தெரியும்"

"இது எனக்கும் புரியுதுடா. ஆனா இப்போ போகக் கூடாது"

"ஏன்?"

"கோபி, ஏற்கனவே அவ மனசுல காயம்பட்டு போயி ருக்கா. இந்த நேரம் நான் என் விருப்பத்தைச் சொல்லி ருக்கவே கூடாது. அன்னிக்கு ஏதோ வேகத்தில் சொல் லிட்டேன்."

"எப்படியும் ஒரு நாள் சொல்லித்தானே ஆகனும்"

"நானும் அந்த எண்ணத்தில் தான் சொன்னேன். ஆனா திரும்பத் திரும்ப அவ முன்னால போய் நின்னா எம்மேல வெறுப்புதானே வரும்."

"ஏன்டா?"

"இப்போ நான் சும்மாவே போனாலும் திரும்பவும் கல்யாணப் பேச்சை எடுக்கத்தான் வந்திப்பானோன்னு தோணும். என்னைப் பார்த்தாலே பயந்து பதுங்குவா. பாவம்! என்னால எதுக்கு அவளுக்கு வீண் தொந்தரவு."

"அப்போ அப்படியே விடப்போறியா?"

ம்ஹூம். பொறுமையா இருக்கப்போறேன். மீராவுக்கு இப்போ தேவை அமைதி மட்டும் தான். அந்த அமைதி அவளை யோசிக்க வைக்கும். என்னைப் பத்தின நல்ல எண்ணத்தைக் கொண்டு வரும்"

"அப்படின்னு நினைக்கிறியா?"

"ஷ்யூர். பார்க்காத நபர் மேல நம்மையும் மீறி ஒரு எதிர் பார்ப்பு வருமில்ல. அதே மாதிரி அவ என்னை எதிர் பார்க்கும் போது நான் அவள் முன் போய் நிற்பேன்"

"அவ எதிர் பார்ப்பது உனக்கு எப்படித் தெரியும்?"

"எம் மனசுக்குள்ள மணியடிக்கும் "

"அதான் எப்படி?"

"அதெல்லாம் சொன்னால் புரியாது. போய் வேலையைப் பார். இப்போதே பத்து நிமிடம் வீணாகி விட்டது"

"எது செய்வதாக இருந்தாலும் சீக்கிரமாய் செய் கண்ணா"



"உனக்கு என்னடா அவசரம்?"

"காலையில் அம்மா போன் பண்ணியிருந்தார்கள்"

"எப்போ?"

"நீ குளித்துக் கொண்டிருந்தாய். நான் தான் பேசினேன்"

"என்ன சொன்னார்கள்?"

"இன்னும் இரண்டு மாதத்தில் உனக்கு இருபத்தி ஏழு வயது முடிகிறதாம். அதற்குள் திருமணம் செய்து விட வேண்டும் என்று ஜாதகம் சொல்கிறதாம்"

"வேறு வேலையே கிடையாது"

"அம்மா ரொம்ப உறுதியா இருக்காங்கடா. அந்தப் பொண்ணு கிடைக்கலேன்னா உங்க ஊர்லயே ஒரு பொண்ணு இருக்குதாம். அதேயே பேசி முடிச்சிடுவேன்னு சொல்றாங்க"

"என்னை மீறி எதுவும் நடக்காது"

"இன்னும் பத்து நாள்ல இங்க வர்றாங்களாம். நேரில் பேசினாத்தான் நீ சரிவருவாயாம்"

"வரட்டும் . பிறகு பார்க்கலாம்"

"அதற்குத்தான் சொல்கிறேன். சீக்கிரமாய் மீராவிடம் பேசு"

"சரி. தூத்துக்குடிக்கு போயிட்டு வந்து பார்க்கிறேன்"

"ம்" - என்றவாறு புத்தம் புதிதாய் இருந்த கம்ப்யூட்டர்களை போதிய பாதுகாப்போடு பார்சல் செய்ய ஆரம்பித்தான்.

கண்ணன் தன் வேலையில் ஆழ்ந்தாலும் மனதின் ஓரமாய் நின்று மீரா அழுத்திக் கொண்டே இருந்தாள்.

அம்மாவும் பாவம் தான். தனக்காக எத்தனை வருடங்கள் பொறுத்திருப்பார். மகன் மனதில் ஒரு பெண் இருக்கிறாள் என்றதும் அவள் யார் எவர் என்று தெரியாமலே சம்மதம் சொல்லிய அன்னை.

மகனுக்கு எப்படியும் திருமணம் செய்து பார்க்க வேண்டும் என்பது இயல்பான ஆசைதானே. தன்னால் அதை நிறை வேற்ற முடியுமா? மீரா சம்மதம் சொல் வாளா? மீராவைப் பற்றி அன்னையிடம் சொல்லலாமா?

எதுவாக இருந்தாலும் தன்னால் இன்னொரு பெண்ணை மணக்க முடியாது. அதில் உறுதியாய் இருந்தான் கண்ணன். மீராவின் நினைவுடனே பார்சல் களை வேனில் ஏற்றிக் கொண்டிருந்த போது, செல்போன் அழைத்தது.

எடுத்துப் பார்த்தான். விஷ்வா. "சொல்லு விஷ்வா இல்லத்துல பொருள்களை இறக்கிட்டியா?"

"இறக்கிட்டேன் கண்ணா"

"சரி. நீ கிளம்பி ஆபீசுக்கு வா. நான் தூத்துகுடிக்கு கிளம்பிட்டுஇருக்கேன்"

"க.. கண்ணா" - விஷ்வாவின் குரலில் பதட்டம் தொனித்தது.

"என்னடா?"

"க.. கண்ணா. கொஞ்சம்... உமா ஹாஸ்பிடல் வரைக்கும் வர்றியா?"

"என்னாச்சுடா? ஏன் உன் குரல் ஒரு மாதிரி இருக்கு"

"கண்ணா! இல்லத்தில இருந்து திரும்பி வரும் போது ஒரு ஆக்ஸிடென்ட்..."



"என்ன? விஷ்வா! உனக்கு ஒன்றும் இல்லையே" - பதறிப் போனான்.

"எனக்கு ஒண்ணுமில்லடா. ஆனா... ஒரு பெரிய வருக்கு அடிபட்டிருக்கு"

"என்ன? நீ மோதிட்டியா?"

"இல்ல கண்ணா. நான் ஹாரன் அடிச்சேன். அவர்தான் திடீர்னு குறுக்கே வந்திட்டார்"

"மைகாட்.. சரி இப்போ எப்படி இருக்கார்? அடி பலமா?"

"ஆமா கண்ணா. இரத்தம் நிற்கவே இல்லை. டாக்டர்ங்க போலீசுக்கு இன்பார்ம் பண்ணச் சொல்றாங்க. எனக்கு பயம்மா இருக்கு. நீ வர்றியா?"

"இதோ வர்றேன். சரி. அந்தப் பெரியவர் யாருன்னு தெரிஞ்சதா?"

"தெரியலடா. பார்த்தா பிச்சைக்காரர் மாதிரி இருக் கார்"

"சரி. நீ அங்கேயே இரு. நான் இப்ப வந்திடுறேன். ஆமா உமா ஹாஸ்பிடல் எங்கே இருக்கு?"

"குரோம்பேட்டை போற ரோட்ல நேஷனல் தியேட்டருக்கு ஆப்போசிட்ல இருக்கு"

"சரி. நான் வர்றேன்" - போனைக் கட் பண்ணிவிட்டு மீண்டும் அலுவலகத்திற்குள் நுழைந்தான்.

"சேகர்"

"ஸார்"

"நீ உடனே கிளம்பி தூத்துக்குடிக்கு போ. லோடை இறக்கிட்டு பார்ட்டி செக் தந்து அனுப்பு வாங்க. வாங்கிட்டு வந்திடு. ட்ரைவருக்கு அட்ரஸ் தெரியும் பார்த்துப் போயிட்டு வந்திடுறியா?"

"ஓ.கே.ஸார்"

"காயத்ரி"

"என்ன அண்ணா?"

"ஒரு அவசர வேலையா வெளியே போறேன். போன் கால்ஸ் வந்தா என் செல்லுக்கு கான்டாக்ட் பண்ணச் சொல்லு"

"சரிண்ணா"

மற்றவர்களுக்கு உத்தரவைப் பிறப்பித்து விட்டு கோபியைக் கையோடு அழைத்துக் கொண்டு பதட்டமாய் மருத்துமனையில் போய் நின்ற போது அந்தப் பெரியவர் கண்விழித்திருந்தார்.

அருகே நின்ற போலீஸாரிடம் வாக்கு மூலம் கொடுத்துக் கொண்டு இருந்தார். கண்ணனும் கோபியும் வேகமாக விஷ்வாவை நெருங்க, பெரியவர் விஷ்வாவை காட்டிச் சொன்னார்.

"இந்த தம்பி மேல எந்தத் தப்பும் இல்லய்யா. நான் தான் பசி மயக்கத்தில மயங்கிட்டேன். தம்பி தான் தூக்கியாந்து இங்க சேர்த்திருக்கு"

"பெரியவரே! உங்களுக்கு எந்த ஊர்?"

"முத்து நகர் யா"

"பெயரைச் சொல்லுங்க"



"தியாகராஜன்" - பெரியவர் சொன்ன பதிலில் விஷ்வாவும் கண்ணனும் அதிர்ந்து போய் பெரியவரை ஏறிட்டனர்.

தலை முழுக்க நரைத்திருக்க, வெள்ளை தாடியுடனும் ஒட்டிய உடம்போடும் பரிதாபமாய் தெரிந்தார். அணிந்திருந்த வேட்டியும் சட்டையும் கந்தலாய்த் தெரிந்தது. கண்கள் குழிக்குள் போயிருக்க, கண்களில் மட்டும் ஒளி இருந்தது.

"கண்ணா! இவர்.. அந்தத் தியாகுவாய் இருக்குமோ" - கண்ணனின் காதோரமாய் கிசுகிசுத்தான் விஷ்வா.

"ஷ். பேசாம இரு. போலீஸ் போகட்டும்"

"இங்க ஏன் வந்தீங்க பெரியவரே? - போலீஸார் விசாரிக்க, அயர்ச்சியாய் கண்களை மூடினார் தியாகராஜன். அருகே நின்ற பெண் மருத்துவர் உமா குரல் கொடுத்தாள்.

"ஸார்! பேஷண்ட் ஏற்கனவே ரொம்ப டயர்டா இருக்கார். ப்ளட் நிறைய வாலாகியிருக்கு. அவர் கம்ப்ளீட்டா ரெஸ்ட் எடுக்கணும்"

"இது சாதாரண விசாரணை தான் மேடம். எங்க கடமையை நாங்க செய்யணும் இல்லையா?"

"இப்போ அவரைத் தொந்தரவு பண்ண வேண்டாமே. இன்னும் ட்ரீட் மெண்ட் முடியல்ல. இவர் க்ருப் ப்ளட் ஹாஸ்பிடல்ல ஸ்டாக் இல்ல. வெளிய இருந்து கொண்டு வந்துட்டு இருக்காங்க. ப்ளட் ஏற்றணும்"

"ஓ.கே. நீங்க கன்ட்டினியூ பண்ணுங்க. இது விபத்தா கொலை முயற்சியான்னு தெரிஞ்சுக்கத்தான் வந்தேன்"

பெரியவர் விரக்தியாய் சிரித்தார். "இந்தப் பிச்சைக் காரப் பயலை யாருய்யா கொலை செய்யப் போறாங்க. நாலு நாளா சாப்பிடல்ல. பிச்சை எடுக்கவும் மனசு வரல்ல. அதான் கண்ணு இருட்டிப் போச்சு"

"பிள்ளைக இல்லையா பெரியவரே"

"யாருமே இல்லய்யா. நான் ஒரு அநாதை" - கண்ணன் மீண்டும் அதிர்ந்தான். இவரது குடும்பம் என்ன ஆயிற்று? - விஷ்வாவும் அதே எண்ணத்தோடு பார்க்க, போலீஸ் அதிகாரி விஷ்வாவிடம் திரும்பினார்.

"மிஸ்டர்! இது தனியார் ஹாஸ்பிடல், செலவு அதிக மாகுமே. பெரியவரை ஜி. ஹெச்சுக்கு அனுப்பிடலாமா?"

அவசரமாய் மறுத்தான் கண்ணன். "வே.. வேண்டாம் ஸார். இங்கேயே இருக்கட்டும். நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்"

"நீங்கள் யார்?"

"நாங்க மூனுபேரும் நண்பர்கள். ஒன்றாய்தான் வேலை பார்க்கிறோம்."

"சரி. பெரியவர்க்கு குடும்பம் இல்லையாம். குணமா னதும் ஏதாவது ஒர ஆசிரமத்தில சேர்த்திடுங்க"

"சரிங்க ஸார்"

"பெரியவரே! உடம்பைப் பார்த்துக்கங்க. நான் வரட்டுமா"

"சரிங்கய்யா"

மருத்துவரிடமும் விடைபெற்று அவர் சென்றதும் பெரியவரை நெருங்கினர் மூவரும். தலையில் பலமாய்



அடிபட்டிருந்தது. கைகால்களில் கட்டுப்போடப்பட்டிருக்க தலையில் இன்னும் ரத்தம் கசிந்து கொண்டே இருந்தது.

மருத்துவரை ஏறிட்டான் கண்ணன். "மேடம்! இவர் உயிருக்கு ஒன்றும் ஆபத்தில்லையே."

"இல்லை. ஆனால் தலையில் காயம் அதிகம். பளட் நிற்கவில்லை. இப்படியே போனால் எதுவும் சொல்வதற் கில்லை"

"நோ. நோ மேடம். இவரை எப்படியாவது காப்பாற்ற வேண்டும். இவர் உயிர் ரொம்ப முக்கியம்"

உமா வியந்தாள். "இவர் உங்களுக்கு உறவா?"

"இல்லை. ஆமாம். உறவுதான்" - பெரியவர் வியப் பாய் ஏறிட்டார்.

"யாருய்யா நீங்கள்லாம்? என்னைக் காப்பாத்தியி ருக்கீங்க. பெரியவைத்தியம் எல்லாம் பார்க்கிறீங்க. யாருய்யா நீங்க?"

"எல்லாம் வேண்டியவங்கதான். சொல்றோம். அதுக்கு முன்னால எங்க சந்தேகத்தை தீர்த்துக்கணும். பெரியவரே! உங்களுக்கு மனைவி குழந்தை எல்லாம்..." - கண்ணன் கேட்டுக்கொண்டிருக்கும் போதே நர்ஸ் ஓடிவந்தாள்.

"டாக்டர்! பளட் வந்தாச்சு"

உமா பரபரப்பானாள். " கொண்டுவா சீக்கிரம். ஸார்! கொஞ்சம் வெளியே நில்லுங்க. இவருக்கு உடனே ப்ளட் ஏத்தியாகணும். பேசி டிஸ்டர்ப் பண்ணவேண்டாம்"

"ஓ.கே. டாக்டர். நாங்க வெளியே வெயிட்பண்றோம் " நகர மனமின்றி மற்றவர் விலக, கண்ணன் நின்றான். பெரியவர் கண்களை மூடிக்கொள்ள, தியாகுள்ளு

"கூப்பிட்டாத்தான் பிடிக்கும்" சரோஜினியின் வார்த்தை நினைவு வர, குரலில் மென்மையையும் இனிமையையும் குழைத்து சற்றே ரகசியமாய், "தியாகு" - என்றழைத்தாள்.

பெரியவர் திடுக்கிட்டு விழித்தார். கண்கள் பரபரவென தேடியது. எழ முயற்சித்தவரை உமா பதறித் தடுத்தாள். " என்ன பண்றீங்க. உடல் முழுக்க காயத்தோட ஏன் எழுந்துக்கறீங்க. படுங்க பெரியவரே"

"இல்லம்மா! என்னை... என்னை யாரோ கூப்பிட்டாங்க"

"யாரும் கூப்பிடலையே"

"இல்லம்மா! என்னைக் கூப்பிட்டாங்க. இத்தனை உரிமையா செல்லமா என்னைக் கூப்பிட்டது என் சரோ மட்டும்தான். சரோ.. சரோ"

உமா நர்ஸை அழைத்தாள். "நர்ஸ். இன்ஜெக்ஷன் எடுங்க அவர் தூங்கணும்."

கண்ணனின் முகம் புன்னகை பூத்தது. இவர் அதே தியாகுதான். மேடத்தின் செல்லப்பெயர் சரோவா? மேடம் இத்தனை வருடங்களாய் உங்களைப் பிரிந்திருந்த ஜீவன் இதோ இன்று தேடிவந்திருக்கிறது. அவர் மனதிலும் உங்கள் நினைவுகள் அழியாமல்தான் இருக்கிறது.

"ஸார்! உங்களை வெளியே வெயிட் பண்ண சொன்னேனே"

"ஸாரி டாக்டர். போயிடுறேன். கொஞ்சம் பத்திரமா பார்த்துக்கங்க. எங்க அப்பாமாதிரி இவர்"

"நாங்க பார்த்துக்கிறோம். போங்க ஸார்"



"ஓ.கே" - என்றவாறு அறையைவிட்டு வெளியேறியவனை ஆவலாய் எதிர்கொண்டான் விஷ்வா.

"கண்ணா! இவர் மேடத்தோட..."

"அதே தியாகுதான். அதுல எந்த சந்தேகமும் இல்லை"

"வாவ்! உடனே மேடத்துக்கு போன் போடு"

"என்னடா! எனக்குப் புரியாம நீங்களே பேசறீங்க" யாரு இவர்"

"கோபி. மேடத்தோட கடந்தகாலத்தைப்பத்தி பே... னோமே"

"ஆமா"

"இவர்தான் அந்த ஹீரோ"

"அட! எப்படிடா கண்டுபிடிச்சீங்க?"

"நான் கன்பார்ம் பண்ணிட்டேன். மேடம் வந்... உறுதியாகிடும்" - என்றவாறு தனது செல்லை... சரணாலயத்திற்கு போன் செய்தான். எடுத்தது... மீராவின் குரலைக்கேட்டதும் பேச்சு வராமல் நி... கண்ணன்.

"ஹலோ! யாருங்க பேசறது." - மீரா மீண்டு... சுதாரித்தான்.

"நான். கண்ணன்"

"சொ.. சொல்லுங்க"

"மேடம் இல்லையா?"

"மேடம் ஸ்டாக் ரூம்ல இருக்காங்க"

"நான் கொஞ்சம் அவசரமாப் பேசணும்"

"லைன்ல இருக்கீங்களா? கூட்டிட்டு வர்றேன்"

"ம்" - காத்திருந்தான். இரண்டு நிமிடத்தில் சரோஜினியின் குரல் கேட்க,

"மேடம். ரொம்ப பிஸியா இருக்கீங்களா?"

"இல்லப்பா. சொல்லு என்னவிஷயம்?"

"மேடம். குரோம்பேட்டை மெயின்ரோட்ல இருக்கிற உமா ஹாஸ்பிடல் வரை வந்துட்டுப் போக முடியுமா?"

"ஹாஸ்பிடலுக்கா? என்னப்பா? உடம்பு எதுவும் சரியில்லையா?" - சரோஜினி பதறிக் கொண்டிருக்கும் போதே மீராவின் குரலும் கேட்டது.

"மேடம்! யாருக்கு என்ன? கண்ணன்தானே பேசினார். அவருக்கு எதுவும்..." - மீராவின் பதட்டம் கண்ணனை உற்சாகப்படுத்தியது.

அப்படியெல்லாம் ஒண்ணும் ஆகியிருக்காதும்மா. நான் கேட்கிறேன்" - என அவளை சமாதானம் செய்துவிட்டு கண்ணனிடம் கேட்டாள் சரோஜினி.

"என்ன கண்ணா! உன் உடம்புக்கு எதுவும்..."

மீராவைச் சீண்டிப்பார்க்கும் எண்ணத்தோடு, "அதெல்லாம் போனில் சொல்ல முடியாது மேடம். நாங்க எல்லாருமே இப்ப ஹாஸ்பிடல்லதான் இருக்கோம். நீங்க கொஞ்சம் சீக்கிரமா புறப்பட்டு வாங்களேன்"

"கண்ணா! எனக்கு உடம்பெல்லாம் பதறுதே. என்னன்னு சொல்லிடேன். பயப்படுற மாதிரி ஒண்ணும் இல்லையே."



"ம்ஹூம். நீங்க எதிர்பாராத ஒருத்தரைப் பார்க்கப் போறீங்க."

"யாரு? யாருப்பா?"

"அது சஸ்பென்ஸ். புறப்பட்டு வாங்க"

"என்னவாம் மேடம்" - மீரா பதறியவாறே கேட்டாள்.

"ஒண்ணும் சொல்லமாட்டேன்கிறானே. சஸ்பென்ஸாம்"

"ஹாஸ்பிடல்ல வெச்சு என்ன விளையாட்டு? போனை எங்கிட்ட கொடுங்க" - போன் கைமாறியதும் கண்ணன் அவசரமாய் கட் பண்ணினான். புன்னகையோடு நின்றவனை அசைத்தான் கோபி.

"என்னடா? என்ன சொன்னாங்க?"

"வர்றாங்க. மீராவும் வருவா"

"என்னடா சொல்றே?"

"நமக்குத்தான் உடம்பு சரியில்லன்னு பதறிப் போயிட்டா. நிச்சயம் வருவா."

"அதெப்படி இவ்வளவு உறுதியாச் சொல்றே?"

"இத்தனை நாள் அவளைப் பார்க்காமல் இருந்தேனே. அதுக்கு நல்ல ரிசல்ட்! மீரா மனசில நான் நுழைய ஆரம்பிச்சுட்டேன்னு நினைக்கிறேன்" - கண்ணனின் முகப்பொலிவைக் கண்டு நண்பர்களும் உற்சாகமாயினர்.

# 18

ஆட்டோ இரைச்சலோடு போய்க் கொண்டிருக்க மீரா தவிப்பாய் அமர்ந்திருந்தாள். மனம் முழுக்க பதறிக் கொண்டே இருந்தது. கண்ணனின் குரல் மாறியிருந்ததே இத்தனை நாட்களாய் இல்லத்திற்கு வரவும் இல்லை. நான்தான் பேசுகிறேன் என்று தெரிந்தும் ஒருவார்த்தை நலம் விசாரிக்கவும் இல்லை.

ஏன்? அவர் உடம்புக்கு என்ன ஆயிற்று? ஏதேனும் தவறுதலான முடிவை எடுத்திருப்பாரோ. கலையில் வந்த விஷ்வாகூட கண்ணனைப் பற்றி ஒருவார்த்தை கூடப் பேசவில்லையே. விபத்து எதுவும் நடந்திருக்குமோ.

நான் ரீஸிவரை வாங்கியதும் போனை கட் பண்ணி விட்டாரே. அப்படியென்றால் என்னுடன் பேசவிருப்பம் இல்லை என்றுதானே அர்த்தம். நான் வேண்டாதவளாகி விட்டேனா கண்ணன்.

கண்ணனைக் காணாத இந்த இருவாரங்களில் மீரா நிறைய மாறியிருந்தாள். முதல் வாரம் முழுக்க நல்ல வேளையாக அவன் வரவில்லை. வந்து தொந்தரவு செய்யவில்லை என்று இருந்தாள். மறுவாரமும் அவன் வரவே இல்லை என்றதும் ஏன் வரவில்லை என்று எண்ணத் துவங்கியிருந்தாள்.

கடந்த இரண்டு நாட்களாத வந்துவிடமாட்டானா என ஏங்கத் துவங்கியிருந்தாள். விஷ்வா வந்து வேலைக்கு கூப்பிட்டபோது கண்ணனை நேரடியாய் பார்க்க விரும்பாமல் தான் மறுத்து அனுப்பினாள்.



அதனால் தான்.. அந்தக் கோபத்தில் தான் இங்கு வரவில்லையோ. நானும் ஒரேயடியாய் உதாசினப்படுத்தியிருக்கக்கூடாது. தன் மனதில் உள்ளதை ஒளியாமல் சொன்னான். நானும் அதை நாசுக்காக மறுத்திருக்க வேண்டும்.

உன்வேலையும் வேண்டாம் நீயும் வேண்டாம் என்று உதறியதில் மனம் நொந்திருப்பானோ. கண்ணா! உனக்கு என்ன ஆயிற்று. நான் ஏன் இப்படிப் பரிதவிக்கிறேன். உள்ளம் பதற ஓட்டுனரை விரட்டினாள்.

"கொஞ்சம் வேகமாப் போங்களேன்"

ஆட்டோ சீறியது. "மேடம்! அவருக்கு ஒன்றும் ஆகியிருக்காதே"

அமைதியாய் கைகூப்பி வணங்கிக் கொண்டு வந்த சரோஜினியிடம் கேட்டாள்.

"ஒன்றும் ஆகியிருக்காது. பதறாதே மீரா"

"மேடம்! ஒருவேளை என்மீதுள்ள கோபத்தில் வருத்தத்தில் ஏதாவது தவறான முடிவை எடுத்திருப்பாரா?"

சரோஜினி அவசரமாய் மறுத்தாள். "சேச்சே! கண்ணன் ஒன்றும் விடலைப்பையனில்லை. பக்குவமான பண்பான பிள்ளை. ஒருபோதும் முட்டாள் தனமான காரியம் செய்யமாட்டான்"

"இல்ல மேடம். எனக்கு ரொம்ப பயமா இருக்கு"

"ஏதோ சஸ்பென்ஸ் என்றான். என்னவென்றுதான் புரியவில்லை"

மீராவின் மனம் அவசரமாய் யோசித்தது. ஒரு வேளை சினிமாக்களில் வருவதுபோல கைகால்களில்

போலிகட்டுகளோடு படுத்திருப்பானோ. என்னை ஏமாற்ற ஏதேனும் தந்திரம் செய்கிறானோ.

சேச்சே! அப்படி எதுவும் இருக்காது. கண்ணன் என்ன வேலைவெட்டி இல்லாதவரா? ஆனால் என்ன சஸ்பென்ஸ்? தலையைப் பிய்த்துக் கொள்ளலாம் போல இருந்தது.

"டிரைவர்! கொஞ்சம் வேகமாப் போங்களேன்"

"இது ஆட்டோம்மா. இதைவிட வேகமாப் போனா ஹாஸ்பிடலுக்கு போகமுடியாது. மார்ச்சுவரிக்குத்தான் போகவேண்டியிருக்கும்" - ஆட்டோக்காரர் மு... பயந்து போனாள் மீரா.

"என்னப்பா நீ. நாங்களே பயந்துபோய் இருக்கிறோம். இந்தநேரத்தில் நீ மார்ச்சுவரி அது இது என்கிறாயே" - சரோஜினி மெல்லக் கூற.

"பின்னே என்னம்மா? இதைவிட வேகமாப் போனா என்னாகிறது? இதோ வந்திடுச்சும்மா நீங்க சொன்ன ஆஸ்பத்திரி" - என்றவாறே சற்றே பெரிதான அந்த மருத்துவமனையின் முன் நின்றது.

சரோஜினி ஆட்டோக்காரருக்கு பணத்தை எடுத்துக் கொடுப்பதற்கு முன்பாக இறங்கி மருத்துவமனைக்குள் ஓடினாள் மீரா.

'எங்கே இருக்கிறார்கள்? எப்படி விசாரிப்பது?' என தயக்கமாய் சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே வந்தவளை நீளமான வராந்தாவில் நின்ற கண்ணன்தான் முதலில் பார்த்தான்.



"கோபி! நான் சொல்லல? மீரா வருவான்னு. வந்திட்டா பாரு"

"எங்கேடா?"

"ஷ், யாரும் திரும்பாதீங்க. அவ வரட்டும்" - என்றவாறு மீராவிற்கு கையைக் காட்டினான்.

"மீரா! இங்கே.. இந்தப்பக்கம் வாங்க"

கண்ணனை முழுதாய் பார்த்ததும்தான் இயல்பாய் மூச்சைவிட்டாள். சட்டென அவனை நெருங்கி. "கண்ணா! உ... உங்களுக்கு ஒன்னும் ஆகலையே" - என்றாள் தலைமுதல் பாதம்வரை பார்த்துக்கொண்டே.

"எப்படி இருக்கேன்?" - கண்ணன் புன்னகையோடு கேட்டான்.

"என்ன?"

"இல்ல. இதுவரை என்னை முழுசாப் பார்த்ததே இல்லையே. அதான் கேட்டேன்"

"வந்து.. வந்து.. போன்ல.. ஹாஸ்பிடலுக்கு.."

"வெயிட் மீரா. எதுக்கு இவ்வளவு பதட்டம்? முதல்ல கொஞ்சம் தண்ணிகுடிங்க" - என்றவாறு வாட்டர் பாட்டிலைத் திறந்து நீட்டினான்.

கடகடவென குடித்தாள். சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டு நிமிர்ந்த போது கோபியும் விஷ்வாவும் நிற்க. குழப்பமானாள்.

"எல்லாருமே நல்லாத்தானே இருக்கீங்க? ஏன் போன் பண்ணீங்க"

"அதை மேடத்துகிட்டே தான் சொல்லணும். மேடம் எங்கே?"

சட்டென நாக்கைக் கடித்துக் கொண்டாள் மீரா "அச்சோ! நான் ஏதோ அவசரத்தில முதல் ஆளா ஓடி வந்திட்டேன்"

"ஏதோ அவசரத்தில இல்ல. கன்னனைப் பார்க்கும் அவசரத்திலன்னு சொல்லு. ஏன்டி பெண்ணே! நான் உன்னை அங்கே தேடிட்டு நிற்கிறேன்" - என மூச்சுவாங்க வந்து சேர்ந்தாள் சரோஜினி.

"ஷ். மேடம். சும்மாயிருங்க." - அதட்டினாள் மீரா.

"வாங்க மேடம்"

"கன்னா! என்னப்பா விஷயம்? பதறிப் போயிட்டோம்"

"மேடம்! இன்னிக்கு ஒரு முக்கியமான நபரை விபத்துல இருந்து காப்பாற்றி இருக்கோம். அவரை நீங்களும் பார்க்கனும்"

"விபத்தா? யாருக்கு? என்ன விபத்து?"

"உள்ளே வாங்க மேடம்! விஷ்வா! நீங்கள்லாம் இங்க இருங்க. மொத்தமாப் போனா டாக்டர் திட்டுவாங்க"

"டாக்டர்தான் போயிட்டாங்களே. நாங்களும் வர்றோம்"

"சரி வாங்க. அமைதியா இருக்கனும். நீங்க வாங்க மேடம்" - கன்னன் முன்னே செல்ல குழப்பமாய் அவனைத் தொடர்ந்தாள் சரோஜினி. மற்றவர்களும் பின் தொடர, நர்ஸ் எழுந்துவந்தாள்.

"என்ன இவ்வளவு கும்பலா வர்றீங்க ? டாக்டர் திட்டுவாங்க"



"சிஸ்டர்! நாங்க சைலண்ட்டா இருந்து பார்த்திட்டுப் போயிடுறோம்" - கோபி நர்சிடம் பேசிக்கொண்டிருக்க, சரோஜினி நெறித்த புருவத்துடன் மெதுவாய் படுக்கையை நெருங்கினாள். உள்ளம் படபடத்தது.

உடல் முழுக்க கட்டோடும் தாடிக்குள் புதைந்து போயிருந்த முகமுமாய் இருந்த போதும் தியாகராஜனை உடனே அடையாளம் கண்டு கொண்டாள். உடலும் உள்ளமும் துடிக்க, சற்று தள்ளாடியவளை ஆதரவாய் பற்றி நாற்காலியில் அமரவைத்தான் கன்னா.

"தி.. தியாகு. என் தியாகு. இவர் எப்படி இங்கே?" - நரம்போடிய விரல்களால் தியாகராஜனை வருடினாள். அவரது உடல் சிலிர்த்துக் கொண்டது.

தியாகராஜன் ஆழ்ந்த நித்திரையில் இருந்தார். தலை கீழாய் தொங்கிக் கொண்டிருந்த பாட்டிலில் இருந்து ரத்தம் துளிதுளியாய் அவர் உடம்பில் ஏறிக்கொண்டிருந்தது. தலையில் பெரிதான கட்டு போடப்பட்டிருந்தது.

சரோஜினியின் கண்களில் நீர் தளும்பியது. கன்னனிடம் திரும்பினாள்.

"கன்னா! எப்படி நடந்தது? யார் இங்கு வந்து..."

"நான் தான் மேடம்! இல்லத்தில இருந்து புறப்பட்டு ஆபீசுக்கு போயிட்டு இருந்தப்ப குறுக்கவந்திட்டார். பாவம்! நாலுநாளா சாப்பிடலையாம். பசியிலதான் மயங்கி விழுந்திருக்கார்"

"ஐயோ! பட்டினியாய் கிடக்கும் அளவிற்கு என்னஆயிற்று? தியாகுவின் குடும்பம் எங்கே? இவர் ஏன் இப்படி உடல் வற்றிப் போயிருக்கிறார்?"

"மேம்! அவர் ரொம்ப முடியாம இருந்ததால டாக்டர் எதுவும் பேசவிடல்ல. அதனால எதுவும் கேட்கல்ல ஆனா தான் ஒரு அநாதைன்னு சொன்னார் மேடம்"

"என்ன?"

"ஆமாம் மேம். அவர் கண்விழிச்சப்புறம் தான் விபரம் கேட்கணும்"

"விஷ்வா! ரொம்பநன்றிப்பா. யாரோ எவரோன்னு விட்டுட்டு போயிடாம உசுரைக் காப்பாத்தியிருக்கியே ரொம்ப நன்றிப்பா"

"நான் கூட யாரோன்னு தான் நினைச்சேன் மேடம் கண்ணன் தான் இது உங்க தியாகுன்னு கண்டுபிடிச்சான்"

"நீங்க எல்லாருமே நான் பெறாத பிள்ளைங்கப்பா எவ்வளவு பெரிய உதவி பண்ணியிருக்கீங்க?"

"மேடம்! இது எங்க கடமை. உண்மையைச் சொ லணும்னா உங்க ஹீரோவைப் பார்க்க நாங்க ரொம் ஆவலோட இருந்தோம்"

"இப்போ இவர் இன்னொருத்தியோட புருஷன்ப்ப

"இருக்கட்டுமே மேம். இன்னும் உங்க மனசு வாழ்ந்திட்டுத்தானே இருக்கார்"

"மேடம்! இத்தனை வருஷத்துக்கு அப்புறம் இப்படி தள்ளாடிப்போன உடம்போட இவர் ஏன் சென்னைக்கு வந்தார்?"

"தெரியலையேப்பா"

"நான் நினைக்கிறேன். உங்களைத் தேடித்தா வந்திருப்பாருன்னு"



"இருக்காது கோபி. நான் இங்க வந்து கிட்டதட்ட நாற்பது வருஷம் ஆகப் போகுது. இதுவரை ஒருநாள் கூட இவர் வந்ததே இல்லை. நான் இங்கே இருப்பதே இவருக்குத் தெரியாது என்றுதான் நினைக்கிறேன்"

"நீங்களும் ஊருக்கு போகவே இல்லையா?" - மீரா கேட்டாள்.

"என்னால் எப்படிப் போகமுடியும் மீரா? என்னைப் பார்த்தால் இவரது நிம்மதி கெட்டுப்போயிடுமே. அதனாலதான் ஊர்ப்பக்கமே போகல்ல"

"தப்பு பண்ணிட்டிங்க மேடம். நீங்க போய் வந்து இருந்திருக்கணும்"

"இல்ல கண்ணா! நான் போகாம இருந்ததற்கு இன்னொரு காரணமும் உண்டு"

"என்ன காரணம்?"

"இவரது மனைவி என்னிடம் வாங்கிய வரம். அதை எனக்கு இட்ட கட்டளை என்றும் சொல்லலாம்"

"என்ன சொன்னாங்க?"

"இனிமே ஊர்ப்பக்கம் வந்து எம்புருஷன் கண்ணில பட்டுடாதே. அப்புறம் உங்கூடவே வந்திடுவார். நான் தூக்கில தொங்கிடுவேன். இனிமே இந்த ஊரையே மறந்திடுன்னு சொல்லித்தான் அனுப்பினா"

"என்ன அநியாயம்? அந்தப் பெண்ணிற்காக உங்கள் வாழ்க்கையையே தியாகம் செய்திருக்கீங்க. அந்த நன்றி துளியும் இல்லாமல் இப்படிச் சொல்லியிருக்கிறாங்களே"

"மேடம்! நீங்கள் சொல்வதைப் பார்த்தால் அந்த பெண் சரியான சுயநலவாதிபோல் தெரிகிறதே"

"அதானே. கணவன் மீது நம்பிக்கை இல்லாதது போல் அப்படிப் பேசியிருக்கிறார்களே. ஏன் மேடம். போயும் போயும் அந்தப் பெண்ணை நம்பியா உங்கள் தியாகுவை விட்டுக்கொடுத்தீர்கள்?"

"ஆமாம் மேடம். தியாகம் செய்வது தப்பில்லை. ஆனா அது உரியவளுக்கு போய் நல்ல பலனைத் தருவதாக இருக்க வேண்டாமா?"

நால்வருமே கேள்விக்கணைகளைத் தொடுக்க, நர்ஸ் அதட்டினாள்.

"பேஷண்ட் தூங்கட்டும். பேசுறதா இருந்தா வெளியே போய் பேசுங்க"

"ஸாரி சிஸ்டர். இனிமே பேசல்ல"

"அமைதியாப் பார்த்திட்டு கிளம்புங்க. பேஷண்ட் கூட யார் இருப்பீங்க?"

"நான் இருக்கேம்மா" - சரோஜினி சொல்ல.

"சரி! மத்தவங்க சீக்கிரம் கிளம்புங்க. டாக்டர் வந்தா திட்டுவாங்க. நான் அப்புறம் வந்து பார்க்கிறேன்" - என்றவாறு வெளியேறிச் சென்றதும் அனைவரும் நிம்மதியாய்ப் பெருமூச்சுவிட்டனர். "ஹப்பா! இனி நிம்மதியா பேசலாம்"

"அந்தப் பெண்ணுடன் சந்தோஷமாய் வாழ்ந்தாரா எத்தனை குழந்தைகள்? ஏதாவது தெரியுமா மேடம்"

"தெரியாதுப்பா. திருமணத்திற்கு பிறகு இதோ இப்போது தான் பார்க்கிறேன் ஆனால் நிச்சயம் சந்தோஷமாய் வாழ்ந்திருப்பார்"



"எப்படிச் சொல்றீங்க?"

"அந்தப் பொண்ணு இவரை ரொம்ப விரும்பினாளே"

"அப்படி விரும்பின பொண்ணுக்கு ஏன் இவர் மேலே நம்பிக்கை வரல்ல?"

"அதை பயம்னு கூட சொல்லலாமே"

"இல்ல மேடம். எனக்கென்னவோ அந்தப்பொண்ணு சரியான சந்தேகப்பிராணியா இருக்குமோன்னு தோணுது. நிச்சயமா இவர் சந்தோஷமா வாழல்ல"

"ஏம்ப்பா அப்படிச் சொல்ற?"

"இவரோட முகத்தைப் பார்த்தீங்களா? ரொம்ப அடிபட்டிருக்கிறார். சந்தோஷமா வாழுறவங்களை முதுமை இவ்வளவு தீவிரமா தாக்காது. அதோட அவர் சொன்ன வார்த்தை..."

"என்ன... என்னப்பா சொன்னார்?"

"தனக்கு யாருமே இல்லை. அனாதைன்னு சொன்னார்?"

"ஐயோ! அப்படியா சொன்னார்? கடவுளே! ஏன் அப்படிச் சொன்னார்?"

"அவர் வாழ்க்கையிலே பெரிய மர்மமே இருக்கு. ஆனா ஒன்னு மட்டும் நிச்சயம். அவர் சந்தோஷமா வாழவில்லை." - கண்ணன் உறுதியாய்க் கூற அதிர்ந்து போனார் சரோஜினி.

"இல்ல. அப்படி இருக்காது. என் தியாகு நல்லவர். வெள்ளை மனம் கொண்டவர். நிச்சயமாய் சந்தோஷமாய் வாழ்ந்திருப்பார்" - சரோஜினியும் உறுதியாய்க் கூற தியாகராஜன் சிரமமாய் விழிகளைத் திறந்தார்.

"சரோ! இல்ல சரோ. என் நிம்மதி சந்தோஷம் எல்லாமே உன்கூடவே போயிடுச்சு சரோ. நான் நடுத் தெருவில அநாதையா நிற்கிறேன் சரோ" - முனகியவாறே எழ முயற்சித்தார்.

"தி.. தியாகு. படுங்க. அசையாதீங்க. ப்ளட் ஏறுது படுங்க தியாகு"

"இல்ல சரோ. இனிமே எனக்கு இந்த உசுரு எதுக்கு? போகட்டும் விடு"

"தியாகு ஏன் இப்படிப் பேசுறீங்க. அமைதியா இருங்க. கண்ணா! இவரைப் படுக்க வையேன்" - பதறினாள் சரோஜினி.

அனைவருமாய் அவரை சமாதானம் செய்து படுக்கவைக்க, தியாகராஜனின் விழிகளில் நீர் நிரம்பி வழிந்தது. கண்கள் சரோஜினியை ஆவலாய்ப்பார்க்க உதடுகள் பேச இயலாமல் துடித்தன.

"தியாகு! அடிபட்டது ரொம்ப வலிக்குதா? டாக்டரைக் கூப்பிடவா?"

வேண்டாம் என தலையசைத்தார். "நல்லா இருக்கியா சரோ?"

"ம். நல்லா இருக்கேன் தியாகு"

"நீ நல்லாத்தான் இருப்பே . எனக்குத் தெரியும்?"

"நீங்க எப்படி இருக்கீங்க தியாகு? இங்க எப்படி வந்தீங்க? உங்களால பேச முடியுமா?"

"பேசணும் சரோ. கடைசியா உன்னைப் பார்த்திட்டு ரெண்டு வார்த்தையாவது பேசிட்டுப் போயிடணும்னுதான் உன்னைத் தேடி வந்தேன்"



"என்னைத் தேடியா?"

"ஆமா சரோ. உன் முகவரி எனக்கு சமீபத்திலதான் கிடைச்சது"

"எப்படி? யார் தந்தாங்க?"

"நம்ம பரந்தாமன் மகளை இங்கேதான் கட்டிக் கொடுத்திருக்கான். அடிக்கடி வந்து போய்கிட்டு இருக்கான். அப்பத்தான் உன்னைப் பார்த்தானாம்"

"நான் பார்க்கவே இல்லையே"

"சொன்னான். உனக்குத் தெரியாமலேயே உன் முகவரியை கண்டுபிடிச்சானாம். அவன்தான் டிக்கெட் எடுத்து என்னை பஸ் ஏத்திவிட்டான்"

"தியாகு! உங்க... உங்க மனைவி... பிள்ளைகள்?"

"ம்ப்ச். எதுவுமே இல்லை சரோ."

"இல்லன்னா?"

"நடந்து முடிஞ்சதைப் பேசி என்ன பிரயோசனம்?"

"இல்ல எனக்குத் தெரியணும். சொல்லுங்க தியாகு"

"என்னத்தைச் சொல்ல. என்னை விட்டுக் கொடுத்திட்டு நீ தியாகி ஆகிட்டே. நினைச்சதை சாதிச்சிட்டோம்னு அம்மாவும் சீக்கிரமா போய் சேர்ந்துட்டாங்க"

"அத்தை... இறந்துட்டாங்களா? எப்போ?"

"அது ஆச்சு பலவருஷம். நீங்கள்லாம் நிம்மதியா ஒதுங்கிட்டீங்க. ஆனா என் நிலைமைதான் பூனைவாயில மாட்டின எலிமாதிரி ஆகிப்போச்சு."

"ஏன் தியாகு அப்படிச் சொல்றீங்க? பூரணி உங்க மேல அன்பாத்தானே இருந்தா"

"ஆமா. அன்புதான். ஆனா அந்த அன்பு அளவோடு இருந்தா சந்தோஷமா இருக்கும். அளவுக்கு மீறிய அன்பும் சிலசமயம் கத்தியா மாறிடுது."

"எனக்குப் புரியல்ல..."

"எம்மேல அளவுக்கு அதிகமா அன்பு வெச்சதால தான் தற்கொலை பண்ண முயற்சித்தாளாம். அவதான் எங்கிட்ட சொன்னா. அது அன்பு இல்ல சரோ. வெறி நான் அவளுக்கு மட்டும்தான்ற வெறி."

"இது ஒவ்வொரு பெண்ணுக்கும் இருக்கிற இயல்பு தானே"

"நானும் அப்படித்தான் நினைச்சு அலட்சியமா விட்டுட்டேன். தோட்டத்துக்கு போயிட்டு லேட்டா வந்தா அந்த சிறுக்கிய பார்க்கப் போனியான்னு கேட்பாள். சரியா சாப்பிடலன்னா அவ நினைப்புல சோறு இறங்க மாட்டேங்குதோ என்பாள்."

"கடவுளே" - சரோஜினி அதிர்ந்து போனாள்.

"எல்லா இடத்திலயும் பறவைக் காய்ச்சல் வந்ததே. அப்போ எனக்கும் வந்தது. பதினைஞ்சு நாளா எழுந்து நடமாட முடியல்ல. படுக்கையிலே கிடந்தேன். அப்பத்தான் அவ சுயரூபம் எனக்குத் தெளிவாச்சு"

"என்ன? என்ன பண்ணினா?"

"உன் நினைப்புல தான் எனக்கு காய்ச்சல் வந்துட்டுன்னு என்னை வாட்டி எடுத்துவிட்டாள். பொழுது விடிந்ததில் இருந்து இரவு வரை ஒரு முன்னூறு தடவை யாவது உன்பேச்சை எடுத்து விடுவாள். நான் மறந்து



விடவேண்டும் என்று நினைத்தால் அவளே நினைவூட்டி விடுவாள். கடைசியில நோயாளியாவே ஆகிட்டா."

"என்ன ஆச்சு?"

"அடிக்கடி வெறிபிடிச்ச மாதிரி கத்தினா. என்னை அடிப்பதும் கடிப்பதுமாய் எப்போதும் தலைவிரிகோல மாய் திரிந்தாள். பேய் பிடித்திருக்கும் என்றார்கள் சிலர். சிலர் செய்வினை என்றார்கள். அதிலும் என் மாமியார் நீதான் செய்வினை வைத்துவிட்டதாகச் சொன்னதும் அவளது வெறி அதிகமாயிற்று"

"நானா?" - பதறினாள் சரோஜினி.

"என்ன முட்டாள்தனம் இது? செய்வினையாவது மந்திரமாவது? அந்த அம்மா சதா கத்திட்டே இருந்ததால மென்டல் டிப்ரஷன் ஆகியிருக்கும்" - விஷ்வா சொல்ல அதை ஆமோதித்தார் தியாகராஜன்.

"ஆமாம்ப்பா. கடைசியா டாக்டர்கிட்ட போனப்போ அவர் இப்படித்தான் சொன்னார். நாங்க இருந்தது கிராமம். அங்கே யாருக்கும் இதுபுரியல்ல. கோவில் கோவிலா கூட்டிட்டுப் போனாங்க.

அவ உடம்புமேல அக்கறை இல்லாம அலைஞ் சதிலயும் மருத்துவம் பண்ணாம விட்டதுலயும் நோய் முத்திப்போச்சு. என்னைப் பார்த்தாலே அவளோட வெறி அதிகமாகுதுன்னு அவ அம்மா அவங்க வீட்டுக்கு கூட்டிட்டுப் போயிட்டாங்க. என்னைப் பார்க்கவும் அனும திக்கல்ல"

"அய்யோ! அப்புறம் என்னாச்சு?"

"அதுவே அவளுக்கு எமனாகிப்போச்சி. நான் உன்னைத் தேடிப் போயிட்டேன்னு நினைச்சு பயந்து அவ

அம்மாவீட்லயே மண்ணெண்ணெயை ஊத்திக் கொளுத் திக்கிட்டா"

"ஐயோ" - அலறியபடியே எழுந்துவிட்டாள் சரோஜினி.

"தகவல் தெரிஞ்சு நான் ஓடிப்போனேன். ஜன்னல் வழியா எவ்வளவோ கத்திப்பார்த்தேன். அவ துளிகூட அசையல்ல. துடிக்கல்ல. கத்திக்கதறலை. அப்படியே அசையாம நின்னு எரிஞ்சா. உடம்பு முழுக்க கருகிக் கீழே விழுறவரைக்கும் துளியும் அசையல." - தியாகராஜன் தன் கண்முன்னே அக்காட்சியைக் கண்டது போல் துடிக்க,

சரோஜினி கதறி அழுதாள். இறந்து போன பூரணிக்காகவா? இல்லை தியாகுவின் நிலைக்காகவா? செய்த தியாகம் வீணாகிப்போனதே என்பதற்காகவா? அவளது அழுகை மற்றவர்களின் கண்களிலும் நீரை வரவழைத்தது.

## 19

அழுது சிவந்திருந்த முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டாள் சரோஜினி. வெறித்த பார்வையோடு படுத் திருந்த தியாகுவை ஏறிட்டாள்.

"தியாகு! இ.. இதெல்லாம் எப்போ நடந்தது?"

"கல்யாணமான இரண்டே வருஷத்தில எல்லாம் முடிஞ்சு போச்சு"



"என்ன?" - பலமாய் அதிர்ந்தாள். 'இதற்காகவா? இந்த இரண்டு வருட வாழ்க்கைக்காகவா பூரணியும் அத்தையும் அத்தனை போராட்டம் செய்து என்னை ஊரைவிட்டு அனுப்பினார்கள். ஒரே வருடத்தில் உயிரை விட்ட அத்தைக்காகவும் தன் அன்பின் மீதும் தன் கணவன் மீதும் நம்பிக்கை இல்லாத ஒருத்திக்காகவுமா என் உயிரை விட்டு விட்டு விலகி வந்தேன்.

கடவுளே! என்ன கொடுமை இது? அன்றே உறுதியாய் நின்று என் தியாகுவை மணந்திருந்தால் சந்தோஷமாய் வாழ்ந்து பிள்ளைகள் பேரக்குழந்தைகள் என்று எங்கள் குடும்பமே பெருகித் தழைத்திருக்குமே. இன்று யாருக்காக விட்டுக் கொடுத்தேனோ அவளும் இல்லாமல்.. இருந்தவரைக்கும் நிம்மதியாய் வாழாமல் தானும் இறந்து தன் கணவரையும் இந்நிலைக்கு ஆளாக்கி விட்டுப் போய் விட்டாளா?

இப்படி அற்ப ஆயுளில் மறைந்து போவதற்கா அத்தனை ஆர்ப்பாட்டம் செய்தாள் பூரணி. தன் மகனின் வாழ்க்கையை இப்படி சிதைப்பதற்கா அத்தை என்னை விரட்டினாள்" - மனதில் எண்ணங்கள் தோன்றி வதைக்க மீண்டும் கண்ணீர் பெருகியது.

"மேடம்! அழாதீர்கள் மேடம்! " - மீரா கண்களில் கண்ணீரோடு சரோஜினியின் கண்களைத் துடைத்து விட்டாள்.

"நீ ஏன் சரோ அழுகிறாய்? எல்லாம் என் விதி"

"இல்லை தியாகு. எல்லாம் என் தவறு. நான் மட்டும் உன்னை விட்டு விலகாமல் இருந்தால்... இப்படி ஆகியிருக் காதே"

"அப்படியும் சொல்ல முடியாது சரோ. உன்னை மணந்திருந்தால் அம்மா உன்னை வாழ விட்டிருக்க மாட்டாள். வீம்புக்காக வேணும் பூரணியும் உயிரை விட்டிருப்பாள். இப்போது ஊரார் கண்ணுக்கும் உறவுக்காரர் கண்ணுக்கும் நான் தான் பாவியாய் தெரிகிறேன். ஆனால் அப்படி நடந்திருந்தால் நீயும் குற்றவாளியாய் நின்றிருப்பாய்"

"இல்லை தியாகு. என்னால் தான்.."

"வேண்டாம் சரோ. நடந்ததை எதுவும் மாற்ற முடியாது. இப்படித்தான் நடக்கும் என படைத்தவன் முடிவு செய்திருந்தால் நம்மால் மாற்ற முடியுமா? விடு. ஏன் சரோ உனக்கொரு வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவில்லை"

"தேவையில்லை என்று விட்டுவிட்டேன்"

"பெரிய சேவை எல்லாம் பண்றியாமே. பரந்தாமன் சொன்னான்"

"என்னால முடிஞ்ச உதவியைப் பண்ணிட்டு இருக்கேன்."

"இந்த- இந்தப் புள்ளைங்க எல்லாம்.."

"என் பிள்ளைகள் தான். நான் பெறாத பிள்ளைகள்"

"உங்களுக்கெல்லாம் கல்யாணம் ஆகிடுச்சாப்பா?"

"இன்னும் இல்லங்கப்பா"

"சந்தோஷமா வாழுங்கய்யா. சரோவை பத்திரமா பார்த்துக்கங்கய்யா"

"மேடத்தை மட்டுமில்ல உங்களையும் நாங்க பார்த்துக்கிறோம்ப்பா. உங்களுக்கு நாங்க இருக்கோம்"



"வேண்டாம்யா. எனக்கு உடம்பு குணமானதும் நானே போயிடுறேன்"

"தியாகு! எங்கே போவீங்க? நம்ம இல்லத்திலயே இருந்துக்கலாம்"

"வேண்டாம் சரோ. அது சரிவராது."

"ஏன்?"

"வீணான கற்பனையை வளர்த்திட்டு செத்துப் போனா பூரணி. நான் உங்கூட வந்து தங்கினா அது உண்மையாகிடாதா?"

"தியாகு"

"பூரணியும் நல்லவதான். எம்மேல நம்பிக்கை இல்லாம போயிட்டாளே தவிர கடைசி வரை எம்மேல உயிராத் தானே இருந்தா. வாழுற வரைக்கும் அவ நம்பிக்கைக்கு நான் குறை வெக்கக் கூடாது"

"தியாகு! எங்கே போவீங்க தியாகு"

"உலகம் ரொம்பப் பெரிசு சரோ. அதுல எனக்கொரு இடம் கிடைக்காதா?"

"அப்படியெல்லாம் பேசாதீங்கப்பா"

"இல்லய்யா! எனக்கு உடல் தளர்ந்து போச்சு. நடமாட முடியல்ல. இந்த வயசுல சரோவுக்கு பாரமா நான் இருக்கக் கூடாது. "யாருக்கும் தெரியாம பார்த்திட்டு போலாம்னு நினைச்சேன்"

"நீங்க எனக்கு பாரமில்லை தியாகு"

"இல்ல சரோ. கடைசியா உன்னை ஒரு தரம் பார்க்க ஆசைப்பட்டேன். நீ குழந்தை குட்டியோட வாழ்வேன்னு

நினைச்சேன். நீயும் தனி மரமாத்தான் வாழ்ந்திட்டு இருக்கே உன்னைப் பார்க்கும் போது எனக்கும் என்னைப் பார்க்கும் போது உனக்கும் ஒரு குற்ற உணர்வு இருந்திட்டே இருக்கும்.

நம்மால தானே இப்படி நிக்கிறான்னு தோணும் அதோட உன் கண் முன்னால என் உயிர் போகக் கூடாது சரோ. ஏதோ ஒரிடத்தில நான் சந்தோஷமா வாழுறேன்னு நினைச்சுட்டே உன் சேவையைச் செய். என்னைத் தடுக்காதே சரோ"

அதற்கு மேலும் அங்கே நிற்க முடியாமல் வெளியே எழுந்து ஓடினாள் மீரா. அவளுக்கு வாய் விட்டு அழ வேண்டும் போலிருந்தது. மூச்சை அடைப்பது போல இருந்தது. மீராவின் பின்னே ஓடி வந்தான் கண்ணன்.

"மீரா! என்ன ஆச்சு?" - கண்ணீரோடு திரும்பினாள் மீரா.

"கண்ணா! எனக்கு ஒரு உதவி செய்வீங்களா?"

"சொல்லுங்க மீரா"

"என்னை இல்லத்தில் கொண்டு போய் விட்டு விடுகிறீர்களா?"

"மீரா! ஏன் மீரா?"

"எனக்கு அழணும் போல இருக்கு. கண்ணா, காய பட்ட அந்தப் பறவைகளை இதுக்கு மேலயும் என்னா பார்க்க முடியாது. என்னைக் கூட்டிட்டுப் போயிடு கண்ணா"

"சரி வாங்க" - விஷ்வாவிடம் சொல்லி விட்டு கிளம்பினான். காரில் இல்லம் போய்ச் சேரும் வரை மீ



எதுவும் பேசவில்லை. அவள் மன மறிந்து கண்ணனும் எதையும் கேட்கவில்லை.

சரணாலயத்தில் வாசலில் கார் நின்றதும் இறங்கினாள் மீரா.

"மீரா" - கண்ணன் மென்மையாய் அழைத்தான்.

"ம்?" - நிமிர்ந்தாள்.

"மனசைப் போட்டு வருத்திக்காதீங்க"

"ம்"

"நான் கிளம்புறேன்"

"ம்" - கண்ணன் காரைத் திருப்பிக் கொண்டு செல்ல, வாசலில் நின்று பார்த்துக் கொண்டே இருந்தாள்.

"ஏய் மீரா! வா வா. ஆஸ்பத்திரிக்கு போனீங்களே. என்னாச்சி?"- கருத்தம்மா ஓடி வர, அவளிடம் எதையும் விவரிக்கும் நிலையில் இல்லை மீரா.

"கருத்தம்மா! எல்லாம் பிறகு சொல்றேன். என்னை கொஞ்ச நேரம் தனியா விடேன்"

"என்ன மீரா? உடம்பு எதுவும் சரியில்லையா? கண்ணன் எதுவும் சொன்னாரா?"

"கண்ணனா? அவர் என்ன சொல்வார்?"

கருத்தம்மா மீராவை நெருங்கி குரலை தழைத்துக் கொண்டார். "மீரா! கண்ணனோட அம்மா வந்திருக் காங்க."

மீரா துணுக்குற்றாள். "அவ... அவங்க எதுக்கு வந்திருக்காங்க?"

"உன்னைப் பார்த்து ஏதோ பேசணுமாம்"

"என்னையா? என்னை... என்னிடம் என்ன பேசணு மாம்?"

"அது தெரியலப்பா. வந்து கொஞ்ச நேரமாச்சு. உள் ரூம்ல தான் உட்கார வெச்சிருக்கேன்."

"கருத்தம்மா! எனக்கு பயம்மா இருக்கே"

"ஏன் பயப்படுற மீரா? அவங்களும் நம்மளாட்டம் பொண்ணு தானே சும்மா போய்ப் பேசு"

"இல்ல.. வந்து.. நான்" - மீரா தயங்க பின்னால் அந்தக் குரல் கேட்டது. "நீதான் மீராவாம்மா?"

மீரா திடுக்கெனத் திரும்பினாள். தமயந்தி அம்மாள் நின்றிருந்தாள். நெற்றியில் குங்குமம் இல்லாமல் எந்த வித ஆர்ப்பாட்டமும் இல்லாமல் மிகவும் எளிமையாய் கனிவைத் தேக்கி வைத்த முகமாய் நின்றவளைக் கண்டதும் மீராவின் கரங்கள் தானாய் வணங்கின.

"வணக்கம்மா."

"இருக்கட்டும். வாம்மா அப்படி உட்கார்ந்து பேசலாம்" - தமயந்தி அழைத்ததும் கருத்தம்மா விலகி விட சற்றே தயக்கமாய் சென்று மரத்தடியில் அமர்ந்து கொண்டாள் மீரா.

அருகே அமர்ந்து கொண்ட தமயந்தி மீராவை நிதானமாய் பார்த்து திருப்தியாய் புன்னகைத்தாள். சுற்றி வளைக்காமல் நேரிடையாய் விஷயத்திற்கு வந்தாள்.

"மகாலஷ்மியாட்டம் இருக்கம்மா. அதான் இந்தப்பய உம் மேல இப்படிப் பைத்தியமா இருக்கான்."

திடுக்கிட்டாள். "யா.. யாரு?"



"கண்ணன் தாம்மா. எனக்கு அவன் ஒரே புள்ள தான். இந்த வருஷத்தோட இருபத்தியேழு வயசு முடியுது. இந்த வருஷமே கல்யாணத்தை வெச்சுடணும்மாம். அதான் பேசிட்டு போலாம்னு வந்தேன்"

"எங்.. எங்கிட்ட.. என்ன பேசணும்?"

"என்னம்மா இப்படிக் கேட்கிற? அவன் உன்னைத் தான் கட்டிக்கணும்னு உறுதியா சொல்லிட்டு இருக்கான். நீ சம்மதிச்சாத்தானே நானே மேற்கொண்டு காரியங்களை கவனிக்க முடியும்?"

"என்ன.. ஏதேதோ சொல்றீங்க?"

"இதோ பாரும்மா. நான் நிறையப் படிக்காதவ. எதுன்னாலும் பட்டுன்னு பேசிடுவேன். இந்த மென்னு முழுங்கிற பழக்கமெல்லாம் கிடையாது. உனக்கு என் பிள்ளையைப் பிடிச்சிருக்கா?"

"அம்மா! என்ன நீங்க? எனக்கு இதெல்லாம் பிடிக்கல்ல?"

"ஏம்மா?"

"எனக்கு.. நான் ஏற்கனவே கல்யாணமானவ.."

"இப்பத்தான் அந்தப் பொண்ணு எல்லாம் சொன்னா. இதோ பாரும்மா. நான் படிக்காதவ தான் ஆனா பத்தாம் பசலி இல்ல. உனக்கு நடந்தது கல்யாணமே இல்லம்மா? அதை ஒரு கெட்ட கனவா நினைச்சு மறந்திடு"

"இல்ல. என்னால.. எதையும் மறக்க முடியல்ல. இன்னொரு வாழ்க்கைய ஏத்துக்கவும் முடியாது"

"அப்படிச் சொல்லாதம்மா. இந்த வயசுல இப்படியே இருந்திடலாம்னு தோணும். ஆனா இன்னும் காலம்

இருக்கே. கடைசி வரை இப்படித் தனியா நிற்க முடியாதும்மா. நாளைக்கு வயசு போன காலத்தில தான் துணையோட அவசியமும் தேவையும் புரியும்.

கண்ணன் அப்பா இறந்தப்போ கண்ணனுக்கு அஞ்சு வயசு. அதனால தனிமை எவ்வளவு கொடுமைன்னு எனக்கும் தெரியும். எனக்காவது அம்மா அப்பான்னு என் குடும்பம் இருந்தது. எப்படியோ எம் புள்ளைய வளர்த்து ஆளாக்கிட்டேன். எத்தனை சொந்தம் இருந்தும் கணவன் இல்லாம விதவைன்ற பட்டத்தோடு நானும் நிறைய கஷ்டங்களை அனுபவிச்சிருக்கேன்"

"நானும் கஷ்டங்களுக்குப் பழகிட்டேன். என்னால இப்படியே வாழ்ந்திட முடியும்"

"எங்க காலம் வேற. உங்ககாலம் வேறம்மா. கணவர் இறந்திட்டா கூட கொஞ்சம் பரிதாபமா பார்ப்பாங்க. ஆனா புருஷன் இருந்தும் இல்லாம வாழுற உன்னைப் போல பொண்ணுங்கள மத்தவங்க பார்க்கிற பார்வையே வேறம்மா"

"இதோ பாருங்க. நீங்க..."

"பொறும்மா. இதையெல்லாம் நான் ஏன் சொல்றேன்னா உன் வாழ்க்கை இப்படியே வீணாகிடக் கூடாதும்மா. என் புள்ளையத்தான் கட்டிக்கணும்னு இல்ல. உனக்கு ஏத்த ஏதோ ஒரு பையனைக் கட்டிக் கிட்டாலும் சரி."

மீரா பதிலேதும் பேசாமல் அமைதியாய் இருக்க தமயந்தி மீராவின் முகத்தை நிமிர்த்தினாள்.

"உனக்கு எம் புள்ளைய ஏம்மா பிடிக்கல்ல?"



"எனக்கு... எனக்கு... எந்த ஆம்பிளையைப் பார்த்தாலும்.. என்னை விட்டுட்டு ஓடினவன் ஞாபகம் தான் வருது."

"அதைத் தானேம்மா மறந்திடுன்றேன்"

"முடியலியே. எவ்வளவு முயற்சி பண்ணினாலும் என்னால மறக்க முடியலையே. அந்த ஆளை எப்பவோ மறந்திட்டேன். ஆனா இன்னொரு துணையை என்னால நினைச்சாலே பயம்மா இருக்கும்மா. என்னை இப்படியே விட்டுடுங்கம்மா"

"மீரா! நான் சொல்றதைக் கேளும்மா" —

"இல்லம்மா. உங்க பிள்ளை நல்லவர். நல்ல நிலையில் இருக்கிறார். நீங்கள் நினைத்தால் அவருக்கு எத்தனையோ பெண்களைப் பார்க்கலாம். அவருக்கு பொருத்தமான பெண்ணைப் பாருங்கள். என்னை விட்டுவிடுங்கள். நான் வேண்டாம்"

"முடிவாய் என்னம்மா சொல்கிறாய்?"

"கண்ணனுக்கு வேற பெண்ணைப் பாருங்கள் அம்மா"

"இது தான் உன் முடிவா? இதில் மாற்றம் ஏதும் இல்லையா?"

"இல்லம்மா. எனக்கு இன்னொரு திருமணம் செய்யும் எண்ணமே இல்லை" - உறுதியாக மீரா சொல்ல பெருமூச்சு விட்டாள் தமயந்தி.

"சரிம்மா! உன் முடிவைச் சொல்லிட்ட. என்னால வற்புறுத்தவும் முடியாது. ஆனா எனக்கொரு உதவி செய்வியா?"

"நானா? என்ன உதவி செய்யணும்?"

"எங்கிட்ட சொன்ன இதே உறுதியான முடிவை என் பையன்கிட்ட சொல்லணும். அவனை நீதான் எப்படியாவது பேசி கல்யாணத்திற்கு சம்மதிக்க வைக்கணும்"

"என்ன? நா... நானா?"

"ஆமாம்மா. எப்படியும் உன் மனசு மாறும்னு காத்திருக்கான். ஆனா நீதான் உறுதியாச் சொல்லிட்டியே. பிறகேன் அவன் காத்துக்கிடந்து ஏமாறணும் அதனால நீயே அவன்கிட்ட சொல்லிடு"

"நான்... நான் எப்படி?"

"சுந்தரவல்லின்னு ஒரு பொண்ணும்மா. எங்க உறவுக்காரப் பொண்ணுதான். கண்ணனுக்குன்னு நான் பேசி வெச்சிருந்த பொண்ணு"

மீராவின் இதயம் படபடத்தது. "ஏற்கனவே... பேசிமுடிச்சிட்டீங்களா?"

"நான் பேசி வெச்சிட்டுத்தான் கண்ணன்கிட்டே கேட்டேன். அவன் உன்னைப்பத்திச் சொன்னான். நானும் சம்மதிச்சேன். ஆனா நீ மறுத்திட்ட. அதனால அதே பொண்ணையே முடிச்சுடலாம்னு நினைக்கிறேன்" - மீராவின் முகத்தை கவனமாய் பார்த்துக் கொண்டே சொன்னாள் தமயந்தி.

"ஓ! நல்ல விஷயம்தான்" - மீரா சமாளிப்பதைப் பார்த்ததும் தமயந்தியின் முகம் புன்னகை பூத்தது.

"சரிம்மா. நான் கிளம்புறேன். கண்ணன் வந்தா அவன்கிட்ட பேசி கல்யாணத்துக்கு சம்மதிக்க வையும்மா. எனக்கு அவன் ஓரே பிள்ளை. என் குடும்பம் விருத்தியாக



வேண்டாமா? உங்கையில தாம்மா எல்லாம் இருக்கு. எனக்காக நீதாம்மா இந்த உதவியைச் செய்யணும்" - தனது கைகளைப் பற்றிக் கொண்டு கேட்டவளைக் காண இயலாமல் பார்வையை வேறுபுறமாய் திருப்பிய மீராவின் விழிகளில் அவளையும் மீறி நீர் சுரந்தது.

## 20

"அம்மா! உங்களை யார் இங்கே கூப்பிட்டது?" - தாயிடம் சீறினான் கண்ணன்.

"ஏன்டா! எம்புள்ளைய நான் பார்க்க வர்றதுக்கு யார் கூப்பிடணும்?" நாற்காலியில் அமர்ந்து வெற்றிலையைத் துடைத்துக் கொண்டே கேட்டாள் தமயந்தி.

"உங்கள் பிள்ளையைப் பார்க்க வரலாம். அது தப்பில்லை. ஆனால் என்னைக் கேட்காமல் ஏன் சரணாலயத்திற்குப் போனீங்க?"

"எம்மருமகளை நான் பார்க்க உங்கிட்ட அனுமதி கேட்கணுமா?"

"என்ன?"

"டேய்! எல்லாம் எனக்கும் தெரியும்டா."

கண்ணன் புருவம் சுருக்கினான். "எல்லாம்னா?"

"எல்லாம் தான்."

"யாரு? யார் சொன்னது?"

"யாரா இருந்தா உனக்கென்ன? பூனை கண்ணை மூடிகிட்டா உலகமே இருண்டுவிடுமா?"

"இப்போ யார் பூனை?"

"நீதான். ஏன்டா மீரா நினைப்புல கண்ணை மூடிட்டே இருந்தா எப்படி?"

"நான் ஒன்றும் கண்ணை மூடிக்கொண்டு இருக்கவில்லை. பொறுமையாய் இருக்கிறேன்"

"நல்லா இருந்தே போ. என்னால உன்னை மாதிரி இருக்க முடியாதுப்பா"

"இப்போ மீராகிட்ட போய் என்னவெல்லாம் உளறிக் கொட்டினீர்கள்?"

"டேய்! தப்பா எதுவும் சொல்லலடா உண்மையைத் தான் சொன்னேன்"

"தப்பா எதுவும் சொல்லாமலா அவ அழுதிட்டே இருக்கா. சாப்பிடவும் இல்லையாம்"

"அழுகிறாளா? உனக்கு யார் சொன்னது?"

"இல்லத்தில் இருந்து போன் வந்தது."

"நீங்கள் ஏன் போனீங்க?"

"டேய்! சில விஷயங்களை ஆறப்போடக் கூடாதுடா. சூட்டோடு சூடா பேசி முடிச்சிடணும்"

"அப்படி என்னத்தைப் பேசி முடிச்சீங்க?"

"உன் கல்யாண விசயத்தைப் பேசத்தான் போனேன்"

"அம்மா"

"ஏன்டா கத்துற. முழுசாக் கேளு. உனக்கு அடுத்த மாசத்துக்குள்ள கல்யாணம் பண்ணிடனும்னு சொன்னேன்."



"அதை ஏன் அவகிட்ட போய் சொன்னீங்க?"

"டேய்! அவ சம்மதம் சொன்னாத்தானே கல்யாண வேலையைத் தொடங்க முடியும்? அதான் போய்க் கேட்டேன்"

"ஐயோ! அம்மா. உங்ககிட்ட எப்படி புரியவைப்பேன். அவமனசில உள்ள காயம் ஆறட்டும்னுதான் நானே அவளை வற்புறுத்தாம இருக்கேன்."

"நான் உன்னைப் பெத்தவடா. நீ படுற வேதனையைப் பார்த்துட்டு சும்மா இருக்கமுடியுமா? அதான் கோபி சொன்னதுமே புறப்பட்டு வந்தேன்"

"ஓஹோ. இது எல்லாம் அவன் வேலையா? உங்ககிட்ட இவ்வளவு மேட்டரைச் சொல்லிட்டு எங்கிட்ட சும்மா ரெண்டுவார்த்தை சொல்லிட்டு நழுவிட்டான். வரட்டும் அவன்"

"அந்தப் பையன் மேல ஏன்டா கோபப்படுற? அவன் மட்டும் எங்கிட்ட எதுவும் சொல்லலைன்னா உனக்கு அந்த சுந்தரவல்லியையே நிச்சயம் பண்ணியிருப்பேன்"

"அது யாரு சுந்தரவல்லி"

"அதான்டா. கறிக்கடைக்காரர் பொண்ணு"

கோபமானான் கண்ணன். "இதுவேறா? எனக்குத் தெரியாமல் இன்னும் என்னென்ன காரியம் செய்துவைத்திருக்கிறீர்கள்?"

"வேற ஒன்றும் செய்யவில்லையப்பா. ஆனா உன் மீரா மறுத்துவிட்டால் நான் சும்மா இருக்கமாட்டேன். அந்த சுந்தரவல்லியையே உனக்கு–"

"அம்மா! போதும். நீங்கள் ஊருக்குக் கிளம்புங்கள். எனக்கு வேலை இருக்கிறது"

"உன் வேலையை நீ செய். எனக்கு பதில்வராமல் நான் போகமாட்டேன்"

"என்ன பதில் வேண்டும்"

"நீ சொல்ற பதில் தான் தெரியுமே. மீரா தான் என் மனைவி என்பாய்"

"தெரியுதில்ல. கிளம்புங்க"

"ஏய். என்ன நீ. என்ன விரட்டிட்டே இருக்கே. என் மருமககிட்ட இருந்து பதில் வரட்டும். நான் கிளம்புறேன்"

"மருமகளா? யாரு?"

"மீராதான். அவகிட்ட இருந்து பதில் வரட்டும்"

"என்னம்மா குழப்புறீங்க? அவகிட்ட என்னதான் பேசுனீங்க?"

"என் மகனை உனக்குப் பிடிச்சிருக்கான்னு கேட்டேன்"

"என்ன? அ... அதுக்கு அவ என்ன சொன்னா?" - பதட்டமாய்க் கேட்டான்.

"அவ சொன்னது இருக்கட்டும். நான் என்ன சொல்விட்டு வந்தேன்னு கேளு"

"என்ன சொன்னீங்க?"

"எம்புள்ளைய கட்டிக்கோ. இல்லன்னா நான் பார்த்து வெச்சிருக்கிற பொண்ணைக் கட்டிவெச்சிடுவேன். அதுக்கு எம்மகனை நீதான் சம்மதிக்க வைக்கணும்னு அவ கிட்டயே கேட்டுகிட்டேன்"



கண்ணன் ஆவேசமாய் குதித்தான். "என்ன காரியம் பண்ணீங்க? இதுக்குத்தான் கூடல்நகர்ல இருந்து கிளம்பி வந்தீங்களா? போச்சு. எல்லாம் போச்சு. இப்பத்தான் அவமனசு கொஞ்சம் இளகினா. மொத்தத்தையும் பாழாக் கிட்டீங்க. 'இனிமே என்னைத் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டா" - கோபமாய் தொடங்கியவன் வேதனையாய் சொல்லிவிட்டு நெற்றியைப் பற்றிக்கொண்டு அமர்ந்தான்.

தமயந்தி எழுந்து மகனை நெருங்கி அவனது கேசத்தை வருடினாள்.

"கண்ணா! அவ வருவா. உன்னை மணக்க சம்மதிப்பா."

"இதெல்லாம் கனவுலதான் நடக்கும்" - வெறுப்பாய்ச் சொன்னான்.

"இல்லடா. நிஜமாவே நடக்கும். கண்ணா! அந்தப் பொண்ணுக்கு உம்மேல ப்ரியம் இருக்குதுடா"

"என்ன?" - சட்டென நிமிர்ந்தான்.

"ஆமான்டா. நான் வேற ஒரு பெண்ணை பற்றி பேசியதும் அவ முகத்தில தெரிஞ்ச ஏமாற்றத்தைப் பார்த் தேன். எங்கே உன்னை இழந்திடுவோமோன்ற பதட்டமும் பரிதவிப்பும் அவ கண்ல தெரிஞ்சதுடா"

"அம்மா"

"ஆமான்டா. அவளுக்கு உன்னைப் பிடிச்சிருக்கு. ஆனா தன்னோட வாழ்க்கையில நடந்த கசப்பான அனுபவம் உன்னை ஏத்துக்கவிடாமத் தடுக்குது. அதை நீதான் சரிபண்ணனும்"

"அம்மா! நான் என்ன பண்ணனும்?"

"அவகிட்ட பேசு. மனம்விட்டுப் பேசு. உம்மனசுல உள்ள உண்மையான உறுதியான நேசத்தைச் சொல்லு வாழ்க்கைபூரா அவளுக்கேத்த கணவனா இறுதிவரை துணையிருக்கும் துணைவனா இருப்பேன்னு சொல்லு"

"இதையெல்லாம் சொன்னா..."

"சொல்லுடா. சொல்லிப்பாரு. அவமனசுல உள்ள பயத்தை விரட்டு. உம் மேல நம்பிக்கை வர வை. இதுக் கெல்லாம் பொறுமை மட்டும் போதாதுடா. எல்லாத்தையும் அவகிட்ட சொல்லணும்"

"அதெல்லாம் சரிம்மா. ஆனா.. நீங்க ஏன் இன்னொரு பொண்ணு பார்த்ததை அவகிட்ட சொன்னீங்க?"

"இது சாதாரண விஷயமில்லடா. அவ மனசை வெளிக் கொண்டு வர்ற விசயம்."

"எப்படி?"

"இப்போ நீ உன் மனசைச் சொன்னே. அவளும் மறுத்திட்டா. நீ அவ நினைப்புலயே இருக்கே. இது அவளுக்கும் தெரியும்."

"என்னம்மா சொல்ல வர்றீங்க?"

"பொறுடா. அப்படி நினைச்சு அசால்ட்டா இருப்பா. இந்த நேரத்தில உனக்கு வேணுமா இல்ல இன்னொருத்திக்கு கொடுக்கட்டுமான்னு நான் கேட்டா என்ன செய்வா?"

"என்ன செய்வாள்?"



"உன் மேல அவ கவனம் திரும்பும். உன்னை யாருக்கும் கொடுக்கக் கூடாதுன்ற வேகம் வரும். சின்னக் குழந்தை கையில உள்ள பொம்மை மாதிரி தான் இதுவும்"

"இது ரொம்பப் பழைய ஐடியாம்மா."

"ஏன்டா அப்படிச் சொல்ற?"

"பின்னே! நான் உன்னை மட்டும் தான் நினைச்சிட்டு இருக்கேன்னு அவகிட்ட சொல்லி வைச்சிருக்கேன். நீங்க இப்படிச் சொன்னதைக் கேட்டு கண்ணன் நான் கிடைக்கா விட்டால் இன்னொரு பெண்ணை கட்டுவதற்கு தயாராய் இருக்கிறார் என்று நினைத்து என்னை ஒதுக்கி விட்டால்?"

"அப்படியெல்லாம் ஆகாதுடா?"

"அதெப்படி அவ்வளவு உறுதியாச் சொல்றீங்க?"

"அப்படி உன்னை ஒதுக்கும் எண்ணம் இருந்தால் அவ ஏன் அழணும்?"

"நீங்க பேசினதுல மனசு காயப்பட்டிருக்கலாம். அதனால கூட அழுதிருக்கலாம்"

"இல்ல கண்ணா. நானும் ஒரு பெண். அதுவும் இளவயதில் கணவனை இழந்தவள் என் நிலையில் இருப்பவளை என்னால் எப்படிக் காயப்படுத்த முடியும்?"

"அம்மா"

"அவளுக்கு ஒரு நல்லது நடக்கணும். இன்னொரு வாழ்க்கை அவசியம்னு அவ உணரணும்னு தான் கொஞ்சம் கறாராய் பேசினேனே தவிர அவளைக் கடுமையாய் பேச வில்லையப்பா. என்ன இருந்தாலும் என் மகனது மனதைக் கவர்ந்தவளாயிற்றே. அவளை நான் எப்படிக் காயப்படுத்துவேன்"

மனம் நெகிழ்ந்து போனான் கண்ணன். "அம்மா! உங்களைப் பற்றி எனக்குத் தெரியும் அம்மா. இருந்தாலும் என் மீதுள்ள அக்கறையில் மீராவை எதுவும் சொல்லி விட்டீர்களோ என்று தான் பயந்து விட்டேன். அழுது கொண்டே இருக்கிறாள் என்று கருத்தம்மா சொன்னதால் ரொம்பவும் பதறி விட்டேன் அம்மா"

"சரிப்பா. என்னை சமாதானம் செய்ய வேண்டாம். முதலில் என் மருமகளைப் பார்த்து நான் சொன்னது போல் மனம் விட்டுப் பேசு. எல்லாம் நல்ல படியாய் நடக்கும்"

"என்னைப் பார்த்தாலே ஒதுங்கிப் போய் விடுகி றாளே. அவளுடன் எப்படி மனம் விட்டுப் பேசுவது?"

"நீ போ. நான் சொன்னது போல் அவள் மனதில் நீ இருந்தால் உன்னை விட்டு விலகிப் போக மாட்டாள். நீ சொல்வதைக் காது கொடுத்துக் கேட்பாள்"

"அம்மா. நான் போகிறேன். பேசுகிறேன். அவள் ஒத்துக் கொண்டாலும் சரி மறுத்தாலும் சரி. நீங்கள் என்னை வற்புறுத்தக் கூடாது"

"எதற்கு?"

"வேறு பெண் பார்க்கிறேன் கல்யாணம் செய்து கொள் என்று"

"அதைப் பிறகு பார்க்கலாம்"

"அந்தப் பேச்சிற்கே இடமில்லை. நீங்கள் என்னை வற்புறுத்தக் கூடாது"

"சரிப்பா. இத்தனை வருடம் பொறுத்துக் கொண் டேன். இனியும் உனக்காகப் பொறுத்துக் கொள்கிறேன்."



"தேங்க்யூம்மா." - புன்னகைத்தான் கண்ணன்.

மகனின் புன்னகையில் மனம் குளிர்ந்தாள் தமயந்தி. 'இறைவா! எம் பிள்ளை ஆயுள் முழுக்க இதே புன்னகை யோடு மனம் நிறைந்த வாழ்க்கை வாழ வேண்டும். அதற்கு அந்தப் பெண் மீரா இவனுக்குக் கிடைக்க வேண்டும். அவளது மனதை நீ தான் மாற்ற வேண்டும். என் மகனும் மருமகளும் சந்தோஷமாய் வாழ்வதை நான் கண் குளிரப் பார்க்க வேண்டும். மன முருக வேண்டிக் கொண்டாள் தமயந்தி.

## 21

மாலைச் சூரியன் தன் உக்கிரத்தைக் குறைத்துக் கொண்டு மேற்கு திசையில் மெல்ல மெல்ல இறங்கிக் கொண்டிருந்த காட்சியை விழியெடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் மீரா. நீலவானம் முழுக்க செந்நிறத்தை பூசிக் கொண்டிருக்க செவ்வானமாய் மாறி அழகூட்டியது.

. இல்லத்தில் பெரியவர்கள் தேநீரைப் பருகிக் கொண்டே தங்களது பழங் கதைகளைப் பேசிக் கொண்டிருக்க, கையில் தேநீர் கோப்பையோடு மீராவை நெருங்கி வந்தாள் கருத்தம்மா. இடக்கையில் பாசிப் பயிறு சுண்டல் அடங்கிய கிண்ணம்.

"மீரா! இந்தா டீ. சுண்டல் சாப்பிட்டுட்டுக் குடி" - என்றவாறு மீராவிடம் தந்தாள். கலைந்து நிமிர்ந்தாள் மீரா.

"எனக்கு வேணும்னா நான் வந்து எடுத்துக்க மாட்டேனா கருத்தம்மா. நீ ஏன் சிரமப்படுற?"

"இதுல என்ன சிரமம். என் வேலை தானே இது?"

"கருத்தம்மா. நானும் உன்னைப்போல் ஒரு வேலைக்காரிதான்"

"உனக்கென்ன தலையெழுத்து மீரா. எனக்குத்தான் இதை விட்டால் வேறு போக்கிடம் இல்லை. உனக்கு அப்படி இல்லையே"

"கருத்தம்மா! நான் கூட அநாதை தான். போக்கிடம் அற்றவள் தான்"

"இல்லை மீரா. நீ அதிர்ஷ்டசாலி. கொடுத்து வைத்தவள். இல்லையென்றால் கண்ணனைப் போல் ஒரு உத்தமர் கிடைத்திருப்பாரா?"

"கருத்தம்மா. வேற ஏதாவது பேசேன்"

"ஏன் மீரா. உன்னையே நீ ஏமாத்திக்கிற? உண்மையைச் சொல்லு உனக்கு கண்ணனைப் பிடிக்கல்ல?"

"பிடிக்கிறதா இல்லையா என்பது இப்போ பிரச்சனை இல்லை"

"வேற என்ன உன் பிரச்சனை?"

"என்ன கருத்தம்மா. என்னைப் பத்தி எல்லாம் தெரிஞ்சும் நீயே இப்படிக் கேட்டா எப்படி?"

"உன்னைப் பத்தின விஷயத்தை நாம என்ன மறைத்தா வைத்திருக்கோம். எல்லாம் தெரிந்து தானே கண்ணன் உன்னை மணக்க சம்மதித்தார்"



"இல்ல கருத்தம்மா. கண்ணனுக்கு எம் மேல ஏற்பட்டிருப்பது அனுதாபம். தங்களால் தானே இப்படி வாழ்க்கையை இழந்து நிற்கிறாள் என்ற பரிதாபம்"

"இருக்கட்டுமே. உன்னை விரும்பியதால் தானே இந்த எண்ணம் வந்தது.

"இல்லை, விருப்பம் வேற. அனுதாபம் வேற."

"என்ன சொல்ற மீரா?"

"இன்னிக்கு எம் மேல உள்ள அனுதாபத்தில எனக்கு வாழ்க்கை கொடுக்க முன் வந்திருக்கார். நாளைக்கே ஏதாவது ஒரு சூழ்நிலையில நீ இன்னொருத்தனோட வாழ்ந்தவ தானேன்னு ஒரு வார்த்தை சொல்லிட்டா நான் செத்திடுவேன் கருத்தம்மா" கண்ணீர் வழிந்தது.

"மீரா" - பதறினாள் கருத்தம்மா.

"எனக்கு கண்ணனைப் பிடிச்சிருக்கு. அவரோட மனசு பேச்சு செயல்பாடு எல்லாமே பிடிச்சிருக்கு. ஆனா இது தப்பு கருத்தம்மா"

"ஏன் மீரா?"

"நான் ஒன்றும் கன்னிப் பெண் இல்லையே. களங்கப் பட்டவள். ஊரார் முன் பெற்றவராலும் கட்டியவனாலும் தூற்றப்பட்டவள்"

"இதில் உன் தப்பு ஒண்ணுமில்லையே மீரா"

"இருந்தாலும் நான் கண்ணனுக்குப் பொருத்தமானவ இல்ல கருத்தம்மா. அவருக்கு நான் வேண்டாம். நான் வேண்டவே வேண்டாம்." - முகத்தை மூடிக் கொண்டு அழுதாள்.

"அழாதே மீரா. கண்ணன் உன்மீது உயிரையே வைத்திருக்கிறார் மீரா"

"கண்ணனை இழக்க என்னாலும் முடியவில்லை கருத்தம்மா. ஆனால் அவரை ஏற்றுக் கொள்ளவும் முடிய வில்லையே. என் மனம் நெருஞ்சிமுள்ளாய் குத்துகிறதே. திருமணமாகாதபோது இதே கேள்வியை கண்ணன் கேட்டிருந்தால் உடனே சம்மதித்திருப்பேன்.

ஆனால் இப்போ.. நான் பழைய மீரா இல்லையே கருத்தம்மா"

"இல்லை மீரா! எப்போதுமே நீ என் மீராதான்" - கண்ணனின் குரல் கேட்டு திடுக்கிட்டு நிமிர்ந்தாள். தனக்கு வெகு அருகே கண்ணனைக் கண்டதும் தடுமாறி எழுந் தாள். கருத்தம்மா எழுந்து புன்னகையோடு வரவேற்றாள்.

"வாங்க கண்ணன் ஸார். டீ சாப்பிடுறீங்களா?"

"வேண்டாம் கருத்தம்மா. நான் மீராவோடு பேச வேண்டும்"

"தாராளமாய் பேசுங்கள்" - என்றவாறு அவள் விலகிவிட, கண்களில் கண்ணீரோடு அசையாமல் நின்ற மீராவை ஏறிட்டான்.

"மீரா! நீ என்னைப் புரிந்து கொண்டது இவ்வளவு தானா? உன்னை என் உயிருக்கும் மேலாய் நினைத்துக் கொண்டிருக்கிறேன். நீ என்னை அத்தனை இழிவான வனாகவா நினைத்துக் கொண்டிருக்கிறாய்?"

"கண்ணன்"



"மீரா! நான் உன் மீது கொண்ட நேசம் உண்மை யானது. ஆத்மார்த்தமானது. இது அனுதாபத்தாலோ பரிதாபத்தாலோ உண்டானதல்ல. உன்னை நான் இன்றோ நேற்றோ விரும்பவில்லை."

திகைப்பாய் நோக்கினாள்.

"உன்னைக் கடத்துவதாக திட்டம் தீட்டினோமே அதற்காக ஒரு வார காலமாய் உன்னைப் பின் தொடர்ந்து கண்காணித்துக் கொண்டிருந்தோம். உன்னுடைய மென்மை பிறருக்கு உதவும் தன்மை, உன்னுடைய பயம், துணிச்சல் எல்லாவற்றையும் அணுஅணுவாய் ரசித்து அப்போதே என் மனதிற்குள் உன்னைப் பூட்டிக் கொண் டேன். அது தெரியுமா உனக்கு?

கடத்திய பிறகும் கூட உன் மீது எங்களின் நிழல் கூட படாமல் பாதுகாத்து உன் அம்மாவை நினைத்து அழுதவுடன் பதறி உன்னை உன் அன்னையுடன் பேச வைத்தோமே. நீ சொன்ன வார்த்தைகளை வேத வாக்காய் ஏற்று உன்னை விடுவித்து முழு மூச்சாய் உழைத்து உயர்ந்தோமே.

இது எல்லாம் இயல்பாய் நடக்க வில்லை. உன் மீது எனக்கிருந்த நேசத்தால் நடந்தது. நான் உன்னைத் தீவிரமாய் விரும்பியது என் நண்பர்களுக்கும் தெரியும். கடனை அடைத்து விட்டு தொழிலை ஆரம்பித்த பிறகு உன்னைப் பெண் கேட்க நினைத்து உன் வீட்டிற்கு வந்தோம். ஆனால் நீங்கள் யாருமே இல்லை.

அன்று முதல் உன்னை அலுவலகத்தில் பார்த்தேனே அது வரை உன்னைத் தேடிக் கொண்டே இருந்தேன்

தெரியுமா? அலுவலகத்தில் என் மேஜையில் ஒரு மீரா இருக்கிறாளே. நீ கூடப் பார்த்திருப்பாய்"

"ம்" - தலையசைத்தாள்.

"உன்னைப் பார்க்கும் வரை அந்தச் சிலையின் வடிவில் தான் உன்னைப் பார்த்துக் கொண்டிருந்தேன் மீரா என் இன்பம் துன்பம் வெற்றி முயற்சி எல்லாவற்றையும் உன்னிடம் ஐ மீன் அந்த மீராவுடன் தான் பகிர்ந்து கொள் வேன்"

மீராவின் உதடு துடித்தது. "கண்ணா! இதெல்லாம் நிஜமா?"

"சத்தியம். உன்னைப் பார்த்த அன்று நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அப்போதே என் மனதை சொல்லத் துடித்தேன். வேலை கேட்டு நின்ற உன் பரிதாபத் தோற்றம் என்னைப் பேச விடாமல் தடுத்து விட்டது.

மறு நாளே உன் நிலை தெரிந்த பிறகு நல்ல வேளை அவசரப்பட்டு எதையும் சொல்லிவிடவில்லை என்று தான் நினைத்தேனே தவிர ஏமாற்றமோ வருத்தமோ அடைய வில்லை. என்னைப் பொறுத்தவரை நீ நன்றாக இருக்க வேண்டும் அவ்வளவு தான்.

"கண்ணா"

"உன்னை எப்படியாவது வாழ வைக்க வேண்டும் என்று தான் நினைத்தேன். அது நடக்காமல் போய் விட்டது. என்னால் மட்டும்தான் உன்னை சந்தோஷமாக வாழ வைக்க முடியும் என்று முடிவெடுத்துத்தான் உன்னிடம் என் முடிவைச் சொன்னேன்."



"கண்ணா"

"நான் எப்படி உன்னைப் புண் படுத்துவேன் என்று நினைத்தாய் மீரா?"

"இல்லை. கண்ணா.. நான்.."

"நீ வேறு நான் வேறு என்று நான் நினைக்க வில்லையே. உன்னைப் புண் படுத்தினால் எனக்குத் தானே வலிக்கும் மீரா?"

"வேண்டாம் கண்ணா, அப்படிச் சொல்லாதீர்கள்"

"உன்னை என் கண்ணுக்குள் வைத்திருக்கிறேன். என் கண்ணை நானே குத்திக் கொள்வேனா?"

"கண்ணா" - கண்கள் குளமாகியது.

"நீ பழசையெல்லாம் மறந்து என்னை ஏத்துக்கணும் னுதான் நான் பொறுமையா இருந்தேன். ஆனா நீ அம்மா கிட்ட வேறு பெண் பார்க்கச் சொன்னாயாமே"

"அது.. வந்து.."

"மீரா! நான்கே நாட்கள் வாழ்ந்த வாழ்க்கையை மறக்க முடியாது என்கிறாயே உன்னோடு எழுநூற்றி ஐம்பது நாட்கள் மனதால் வாழ்ந்து கொண்டிருக்கிறேனே. என்னால் எப்படி உன்னை மறக்க முடியும் மீரா."

கண்ணீர் ஆறாய் பெருகி ஓடியது மீராவிற்கு.

"நீ என்னை ஏற்றுக் கொள்ள வில்லையென்றாலும் நான் இப்படியே வாழ்ந்து விடுவேன். ஆனால் நீ சொல்வது போல்.. அம்மா சொல்வது போல் ஏதோ ஒரு பெண்ணைக் கட்டிக் கொண்டால் நானும் இன்னொரு தியாகு ஆகிவிடுவேனே மீரா"

"ஐயோ! வேண்டாம் கண்ணா, வேண்டாம்"

"எனக்கு நீ வேண்டும் மீரா. நீ மட்டும் தான் வேண்டும். நீ என்னை நம்ப வேண்டும் என்பதற்கு நான் என்ன செய்ய வேண்டும் மீரா. நீ எது சொன்னாலும் செய்து உன் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்கிறேன்"

"கண்ணா..."

"உனக்கு ஒரு நல்ல துணையாய்... தோளில் சாய்த்து கொள்ளும் தோழனாய். உன்னை மடியில் தாங்கும் தாயாய்.. உன் கண்ணீர் துடைக்கும் விரலாய் இருக்கவே ஆசைப்படுகிறேன் மீரா. உன் உடம்பிற்கு ஆசைப்படும் மிருகமில்லை நான். என்னை நம்பு மீரா."

கண்ணீரோடு கண்ணனின் மார்பில் சாய்ந்து கொண்டாள் மீரா."நம்புகிறேன் கண்ணா. நம்புகிறேன். உங்களை – உங்கள் மனதை நம்புகிறேன் கண்ணா" - விம்மி வெடித்துக் கதறியவளை ஆதரவாய் அணைத்துக் கொண்டான் கண்ணன்.

"அழாதே கண்ணம்மா. இனி ஒரு நாளும் அழக்கூடாது"

"நான் அழவேண்டும் கண்ணா. உங்களைப் புரிந்து கொள்ளாமல் இருந்துவிட்டேன். உங்கள் மனதைக் காயப்படுத்திவிட்டேனே"

"இல்லை மீரா! நீ என் குழந்தை. குழந்தை பேசுறது காயப்படுத்துமா?"

"கண்ணன்" - என இறுக அணைத்துக் கொண்டாள் மீரா.



"மீரா?"

"ம்?"

"நம்ம வீட்டுக்குப் போயிடலாமா?"

"ம்"

"இன்னிக்கே கல்யாணம் பண்ணிக்கலாமா?"

"ம்"

"அப்பாடா. ஒரு வழியா கண்ணன் பாஸாகிட்டான்" - உரத்த குரலில் விஷ்வா கத்த. இருவரும் பதறிவிலகினர். மீரா கூச்சமாய் விலகி நிற்க, பொய்க் கோபத்துடன் திரும்பினான் கண்ணன்.

"டேய்! நீங்க எங்கேடா இங்க?"

"இது என்னடா கேள்வி? எங்கே போவதா இருந்தாலும் ஒண்ணாத்தானே போவோம்"

"நான் மட்டும்தானேடா வந்தேன்."

"எங்களுக்குத் தெரியாம வந்தா விட்டுடுவோமா? மோப்பம் பிடிச்சு வந்திட்டோம் பார்த்தியா?"

"கதைவிடாதீங்கடா. என்னை அனுப்பிட்டு உங்களையும் பின்னாலயே அனுப்பினது அம்மாதானே"

"கண்ணா! உண்மையாவே நீ புத்திசாலிப்பா"

"இத்தனை வருஷமா கூடவே இருக்கீங்க. இப்பத்தான் தெரிஞ்சதா".- மீரா மெல்லிய குரலில் சொல்ல. இருவரும் சத்தமாய் சிரித்தனர்.

"டேய். ஹஸ்பெண்டுக்கு சப்போர்ட்டாம். மீராவா இது?" - கோபி கேட்க விஷ்வா அதட்டினான்.

"கோபி. இனிமே பேர் சொல்லிக் கூப்பிடாதே. அது அவ்வளவு மரியாதையா இருக்காது"

"பின்னே எப்படிக் கூப்பிடுறதாம்?"

"அண்ணின்னு கூப்பிடுவோம்"

"வெரிகுட். அண்ணி ரொம்ப நன்றி அண்ணி" - கைகளைத் தூக்கிக் கும்பிட்டான் கோபி.

"எதுக்கு?"

"இவன்கிட்ட இருந்து எங்களைக் காப்பாற்றியதற்கு"

"டேய்! நான் என்னடா பண்ணினேன் உங்களை?."

"மச்சான்! தினமும் ராத்திரி மொட்டைமாடியில படுத்துகிட்டு வானத்தைப் பார்த்து மீரா புராணம் பாடு வியே. கவிதை சொல்லி எங்க காதைப் புண்ணாக்குவாயே அதிலிருந்து எங்களைக் காப்பாற்றியதற்கு"

"அடப்பாவி..." - என கண்ணன் ஏதோ சொல்ல வாயெடுக்க அதற்குள் மீரா கேட்டாள்.

"ஓ! கவிதை எல்லாம் சொல்வீங்களா?"

"ம். நல்லா சொல்வான். கண்ணா அண்ணிக்கு ஒரு கவிதை சொல்லு"

"டேய்! திடீர்னு கேட்டா எப்படிச் சொல்றது?"

"சும்மா சொல்லுடா. அண்ணி பக்கத்துல இருக்கும் போது கவிதைக்கா பஞ்சம். எதையாவது சொல்லு"

"அப்படியா? ம்? சரி.



எனக்கு நீ உனக்கு நான்

ஏட்டிலே எழுதினான்

தேவன் தீர்மானம் மாறுமோ மறையுமோ"

கைகளைத் தட்டினாள் மீரா. "கவிதை சூப்பர் கண்ணா" - விஷ்வாவும் சேர்ந்து கைகளைத் தட்ட, கோபி தடுத்தான்.

"விஷ்வா! இது கவிதை இல்லடா?"

"பின்னே?"

"சினிமா பாட்டுடா. நான் கேட்டிருக்கேன்"

"அடப்பாவி! இத்தனைநாளா கவிதைன்னு சொல்லி சினிமாப் பாட்டைத்தான் பாடினியா?"

"பின்னே கவிதை எழுத நான் என்ன வைர முத்துவா?"

"ஏய் அவரே சொல்லியிருக்காருப்பா. காதலித்துப் பார் கவிதை வரும்ன்னு"

"அப்படியா சொல்லியிருக்கார்?"

"ஆமாம் கண்ணா"

"சரி. நாமளும் டிரை பண்ணிடுவோம். சொல்லட்டுமா?"

"சொல்லு. சொல்லு" - ஆர்வமாய்க் கேட்டனர்.

"மீரா" - என்றான் கண்ணன்.

"என்னது?"

"மீரா" - மீண்டும் கண்ணன் சொல்ல கடுப்பானான் விஷ்வா.

"டேய்! நாங்க கவிதை சொல்லச் சொன்னோம்"

"நானும் கவிதைதான் சொன்னேன். ஒற்றை வரிக் கவிதை மீரா. எப்படி?"

"மச்சான். கவுத்திட்டே மச்சான்" - இருவரும் கோரஸாய் சொல்ல அங்கே சிரிப்பலை பரவியது. அவர்களது சிரிப்பைக் கண்டு வானில் தோன்றிய நிலவும் சிரித்தது.